உ

சிவமயம்.

சைவசமயாசாரியர்களில் ஒருவராகிய

நம்பியாரூரரென்னும்

# சுந்தரமூர்த்திசுவாமிகள்

அருளிச்செய்த

# தேவாரப்பதிகத்

# திருமுறை

கயிலாயபரம்பரையாகிய
திருவாவடுதுறை-ஆதீனத்துப்பிரதிக்கிணங்க
வித்துவான் - காஞ்சீபுரம்

**சபாபதிமுதலியாரவர்களால்**

ஆராய்ச்சிசெய்வித்து

திருமயிலை
சுப்பராயஞானியாரால்
சண்முகவிலாச அச்சுக்கூடத்திலும்
பால்குரிகி
குமாரையரவர்களது
களாநிதி அச்சுக்கூடத்திலும்
பதிப்பிக்கப்பட்டது.

குரோதன ௵
ஆனி ௴

# பதிக அட்டவணை.


| பதிகப்பெயர். | பக்கம். |
| --- | --- |
| (பண்-இந்தளம்.) | |
| திருவெண்ணெய்நல்லூர்ப்பதிகம் - | க |
| திருக்கோத்திட்டையுந்திருக்கோவலூரும் - | உ |
| திருநெல்வாயில்அரத்துறை | ச |
| திருஅஞ்சைக்களம் - | ௬ |
| திருஓணகாந்தன்றளி - | எ |
| திருவெண்காடு - - | ௯ |
| திருஎதிர்கொள்பாடி - | ௰ |
| திருவாரூர் - - | ௰க |
| திருப்புத்தூர் - - | ௰உ |
| திருக்கச்சியனேகதங்காபதம் | ௰௫ |
| திருப்பூவணம் - - | ௰௬ |
| திருநாட்டுத்தொகை - | ௰எ |
| (பண்-தக்கராகம்.) | |
| திருத்துறையூர் - | ௰௯ |
| திருப்பாச்சிலாச்சிராமம் | உ௰ |
| திருநாட்டியத்தான்குடி | உஉ |
| திருக்கலயநல்லூர் - | உச |
| (பண் - நட்டராகம்.) | |
| திருவெண்ணெய்நல்லூருந்திருநாவலூரும் | உ௬ |
| மூப்பதுமில்லை - | உஎ |
| திருநின்றியூர் - - | உ௯ |
| திருக்கோளிலி - | ௩௰ |
| திருவேகம்பந்திருமேற்றளி | ௩உ |
| திருப்பழமண்ணிப்படிக்கரை - | ௩௩ |
| திருக்கழிப்பாலை - | ௩ச |
| திருமழபாடி - | ௩௬ |
| திருமுதுகுன்றம் - | ௩எ |
| திருக்காளத்தி - - | ௩அ |
| திருக்கற்குடி - | ச௰ |
| திருக்கடவூர் - - | சக |
| திருக்குருகாவூர் - | சஉ |
| திருக்கருப்பறியலூர் - | சச |
| (பண்-கொல்லி.) | |
| திருஇடையாற்றுத்தொகை | ச௫ |
| திருக்கோடிக்குழகர் - | சஎ |
| நமக்கடிகளாகிய-அடிகள் | சஅ |
| திருப்புகலூர் - | ச௯ |
| திருப்புறம்பியம் - | ௫க |
| திருப்பைஞ்ஞீலி - | ௫உ |
| திருவாரூர் - - | ௫ச |
| (பண் - கொல்லிக்கௌவாணம்.) | |
| திருவதிகைத்திருவீரட்டானம் - | ௫௫ |
| திருத்தொண்டத்தொகை | ௫எ |
| திருக்கானாட்டுமுள்ளூர் - | ௫அ |
| திருக்கச்சூர்ஆலக்கோயில் | ௬உ |
| திருவெஞ்சமாக்கூடல் - | ௬௩ |
| திருமுதுகுன்றம் - | ௬௫ |
| முடிப்பதுகங்கை - | ௬௬ |
| திருஆமாத்தூர் - | ௬அ |
| திருக்காரோணம் - | ௬௯ |
| (பண் - பழம்பஞ்சுரம்.) | |
| ஊர்த்தொகை - | எஉ |
| திருப்பாண்டிக்கொடுமுடி - | எ௩ |
| திருமுருகன்பூண்டி - | எச |
| திருப்புனவாயில் - | எ௬ |
| திருவாரூர் - | எஎ |
| திருவாலங்காடு - | எ௯ |
| திருக்கடவூர்மயானம் - | அ௰ |
| (பண் - தக்கேசி.) | |
| திருவொற்றியூர் - | அஉ |
| திருப்புன்கூர் - | அ௩ |
| திருநீடூர் - - | அ௫ |
| திருவாழ்கொளிபுத்தூர் - | அஎ |
| திருக்கழுமலம் - | அ௯ |
| திருவாரூர் - - | ௯க |
| திருவிடைமருது - | ௯உ |
| திருவேகம்பம் - - | ௯ச |
| திருக்கோலக்கா - | ௯௬ |
| நம்பியென்றதிருப்பதிகம் - | ௯அ |
| திருத்தினைநகர் - | ௯௯ |
| திருநின்றியூர் - - | ௱க |
| திருவாவடுதுறை - | ௱உ |
| திருவலிவலம் - - | ௱௩ |

# பதிக அட்டவணை.


| பதிகப்பெயர். | பக்கம் | பதிகப்பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| திருநள்ளாறு - | ௱௪ | (பண் - தக்காமரம்.) | |
| திருவடகுடல்லைவாயில் - | ௱௫ | திருவன்பார்த்தான் பனங்காட்டூர் | ௱௩௧ |
| திருவாவடுதுறை - | ௱௮ | திருப்பனையூர் - | ௱௩௨ |
| (பண்-காந்தாரம்.) | | திருவீழிமிழலை - | ௱௩௩ |
| திருமறைக்காடு - | ௱௯ | திருவெண்பாக்கம் - | ௱௩௫ |
| திருவலம்புரம் - | ௱௰ | (பண் - குறிஞ்சி.) | |
| திருவாரூர் - - | ௱௰௨ | கோயில் - | ௱௩௬ |
| திருத்துருத்தியுந் - திருவேள்விக்குடியும் | ௱௰௩ | திருஒற்றியூர் - | ௱௩௮ |
| திருவானைக்கா - | ௱௰௫ | திருப்புக்கொளியூர் அவிநாசி | ௱௩௯ |
| (பண்-பியந்தைக்-காந்தாரம்.) | | திருநறையூர்ச்சித்தீச்சரம் - | ௱௪௰ |
| திருவாஞ்சியம் - | ௱௰௬ | (பண் - கவுசிகம்.) | |
| (பண்-காந்தாரபஞ்சமம்.) | | திருச்சோற்றுத்துறை - | ௱௪௨ |
| திருவையாறு - | ௱௰௮ | (பண்-செந்திருத்தி.) | |
| (பண்-நட்டபாடை.) | | திருவாரூர் - | ௱௪௩ |
| திருக்கேதாரம் - | ௱௰௯ | (பண்-பஞ்சமம்.) | |
| சீபர்ப்பதம் - | ௱௨௧ | திருவாரூர்ப்பரவை யுண்மண்டளி | ௱௪௫ |
| திருக்கேதீச்சரம் - | ௱௨௨ | திருநனிபள்ளி - | ௱௪௬ |
| திருக்கழுக்குன்றம் - | ௱௨௩ | திருநன்னிலத்துப்பெருங்கோயில் | ௱௪௮ |
| (பண்-நட்டராகம்.) | | திருநாகேச்சரம் - | ௱௪௧ |
| திருச்சுழியல் - | ௱௨௫ | திருநொடித்தான்மலை - | ௱௫௯ |
| (பண்-புறநீர்மை.) | | | |
| திருவாரூர் - | ௱௨௬ | | |
| திருக்காளப்பேர் - | ௱௨௭ | | |
| திருக்கூடலையாற்றூர் - | ௱௨௮ | | |


## பிழைதிருத்தம்.

| பக்கம். | பாடல். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௨ | ௯ | ௨ | லுனதோழிலே | லுனதொழிலே |
| ௰௮ | ௬ | ௧ | தென்னூற்கைம்மை | தென்னூர்கைம்மை |
| ஷெ | ௮ | ௪ | வேளாநாட்டு | வேளூர்நாட்டு |
| ௨௰ | ௬ | ௩ | கொட்டாட்டோடு | கொட்டாட்டொடு |
| ௩௩ | ௨ | ௧ | அண்டகபாலஞ் | அண்டங்கபாலஞ் |
| ௫௩ | ௯ | ௧ | சங்கினை | சங்கிலை |
| ௫௪ | ௧ | ௨ | லந்தனூரா | லந்தணூரா |
| ௫௬ | ௬ | ௩ | எம்மான | வெம்மான |
| ௯௪ | ௨ | ௨ | னும்பர்ம்கானை | னும்பர்கோனை |
| ஷெ | ஷெ | ௩ | மனபேரவி | மனம்பரவி |
| ௯௫ | ௫ | ௧ | வல்லானு | வல்லானை |
| ௱௧ | ௰ | ௨ | நீடுபேர்க்கை | நீடுபொக்கை |
| ௱௫ | ௭ | ௩ | குற்றகங்கள் | குறறங்கள் |
| ௱௩௩ | ௨ | ௨ | திருமிழிலை | திருமிழலை |

உ

சிவமயம்.

நம்பியாரூரரென்னுஞ்

சுந்தரமூர்த்திசுவாமிகள்

அருளிச்செய்த

அடங்கன்முறைத்

# தேவாரப்பதிகங்கள்.

## திருவெண்ணெய்நல்லூர்ப்பதிகம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறைசூடீபெருமானேயருளாளா
வெத்தான்மறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (௧)

நாயேன்பலநாளுநினைப்பின்றிமனத்துன்னைப்
பேயாய்த்திரிந்தெய்த்தேன்பெறலாகாவருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாயாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (௨)

மன்னேமறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னைப்
பொன்னேமணிதானேவயிரமேபொருதுந்தி
மின்னார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளன்னேயுனக்காளாயினியல்லேனெனலாமே. (௩)

முடியேனினிப்பிறவேன்பெறின்மூவேன்பெற்றமூர்தீ
கொடியேன்பலபொய்யேயுரைப்பேனைக்குறிக்கொண்ணீ
செடியார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளடிகேளுனக்காளாயினியல்லேனெனலாமே. (௪)

ாதம்பணிவார்கள்பெறும்பண்டமதுபணியா
ாதன்பொருளானேனறிவில்லேனருளாளா

தாதார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாதியுனக்காளாயினியல்லேனெனலாமே. (௫)

தண்ணார்மதிசூடிதழல்போலுந்திருமேனி
யெண்ணார்புரமூன்றுமெரியுண்ணநகைசெய்தாய்
மண்ணார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளண்ணாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (௬)

ஊனாயுயிரானாயுடலானாயுலகானாய்
வானாய்நிலனானாய்கடலானாய்மலையானாய்
தேனார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளானாயுனக்காளாயினியல்லேனெனலாமே. (௭)

ஏற்றார்புரமூன்றுமெரியுண்ணச்சிலைதொட்டாய்
தேற்றாதனசொல்லித்திரிவேனோசெக்கர்வானீ
ரேற்றாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாற்றாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (௮)

மழுவாள்வலனேந்தீமறையோதீமங்கைபங்கா
தொழுவாரவர்துயராயினதீர்த்தலுனதொழிலே
செழுவார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளழகாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (௯)

காரூர்புனலெய்திக்கரைகல்லித்திரைக்கையாற்
பாரூர்புகழெய்தித்திகழ்பன்மாமணியுந்திச்
சீரூர்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாரூரனெம்பெருமாற்காளல்லேனெனலாமே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## திருக்கோத்திட்டையும்திருக்கோவலூரும்பண் இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கோத்திட்டையுங்கோவலுங்கோயில்கொண்டுருமைக்கொண்டுழல்கின்றதோர்கொல்லைச்சில்லைச், சேத்திட்டுக்குத்தித்தெருவேதிரியுஞ்சிலபூதமுநீருந்திசைதிசையன, சோத்திட்டுவிண்ணோர்பலருந்தொழநும்மரைக்கோவணத்தோடொருதோல்புடைசூழ்ந், தார்த்திட்டதும்பாம்புகைக்கொண்டதும்பாம்படிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. (௧)

முண்டந்தரித்தீர்முதுகாடுறைவீர் முழுநீறுமெய்பூசுதிர்
மூக்கப்பாம்பைக், கண்டத்திலுந்தோளிலுங்கட்டிவைத்தீர்கடலைக்
கடைந்திட்டதோர்நஞ்சையுண்டீர், பிண்டஞ்சுமந்தும்மொடுங்
கூடமாட்டோம்பெரியாரொடுநட்பினிதென்றிருத்தும், அண்டங்
கடந்தப்புறத்துமிருத்தீரடிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. (௨)

மூடாயமுயலகன்மூக்கப்பாம்புமுடைநாறியவெண்டலை
மொய்த்தபல்பேய், பாடாவருபூதங்கள்பாய்புலித்தோல்பரிசொ
ன்றறியாதனபாரிடங்க, டோடார்மலர்க்கொன்றையுந்துன்னெருக்
குந்துணைமாமணிநாகமரைக்கசைத்தொன், றூடாதனவேசெய்தீ
ரெம்பெருமானடிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. (௩)

மஞ்சுண்டமாலைமதிசூடுசென்னிமலையான்மடந்தை மணவா
ளநம்பி, பஞ்சுண்டவல்குற்பணைமென்முலையாளொடுநீருமொன்
றுயிருத்தல்லொழியீர், நஞ்சுண்டுதேவர்க் கமுதங்கொடுத்த நல
மொன்றறியோமுங்கைநாகமதற், கஞ்சுண்டுபடமதுபோகவிடா
டியோமுமக்காட்செயவஞ்சுதுமே. (௪)

பொல்லாப்புறங்காட்டகத்தாட்டொழியீர்புலால்வாயனபே
யொடுபூச்சொழியீ, ரெல்லாமறிவீரிதுவேயறியீரென்றிரங்குவே
னெல்லியுநண்பகலுங், கல்லாநிழற்கீழொருநாள்கண்டதுங்கடம்
பூர்க்கரக்கோயிலின்முன்கண்டது, மல்லால்விரகொன்றிலமெம்
பெருமானடிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. (௫)

தென்னாத்தெனாத்தெத்தெனாவென்றுபாடிச்சிலபூதமுநீருந்தி
சைதிசையன, பன்னான்மறைபாடுதிர்பாசூருளீர்படம்பக்கங்கொ
ட்டுந்திருவொற்றியூரீர், பண்ணார்மொழியாளையோர் பங்குடை
யீர்படுகாட்டகத்தென்றுமோர்பற்றொழியீ, ரண்ணாமலையேனெ
ன்றீராரூருளீரடியோமுமக்காட்செயவஞ்சுதுமே. (௬)

சிங்கத்துரிமூடுதிர்தேவர்கணந்தொழநிற்றீர் பெற்றமுகந்தே
றிடுதீர், பங்கம்பலபேசிடப்பாடுந்தொண்டர்தமைப்பற்றிக்கொ
ண்டாண்டுவிடவுங்கில்லீர், கங்கைச்சடையீருங்கருத்தறியோங்க
ண்ணுமூன்றுடையீர்கண்ணேயாயிருந்தா, லங்கத்துறுநோய்களை
ந்தாளகில்லீரடியோமுமக்காட்செயவஞ்சுதுமே. (௭)

பிணிவண்ணத்தவல்வினைதீர்த்தருளீர் பெருங்காட்டகத்திற்
பெரும்பேயுநீருந், துணிவண்ணத்தின்மேலுமோர்தோலுடுத்துச்
சுற்றுநாகத்தராய்ச்சுண்ணநீறுபூசி, மணிவண்ணத்தின்மேலுமோர்
வண்ணத்தராய்மற்றுமற்றும்பலவண்ணத்தரா, யணிவண்ணத்தரா
ய்நிற்றீரெம்பெருமானடிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. (௮)

கோளாளியகுஞ்சரங்கோளிழைத்தீர்மலையின்றலையல்லதுகோயில்கொள்ளீர், வேளாளியகாமனைவெந்தழியவிழித்தீரதுவன்றியும்வேய்புரையுந், தோளாளுமைநங்கையோர்பங்குடையீருடுகூறையுஞ்சோறுந்தந்தாளகில்லீ, ராளாளியவேகற்றீரெம்பெருமானடிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. (௯)

பாரோடுவிண்ணும்பகலுமாகிப் புனிமால்வரையாகிப்பரவையாகி, நீரோடுதீயுநெடுங்காற்றுமாகிநெடுவெள்ளிடையாகிநிழலுமாகித், தேரோடவரையெடுத்தவரக்கன்சிரம்பத்திறுத்தீருமசெய்கையெல்லா, மாரோடுங்கூடாவடிகேளிதுவென்னடியோமுமக்காட்செயவஞ்சுதுமே. (௰)

அடிகேளுமக்காட்செயவஞ்சுதுமென்றமரர் பெருமானையாரூரனஞ்சி, முடியாலுலகாண்டமூவேந்தர்முன்னே மொழிந்தாறுமோர்நான்குமோரொன்றினையும், படியாயிவைகற்றுவல்லவடியார்பரங்குன்றமேயபரமனடிக்கே, குடியாகிவானோர்க்குமோர்கோவுமாகிக்குலவேந்தராய்விண்முழுதாளபவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருநெல்வாயில் திருஅரத்துறை-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கல்வாயகிலுங்கதிர்மாமணியுங்கலந்துந்திவருந்நிவவின்கரைமே, னெல்வாயிலரத்துறைநீடுறையுந்நிலவெண்மதிசூடியநின்மலனே, நல்வாயில்செய்தார்நடந்தாருடுத்தார்நரைத்தாரிறந்தாரென்றுநானிலத்திற், சொல்லாய்க்கழிகின்றதறிந்தடியேன்றொடர்ந்தேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே. (௧)

கறிமாமிளகும்மிகுவனமரமும்மிகவுந்திவருந்நிவவின்கரைமே, னெறிவார்குழலாரவர்காணநடஞ்செய் நெல்வாயிலரத்துறைநின்மலனே, வறிதேநிலையாதவிம்மண்ணுலகின்னரனாகவகுத்தனைநானிலேயேன், பொறிவாயிலிவ்வைந்தனையுமவியப்பொருதுன்னடியேபுகுஞ்சூழல்சொல்லே. (௨)

புற்றாடரவமரையார்த்துகந்தாய்புனிதாபொருவெள்விடையூர்தியினா, யெற்றேயொருகண்ணிலனின்னையல்லாநெல்வாயிலரத்துறைநின்மலனே, மற்றேலொருபற்றிலனெம்பெருமான்வண்டார்குழலாண்மங்கைபங்கினனே, யற்றார்பிறவிக்கடனீந்தியேறியடியேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே. (௩)

கோடுயர்கோங்கலர்வேங்கையலர்மிகவுந்திவருந்நிவவின்கரைமே, வீடுயர்சோலைநெல்வாயிலரத்துறைநின்மலனேநினைவார்மனத்தா, யோடுபுனற்கரையாமிளமையுறங்கிவிழித்தாலொக்குமிப்பிறவி,வாடியிருந்துவருந்தல்செய்யாதடியேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே. (ச)

உலவுமுலகிற்றலைகற்பொழியவுயர்வேயோடிழிநிவவின்கரைமே,னிலவுமயிலாரவர்தாம்பயினெல்வாயிலரத்துறைநின்மலனே புலனைந்துமயங்கியகங்குழையப் பொருவேலோர்நமன்றமர்தாநலிய, வலம்வந்துமயங்கியயர்வதன்முன்னடியேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே. (ரு)

ஏலம்மிலவங்கமெழிற்கனகமிகவுந்திவருந்நிவவின்கரைமே,னீலம்மலர்ப்பொய்கையிலன்னம்மலி நெல்வாயிலரத்துறைவாயொருநெல், வாலூன்றவருந்தும்முடம்பிதனைமகிழாதழகாவலந்தேனினியா, ஞாலநிழலிலமர்ந்தாயமராவடியேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே. (சு)

சிகரமுகத்திற்றிரளாரகிலும்மிகவுந்திவருநிவவின்கரைமே,னிகரின்மயிலாரவர்தாம்பயினெல்வாயிலரத்துறைநின்மலனே, மகரக்குழையாய்மணக்கோலமதே பிணக்கோலமதாம்பிறவியிதுதா, ணகரமுதலிவெழுத்தாகிநின்ற யடியேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே. (எ)

திண்டேர்நெடுவீதியிலங்கையர்கோன்றிரடோளிருபஃதுநெரித்தருளி, நெண்டாடுநெடுவயல்சூழ்புறவினெல்வாயிலரத்துறைநின்மலனே, பண்டேமிகநான்செய்தபாக்கியத்தாற்பரஞ்சோதிநின்னாமம்பயிலப்பெற்றே,னண்டாவமரர்க்கமரர்பெருமானடியேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே. (அ)

மாணாவுருவாகியோர்மண்ணளந்தான் மலர்மேலயன்றேடியுங்காண்பரியாய், நீணீண்முடிவானவர்வந்திறைஞ்சுநெல்வாயிலரத்துறைநின்மலனே, வாணார்நுதலார்வலைப்பட்டடியேன் பலவின்கனியீயந்துபோல்வதன்முன், ஆணோடுபெண்ணாமுருவாகிநின்றாயடியேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே. (கூ)

நீரூருநெடுவயல்சூழ்புறவினெல்வாயிலரத்துறைநின்மலனைத், தேரூர்நெடுவீதிநன்மாடமலிதென்னாவலர்கோனடித்தொண்டனணா,யாரூரனுரைத்தனநற்றமிழின்மிகுமாலையோர்பத்திவைகற்றுவல்லார்,காரூர்களிவண்டனறயானைமன்னரவராகியோர்விண்முழுதாள்பவரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

# நம்பியாரூரரென்னும்

## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

## திருஅஞ்சைக்களம்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தலைக்குத்தலைமாலையணிந்ததென்னேசடைமேற்கங்கைவெள்ளந்தரித்ததென்னே, யலைக்கும்புலித்தோல்கொண்டசைத்ததென்னேயதன்மேற்கதநாகக்கச்சார்த்ததென்னே, மலைக்குநிகரொப்பனவன்றிரைகள்வலித்தெற்றிமுழங்கிவலம்புரிகொண், டலைக்குங்கடலங்கரைமேன்மகோதையணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே ()

பிடித்தாட்டியோர்நாகத்தைப்பூண்டதென்னேபிறங்குஞ்சடைமேற்பிறைசூடிற்றென்னே, பொடித்தான்கொண்டுமெய்முற்றும்பூசிற்றென்னே புகரேறுகந்தேறல் புரிந்ததென்னே, மடித்தோட்டந்துவன்றிரையெற்றியிட வளர்சங்கமங்காந்துமுத்தஞ்சொரிய, வடித்தார்கடலங்கரைமேன்மகோதை யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே. (௨)

சிந்தித்தெழுவார்க்குநெல்லிக்கனியே சிறியார்பெரியார்மனத்தேறலுற்றான், முந்தித்தொழுவாரிறவார்பிறவார்முனிகண்முனியேயமரர்க்கமரா, சந்தித்தடமால்வரைபோற்றிரைக டணியாதிடறுங்கடலங்கரைமே, லந்தித்தலைச்செக்கர்வானேயொத்தியாலணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே. (௩)

இழைக்குமெழுத்துக்குயிரேயொத்தியாலிலையேயொத்தியாலிணையேயொத்தியாற், குழைக்கும்பயிர்க்கோர்புயலேயொத்தியாலடியார்தமக்கோர்குடியேயொத்தியான், மழைக்குநிகரொப்பனவன்றிரைகள்வலித்தெற்றிமுழங்கிவலம்புரிகொண், டழைக்குங்கடலங்கரைமேன்மகோதையணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே.

வீடின்பயனென்பிறப்பின்பயனென் விடையேறுவதென்மதயானைநிற்கக், கூடுமலைமங்கையொருத்தியுடன்சடைமேற் கங்கையாளைநீசூடிற்றென்னே, பாடும்புலவர்க்கருளும்பொருளென்னிதியம்பலசெய்தகலச்செலவி, லாடுங்கடலங்கரைமேன்மகோதை யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே. (௫)

இரவத்திடுகாட்டெரியாடிற்றென்னே யிறந்தார்தலையிற்பலிகோடலென்னே, பரவித்தொழுவார்பெறுபண்டமென்னேபரமாபரமேட்டிபணித்தருளா,புரவத்தொடுசங்கமோடிப்பிமுத்தங்கொணர்ந்தெற்றி முழங்கிவலம்புரிகொண், டரவக்கடலங்கரைமேன்மகோதையணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே. (௬)

# நம்பியாரூரனொன்றும்

## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

பெற்றபோதும்பெறாதபோதும்பேணியுங்கழலேத்துவார்கண்
மற்றோர்பற்றிலரென்றிரங்கிமதியுடையவர்செய்கைசெய்யீ
ரற்றபோழ்துமலர்ந்தபோழ்துமாவற்காலத்தடிகேளும்மை
யொற்றிவைத்திங்குண்ணலாமோவோணகாந்தன்றளியுளீரே. (௩)

வல்லதெல்லாஞ்சொல்லியும்மைவாழ்த்தினாலும்வாய்திறந்தொன்
றில்லையென்னீருண்டுமென்னீ ரெம்மையாள்வானிருப்பதென்னீர்
பல்லையுக்கப்படுதலையிற்பகலெலாம்போய்ப்பலிதிரிந்திங்
கொல்லைவாழ்க்கையொழியமாட்டீரோணகாந்தன்றளியுளீரே. (௪)

கூடிக்கூடித்தொண்டர்தங்கள்கொண்டபாணிகுறைபடாமே
யாடிப்பாடியழுதுநெக்கங்கன்புடையவர்க்கின்பமோரீர்
தேடித்தேடித்திரிந்தெய்த்தாலுஞ் சித்தமென்பால்வைக்கமாட்டீ
ரோடிப்போகீர்பற்றுந்தாரீரோணகாந்தன்றளியுளீரே. (௫)

வாரிருங்குழன்மைவாணெடுங்கண்மலைமகண்மதுவிம்முகொன்
றாரிருந்தடமார்புநீங்காத்தையலாளுலகுய்யவைத்த [றைத்
காரிரும்பொழிற்கச்சிமூதூர்க்காமக்கோட்டமுண்டாகநீர்போ
யூரிடும்பிச்சைகொள்வதென்னேயோணகாந்தன்றளியுளீரே. (௬)

பொய்ம்மையாலேபோதுபோக்கிப்புறத்துமில்லையகத்துமில்லை
மெய்ம்மைசொல்லியாளமாட்டீர்மேலைநாளொன்றிடவுங்கில்லீ
ரெம்மைப்பெற்றாலேதும்வேண்டீரேதுந்தாரீரேதுமோதீ
ரும்மையன்றேயெம்பெருமானோணகாந்தன்றளியுளீரே. (௭)

வலையம்வைத்தகூற்றமீவான்வந்துநின்றவார்த்தைகேட்டுச்
சிலையமைத்தசிந்தையாலேதிருவடிதொழுதுய்யினல்லாற்
கலையமைத்தகாமற்செற்றகுரோதலோபமதமவருடை
யுலையமைத்திங்கொன்றமாட்டேனோணகாந்தன்றளியுளீரே. (௮)

வாரமாகித்திருவடிக்குப்பணிசெய்தொண்டர்பெறுவதென்னே
யாரம்பாம்புவாழ்வதாரூரொற்றியூரேலும்மதன்று
தாரமாகக்கங்கையாளைச்சடையில்வைத்தவடிகேளுந்த
மூருங்காடுமுடையுந்தோலேயோணகாந்தன்றளியுளீரே. (௯)

ஓவணமேலெருதொன்றேறுமோணகாந்தன்றளியுளார்தா
மாவணஞ்செய்தாளுங்கொண்டவரைதுகிலொடுபட்டுவீக்கிக்
கோவணமேற்கொண்டவேடங்கோவையாகவாரூரன்சொன்ன
பாவணத்தமிழ்ப்பத்தும்வல்லார்க்குப் பறையுந்தாஞ்செய்த பாவந்
திருச்சிற்றம்பலம். [தானே.(௰

ஆக்குமழிவுமமைவுநீயென்பனுன்சொல்லுவார்சொற்பொரு ளவைநீயென்பனு, னூக்குஞ்செவியுங்கண்ணுநீயென்பனு னலனே யினிநானுனைநன்குணர்ந்தே, னேக்குநிதியம்பலவெத்தனையுங்கல த்திற்புகப்பெய்துகொண்டேறநுந்தி,யார்க்குங்கடலங்கரைமேன் மகோதையணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே. (எ)

வெறுத்தேன்மனைவாழ்க்கையை விட்டொழிந்தேன் விளங்கு ங்குழைக்காதுடைவேதியனே, யிறுத்தாயிலங்கைக்கிறையாயவனை த்தலைபத்தொடுதோள்பலவிற்றுவிழக், கறுத்தாய்கடனஞ்சமுதுண் டுகண்டங்கடுகட்பிரமன்றலையைந்திலுமொன், றறுத்தாய்கடலங்க ரைமேன்மகோதையணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே. (அ)

பிடிக்குக்களிறேயொத்தியாலெம்பிரான் பிரமற்கும்பிரான்ம ற்றையார்க்கும்பிரா, னடிக்குமளவிற்புரமூன்றெரியச்சிலைதொ ட்டவனேயுனைநான்மறவேன், வடிக்கின்றனபோற்சிலவன்றிரைக ள்வலித்தெற்றிமுழங்கிவலம்புரிகொண், டடிக்குங்கடலங்கரைமே ன்மகோதையணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே. (கூ)

எந்தம்மடிகளிமையோர்பெருமானெனக்கென்றுமளிக்குமணி மிடற்ற, னந்தண்கடலங்கரைமேன்மகோதையணியார்பொழிலஞ் சைக்களத்தப்பனை, மந்தம்முழவுங்குழலுமியம்பும்வளர்நாவலர் கோனம்பியூரன்சொன்ன, சந்தமிகுதண்டமிழ்மாலைகள்கொண் டடிவீழவல்லார்தடுமாற்றிலரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

## திருஓணகாந்தன்றளி-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நெய்யும்பாலுந்தயிருங்கொண்டுநித்தம்பூசனைசெய்யலுற்றார்
கையிலொன்றுங்காணமில்லைக்கழலடிதொழுதுய்யினல்லா
லைவர்கொண்டிங்காட்டவாடியாழ்குழிப்பட்டழுந்துவேனுக்
குய்யுமாறென்றருளிச்செய்யீரோணகாந்தன்றளியுளீரே. (க)

திங்கடங்குசடைகண்மேலோர்திரைகள்வந்துபுரளவீசுங்
கங்கையாளேல்வாய்திறவாள்கணபதியேல்வயிறுதாரி
யங்கைவேலான்குமரன்பிள்ளைதேவியார்கோற்றட்டியாளா
ணாருங்களுக்காட்செய்யமாட்டோமோணகாந்தன்றளியுளீரே. (உ)

## திருவெண்காடு - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

படங்கொணாகஞ்சென்னிசேர்த்திப் பாய்புலித்தோலரையில்வீக்கி
யடங்கலாருமிரியச்சீறியன்றுமூவர்க்கருள்புரிந்தீர்
மடங்கலானைச்செற்றுகந்தீர்மனைகடோறுந்தலைகையேந்தி
விடங்கராகித்திரிவதென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (௧)

இழித்துகந்தீர்முன்னைவேடமிமையவர்க்குமுணாகள்பேறு
தொழித்துகந்தீர்நீர்முன்கொண்டவுயர்தவத்தையமரர்வேண்ட
வழிக்கவந்தகாமவேளையவனுடையதாதைகாண
விழித்துகந்தவெற்றியென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (௨)

படைகளேந்திப்பாரிடமும்பாதம்போற்றமாதுநீரு
முடையோர்கோவணத்தராகியுண்மைசொல்லீரும்மையன்றே
சடைகடாழக்கரணமிட்டுத்தன்மைபேசியில்பலிக்கு
விடையதேறித்திரிவதென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (௩)

பண்ணுளீராய்ப்பாட்டுமானீர்பத்தர்சித்தம்பரவிக்கொண்டீர்
கண்ணுளீராய்க்கருத்திலும்மைக்கருதுவார்கள்காணும்வண்ண
மண்ணுளீராய்மதியம்வைத்தீர்வானநாடர்மருவியேத்த
விண்ணுளீராய்நிற்பதென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (௪)

குடமெடுத்துநீரும்பூவுங்கொண்டுதொண்டரேவல்செய்ய
நடமெடுத்தொன்றாடிப்பாடிநல்குவீர்நீர்புல்கும்வண்ணம்
வடமெடுத்தகொங்கைமாதோர்பாகமாகவார்கடல்வாய்
விடமிடற்றில்வைத்ததென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (௫)

மாறுபட்டவனத்தகத்தின்மருவவந்தவன்களிற்றைப்
பீறியிட்டமாகப்போர்த்தீர்பெய்பலிக்கென்றில்லந்தோறுங்
கூறுபட்டகொடியுநீருங்குலாவியேற்றையடரவேறி
வேறுபட்டுத்திரிவதென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (௬)

காதலாலேகருதுந்தொண்டர்காரணத்தராகிநின்றே
பூதம்பாடப்புரிந்துநட்டம்புவனியேத்தவாடவல்லீர்
நீதியாகவேழிலோசைநித்தராகிச்சித்தர்சூழ
வேதமோதித்திரிவதென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (௭)

குரவுகொன்றைமதியமத்தங்கொங்கைமாதர்கங்கைநாகம்
விரவுகின்றசடையுடையீர்விருத்தரானீர்கருத்திலும்மைப்
பரவுமென்மேற்பழிகள்போக்கீர்பாகமாயமங்கையஞ்சி
வெருவவேழஞ்செற்றதென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (௮)

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

மாடங்காட்டுங்கச்சியுள்ளீர்நிச்சயத்தானினைப்புள்ளார்பாற்
பாடுங்காட்டிலாடலுள்ளீர்பரவும்வண்ணமெங்ஙனேதா
னாடுங்காட்டிலயனுமாலுநணுகாவண்ணமனலுமாய
வேடங்காட்டித்திரிவதென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (௯)

விரித்தவேதமோதவல்லார்வேலைசூழ்வெண்காடுமேய
விருத்தனாயவேதன்றன்னைவிரிபொழிற்றிருநாவலூர
னருத்தியாலாரூரன்றொண்டனடியன்கேட்டமாலைபத்துந்
தெரித்தவண்ணமொழியவல்லார்செம்மையாளர்வானுளாரே.(௧௦

திருச்சிற்றம்பலம்.

## திருஎதிர்கொள்பாடி - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மத்தயானையேறிமன்னர்சூழவருவீர்காள்
செத்தபோதிலாருமில்லைச்சிந்தையுள்வைம்மின்கள்
வைத்தவுள்ளமாற்றவேண்டாவம்மின்மனத்தீரே
அத்தர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௧)

தோற்றமுண்டேல்மரணமுண்டாந்துயரமனைவாழ்க்கை
மாற்றமுண்டேல்வஞ்சமுண்டாம்நெஞ்சமனத்தீரே
நீற்றரேற்றர்நீலகண்டர்நிறைபுனல்நீள்சடைமே
லேற்றர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௨)

செடிகொளாக்கைசென்றுசென்றுதேய்ந்தொல்லைவீழாமுன்
வடிகொள்கண்ணார்வஞ்சனையுட்பட்டுமயங்காதே
கொடிகொளேற்றர்வெள்ளைநீற்றர்கோவணவாடையுடை
யடிகள்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௩)

வாழ்வர்கண்டீர்நம்முளைவர்வஞ்சமனத்தீரே
யாவராலுமிகழப்பட்டிங்கல்லலில்வீழாதே
மூவராயுமிருவராயுமுதல்வனவனேயாந்
தேவர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௪)

அரித்துநம்மேலைவர்வந்திங்காறலைப்பான்பொருட்டாற்
சிரித்தபல்வாய்வெண்டலைபோயூர்ப்புறஞ்சேராமுன்
வரிக்கொள்ளுத்திவாளரக்கர்வஞ்சமதில்மூன்று
மெரித்தவில்லியெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௫)

பொய்யர்கண்டீர்வாழ்க்கையாளர் பொத்தடைப்பான்பொருட் [டான்
மையல்கொண்டொம்மோடாடிநீருமனத்தீரோ
நையவேண்டாவிம்மையேத்தவம்மைநமக்கருளு
மையர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௬)

கூசநீக்கிக்குற்றநீக்கிச்செற்றமனநீக்கி
வாசமல்குகுழலினார்கள்வஞ்சமனைவாழ்க்கை
யாசைநீக்கியன்புசேர்த்தியென்பணிந்தேறே
மீசர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௭)

இன்பமுண்டேற்றன்பமுண்டுவேழைமனைவாழ்க்கை
முன்புசொன்னான்மோழைமையான்முட்டைமனத்தீரோ
யன்பரல்லாலணிகொள்கொன்றையடிகளடிசேரா
ரென்பர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௮)

தந்தையாருந்தவ்வையாருமெட்டனைச்சார்வாகார்
வந்துநம்மோடுள்ளளாவிவானநெறிகாட்டுஞ்
சிந்தையீரோநெஞ்சினீரோதிகழ்மதியஞ்சூடு
மெந்தைகோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௯)

குருதிசோரவானையின்றோல்கொண்டகுழற்சடையன்
பொருதுகீறிப்புடைபோனமாலயனுமறியாச்
சுருதியார்க்குஞ்சொல்லவொண்ணாச்சோதியெம்மாதியான்
கருதுகோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௧௰)

முத்துநீற்றுப்பவளமேனிச்செஞ்சடையானுறையும்
பத்தர்பந்தத்தெதிர்கொள்பாடிப்பரமனையேபணியச்
சித்தம்வைத்ததொண்டர்தொண்டன்சடையனவன்சிறுவன்
பத்தனூரன்பாடல்வல்லார்பாதம்பணிவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருவாரூர் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

இறைகளோடிசைந்தவின்பமின்பத்தோடிசைந்தவாழ்வு
பறைகிழித்தனையபோர்வைபற்றியானோக்கினேற்குத்
திறைகொணர்ந்தீண்டித்தேவர்செம்பொனுமணியுந்தூவி
யறைகழலிறைஞ்சுமாரூரப்பனையஞ்சினேனே. (௧)

# நம்பியாரூரரென்னும்
## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

ஊன்மிசையுதிரக்குப்பையொருபொருளிலாதமாய
மான்மறித்தனையநோக்கமடந்தைமார்மதிக்குமிந்த
மானிடப்பிறவிவாழ்வுவாழ்வதோர்வாழ்வுவேண்டே
னானல்வெள்ளேற்றவாரூரப்பனேயஞ்சினேனே. (௨)

அறுபதும்பத்துமெட்டுமாறினோடஞ்சுநான்குந்
துறுபறித்தனையநோக்கிச்சொல்லிற்றொன்றாகச்சொல்லார்
நறுமலர்ப்பூவுநீரும்நாடொறும்வணங்குவார்க்கு
அறிவினைக்கொடுக்குமாரூரப்பனேயஞ்சினேனே. (௩)

சொல்லிடிலெல்லையில்லைச்சுவையிலாப்பேதைவாழ்வு
நல்லதோர்கூரைபுக்குநலமிகவறிந்தேனல்லேன்
மல்லிகைமாடநீடுமருங்கொடுநெருங்கியெங்கு
மல்லிவண்டியங்குமாரூரப்பனேயஞ்சினேனே. (௪)

நரம்பினோடெலும்புகட்டிநசையினோடிசையொன்றில்லாக்
குரம்பைவாய்க்குடியிருந்துகுலத்தினால்வாழமாட்டேன்
விரும்பியகமழும்புன்னைமாதவித்தொகுதியென்று
மரும்புவாய்மலருமாரூரப்பனேயஞ்சினேனே. (௫)

மணமெனமகிழ்வர்முன்னேமக்கடாய்தந்தைசுற்றம்
பிணமெனச்சுடுவர்பேர்த்தேபிறவியைவேண்டேனாயேன்
பணையிடைச்சோலைதோறும்பைம்பொழில்விளாகத்தெங்க
ளணைவினைக்கொடுக்குமாரூரப்பனேயஞ்சினேனே. (௬)

தாழ்வெனுந்தன்மைவிட்டுத்தனத்தையேமனத்தில்வைத்து
வாழ்வதேகருதித்தொண்டர்மறுமைக்கொன்றீயகில்லா
ராழ்குழிப்பட்டபோதுவலக்கணிலொருவர்க்காவ
ரியாழ்முயன்றிருக்குமாரூரப்பனேயஞ்சினேனே. (௭)

உதிரநீரிறைச்சிக்குப்பையெடுத்ததுமலக்குக்கைம்மேல்
வருவதோர்மாயக்கூரைவாழ்வதோர்வாழ்வுவேண்டேன்
கரியமாலயனுந்தேடிக்கழலிணைகாணமாட்டா
வரியனாய்நின்றவாரூரப்பனேயஞ்சினேனே. (௮)

பொய்த்தன்மைத்தாயமாயப்போர்வையைமெய்யென்றெண்ணு
வித்தகத்தாயவாழ்வுவேண்டிநான்விரும்பகில்லேன் [ம்
முத்தினைத்தொழுதுநாளுமுடிகளால்வணங்குவார்க்கு
வத்தன்மைத்தாகுமாரூரப்பனேயஞ்சினேனே. (௯)

தஞ்சொலாரருள்பயக்குந்தமியனேன்றடமுலைக்க
ணஞ்சொலார்பயிலுமாரூரப்பனையூரனஞ்சிச்
செஞ்சொலானயந்தபாடல்சிந்தியாவேத்தவல்லார்
நஞ்சுலாங்கண்டத்தெங்களுததனைநணுகுவாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்புத்தூர் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மலைக்குமகளஞ்சமதகரியையுரித்தீரெரித்தீர்வருமுப்புரங்கள், சிலைக்குங்கொலைச்சேவுகந்தேற்றேறூழியீர் சில்பலிக்கில்கடோறுஞ் செலவொழியீர், கலைக்கொம்புங்கரிமருப்புமிடறிக்கலவம்மயிற்பீலியுங்காரகிலு, மலைக்கும்புனல்சேரரிசிற்றென்கரையழகார்திருப்புத்தூரழகனீரே. (௧)

அருமலரோன்சிரமொன்றறுத்தீர்செறுத்தீரழற்சூலத்திலந்தகனைத், திருமகள்கோனெடுமால்பலநாள்சிறப்பாகியபூசனைசெய்பொழுதி, லொருமலராயிரத்திற்குறைவானிறைவாகவோர்கண்மலர்சூட்டலுமே, பொருவிறலாழிபுரிந்தளித்தீர்பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதனீரே. (௨)

தரிக்குந்தறைநீர்தழல்காற்றந்தரஞ்சந்திரன்சவிதாவியமானனானீர், சரிக்கும்பலிக்குத்தலையங்கையேந்தித்தையலார்பெய்யக்கொள்வதுதக்கதன்றான், முரிக்குந்தளிர்ச்சந்தனத்தொடுவேயுமுழங்குந்திரைக்கைகளால்வாரிமோதி, யரிக்கும்புனல்சேரரிசிற்றென்கரையழகார்திருப்புத்தூரழகனீரே. (௩)

கொடியுடைமும்மதில்வெந்தழியக்குன்றம்வில்லாநாணியிற்கோலொன்றினா, லிடிபடவெய்தெரித்தீரிமைக்குமளவிலுமக்காரெதிரெம்பெருமான், கடிபடுபூங்கணையாங்கருப்புச்சிலைக்காமனைவேவக்கடைக்கண்ணினாற், பொடிபடநோக்கியதென்னைகொல்லோபொழிலார்திருப்புத்தூர்ப்புனிதனீரே. (௪)

வணங்கித்தொழுவாரவர்மால்பிரமன்மற்றும்வானவர்தானவர்மாமுனிவ, ருணங்கற்றலையிற்பலிகொண்டலென்னேயுலகங்களெலாமுடையீருரையீ, ரிணங்கிக்கயலிளஞ்சேலிளவாளைபாயவினக்கெண்டைதுள்ளக்கண்டிருந்தவன்ன, மணங்கிக்குணங்கொளரிசிற்றென்கரையழகார்திருப்புத்தூரழகனீரே. (௫)

* அகத்தடிமைசெய்யுமந்தணன்றானரிசிற்புனல்கொண்டுவந்
தாட்டுகின்றான், மிகத்தளர்வெய்திக்குடத்தைநும்முடிமேல்விழு
த்திட்டுநடுங்குதலும்,வகுத்தவனுக்குநித்தற்படியும்வருமென்றொ
ருகாசினைநின்றநன்றிப், புகழ்த்துணைகைபுகச்செய்துகந்தீர்பொ
ழிலார்திருப்புத்தூர்ப்புனிதனீரே. (௫)

பழிக்கும்பெருந்தக்கனெச்சம்மழியப் பகலோன்முதலாப்
பலதேவரையுந், தெழித்திட்டவரங்கஞ்சிதைத்தருளுஞ்செய்கை
யென்னைகொலோமைகொள்செம்மிடற்றீர், விழிக்குந்தழைப்பீ
லியொடேலமுந்திவிளங்குமணிமுத்தொடுபொன்வரன்றி, யழிக்
கும்புனல்சேரரிசிற்றென்கரையழகார்திருப்புத்தூரழகனீரே.(௭)

பறைக்கணெடும்பேய்க்கணம்பாடல்செய்யக்குறட்பாரிட
ங்கள்பறைதாமுழக்கப், பிறைக்கொள்சடைதாழப்பெயர்ந்துநட்
டம்பெருங்காடரங்காகநின்றாடலென்னே, கறைக்கொள்மணிகண்
டமுந்திண்டோள்களுங்கரங்கள்சிரந்தன்னிலுங்கச்சுமாகப், பொ
றிக்கொளரவம்புனைந்தீர்பலவும்பொழிலார்திருப்புத்தூர்ப்புனித
னீரே. (௮)

மழைக்கண்மடவாளையோர்பாகம்வைத்தீர்வளர்புன்சடைக்
கங்கையைவைத்துகந்தீர், முழைக்கொளரவோடென்பணிகலனா
முழுநீறுமெய்பூசுதலென்னைகொலோ, கழைக்கொள்கரும்புங்கத
லிக்கனியுங்கமுகின்பழுக்காயுங்கவர்ந்துகொண்டிட், டழைக்கும்
புனல்சேரரிசிற்றென்கரையழகார்திருப்புத்தூரழகனீரே. (௯)

கடிக்கும்மரவால்மலையாலமரர்கடலைக்கடையவெழுகாள
கூடம், மொடிக்கும்முலகங்களையென்றதனையுமக்கேயமுதாகவுண்
டருமிழீ, ரிடிக்குமழைவீழ்ந்திழுத்திட்டருவியிருபாலுமோடியி

---

* திருப்புத்தூரென்னு மித்தலத்தில் ஆதிசைவப்பிராமணகுலத்
தில் திருவவதாரஞ்செய்து புகழ்த்துணைநாயனாரெனப் பெய
ரும்பெற்று மிகுந்த அன்புடன் பரமசிவத்துக்குத் திருமஞ்ச
னமுதலிய உபசாரங்கள் ஆகமமுறை வழுவாமல் செய்துகொ
ண்டுவருநாளில் பஞ்சம் நேரிட்டுச் சிலநாளுணவின்றித் திரு
மேனியிளைத்து வலிவின்றியு மொருநாள் திருமஞ்சனம்செய்
கையில் அந்தக்குடம்நழுவிச்சிவலிங்கப்பெருமான்திருமுடிக்
கண்விழலும் நாயனார்அஞ்சிநடுங்குதல் திருவுளத்திற்கொண்டு
பரமசிவங்கிருபைகூர்ந்துபஞ்சம்நீங்குகிறவரைக்கும் ஒருபடி
க்காசு அருள்செய்த கிருபையின்பெருமை யிந்த ஆறாவதுதே
வாரத்தில் விளங்கக் கூறியது.

ரைக்குந்திரைக்கை, யடிக்கும்புனல்சேரரிசிற்றென்கரையழகார் திருப்புத்தூரழகனீரே. (௧௦)

காரூர்மழைபெய்துபொழியருவிக் கழையோடகிலுந்திட்டிரு கரையும், போரூர்புனல்சேரரிசிற்றென்கரைப்பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதர்தம்மை, யாரூரனருந்தமிழைந்திணைந்தழகாலுரைப்பார்களுங்கேட்பவருஞ், சீரூர்தருதேவர்கணங்களொடுமிணங்கிச்சிவலோகமதெய்துவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருக்கச்சியனேகதங்காபதம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தேனெய்புரிந்துழல்செஞ்சடையெம்பெருமானதிடந்திகழைங்கணையக்,கோனையெரித்தெரியாடியிடங்குலவானதிடங்குறையாமறையா, மானையிடத்ததோர்கையனிடம்மதமாறுபடப்பொழியும்மலைபோல், யானையுரித்தபிரானதிடங்கலிக்கச்சியனேகதங்காபதமே. (௧)

கூறுநடைக்குழிகட்பகுவாயனபேயுகந்தாடநின்றோரியிட, வேறுபடக்குடகத்திலயம்பலவாணனின்றாடல்விரும்புமிட,மேறுவிடைக்கொடியெம்பெருமானிமையோர்பெருமானுமையாள்கணவ, னாறுசடைக்குடையப்பனிடங்கலிக்கச்சியனேகதங்காபதமே. (௨)

கொடிகளிடைக்குயில்கூவுமிடம்மயிலாலுமிடமழுவாளுடைய, கடிகொள்புனற்சடைகொண்டநுதற்கறைக்கண்டனிடம்பிறைத்துண்டமுடிச், செடிகொள்வினைப்பகைதீருமிடந்திருவாகுமிடந்திருமார்பகலா, தடிகளிடமழல்வண்ணனிடங்கலிக்கச்சியனேகதங்காபதமே. (௩)

கொங்குநுழைத்தனவண்டறைகொன்றையுங்கங்கையுந்திங்களுஞ்சூடுஞ்சடை, மங்குனுழைமலைமங்கையைநங்கையைப்பங்கினிற்றங்கவுவந்தருள்செய், சங்குகுழைச்செவிகொண்டருவித்திரள்பாயவியாத்தழல்போலுடைத்த, மங்கைமழுத்திகழ்கையனிடங்கலிச்கச்சியனேகதங்காபதமே. (௪)

பைத்தபடத்தலையாடரவம்பயில்கின்றவிடம்பயிலப்புகுவார்
சித்தமொருநெறிவைத்தவிடந்திகழ்கின்றவிடந்திருவானடிக்கே
வைத்தமனத்தவர்பத்தர்மனங்கொளவைத்தவிடமழுவாளுடைய
அத்தனிடமழல்வண்ணனிடங்கலிக்கச்சியனேகதங்காபதமே. (௫)

தண்டமுடைத்தருமன்றமரொன்றமரைச்செயும்வன்றுயர்தீர்க்குமிடம்,பிண்டமுடைப்பிறவித்தலைநின்றுநினைப்பவராக்கையை

நீக்குமிடங்,கண்டமுடைக்கருநஞ்சைநுகர்ந்தபிரானதிடங்கடலே
ழுகடந், தண்டமுடைப்பெருமானதிடங்கலிக்கச்சியனேகதங்கா
பதமே. (சு)

கட்டுமயக்கமறுத்தவர்கைதொழுதேத்துமிடங்கதிரோனொளியால்
விட்டவிடம்விடையூர்தியிடங்குயிற்பேடைதன்சேவலோடாடுமி
மட்டுமயங்கியவிழ்ந்தமலரொருமாதவியோடுமணம்புணரு [ட
மட்டபுயங்கப்பிரானதிடங்கலிக்கச்சியனேகதங்காபதமே. (எ)

புல்லியிடந்தொழுதுய்துமெனாதவர்தம்புரமூன்றும்பொடி
ப்படுத்த, வில்லியிடம்விரவாதுயிருண்ணும்வெங்காலனைக்காற்
கொடுவீந்தவியக்,கொல்லியிடங்குளிர்மாதவிமவ்வல்குராவகுளங்
குருக்கத்திபுன்னை, யல்லியிடைப்பெடைவண்டுறங்குங்கலிக்கச்சி
யனேகதங்காபதமே. (அ)

சங்கையவர்புணர்தற்கரியான்றளவெனகையாடவிராமிகுசீர்,
மங்கையவண்மகிழச்சுடுகாட்டிடைநட்டநின்றாடியசங்கரனே,யங்
கையினனலேந்துமவன்கனல்சேரொளியன்னதோர்பேரகலத்,தங்
கையவன்னுறைகின்றவிடங்கலிக்கச்சியனேகதங்காபதமே. (கூ)

வீடுபெறப்பலவூழிகணின்றுநினைக்குமிடம்வினைதீருமிடம்,
பீடுபெறப்பெரியோர்திடங்கொண்டு மேவினர்தங்களைக்காக்குமி
டம், பாடுமிடத்தடியான்புகழூரனுரைத்தவிம்மாலைகள்பத்தும்வ
ல்லார், கூடுமிடஞ்சிவலோகனிடங்கலிக்கச்சியனேகதங்காபதமே.

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம் ய.

## திருப்பூவணம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

திருவுடையார்திருமாலயனாலும்
உருவுடையாருமையாளையோர்பாகம்
பரிவுடையாரடைவார்வினைதீர்க்கும்
புரிவுடையாருறைபூவணமீதோ. (க)

எண்ணியிருந்துகிடந்துநடந்து
மண்ணலேனுநினைவார்வினைதீர்ப்பார்
பண்ணிசையார்மொழியார்பலர்பாடப்
புண்ணியனாருறைபூவணமீதோ. (உ)

தெள்ளியபேய்பலபூதமவற்றொடு
நள்ளிருணட்டமதாடல்நவின்றோர்
புள்ளுவராகுமவர்க்கவர்தாமும்
புள்ளுவனாருறைபூவணமீதோ. (௩)

நிலனுடைமான்மறிகையதுதெய்வக்
கனலுடைமாமழுவேந்தியோர்கையில்
அனலுடையாரழகார்தருசென்னிப்
புனலுடையாருறைபூவணமீதோ. (௪)

நடையுடைநல்லெருதேறுவர்நல்லார்
கடைகடைதோறிடுமின்பலியென்பார்
துடியிடைநன்மடவாளொடுமார்பிற்
பொடியணிவாருறைபூவணமீதோ. (௫)

மின்னனையாள்திருமேனிவிளங்கவோர்
தன்னமர்பாகமதாகியசங்கரன்
முன்னினையார்புரமூன்றெரியூட்டிய
பொன்னனையானுறைபூவணமீதோ. (௬)

மிக்கிறையேயவன்றன்மதியாலிட
நக்கிறையேவிரலாலிறலூன்றி
நெக்கிறையேநினைவார்தனிநெஞ்சம்
புக்குறைவானுறைபூவணமீதோ. (௭-௮-௯)

சீரின்மிகப்பொலியுந்திருப்பூவண
மாரவிருப்பிடமாவுறைவானை
ஊரனுரைத்தசொன்மாலைகள்பத்திவை
பாரிலுரைப்பவர்பாவமறுப்பரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாட்டுத்தொகை - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

வீழக்காலனைக்கால்கொடுபாய்ந்தவிலங்கலான்
கூழையேறுகந்தானிடங்கொண்டதுங்கோவலூர்
தாழையூர்தகடூர்தக்களூர்தருமபுரம்
வாழைகாய்க்கும்வளர்மருகல்நாட்டுமருகலே. (௧)

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

அண்டத்தண்டத்தினப்புறத்தாடுமமுதனூர்
தண்டந்தோட்டந்தண்டங்குறைதண்டலையாலங்காடு
கண்டன்முண்டல்கள்சூழ்கழிப்பாலைகடற்கரை
கொண்டல்நாட்டுக்கொண்டல்குறுக்கைநாட்டுக்குறுக்கையே. (௨)

மூலனூர்முதலாயமுக்கண்ணன்முதல்வனூர்
நாலனூர்நரையேறுவந்தேறியநம்பனூர்
கோலநீற்றன்குற்றாலங்குரங்கணின்முட்டமும்
வேலனூர்வெற்றியூர்வெண்ணிக்கூற்றத்துவெண்ணியே. (௩)

தேங்கூருந்திருச்சிற்றம்பலமுஞ்சிராப்பள்ளி
பாங்கூரெங்கள்பிரானுறையுங்கடம்பந்துறை
பூங்கூரும்பரமன்பரஞ்சோதிபயிலுமூர்
நாங்கூர்நாட்டுநாங்கூர்நறையூர்நாட்டுநறையூரே. (௪)

குழலைவென்றமொழிமடவாளையோர்கூறனு
மழலையேற்றுமணாளனிடந்தடமால்வரைக்
கிழவன்கீழைவழிப்பழையாறுகிழையமு
மிழலைநாட்டுமிழலைவெண்ணிநாட்டுமிழலையே. (௫)

தென்னூற்கைம்மைத்திருச்சுழியல்திருக்கானப்பேர்
பன்னூர்புக்குறையும்பரமர்க்கிடம்பாய்ஞால
மென்னூரெங்கள்பிரானுறையுந்திருத்தேவனூர்
பொன்னூர்நாட்டுப்பொன்னூர்புரிசைநாட்டுப்புரிசையே. (௬)

ஈழநாட்டுமாந்தோட்டந்தென்னாட்டிராமேச்சுரஞ்
சோழநாட்டுத்துருத்திநெய்த்தானந்திருமலை
யாழியூரனநாட்டுக்கெல்லாமணியாகிய
கீழையில்லரனூர்க்கிடங்கிள்ளிகுடியதே. (௭)

நாரூநன்னிலந்தென்பனையூர்வடகஞ்சனூர்
நீளநீள்சடையானெல்லிக்காவுநெடுங்களங்
காளகண்டனுறையுங்கடைமுடிகண்டியூர்
வேளாநாட்டுவேளூர்விளத்தூர்நாட்டுவிளத்தூரே. (௮)

தழலுமேனியன்றையலோர்பாகமமர்ந்தவன்
ருழலுந்தொல்வினைதீர்க்கின்றசோதிசோற்றுத்துறை
கழலுங்கோவையுடையவன்காதலிக்குமிடம்
பழனம்பாம்பணிபாம்புரந்தஞ்சைதஞ்சாக்கையே. (௯)

மைகொள்கண்டனெண்டோளன்முக்கண்ணன்வலஞ்சுழி
பைகொள்வாளரவாட்டித்திரியும்பரமனூர்
செய்யில்வாளைகள்பாய்ந்துகளுந்திருப்புன்கூர்நன்
றையன்மேயபொழிலணியாவடுதண்டுறையதே. (௧௦)

பேணிநாடதனிற்றிரியும்பெருமான்றனை
யாணையாமடியார்கடொழப்படுமாதியை
நாணியூரன்வனப்பகையப்பன்வன்றொண்டன்சொற்
பாணியாலிவையேத்துவார்சேர்பரலோகமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருத்துறையூர் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மலையாரருவித்திரண்மாமணியுந்திக்
குலையாரக்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபாற்
கலையாரல்குற்கன்னியராடுந்துறையூர்த்
தலைவாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (௧)

மத்தமதயானையின்வெண்மருப்புந்தி
முத்தங்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபாற்
பத்தர்பயின்றேத்திப்பரவுந்துறையூர்
அத்தாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (௨)

கந்தங்கமழ்காரகில்சந்தனமுந்திச்
செந்தண்புனல்வந்திழிபெண்ணைவடபான்
மந்திபலமாநடமாடுந்துறையூர்
எந்தாயுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (௩)

அரும்பார்ந்தனமல்லிகைசெண்பகஞ்சாடிச்
சுரும்பாரக்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபாற்
கரும்பார்மொழிக்கன்னியராடுந்துறையூர்
விரும்பாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (௪)

மாடார்ந்தனமாவும்பலாக்களுஞ்சாடி
நாடாரவந்தெற்றியோர்பெண்ணைவடபான்
மாடார்ந்தனமாளிகைசூழுந்துறையூர்
வேடாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (௫)

மட்டார்மலர்க்கொன்றையும்வன்னியுஞ்சாடி
மொட்டாரக்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபாற்
கொட்டாட்டோடுபாட்டொலியோவாத்துறையூர்ச்
சிட்டாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (௬)

மாதார்மயிற்பீலியும்வெண்ணுரையுந்தித்
தாதாரக்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபாற்
போதார்ந்தனபொய்கைகள்சூழ்ந்துறையூர்
நாதாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (௭)

கொய்யார்மலர்க்கோங்கொடுவேங்கையுஞ்சாடிச்
செய்யாரக்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபான்
மையார்தடங்கண்ணியராடுந்துறையூ
ரையாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (௮)

விண்ணார்ந்தனமேகங்கணின்றுபொழிய
மண்ணாரக்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபாற்
பண்ணார்மொழிப்பாவையராடுந்துறையூர்
அண்ணாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (௯)

மாவாய்ப்பிளந்தானும்மலர்மிசையானும்
ஆவாவவர்தேடித்திரிந்தலமந்தார்
பூவார்ந்தனபொய்கைகள்சூழ்ந்துறையூர்த்
தேவாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (௧௦)

செய்யார்கமலமலர்நாவலூர்மன்னன்
கையாற்றொழுதேத்தப்படுந்துறையூர்மேற்
பொய்யாத்தமிழூரனுரைத்தனவல்லார்
மெய்யேபெறுவார்கள்தவநெறிதானே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்பாச்சிலாச்சிராமம் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வைத்தனன்றனக்கேதலையுமென்னாவும்நெஞ்சமும்வஞ்சமொன்றின்றி, யுய்த்தனன்றனக்கேதிருவடிக்கடிமையுரைத்தக்காலுவமனேயொக்கும், பைத்தபாம்பார்த்தோர்கோவணத்தோடுபாச்சிலாச்சிராமத்தெம்பரமர், பித்தரேயொத்தோர்நச்சிலராகிலிவரலாதில்லையோபிரானார். (௧)

அன்னையேயென்னேனத்தனேயென்னேனடிகளேயமையுமென்றிருந்தேன், என்னையுமொருவனுளனென்றுகருதியிறையிறை

ருவருள்காட்டாய், அன்னமாம்பொய்கைசூழ்தருபாச்சிலாச்சிராமத்துறையடிகள். பின்னையேயடியார்க்கருள்செய்வதாகிலிவரலாதில்லையோபிரானார். (௩)

உற்றபோதல்லாலுறுதியையுணரே னுள்ளமேயமையுமென்றிருந்தேன், செற்றவர்புரமூன்றெரியெழச்செற்ற செஞ்சடைநஞ்சடைகண்டர், அற்றவர்க்கருள்செய்பாச்சிலாச்சிராமத்தடிகடாமியாதுசொன்னாலும், பெற்றபோதுவந்துபெருவிடிலிகழிலிவரலாதில்லையோபிரானார். (௪)

நாச்சிலபேசிநமர்பிறரொன்றுநன்றுதீதென்கிலர்மற்றோர், பூச்சிலைநெஞ்சேபொன்விளைகழனி புள்ளினஞ்சிலம்புமாம்பொய்கைப், பாச்சிலாச்சிராமத்தடிகளென்றிவர்தாம்பலரையுமாட்கொள்வர்பரிந்தோர், பேச்சிலொன்றைத்தரவிலராகிலிவரலாதில்லையோபிரானார். (௫)

வரிந்தவெஞ்சிலையாலந்தரத்தெயிலைவாட்டியவகையினரேனும், புரிந்தவனாளேபுகழ்தக்கவடிமைபோகுநாள்வீழுநாளாகிப், பரிந்தவர்க்கருள்செய் பாச்சிலாச்சிராமத்தடிகடாமியாதுசொன்னாலும், பிரிந்திறைப்போதிற்போவதேயாகிலிவரலாதில்லையோபிரானார். (௬)

செடித்தவஞ்செய்வார்சென்றுழிச்செல்லேன் றீவினைசெற்றிடுமென்று, அடித்தவமல்லாலாரையுமறியேனுவதுமறிவரெம்மடிகள், படைத்தலைச்சூலம்பற்றியகையர்பாச்சிலாச்சிராமத்தெம்பரமர், பிடித்தவெண்ணீறேபூசுதலானாலிவரலாதில்லையோபிரானார்.

கையதுகபாலங்காடுறைவாழ்க்கைகட்டங்கமேந்தியகையர், மெய்யதுபுரிநூன்மிளிரும்புன்சடைமேல் வெண்டிங்கள்சூடியவிகிர்தர், பையரவல்குற்பாவையராடும்பாச்சிலாச்சிராமத்தெம்பரமர், மெய்யரேயொத்தோர்பொய்செய்வதாகி லிவரலாதில்லையோபிரானார். (௭)

நிணம்படுமுடலைநிலைமையென்றோரேனெஞ்சமேதஞ்சமென்றிருந்தேன், கணம்படிந்தேத்திக்கங்குலும்பகலுங்கருத்தினாற்கைதொழுதெழுவேன், பணம்படுமரவம்பற்றியகையார்பாச்சிலாச்சிராமத்தெம்பரமர், பிணம்படுகாட்டிலாடுவதாகிலிவரலாதில்லையோபிரானார். (௮)

குழைத்துவந்தோடிக்கூடுதிநெஞ்சேகுற்றேவல்நாடொறுஞ்செய்வான், இழைத்தநாள்கடவாரன்பிலேனுமெம்பெருமானெ

ன்றெப்போதும், அழைத்தவர்க்கருள்செய்பாச்சிலாச்சிராமத்தடி கடாமியாதுசொன்னாலும், பிழைத்ததுபொறுத்தொன்றீகிலராகி லிவரலாதில்லையோபிரானார். (௯)

துணிப்படுமுடையுஞ்சுண்ணவெண்ணீறுந்தோற்றமுஞ்சிந்தித்துக்காணின், மணிப்படுகண்டனைவாயினாற்கூறிமனத்தினாற்றொண்டனேனினைவேன், பணிப்படுமரவம்பற்றியகையர்பாச்சிலாச்சிராமத்தெம்பரமர், பிணிப்படவாண்டுபணிப்பிலராகிலிவரலாதில்லையோபிரானார். (௧௦)

ஒருமையேயல்லேனெழுமையுமடியேனடியவர்க்கடியனுமானேன், உரிமையாலுரியேனுள்ளமுமுருகுமொண்மலர்ச்சேவடிகாட்டாய், அருமையாம்புகழார்க்கருள்செயும்பாச்சிலாச்சிராமத்தெம்மடிகள், பெருமைகள்பேசிச்சிறுமைகள்செய்யிலிவரலாதில்லையோபிரானார். (௧௧)

ஏசினவல்லவிகழ்ந்தனவல்லவெம்பெருமானென்றெப்போதும், பாயினபுகழான்பாச்சிலாச்சிராமத்தடிகளையடிதொழப்பன்னாள், வாயினாற்கூறிமனத்தினானினைவான்வளவயனாவலாரூரன், பேசினபேச்சைப்பொறுத்திலராகிலிவரலாதில்லையோபிரானார்.

திருச்சிற்றம்பலம்.

## திருநாட்டியத்தான்குடி - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பூணாணவதோரரவங்கண்டஞ்சேன்புறங்காட்டாடல்கண்டிகழேன் பேணீராகிலும்பெருமையையுணர்வேன்பிறவேனாகிலுமறவேன் காணீராகிலுங் காண்பனென்மனத்தாற் கருதீராகிலுங்கருதிடிலிகழே, னானேலும்மடிபாடுதலொழியேனாட்டியத்தான்குடிநம்பீ. ௧

கச்சேர்பாம்பொன்றுகட்டிநின்றிடுகாட்டெல்லியிலாடலைக் கவர்வன், றச்சேனென்மனம்புகுந்திருக்கின்றமைசொல்லாய்திப்பியமூர்த்தி, வைச்சேயிடர்களைக்களைந்திடவல்லமணியேமாணிக்கவண்ணா, நச்சேனொருவரைநானுமையல்லானாட்டியத்தான்குடி நம்பீ. (௨)

அஞ்சாதேயுமக்காட்செயவல்லேனியாதினுக்காசைப்படுகேன் பஞ்சேர்மெல்லடிமாமலைமங்கைபங்காவெம்பரமேட்டீ மஞ்சேர்வெண்மதிசெஞ்சடைவைத்தமணியேமாணிக்கவண்ணா நஞ்சேர்கண்டாவெண்டலையேந்தீநாட்டியத்தான்குடிநம்பீ. (௩)

கல்லேனல்லேனின்புகழடிமைகல்லாதேபலகற்றே
னில்லேனல்லேனின்வழிநின்றார்தம்முடைநீதியைநினைய
வல்லேனல்லேன்பொன்னடிபரவமாட்டேன்மறுமையைநினைய
நல்லேனல்லேனானுமக்கல்லானாட்டியத்தான்குடிநம்பீ. (௪)

மட்டார்பூங்குழன்மலைமகள்கணவனைக்கருதாதார்தம்மைக்கரு
தேன், ஒட்டாராகிலுமொட்டுவனடியேனும்மடியடைந்தவர்க்கடி
மைப், பட்டேனாகிலும்பாடுதலொழியேன்பாடியுநாடியுமறிய,
நட்டேனாதலால்நான்மறக்கில்லேனாட்டியத்தான்குடிநம்பீ. (௫)

படப்பாற்றன்மையில்நான்பட்டதெல்லாம்படுத்தாயென்றல்
லல்பறையேன்,குடப்பாச்சிலுறைகோக்குளிர்வானேகோனேகூற்
றுதைத்தானே, மடப்பாற்றயிரொடுநெய்மகிழ்ந்தாடுமறையோ
னேமங்கைபங்கா, நடப்பீராகிலும்நடப்பதும்மடிக்கேநாட்டியத்
தான்குடிநம்பீ. (௬)

ஐவாயரவினைமதியுடன்வைத்தவழகாவமரர்கடலைவா [வும்
வெய்வான்வைத்ததோரிலக்கினையணைதரநினைந்தேனுள்ளமுள்ளள
உய்வானெண்ணிவந்தும்மடியடைந்தேனுகவீராகிலுமுவப்பன்
நைவானன்றுமக்காட்பட்டதடியேனாட்டியத்தான்குடிநம்பீ. (௭)

கலியேன்மானிடவாழ்க்கையொன்றாகக்கருதிடிற்கண்கணீர்
பில்கும், பலிதேர்ந்துண்பதோர்பண்புகண்டிகழேன்பசுவேயே
றிலும்பழியேன், வலியேயாகிலும்வணங்குதலொழியேன்மாட்
டேன்மறுமையைநினையேன், நலியேனொருவரைநானுமையல்
லானாட்டியத்தான்குடிநம்பீ. (௮)

குண்டாடிச்சமண்சாக்கியப்பேய்கள்கொண்டாராகிலுங்கொ
ள்ளக், கண்டாலுங்கருதேனெருதேறுங்கண்ணாநின்னலதறியேன்,
தொண்டாடித்தொழுவார்தொழக்கண்டு தொழுதேனென்வினை
போக,நண்டாடும்வயற்றண்டலைவேலிநாட்டியத்தான்குடிநம்பீ.

கூடாமன்னரைக்கூட்டத்துவென்றகொடிறன்கோட்புலிசென்னி
நாடார்தொல்புகழ்நாட்டியத்தான்குடிநம்பியைநாளுமறவாச்
சேடார்பூங்குழற்சிங்கடியப்பன்றிருவாரூரனுரைத்த
பாடீராகிலும்பாடுமின்றொண்டீர்பாடநும்பாவம்பற்றறுமே.

திருச்சிற்றம்பலம்.

இத்தத்தலம் சோழநாட்டிலிருக்கின்றது.
சுவாமிபெயர்-கரிநாதேசுவரர்.
தேவியார்பெயர்-மலர்மங்கையம்மை.
ஆ பதிகம் - ௰௫.

# நம்பியாரூரென்னும்

## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

### திருக்கலையநல்லூர் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

குரும்பைமுலைமலர்க்குழலிகொண்டதவங்கண்டுகுறிப்பினொடுஞ்சென்றவடன்குணத்தினைநன்கறிந்து, விரும்பும்வரங்கொடுத்தவளைவேட்டருளிச்செய்தவிண்ணவர்கோன்கண்ணுதலோன்மேவியவூர்வினவில், அரும்பருகேசுரும்பருவவறுபதம்பண்பாடவணிமயில்கணடமாடுமணிபொழில்சூழயலின், கரும்பருகேகருங்குவளைகண்வளருங்கழனிக்கமலங்கண்முகமலருங்கலயநல்லூர்காணே. (௧)

செருமேவுசலந்தரனைப்பிளந்தசுடராழிசெங்கண்மலர்பங்கயமாச்சிறந்தானுக்கருளி, யிருண்மேவுமந்தகன்மேற்றிரிசூலம்பாய்ச்சியிந்திரனைத்தோண்முரித்தவிறையவனூர்வினவிற், பெருமேதைமறையொலியும்பேரிமுழவொலியும் பிள்ளையினந்துள்ளிவிளையாட்டொலியும்பெருகக், கருமேதிபுனன்மண்டக்கயன்மண்டக்கமலங்களிவண்டின்கணமிரியுங்கலயநல்லூர்காணே. (௨)

இண்டைமலர்கொண்டுமணலிலிங்கமதியற்றியினத்தாவின்பாலாட்டவிடறியதாதையைத்தாள், துண்டமிடுதண்டியடியண்டர்தொழுதேத்தத் தொடர்ந்தவனைப்பணிகொண்டவிடங்கனதூர்வினவில், மண்டபமுங்கோபுரமுமாளிகைசூளிகையுமறையொலியும்விழவொலியுமறுகுநிறைவெய்திக்,கண்டவர்கண்மனங்கவரும்புண்டரிகப்பொய்கைக் காரிகையார்குடைந்தாடுங்கலயநல்லூர்காணே. (௩)

மலைமடந்தைவிளையாடிவளையாடுகரத்தான் மகிழ்ந்தவன்கண்புதைத்தலுமேவல்லிருளாயெல்லா, வுலகுடன்றன்மூடவிருளோடும்வகைநெற்றியொற்றைக்கண்படைத்துவந்த வுத்தமனூர்வினவில்,அலையடைந்தபுனல்பெருகியானைமருப்பிடறியகிலொடுசந்துந்திவருமரிசிலின்றென்கரைமேற், கலையடைந்தகலிகடியந்தணரோமப்புகையாற் கணமுகில்போன்றணிகிளருங்கலயநல்லூர்காணே. (௪)

நிற்பானுங்கமலத்திலிருப்பானுமுதலாநிறைந்தமரர்குறைந்திரப்பநினைந்தருளியவர்க்காய், வெற்பார்வில்லரவுநாணெரியம்பால்விரவார்புரமூன்றுமெரிவித்தவிகிர்தனூர்வினவிற், சொற்பாலபொருட்பாலசுருதியொருநான்குந் தோத்திரமும்பலசொல்லித்துதித்திறைநன்றிறத்தே, கற்பாருங்கேட்பாருமாயெங்குநன்கார்கலையிலந்தணர்வாழுங்கலயநல்லூர்காணே. (௫)

பெற்றிமையொன்றறியாததக்கனதுவேள்விப்பெருந்தேவர் *சிரந்தோள்பற்கரங்கண்பீடழியச், செற்றுமதிக்கலைசிதையத்திருவிரலாற்றேய்வித்தருள்பெருகுசிவபெருமான் சேர்தருமூர்வினவில், தெற்றுகொடிமுல்லையொடுமல்லிகைசெண்பகமுந் திரைபொருதுவருபுனல்சேர் *அரிசிலின்றென்கரைமேற், கற்றினநன்கரும்பின்முளைகறிகற்கக்கறவைகமழ்கழுநீர்கவர்கழனிக்கலயநல்லூர்காணே. (சு)

இலங்கையர்கோன்சிரம்பத்தோடிருபதுதிண்டோளுமிற்றலறவொற்றைவிரல்வெற்பதன்மேலூன்றி, நிலங்கிளர்நீர்நெருப்பொடுகாற்றாகாசமாகிநிற்பனவுநடப்பனவாநின்மலனூர்வினவிற், பலங்கள்பலதிரையுந்திப்பருமணிபொன்கொழித்துப் பாதிரிசந்தகிலினொடுகேதகையுட்பருங்கிக், கலங்குபுனலலம்பிவருமரிசிலின்றென்கரைமேற்கயலுகளும்வயல்புடைசூழ்கலயநல்லூர்காணே

மாலயனுங்காண்பரியமாலெரியாய்நிமிர்ந்தோன்வன்னிமதிசென்னிமிசைவைத்தவன்மொய்த்தெழுந்த, வேலைவிடமுண்டமணிகண்டன்விடையூரும் விமலனுமையவளோடுமேவியவூர்வினவிற், சோலைமலிகுயில்கூவக்கோலமயிலாலச்சுரும்பொடுவண்டிசைமுரலப்பசுங்கிளிசொற்றுதிக்கக், காலையிலுமாலையிலுங்கடவுளடிபணிந்துகசிந்தமனத்தவர்பயிலுங்கலயநல்லூர்காணே. (அ)

பொரும்பலமதுடையசுரன்புரங்களைப்பொருதுபொன்றுவித்தபொருளினைமுன்படைத்துவந்தபுனிதன், கரும்புவிலின்மலர்வாளிக்காமனுடல்வேவக் கனல்விழித்தகண்ணுதலோன்கருதுமூர்வினவில், இரும்புனல்வெண்டிரைபெருகியேலமிலவங்க மிருகரையும்பொருதலைக்குமரிசிலின்றென்கரைமேற், கரும்புனைவெண்முத்தரும்பிப்பொன்மலர்ந்துபவளக் கவின்காட்டுங்கடிபொழில்சூழ்கலயநல்லூர்காணே. (கூ)

தண்கமலப்பொய்கைபுடைசூழ்ந்தழகார்தலத்திற்றடங்கொள்பெருங்கோயிறனிற்றக்கவகையாலே, வண்கமலத்தயன்முன்னாள்வழிபாடுசெய்யமகிழ்ந்தருளியிருந்தபரன்மருவியவூர்வினவில், வெண்கவரிகரும்பீலிவேங்கையொடுகோங்கின் விரைமலரும்விர

---

* எச்சன்சிரம், இந்திரன்றோள், சூரியன்பல், அக்கினிதேவன்கரம், பகன்என்னும்பெயருள்ள மற்றொருசூரியன்கண் இவை பீடழிந்தவை.

* விஷ்ணுவினாற்சொல்லப்பட்டுவந்தமையால் அரிசொல்நதியென்றுபெயர் அது அரிசில்என மருவியிருக்கின்றது. இதனைக்கும்பகோணப்புராணத்திற் கண்டுகொள்க.

வுபுனலரிசிலின்றென்கரைமேற், கண்கமுகின்பூம்பாளைமதுவாசங்
கலந்தகமழ்தென்றல்புகுந்துலவுகலையநல்லூர்காணே. (௧௦)

தண்புனலும்வெண்மதியுந்தாங்கியசெஞ்சடையன்றாமரை
யோன்றலைகலனுக்காமரமுன்பாடி, உண்பலிகொண்டுழல்பரமனு
றைபுமூர்நிறைநீரொழுகுபுனலரிசிலின்றென்கலையநல்லூரதனை,
நண்புடையநன்சடையனிசைஞானிசிறுவனுவலர்கோனூரனுவி
னயந்துரைசெய், பண்பயிலும்பத்துமிவைபத்திசெய்துநித்தம்
பாடவல்லாரல்லலொடுபாவமிலர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருவெண்ணெய்நல்லூருந் திருநாவலூரும்
### பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

கோவலனான்முகன்வானவர்கோனுங்குற்றேவல்செய்ய
மேவலர்முப்புரந்தீயெழுவித்தவனோரம்பினு
லேவரனார்வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னையாளுங்கொண்ட
நாவலனார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (௧)

தன்மையினாலடியேனைத்தாமாட்கொண்டநாட்சபைமுன்
வன்மைகள்பேசிடவன்றொண்டனென்பதோர்வாழ்வுதந்தார்
புன்மைகள்பேசவும்பொன்னைத்தந்தென்னைப்போகம்புணர்த்த
நன்மையினார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (௨)

வேகங்கொண்டோடியவெள்விடையேறியோர்மெல்லியலை
யாகங்கொண்டோர்வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னை யாளுங்
கொண்டார், போகங்கொண்டார் * கடற்கோடியின்மோடியைப்
பூண்பதாக, நாகங்கொண்டார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (௩)

அஞ்சுங்கொண்டாடுவராவினிற்சேவினையாட்சிகொண்டார், தஞ்
சங்கொண்டாரடித்தொண்டினைத்தாமெனவைத்துகந்தார், நெஞ்சங்
கொண்டார்வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னையாளுங்கொண்டு
நஞ்சங்கொண்டார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (௪)

உம்பரார்கோனைத்திண்டோள்முரித்தாருரித்தார்களிற்றைச்
செம்பொனார்தீவண்ணர்தூவண்ணநீற்றரோராவணத்தால்

* கடற்கோடிஎன்பது கோடிக்குழகரென்னுந்தலம். மோடிஎன்
பது அங்குக் கோயில்கொண்டிருக்குந் துர்க்கை.

எம்பிரானூர்வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னையாளுங்கொண்ட
நம்பிரானூர்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (ரு)

கோட்டங்கொண்டார்குடமூக்கிலுங்கோவலுங்கோத்திட்டையும்
வேட்டங்கொண்டார்வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னையாளுங்
கொண்டார்,ஆட்டங்கொண்டார்தில்லைச்சிற்றம்பலத்தேயருக்கனை
முன்,நாட்டங்கொண்டார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (சு)

தாயவளாய்த்தந்தையாகிச்சாதல்பிறத்தலின்றிப்
போயகலாமைத்தன்பொன்னடிக்கென்னைப்பொருந்தவைத்த
வேயவனூர்வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னையாளுங்கொண்
நாயகனூர்க்கிடமாவதுநந்திருநாவலூரே. [ட

வாயாடிமாமறையோதியோர்வேதியனாகிவந்து
தீயாடியார்சினக்கேழலின்பின்சென்றோர்வேடுவனாய் [ண்ட
வேயாடியார்வெண்ணெய்நல்லூரில் வைத்தென்னையாளுங்கொ
நாயாடியார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (அ)

படமாடும்பாம்பணையானுக்கும்பாவைநல்லாடனக்கும்
வடமாடுமால்விடையேற்றுக்கும்பாகனாய்வந்தொருநாள்
இடமாடியார்வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னை யாளுங்கொ
ண்ட, நடமாடியார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (கூ)

மிடுக்குண்டென்றோடியோர்வெற்பெடுத்தான் வலியைநெரித்தா
ர்,அடக்கங்கொண்டாவணங்காட்டிநல்வெண்ணெய்யூராளுங்கொ
ண்டார்,தடுக்கவொண்ணாததோர்வேழத்தினையுரித்திட்டுமையை
நடுக்கங்கண்டார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (க0)

நாதனுக்கூர்நமக்கூர்நரசிங்கமுனையரையன்
ஆதரித்தீசனுக்காட்செயுமூரணிநாவலூரென்
றோதநற்றக்கவன்றொண்டனாரூரனுரைத்ததமிழ்
காதலித்துங்கற்றுங்கேட்பவர்தம்வினைகட்டறுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## மூப்பதுமில்லை - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

மூப்பதுமில்லைபிறப்பதுமில்லையிறப்பதில்லைச்
சேர்ப்பதுகாட்டகத்தூரினுமாகச்சிந்திக்கிலல்லாற்
காப்பதுவேள்விக்குடிதண்டுருத்தியெங்கோன்றலைமேல்
ஆர்ப்பதுநாகமறிந்தோமேல்நாமிவர்க்காட்படோமே. (க)

# நம்பியாரூரரென்னும்

## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

கட்டக்காட்டினடமாடுவரியாவர்க்குங்காட்சியொண்ணார்
சுட்டவெண்ணீறணிந்தாடுவர்பாடுவர்தூயநெய்யால்
வட்டக்குண்டத்திலெரிவளர்த்தோம்பிமறையயில்வார்
அட்டக்கொண்டுண்பதறிந்தோமேல்நாமிவர்க்காட்படோமே. உ

பேருமோராயிரம்பேருடையார்பெண்ணோடாணுமல்லர்
ஊருமதொற்றியூர்மற்றையூர்பெற்றவாநாமறியோங்
காருங்கருகடனஞ்சமுதுண்டுகண்டங்கறுத்தார்க்
காரம்பாம்பாவதறிந்தோமேல்நாமிவர்க்காட்படோமே. (ரு)

ஏனக்கொம்பும்மிளவாமையும்பூண்டங்கோரேறுமேறிக்
கானக்காட்டிற்றொண்டர்கண்டனசொல்லியுங்காமுறவே
மானைத்தோலொன்றுடுத்தபுலித்தோல்பியற்குமிட்டு
யானைத்தோல்போர்ப்பதறிந்தோமேல்நாமிவர்க் காட்படோமே.

ஊட்டிக்கொண்டுண்பதோரூணிலரூரிடுபிச்சையல்லாற்
பூட்டிக்கொண்டேற்றினையேறுவதேறியோர்பூதந்தம்பாற்
பாட்டிக்கொண்டுண்பவர் பாழிதொறும்பலபாம்புபற்றி
யாட்டிக்கொண்டுண்பதறிந்தோமேல்நாமிவர்க்காட்படோமே.

குறவனார்தம்மகடம்மகனார்மணவாட்டிகொல்லை
மறவனாராயங்கோர் பன்றிப்பின்போவதுமாயங்கண்டீர்
இறைவனாராதியார்சோதியாராயங்கோர்சோர்வுபடா
அறவனாராவதறிந்தோமேல்நாமிவர்க்காட்படோமே. (சு)

பித்தரையொத்தொருபெற்றியர்நற்றவையென்னைப்பெற்ற
முத்தவைதம்மனைதந்தைக்குந்தவ்வைக்குந்தம்பிரானார்
செத்தவர்தந்தலையிற்பலிகொள்வதேசெல்வமாகில்
அத்தவமாவதறிந்தோமேல்நாமிவர்க்காட்படோமே. (எ)

உம்பரானூழியானூழியானேங்கிமலருறைவான்
றம்பரமல்லவர்சிந்திப்பவர்தடுமாற்றறுப்பான்
எம்பரமல்லவொன்னெஞ்சத்துள்ளுமிருப்பதாகில்
அம்பரமாவதறிந்தோமேல்நாமிவர்க்காட்படோமே. (அ)

இந்திரனுக்குமிராவணனுக்குமருள்புரிந்தார்
மந்திரமோதுவர்மாமறைபாடுவர்மான்மறியார்
சிந்துரக்கண்ணனுநான்முகனுமுடனாய்த்தனியே
அந்தரஞ்செல்வதறிந்தோமேல்நாமிவர்க்காட்படோமே. (கூ)

கூடலர்மன்னன்குலநாவலூர்க்கோனலத்தமிழைப்
பாடவல்லபரமன்னடியார்க்கடிமைவழுவார்
நாடவல்லதொண்டனூரூரனாட்படுமாறுசொல்லிப்
பாடவல்லார்பரலோகத்திருப்பதுபண்டமன்றே. (க0)

திருச்சிற்றம்பலம்.

## திருநின்றியூர் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

அற்றவனாரடியார்தமக்காயிழைபங்கினராம்
பற்றவனாரெம்பராபரனென்றும்பலர்விரும்புங்
கொற்றவனார்குறுகாதவரூர்நெடுவெஞ்சரத்தாற்
செற்றவனார்க்கிடமாவதுநந்திருநின்றியூரே. (க)

வாசத்தினார்மலர்க்கொன்றையுள்ளார்வடிவார்ந்தநீறு
பூசத்தினார்புகலிந்நகர்போற்றுமெம்புண்ணியத்தார்
நேசத்தினாலென்னையாளுங்கொண்டார்நெடுமாகடல்சூழ்
தேசத்தினார்க்கிடமாவதுநந்திருநின்றியூரே. (உ)

அங்கையின்மூவிலைவேலரமரரடிபரவச்
சங்கையைநீங்கவருளித்தடங்கடல்நஞ்சமுண்டார்
மங்கையோர்பாகமகிழ்ந்தவிடம்வளமல்குபுனற்
செங்கயல்பாயும்வயல்பொலியுந்திருநின்றியூரே. (ங)

ஆறுகந்தாரங்கநான்மறையாரெங்குமாகியட
லேறுகந்தாரிசையேழுகந்தார்முடிக்கங்கைதன்னை
வேறுகந்தார்விரிநூலுகந்தார்பரிசாந்தமதா
நீறுகந்தாருறையும்மிடமாந்திருநின்றியூரே. (ச)

வஞ்சங்கொண்டார்மனஞ்சேரகிலார்நறுநெய்தயிர்பா
லஞ்சுங்கொண்டாடியவேட்கையினார்திகைப்பதியே
தஞ்சங்கொண்டார்தமக்கென்றுமிருக்கைசரணடைந்தார்
நெஞ்சங்கொண்டார்க்கிடமாவதுநந்திருநின்றியூரே. (ரு)

ஆர்த்தவராடரவம்மரைமேற்புலியீருரிவை
போர்த்தவரானையின்றோலுடல்வெம்புலால்கையகலப்
பார்த்தவரின்னுயிர்பார்படைத்தான்சிரமஞ்சிலொன்றைச்
சேர்த்தவருக்குறையுமிடமாந்திருநின்றியூரே. (சா)

தலையிடையார்பலிசென்றகந்தோறுந்திரிந்தசெல்வர்
மலையுடையாளொருபாகம்வைத்தார்கற்றுறைந்தநன்னீ

ரலையுடையார்சடையெட்டுஞ்சுழலவருநடஞ்செய்
நிலையுடையாருறையுமிடமாந்திருநின்றியூரே. (எ)

எட்டுகந்தார்திசையேழுகந்தாரெழுத்தாறுமன்ப
ரிட்டுகந்தார்மலர்ப்பூசையிச்சிக்குமிறைவர்முன்னாள்
பட்டுகும்பாரிடைக்காலனைக்காய்ந்துபலியிரந்துண்
சிட்டுகந்தார்க்கிடமாவதுநந்திருநின்றியூரே. (அ)

காலமுநாயிறுமாகிநின்றார்கழல்பேணவல்லார்
சீலமுஞ்செய்கையுங்கண்டுகப்பாரடியேற்றிசைப்ப
மாலொடுநான்முகனிந்திரன்மந்திரத்தால்வணங்க
நீலநஞ்சுண்டவருக்கிடமாந்திருநின்றியூரே. (கூ)

வாயார்மனத்தால்நினைக்குமவருக்கருந்தவத்திற்
றூயார்சுடுபொடியாடியமேனியர்வானிலென்று
மேயார்விடையுகந்தேறியவித்தகர்போந்தவர்க்குச்
சேயாரடியார்க்கணியவரூர்திருநின்றியூரே. (கo)

சேரும்புகழ்த்தொண்டர்செய்கையறாத்திருநின்றியூரிற்
சீருஞ்சிவகதியாயிருந்தானைத்திருநாவலா
ரூரனுரைத்தவுறுதமிழ்பத்தும்வல்லார்வினைபோய்ப்
பாரும்விசும்புந்தொழப்பரமன்னடிகூடுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## திருக்கோளிலி - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நீளநினைந்தடியேனுமைநித்தலுங்கைதொழுவேன்
வாளனகண்மடவாளவள்வாடிவருந்தாமே
கோளிலியெம்பெருமான்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றே
னாளிலையெம்பெருமானவையட்டித்தரப்பணியே. (க)

வண்டமருங்குழலாளுமைநங்கையோர்பங்குடையாய்
விண்டவர்தம்புரமூன்றெரிசெய்தவெம்வேதியனே
தெண்டிரைநீர்வயல்சூழ்திருக்கோளிலியெம்பெருமா
னண்டமதாயவனேயவையட்டித்தரப்பணியே. (உ)

பாதியோர்பெண்ணைவைத்தாய்படருஞ்சடைக்கங்கைவைத்தாய்
மாதர்நல்லார்வருத்தமதுநீயுமறிதியன்றே

கோதில்பொழில்புடைசூழ்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றே
ஞாதியேயற்புதனேயவையட்டித்தரப்பணியே. (௩)

சொல்லுவதென்னுனைநான்றெண்டைவாயுமைநங்கையைநீ
புல்கியிடத்தில்வைத்தாய்க்கொருபூசல்செய்தாருளரோ
கொல்லைவளம்புறவிற்குண்டையூர்ச்சில்நெல்லுப்பெற்றே
னல்லல்களைந்தடியேற்கவையட்டித்தரப்பணியே. (௪)

முல்லைமுறுவலுமையொருபங்குடைமுக்கணனே
பல்லயர்வெண்டலையிற்பலிகொண்டுழல்பாசுபதா
கொல்லைவளம்புறவிற்றிருக்கோளிலியெம்பெருமா
னல்லல்களைந்தடியேற்கவையட்டித்தரப்பணியே. (௫)

குரவமருங்குழலாளுமைநங்கையோர்பங்குடையாய்
பரவைபசிவருத்தமதுநீயுமறிதியன்றே
குரவமரும்பொழில்சூழ்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றே
னரவமசைத்தவனேயவையட்டித்தரப்பணியே. (௬)

எம்பெருமானுனையேநினைந்தேத்துவனெப்பொழுதும்
வம்பமருங்குழலாளொருபாகமமர்ந்தவனே
செம்பொனின்மாளிகைசூழ்திருக்கோளிலியெம்பெருமா
னன்பதுவாயடியேற்கவையட்டித்தரப்பணியே. (௭)

அரக்கன்முடிகரங்களடர்த்திட்டவெம்மாதிபிரான்
பரக்குமரவல்குலாள்பரவையவள்வாடுகின்றாள்
குரக்கினங்கள்குதிகொள்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றே
னிரக்கமதாயடியேற்கவையிட்டுத்தரப்பணியே. (௮)

பண்டையமால்பிரமன்பறந்துமிடந்துமயர்ந்துங்
கண்டிலராயவர்கள்கழல்காண்பரிதாயபிரான்
தெண்டிரைநீர்வயல்சூழ்திருக்கோளிலியெம்பெருமா
னண்டமதாயவனேயவையட்டித்தரப்பணியே. (௯)

கொல்லைவளம்புறவிற்றிருக்கோளிலிமேயவனை
நல்லவர்தாம்பரவுந்திருநாவலவூரனவ
னெல்லிடவாட்கள்வேண்டிநினைந்தேத்தியபத்தும்வல்லார்
அல்லல்களைந்துலகினண்டவானுலகாள்பவரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம் - உ௰.

## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

## திருவேகம்பந்திருமேற்றளி - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நொந்தாவுண்சுடரேநுனையேநினைந்திருந்தேன்
வந்தாய்போயறியாய்மனமேபுகுந்துநின்ற
சிந்தாயெந்தைபிரான்றிருமேற்றளியுறையு
மெந்தாயுன்னையல்லாலினியேத்தமாட்டேனே. (௧)

ஆட்டான்பட்டமையாலடியார்க்குத்தொண்டுபட்டுக்
கேட்டேன்கேட்பதெல்லாம்பிறவாமைக்கேட்டொழிந்தேன்
சேட்டார்மாளிகைசூழ்திருமேற்றளியுறையு
மாட்டேயுன்னையல்லால்மகிழ்ந்தேத்தமாட்டேனே. (௨)

மோருந்தோரொருகால்நினையாதிருந்தாலும்
வேருவந்தென்னுள்ளம்புகவல்லமெய்ப்பொருளே
சேரூர்தண்கழனித்திருமேற்றளியுறையு
மேறேயுன்னையல்லாலினியேத்தமாட்டேனே. (௩)

உற்றார்சுற்றமெனும்அதுவிட்டுநுன்னடைந்தே
னெற்றாலென்குறைவெனிடராத்துறந்தொழிந்தேன்
செற்றாய்மும்மதிலுந்திருமேற்றளியுறையும்
பற்றேநுன்னையல்லால்பணிந்தேத்தமாட்டேனே. (௪)

எம்மானெம்மனையேயென்பவரிட்டிறந்தொழிந்தார்
மெய்ம்மாலாயினதீர்த்தருள்செய்யுமெய்ப்பொருளே
கைம்மாவீருரியாய்கனமேற்றளியுறையும்
பெம்மானுன்னையல்லால்பெரிதேத்தமாட்டேனே. (௫)

நானேனுன்னடியேநினைந்தேனினைதலுமே
யூனாரிவ்வுடலம்புகுந்தாயென்னொண்சுடரே
தேனேயின்னமுதேதிருமேற்றளியுறையுங்
கோனேயுன்னையல்லாற்குளிர்ந்தேத்தமாட்டேனே. (௬)

கையார்வெஞ்சிலைநாணதன்மேற்சரங்கோத்தே
யெய்தாய்மும்மதிலுமெரியுண்ணவெம்பெருமான்
செய்யார்பைங்கமலத்திருமேற்றளியுறையு
மையாவுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. (௭)

விரையார்கொன்றையினாய்விமலாவினியுன்னையல்லா
லுரையேனாவதனாலுடலிலுயிருள்ளளவுந்

திரையார்தண்கழனித்திருமேற்றளியுறையு
மரையாவுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. (௮)

நிலையாய்நின்னடியேநினைந்தேனினைதலுமே
தலைவாநின்னினையப்பணித்தாய்சலமொழிந்தேன்
சிலையார்மாமதில்சூழ்திருமேற்றளியுறையு
மலையேயுன்னையல்லால்மகிழ்ந்தேத்தமாட்டேனே. (௯)

பாரூர்பல்லவனூர்மதிற்காஞ்சிமாநகர்வாய்ச்
சீரூரும்புறவிற்றிருமேற்றளிச்சிவனை
யாரூரனடியானடித்தொண்டனாரூரன்சொன்ன
சீரூர்பாடல்வல்லார்சிவலோகஞ்சேர்வாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாடு - சுவாமி திருமேற்றளியீசுவரர்.

## திருப்பழமண்ணிப்படிக்கரை - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

முன்னவனெங்கள்பிரான்முதல்காண்பரிதாயபிரான்
சென்னியிலெங்கள்பிரான்திருநீலமிடற்றெம்பிரான்
மன்னியவெங்கள்பிரான்மறைநான்குங்கல்லால்நீழற்கீழ்ப்
பன்னியவெங்கள்பிரான்பழமண்ணிப்படிக்கரையே. (௧)

அண்டகபாலஞ்சென்னியடிமேலலரிட்டுநல்ல
தொண்டங்கடிபரவித்தொழுதேத்திநின்றாடுமிடம்
வெண்டிங்கள்வெண்மழுவன்விரையார்கதிர்மூவிலைய்
பண்டங்கன்மேய்விடம்பழமண்ணிப்படிக்கரையே. (௨)

ஆடுமினன்புடையீரடிக்காட்பட்டதூளிகொண்டு
சூடுமின்றொண்டருள்ளீருமரோடெமர்சூழவந்து
வாடுமின்வாழ்க்கைதன்னைவருந்தாமற்றிருந்தச்சென்று
பாடுமின்பத்தருள்ளீர்பழமண்ணிப்படிக்கரையே. (௩)

அடுதலையேபுரிந்தானவையந்தரமூவெயிலுங்
கெடுதலையேபுரிந்தான்கிளருஞ்சிலைநாணியிற்கோ
லடுதலையேபுரிந்தானரிகான்றிட்டவெச்சில்வெள்ளைப்
படுதலையேபுரிந்தான்பழமண்ணிப்படிக்கரையே. (௪)

உங்கைகளாற்கூப்பியுகந்தேத்தித்தொழுமின்றொண்டர்
மங்கையோர்கூறுடையான்வானோர்முதலாயபிரான்
அங்கையில்வெண்மழுவனலையார்கதிர்மூவிலைய
பங்கையபாதனிடம்பழமண்ணிப்படிக்கரையே. (௫)

செடிபடத்தீவிளைத்தான்சிலையார்மதிற்செம்புனஞ்சேர்
கொடிபடுமூரிவெள்ளையெருதேற்றையுமேற்கொண்டான்
கடியவன்காலன்றன்னைக்கறுத்தான்கழற்செம்பவளப்
படியவன்பாசுபதன்பழமண்ணிப்படிக்கரையே. (௬)

கடுத்தவன்றேர்கொண்டோடிக்கயிலாயநன்மாமலையை
யெடுத்தவனீரைந்துவாயரக்கன்முடிபத்தலற
விடுத்தவன்கைநரம்பால்வேதகீதங்கள்பாடலுறப்
படுத்தவன்பால்வெண்ணீற்றன்பழமண்ணிப்படிக்கரையே. (௭)

திரிவன்மும்மதிலுமெரித்தானிமையோர்பெருமா
னரியவ * னட்டபுட்பமவைகொண்டடிபோற்றிநல்ல
கரியவனான்முகனுமடியுமுடிகாண்பரிய
பரியவன்பாசுபதன்பழமண்ணிப்படிக்கரையே. (௮)

வெற்றரைக்கற்றமணும்விரையாதுவிண்டாலமுணுந்
துற்றரைத்துற்றறுப்பான்றுன்னவாடைத்தொழிலுடையீர்
பெற்றரைப்பித்தரென்றுகருதேன்மின்படிக்கரையுட்
பற்றரைப்பற்றிநின்றுபழிபாவங்கடீர்மின்களே (௯)

பல்லுயிர்வாழுந்தெண்ணீர்ப்பழமண்ணிப்படிக்கரையை
யல்லியந்தாமரைத்தாராரூரனுரைத்ததமிழ்
சொல்லுதல்கேட்டல்வல்லாரவர்க்குந்தமர்க்குங்கிளைக்கும்
எல்லியுநண்பகலுமிடர்கூருதலில்லையன்றே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## திருக்கழிப்பாலை - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

செடியேன்றீவினையிற்றடுமாற்றங்கண்டாலு
மடியானாவவெனாதொழிதல்தகவாமே
முடிமேல்மாமதியும்மரவுமுடன்றுயிலும்
வடிவேதாமுடையார்மகிழுங்கழிப்பாலையதே. (௧)

எங்கேனுமிருந்துன்னடியேனுனைநினைந்தா
லங்கேவந்தென்னொடுமுடனாகிநின்றருளி

* அஷ்டபுட்பமாவன. புன்னை-வெள்ளெருக்கு-சண்பகம்-நந்தியாவர்த்தம்-நீலோற்பலம்-பாதிரி-அலரி-செந்தாமரை-என்னு மிவற்றின் புட்பங்களாம் இவைபுலரிமுதலியகாலங்களிற் சாத்தும் அஷ்டபுட்பம் மற்றுமுள்ளவைகளைப் புட்பவிதியிற் காண்க.

யுமையோர்கூறுடையாயுருவேதிருக்காளத்தியு
ளமையேயுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. (௨)

படையார்வெண்மழுவாய்பகலோன்பல்லுகுத்தவனே
விடையார்வேதியனேவிளங்குங்குழைக்காதுடையாய்
கடையார்மாளிகைசூழ்கணநாதனெங்காளத்தியா
யுடையாயுன்னையல்லாலுகந்தேத்தமாட்டேனே. (௩)

மறிசேர்கையினனேமதமாவுரிபோர்த்தவனே
குறியேயென்னுடையகுருவேயுன்குற்றேவல்செய்வே
னெறியேநின்றடியார்நினைக்குந்திருக்காளத்தியுள்
அறிவேயுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. (௪)

வெஞ்சேலன்னகண்ணார்திறத்தேகிடந்துற்றலறி
நஞ்சேனடியேனலமொன்றறியான்மையினாற்
றுஞ்சேனொருகாற்றொழுதேன்றிருக்காளத்தியா
யஞ்சாதுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. (௫)

பொய்யவனாயடியேன்புகவேநெறியொன்றறியேன்
செய்யவனாகிவந்திடரானவைதீர்த்தவனே
மெய்யவனேதிருவேவிளங்குந்திருக்காளத்தியென்
ஐயநுன்றன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே (௬)

கடியேன்காதன்மையாற்கழற்போதறியாதவென்னுள்
குடியாக்கோயில்கொண்டகுளிர்வார்சடையெங்குழகா
முடியால்வானவர்கள்முயங்குந்திருக்காளத்தியா
யடியேனுன்னையல்லாலறியேன்மற்றொருவரையே. (௭)

நீறார்மேனியனேநிமலாநினையன்றிமற்றுக்
கூறேனாவதனாற்கொழுந்தேயென்குணக்கடலே
பாறார்வெண்டலையிற்பலிகொண்டுழல்காளத்தியா
யேறேயுன்னையல்லாலினியேத்தமாட்டேனே. (௮)

தளிர்போல்மெல்லடியாள்தனையாகத்தமர்ந்தருளி
யெளிவாய்வந்தென்னுள்ளம்புகுதவல்லவெம்பெருமான்
களியார்வண்டறையுந்திருக்காளத்தியுள்ளிருந்த
வொளியேநுன்னையல்லாலினியொன்றுமுணரேனே. (௯)

காராரும்பொழில்சூழ்கணநாதனெங்காளத்தியுள்
ஆராவின்னமுதையணிநாவலாரூரன்சொன்ன
சீரூர்செந்தமிழ்கள்செப்புவார்வினையாயினபோய்ப்
பேராவிண்ணுலகம்பெறுவார்பிழைப்பொன்றிலரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆ-பதிகம் - ௨௬.

# நம்பியாரூரரென்னும்
## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

### திருக்கற்குடி - பண் - நட்டராகம்.
திருச்சிற்றம்பலம்.

விடையாருங்கொடியாய்வெறியார்மலர்க்கொன்றையினாய்
படையார்வெண்மழுவாபரமாய்பரம்பரனே
கடியார்பூம்பொழில்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
அடிகேளெம்பெருமானடியேனையுமஞ்சலென்னே. (௧)

மறையோர்வானவருந்தொழுதேத்திவணங்கநின்ற
விறைவாவெம்பெருமானெனக்கின்னமுதாயவனே
கறையார்சோலைகள்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
அறவாவங்கணனேயடியேனையுமஞ்சலென்னே. (௨)

சிலையால்முப்புரங்கள்பொடியாகச்சிதைத்தவனே
மலைமேல்மாமருந்தேமடமாதிடங்கொண்டவனே
கலைசேர்கையினனேதிருக்கற்குடிமன்னிநின்ற
அலைசேர்செஞ்சடையாயடியேனையுமஞ்சலென்னே. (௩)

செய்யார்மேனியனேதிருநீலமிடற்றினனே
மையார்கண்ணிபங்காமதயானையுரித்தவனே
கையார்சூலத்தினாய்திருக்கற்குடிமன்னிநின்ற
ஐயாவெம்பெருமானடியேனையுமஞ்சலென்னே. (௪)

சந்தார்வெண்குழையாய்சரிகோவணவாடையனே
பந்தாரும்விரலாளொருபாகமமர்ந்தவனே
கந்தார்சோலைகள்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
எந்தாயெம்பெருமானடியேனையுமேன்றுகொள்ளே. (௫)

அரையார்கீளொடுகோவணமுமரைக்கசைத்து
விரையார்கொன்றையுடன்விளங்கும்பிறைமேலுடையாய்
கரையாரும்வயல்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
அரையாவெம்பெருமானடியேனையுமஞ்சலென்னே. (௬)

பாரோர்விண்ணவரும்பரவிப்பணிந்தேத்தநின்ற
சீரார்மேனியனேதிகழ்நீலமிடற்றினனே
காரார்பூம்பொழில்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
ஆராவின்னமுதேயடியேனையுமஞ்சலென்னே. (௭)

நிலனேநீர்வளிதீநெடுவானகமாகிநின்ற
புலனேபுண்டரிகத்தயன்மாலவன்போற்றிசெய்யுங்
கனலேகற்பகமேதிருக்கற்குடிமன்னிநின்ற
அனல்சேர்கையினனேயடியேனையுமஞ்சலென்னே. (௮)

வருங்காலன் றுயிரைமடியத்திருமெல்விரலாற்
பெரும்பாலன் றனக்காய்ப்பிரிவித்தபெருந்தகையே
கரும்பாரும்வயல்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
விரும்பாவெம்பெருமானடியேனையும்வேண்டுதியே. (௯)

அலையார்தண்புனல்சூழ்ந்தழகாகிவிழவமருங்
கலையார்மாதவர்சேர்திருக்கற்குடிக்கற்பகத்தைச்
சிலையார்வாணுதலாள்நல்லசிங்கடியப்பனுரை
விலையார்மாலைவல்லார்வியன்மூவுலகாள்பவரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## திருக்கடவூர் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொடியார்மேனியனேபுரிநூலொருபாற்பொருந்த
வடியார்மூவிலைவேல்வளர்கங்கையின்மங்கையொடுங்
கடியார்கொன்றையனேகடவூர்தனுள்வீரட்டத்தெம்
அடிகேளென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (௧)

பிறையாருஞ்சடையாய்பிரமன்றலையிற்பலிகொண்
மறையார்வானவனேமறையின்பொருளானவனே
கறையாருமிடற்றாய்கடவூர்தனுள்வீரட்டத்தெம்
இறைவாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (௨)

அன்றாலின்னிழற்கீழறநால்வர்க்கருள்புரிந்து
கொன்றாய்காலனுயிர்கொடுத்தாய்மறையோனுக்குமான்
கன்றாருங்கரவாகடவூர்த்திருவீரட்டத்து
ளென்றாதைபெருமானெனக்கார்துணைநீயலதே. (௩)

போராருங்கரியின்னுரிபோர்த்துப்பொன்மேனியின்மேல்
வாராரும்முலையாளொருபாகமகிழ்ந்தவனே
காராருமிடற்றாய்கடவூர்தனுள்வீரட்டானத்
தாராவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (௪)

மையார்கண்டத்தினாய்மதமாவுரிபோர்த்தவனே
பொய்யாதென்னுயிருட்புகுந்தாயின்னம்போந்தறியாய்
கையாராடரவாகடவூர்தனுள்வீரட்டத்தெம்
ஐயாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (௫)

மண்ணீர்தீவெளிகால்வருபூதங்களாகிமற்றும்
பெண்ணோடாணலியாய்ப்பிறவாவுருவானவனே

கன்றாருண்மணியேகடவூர்தனுள்வீரட்டத்தெம்
அண்ணாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (சு)

எரியார்புன்சடைமேலிளநாகமணிந்தவனே
நரியாருஞ்சுடலைநகுவெண்டலைகொண்டவனே
கரியாரீருரியாய்கடவூர்தனுள்வீரட்டத்தெம்
அரியாயென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (எ)

வேறாவுன்னடியேன்விளங்குங்குழைக்காதுடையாய்
தேறேனுன்னையல்லாற்சிவனேயென்செழுஞ்சுடரே
காறூர்வெண்மருப்பாகடவூர்த்திருவீரட்டத்துள்
ஆரூர்செஞ்சடையாயெனக்கார்துணைநீயலதே. (அ)

அயனோடன்றரியுமடியும்முடிகாண்பரிய
பயனேயெம்பரனேபரமாயபரஞ்சுடரே
கயமாருஞ்சடையாய்கடவூர்த்திருவீரட்டத்துள்
அயனேயென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (கூ)

காராரும்பொழில்சூழ்கடவூர்த்திருவீரட்டத்துள்
ஏராரும்மிறையைத்துணையாவெழில்நாவலர்கோன்
ஆரூரன்னடியானடித்தொண்டனுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார்பரலோகத்திருப்பாரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

## திருக்குருகாவூர்- பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

இத்தனையாமாற்றையறிந்திலேனெம்பெருமான்
பித்தரோயென்றும்மைப்பேசுவர்பிறரெல்லா
முத்தினைமணிதன்னைமாணிக்கமுளைத்தெழுந்த
வித்தனேகுருகாவூர்வெள்ளடைநீயன்றே. (க)

ஆவியைப்போகாமேதவிர்த்தென்னையாட்கொண்டாய்
வாவியிற்கயல்பாயக்குளத்திடைமடைதோறுங்
காவியுங்குவளையுங்கமலஞ்செங்கழுநீரும்
மேவியகுருகாவூர்வெள்ளடைநீயன்றே. (உ)

பாடுவார்பசிதீர்ப்பாய்பரவுவார்பிணிகளைவாய்
ஓடுநங்கலனுகவுண்பலிக்குழல்வானே

காடுநல்லிடமாகக்கடுவிருள்நடமாடும்
வேடனேகுருகாவூர்வெள்ளடைநீயன்றே. (௩)

வெப்பொடுபிணியெல்லாந்தவிர்த்தென்னையாட்கொண்டா
யொப்புடையொளிநீலமோங்கியமலர்ப்பொய்கை
யப்படியழகாயவணிநடைமடவன்னம்
மெய்ப்படுகுருகாவூர்வெள்ளடைநீயன்றே. (௪)

வரும்பழிவாராமேதவிர்த்தென்னையாட்கொண்டாய்
சுரும்புடைமலர்க்கொன்றைச்சுண்ணவெண்ணீற்றானே
யரும்புடைமலர்ப்பொய்கையல்லியுமல்லிகையும்
விரும்பியகுருகாவூர்வெள்ளடைநீயன்றே. (௫)

பண்ணிடைத்தமிழொப்பாய்பழத்தினிற்சுவையொப்பாய்
கண்ணிடைமணியொப்பாய்கடுவிருட்சுடரொப்பாய்
மண்ணிடையடியார்கள்மனத்திடர்வாராமே
விண்ணிடைகுருகாவூர்வெள்ளடைநீயன்றே. (௬)

போந்தனைதரியாமேநமன்றமர்புகுந்தென்னை
நோந்தனைசெய்தாலுநுன்னலதறியேனான்
சாந்தனைவருமேலுந்தவிர்த்தென்னையாட்கொண்ட
வேந்தனேகுருகாவூர்வெள்ளடைநீயன்றே. (௭)

மலக்கில்நின்னடியார்கள்மனத்திடைமால்தீர்ப்பாய்
சலச்சலமிடுக்குடையதருமனார்தமரென்னைக்
கலக்குவான்வந்தாலுங்கடுந்துயர்வாராமே
விலக்குவாய்குருகாவூர்வெள்ளடைநீயன்றே. (௮)

படுவிப்பாயுனக்கேயாட்பலரையும்பணியாமே
தொடுவிப்பாய்துகிலொடுபொன்தோலுடுத்துழல்வானே
கெடுவிப்பாயல்லாதார்கேடிலாப்பொன்னடிக்கே
விடுவிப்பாய்குருகாவூர்வெள்ளடைநீயன்றே. (௯)

வளங்கனிபொழில்மல்குவயலணிந்தழகாய
விளங்கொளிகுருகாவூர்வெள்ளடையுறைவானை
யிளங்கிளையாரூரன்வனப்பகையவளப்பன்
உளங்குளிர்தமிழ்மாலைபத்தர்கட்குரையாமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

சோழநாடு
சுவாமிபெயர் - வெள்ளிடையப்பர்.
தேவியார் - காவியங்கண்ணியம்மை.

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

## திருக்கருப்பறியலூர் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

சிம்மாந்துசிம்புளித்துச்சிந்தையினில்வைத்துகந்து திறம்பாவண்ணங், கைம்மாவினுரிவைபோர்த்துமைவெருவக்கண்டானைக் கருப்பறியலூர்க், கொய்ம்மாவின்மலர்ச்சோலைக்குயில்பாடமயிலாடுங்கொகுடிக்கோயி, லெம்மானைமனத்தினால்நினைந்தபோதவர்நமக்கினியவாறே. (க)

நீற்றுருமேனியராய்நினைவார்தம்முள்ளத்தே நிறைந்துதோன்றுங், காற்றானைத்தீயானைக்கதிரானைமதியானைக் கருப்பறியலூர்க், கூற்றானைக்கூற்றுதைத்துக்கோல்வளையாளவளோடுங் கொகுடிக்கோயி, லேற்றானைமனத்தினால் நினைந்தபோதவர்நமக் கினியவாறே. (உ)

முட்டாமேநாடோறும்நீர்மூழ்கிப்பூப்பறித்து மூன்றுபோதுங், கட்டார்ந்தவிண்டைகொண்டடிசேர்த்துமந்தணர்தங் கருப்பறியலூர்க்,கொட்டாட்டுப்பாட்டாகிநின்றானைக்குழகனைக்கொகுடிக்கோயி, லெட்டானமூர்த்தியைநினைந்தபோதவர்நமக்கினியவாறே. (ங)

விருந்தாயசொன்மாலைகொண்டேத்திவினைபோகவேலிதோறுங், கருந்தாளவாழைமேற்செங்கனிகள்தேன்சொரியுங்கருப்பறியலூர்க், குருந்தாயமுள்ளெயிற்றுக் கோல்வளையாளவளோடுங் கொகுடிக்கோயி, விருந்தானைமனத்தினால்நினைந்தபோதவர்நமக்கினியவாறே. (ச)

பொடியேறுதிருமேனிப்பெருமானைப்பொங்கரவக்கச்சையானைக், கடிநாறுபூம்பொய்கைக்கயல்வாளைகுதிகொள்ளுங் கருப்பறியலூர்க், கொடியேறிவண்டினமுந்தண்டேனும்பண்செய்யுங்கொகுடிக்கோயி, லடியேறுகழலானைநினைந்தபோதவர்நமக்கினியவாறே. (ரு)

பொய்யாதவாய்மையாற்பொடிப்பூசிப்போற்றிசைத்துப் பூசைசெய்து, கையினாலெரியோம்பிமறைவளர்க்குமந்தணர்தங் கருப்பறியலூர்க், கொய்யுலாமலர்ச்சோலைக்குயில்கூவமயிலாலுங்கொகுடிக்கோயி, லையனையென்மனத்தினால்நினைந்தபோதவர் நமக்கினியவாறே. (சா)

செடிகொணோயுள்ளளவுந்தீவினையுந்தீர்த்தொழியச்சிந்தைசெய்ம்மின், கடிகொள்பூந்தடமண்டிக்கருமேதிகண்படுக்குங்கரு

ப்பதியவூர்க், கொடிகொள்பூநுண்ணிடையாள்கோல்வளையாள வளோடுங்கொகுடிக்கோயி, லடிகளையென்மனத்தினால்நினைந்த போதவர்நமக்கினியவாறே. (எ)

பறையாதவல்வினைகள்பறந்தொழியப்பன்னாளும் பாடியாடிக், கறையார்ந்தகண்டத்தனெண்டோளன்முக்கண்ணன்கருப்பறியலூர்க், குறையாதமறைநாவர்குற்றேவலொழியாதகொகுடிக் கோயி,லுறைவானைமனத்தினால்நினைந்தபோதவர்நமக்கினியவாறே

சங்கேந்துகையானுந் தாமரையின்மேலானுந் தன்மைகாணாக், கங்கார்ந்தவார்சடைகளுடையானைவிடையானைக் கருப்பறியலூர்க், கொங்கார்ந்தபொழிற்சோலைசூழ்கனிகள்பலவுதிர்க்குங் கொகுடிக்கோயி, லெங்கோனைமனத்தினால்நினைந்தபோதவர்நமக் கினியவாறே. (௯)

பண்டாழினிசைமுரலப்பன்னாளும்பாவித்துப் பாடியாடிக், கண்டார்தங்கண்குளிருங்களிக்கமுகம்பூஞ்சோலைக் கருப்பறியலூர்க், குண்டாடுஞ்சமணருஞ்சாக்கியரும்புறங்கூறுங்கொகுடிக் கோயி, லெண்டோளெம்பெருமானைநினைந்தபோதவர்நமக்கினி யவாறே. (௧௦)

கலைமலிந்ததென்புலவர்கற்றோர்தம்மிடர்தீர்க்குங் கருப்பறியலூர்க், குலைமலிந்தகோட்டெங்குமட்டொழுகும்பூஞ்சோலைக் கொகுடிக்கோயி, லிலைமலிந்தமழுவானைமனத்தினாலன்புசெய்தின்பமெய்தி, மலைமலிந்தோளூரன்வனப்பகையப்பன்னுரைத்த வண்டமிழ்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருஇடையாற்றுத்தொகை - பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்.

முந்தையூர்முதுகுன்றங்குரங்கணின்முட்டஞ்
சிந்தையூர்நன்றுசென்றடைவான்றிருவாரூர்
பந்தையூர்பழையாறுபழனம்பைஞ்ஞீலி
யெந்தையூரெய்தமானிடையாறிடைமருதே. (௧)

சுற்றுமூர்சுரியல்திருச்சோபுரந்தொண்ட
ரொற்றுமூரொற்றியூர்திருவூறலொழியாப்
பெற்றமேறிப்பெண்பாதியிடம்பெண்ணைத்தெண்ணீர்
எற்றுமூரெய்தமானிடையாறிடைமருதே. (௨)

கடங்களூர்திருக்காரிகைகயிலாயம்
விடங்களூர்திருவெண்ணியண்ணாமலைவெய்ய

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

படங்களூர்கின்றபாம்ப ணையான்பரஞ்சோதி
யிடங்கொளூரெய்தமானிடையாறிடைமருதே. (ஙு)

கச்சையூர்காவங்கழுக்குன்றங்காரோணம்
பிச்சையூர்திருவானகடவூர்வடபேறூர்
கச்சியூர்கச்சிசிக்கல்நேய்த்தானமிழலை
யிச்சையூரெய்தமானிடையாறிடைமருதே. (ச)

நிறையனூர்நின்றியூர்கொடுங்குன்றமமர்ந்த
பிறையனூர்பெருமூர்பெரும்பற்றப்புலியூர்
மறையனூர்மறைக்காடுவலஞ்சுழிவாய்த்த
இறைவனூரெய்தமானிடையாறிடைமருதே. (ரு)

திங்களூர்திருவாதிரையான்பட்டினமூர்
நங்களூர்நறையூர்நனிநாலிசைநாலூர்
தங்களூர்தமிழானென்றுபாவிக்கவல்ல
வெங்களூரெய்தமானிடையாறிடைமருதே. (சூ)

கருக்கநஞ்சமுதுண்டகல்லாலன்கொல்லேற்றன்
தருக்கருக்கனைச்செற்றுகந்தான்றன்முடிமேல்
எருக்கநாண்மலரிண்டையுமத்தமுஞ்சூடி
யிருக்குமூரெய்தமானிடையாறிடைமருதே. (எ)

தேசனூர்வினைதேயநின்றான்றிருஆக்கூர்
பாசனூர்பரமேட்டிபவித்திரபாவ
நாசனூர்தனிபள்ளிதள்ளாற்றையமர்ந்த
ஈசனூரெய்தமானிடையாறிடைமருதே. (அ)

பேறனூர்பிறைச்சென்னியினான்பெருவேளூர்
தேறனூர்திருமாமகள்கோன்றிருமாலோர்
கூறனூர்குரங்காடுதுறைதிருக்கோவல்
ஏறனூரெய்தமானிடையாறிடைமருதே. (கூ)

ஊறிவாயினநாடியவன்றொண்டனூரன்
தேறுவார்சிந்தைதேறுமிடஞ்செங்கண்வெள்ளே
றேறுவாரெய்தமானிடையாறிடைமருதைக்
கூறுவார்வினையெவ்விடமேய்குளிர்வாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

## திருக்கோடிக்குழகர் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கடிதாயக்கடற்காற்றுவந்தெற்றக்கரைமேற்
குடிதானயலேயிருந்தாற்குற்றமாமோ
கொடியேன்கண்கள்கண்டனகோடிக்குழகீர்
அடிகேளுமக்கார்துணையாகவிருந்தீரோ. (க)

முன்றான்கடல்நஞ்சமுண்டவதனாலோ
பின்றான்பரவைக்குபகாரஞ்செய்தாயோ
குன்றாப்பொழில்சூழ்தருகோடிக்குழகா
என்றான்றனியேயிருந்தாயெம்பிரானே. (உ)

மத்தம்மலிசூழ்மறைக்காடதன்றென்பாற்
பத்தர்பலர்பாடவிருந்தபரமா
கொத்தார்பொழில்சூழ்தருகோடிக்குழகா
வெத்தாற்றனியேயிருந்தாயெம்பிரானே. (ங)

காடேல்மிகவாலிதுகாரிகையஞ்சக்
கூடிப்போந்திலாந்தைகள்கூகைகுழற
வேடித்தொண்டர்சாலவுந்தீயர்சழக்கர்
கோடிக்குழகாவிடங்கோயில்கொண்டாயே. (ச)

மையார்தடங்கண்ணிபங்காகங்கையாளு
மெய்யாகத்திருந்தனள்வேறிடமில்லை
கையார்வளைக்காடுகாளோடுமுடனாய்க்
கொய்யார்பொழிற்கோடியேகோயில்கொண்டாயே. (ரு)

அரவேரல்குலாளையோர்பாகமமர்ந்து
மரவங்கமழ்மாமறைக்காடதன்றென்பாற்
குரவப்பொழில்சூழ்தருகோடிக்குழகா
இரவேதுணையாயிருந்தாயெம்பிரானே. (சா)

பறையுங்குழலும்மொலிபாடலியம்ப
அறையுங்கழலார்க்கநின்றாடுமமுதே
குறையாப்பொழில்சூழ்தருகோடிக்குழகா
இறைவாதனியேயிருந்தாயெம்பிரானே. (எ)

ஒற்றியூரென்றவூனத்தினாலதுதானோ
அற்றப்படவாரூரதென்றகன்றாயோ
முற்றாமதிசூடியகோடிக்குழகா
எற்றாற்றனியேயிருந்தாயெம்பிரானே. (அ)

## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

நெடியானொடுநான்முகனும்மறிவொண்ணாப்
படியான்படிகொள்ளுமிடங்குடியில்லை
கொடியார்பலர்வேடர்கள்வாழுங்கரைமேல்
அடிகேளன்பதாயிடங்கோயில்கொண்டாயே. (௯)

பாரூர்மலிசூழ்மறைக்காடதன்றென்பா
லேரார்பொழில்சூழ்தருகோடிக்குழகை
யாரூரனுரைத்தனபத்திவைவல்லார்
சீரார்சிவலோகத்திருப்பவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

### ஆ பதிகம் - ௯௨.

### நமக்கடிகளாகிய - அடிகள் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பாறுதாங்கியகாடரோபடுதலையரோமலைப்பாவையோர்
கூறுதாங்கியகுழகரோகுழைக்காதரோகுறுங்கோட்டிள
ஏறுதாங்கியகொடியரோசுடுபொடியரோவிளங்கும்பிறை
யாறுதாங்கியசடையரோநமக்கடிகளாகியவடிகளே. (௧)

இட்டிதாகவந்துரைமினோநுமக்கிசையுமாநினைந்தேத்துவீர்
கட்டிவாழ்வதுநாகமோசடைமேலுநாறுகரந்தையோ
பட்டியேறுகந்தேறரோபடுவெண்டலைப்பலிகொண்டுவந்
தட்டியாளவுங்கிற்பரோநமக்கடிகளாகியவடிகளே. (௨)

ஒன்றுநீர்கள்வந்துரைமினோநுமக்கிசையுமாநினைந்தேத்துவீர்
குன்றிபோல்வதோருருவரோகுறிப்பாகிநீறுகொண்டணிவரோ
வின்றியேயிலராவரோவன்றியுடையராயிலராவரோ
அன்றியேமிகவறவரோநமக்கடிகளாகியவடிகளே. (௩)

தேனையாடுமுக்கண்ணரோமிகச்செய்யரோவெள்ளைநீற்றரோ
பானெய்யாடலும்பயில்வரோதமைப்பற்றினார்கட்குநல்லரோ
மானைமேவியகண்ணினாள்மலைமங்கைநங்கையையஞ்சவோர்
ஆனையீருரிபோர்ப்பரோநமக்கடிகளாகியவடிகளே. (௪)

கோணல்மாமதிசூடரோகோடுகொட்டிகாலர்கழலரோ
வீணைதானவர்கருவியோவிடையேறுவேதமுதல்வரோ
நாணதாகவோர்நாகங்கொண்டரைக்கார்ப்பரோநலமார்தர
ஆணையாகநம்மடிகளோநமக்கடிகளாகியவடிகளே. (௫)

வந்துசொல்லுமின்மூடனேனுக்குவல்லவாறினைந்தேத்துவீர்
வந்தசாயினையறிவரோதம்மைவாழ்த்தினார்கட்குநல்லரோ [ரோ
புந்தியாலுரைகொள்வரோவன்றிப் பொய்யின்மெய்யுரைத்தாள்வ
அன்றியேமிகவறவரோநமக்கடிகளாகியவடிகளே. (௬)

மெய்யென்சொல்லுமினமரங்காளுமக்கிசையுமாறினைந்தேத்துவீ
கையிற்சூலமதுடையரோகரிகாடரோகறைக்கண்டரோ [ர்
வெய்யபாம்பரையார்ப்பரோவிடையேறரோகடைதோறுஞ்செ
றையங்கொள்ளுமவ்வடிகளோநமக்கடிகளாகியவடிகளே. [ன்

நீடுவாழ்பதியுடையரோவயனெடியமாலுக்குநெடியரோ
பாடுவாரையுமுடையரோதமைப்பற்றினார்கட்குநல்லரோ
காடுதானரங்காகவேகைகளெட்டினோடிலயம்பட
ஆடுவாரெனப்படுவரோநமக்கடிகளாகியவடிகளே. (௮)

நமணநந்தியுங்கருமவீரனுந்தருமசேனுமென்றிவர்
குமணமாமலைக்குன்றுபோல்நின்று தங்கள்கூறையொன்றின்றியே
ஞமணஞாஞணஞாணஞோணமென்றோதியாரையுநாணிலா
அமணராற்பழிப்புடையரோநமக்கடிகளாகியவடிகளே. (௯)

படிசெய்நீர்மையிற்பத்தர்தாள்பணிந்தேத்தினேன்பணிமீரருள்
வடிவிலான்றிருநாவலூரன்வனப்பகையப்பன்வன்றொண்டன்
செடியனாகிலுந்தீயனாகிலுந்தம்மையேமனஞ்சிந்திக்கும்
அடியனூரனையாள்வரோநமக்கடிகளாகியவடிகளே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்புகலூர் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

தம்மையேபுகழ்ந்திச்சைபேசினுஞ்சார்விலுந்தொண்டர்தரு
கிலாப், பொய்ம்மையாளரைப்பாடாதேயெந்தைபுகலூர்பாடுமி
ன்புலவீர்காள், இம்மையேதருஞ்சோறுங்கூறையுமேத்தலாமிடர்
கெடலுமாம்; அம்மையேசிவலோகமாள்வதற் கியாதுமையுறவில்
லையே. (௧)

மிடுக்கிலாதானைவீமனேவிறல்விசயனேவில்லுக்கிவனென்று
கொடுக்கிலாதானைப்பாரியேயென்றுகூறினுங்கொடுப்பாரிலைப்
பொடிக்கொள்மேனியெம்புண்ணியன்புகலூரைப்பாடுமின்புலவீ
அடுக்குமேலமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. [ர்காள்

காணியேற்பெரிதுடையனேகற்றுநல்லனேசுற்றநன்கிளை
பேணியேவிருந்தோம்புமேயென்றும்பசினுங்கொடுப்பாரிலைப்

பூணிபூண்டுழல்புட்சிலம்புந்தண்புகலூர்பாடுமின்புலவீர்காள்
ஆணியாயமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௩)

நரைகள்போந்துமெய்தளர்ந்துமூத்துடல் நடுங்கிநிற்குமிக் கிழவனை, வரைகள்போல்திரடோளனேயென்றுவாழ்த்திலுங்கொடுப்பாரிலைப், புரைவெள்ளேறுடைப்புண்ணியன்புகலூரைப்பாடுமின்புலவீர்காள், அரையனுயமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௪)

வஞ்சநெஞ்சனைமாசழக்கனைப்பாவியையவழக்கில்லியைப், பஞ்சதுட்டனைச்சாதுவேயென்றுபாடினுங்கொடுப்பாரிலைப், பொன்செய்செஞ்சடைப்புண்ணியன்புகலூரைப்பாடுமின்புலவீர்காள், நெஞ்சில்நோயறுத்துஞ்சுபோவதற்கியாதுமையுறவில்லையே. (௫)

நலமிலாதானைநல்லனேயென்றுநரைத்தமாந்தரையிளையனே
குலமிலாதானைக்குலவனேயென்றுகூறினுங்கொடுப்பாரிலைப்
புலமெலாம்வெறிகமழும்பூம்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அலமராதமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௬)

நோயனைத்தடந்தோளனேயென்றுநொய்யமாந்தரைவிழுமிய
தாயன்றேபுலவோர்க்கெலாமென்றுசாற்றினுங்கொடுப்பாரிலைப்
போயுழன்றுகண்குழியாதேயெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்காள்
ஆயமின்றிப்போயண்டமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௭)

எள்விழுந்திடம்பார்க்குமாகிலுமீக்குமீகிலனாகிலும் [ப்
வள்ளலேயெங்கள்மைந்தனேயென்றுவாழ்த்தினுங்கொடுப்பாரில
புள்ளெலாஞ்சென்றுசேரும்பூம்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அள்ளற்பட்டழுந்தாதுபோவதற்கியாதுமையுறவில்லையே. (௮)

கற்றிலாதானைக்கற்றுநல்லனேகாமதேவனையொக்குமே
முற்றிலாதானைமுற்றனேயென்றுமொழியினுங்கொடுப்பாரிலைப்
பொத்திலாந்தைகள்பாட்டறாப்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அத்தனாயமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௯)

தையலாருக்கோர்காமனேசாலநலவழகுடையையனே
கையுலாவியவேலனேயென்றுகழறினுங்கொடுப்பாரிலைப்
பொய்கைவாவியின்மேதிபாய்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
ஐயனாரமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௧௦)

செறுவினிற்செழுங்கமலமோங்குதென்புகலூர்மேவியசெல்வனை
நறவம்பூம்பொழில்நாவலூரன்வனப்பகையப்பன்சடையன்றன்
சிறுவன்வன்றொண்டனூரன்பாடியபாடல்பத்திவைவல்லவர்
அறவனாரடிசென்றுசேர்வதற்கியாதுமையுறவில்லையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இது பொன்வேண்டுங்குறிப்புடன் பதிகமோதித் துதிசெய்யவுஞ் சுவாமி கிருபைசெய்யாமையால் மனவெறுப்புடன் திருமடத்துக் கெழுந்தருளாமல் ஆலயத்தில் திருப்பணிக்காகவந்திருந்த செங்கற்களைப் பரப்பி அதன்மேற்பள்ளிகொண்டு துயில்கூர்ந்து அதுநீங்கி யெழுந்தபோது செங்கற்கள் பொன்னாயிருக்கக் கண்டு மகிழ்ந்து ஓதித் துதிசெய்தருளிய பதிகம்.

---

## திருப்புறம்பியம் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

அங்கமோதியோராறைமேற்றளிநின்றும்போந்துவந்தின்னம்பர்த்
தங்கினோமையுமின்னதென்றிலரீசனாரெழுநெஞ்சமே
கங்குலேமங்கள்கொண்டுதேவர்களோதிவானவர்தாந்தொழும்
பொங்குமால்விடையேறிசெல்வப்புறம்பியந்தொழப்போதுமே.

பதியுஞ்சுற்றமும்பெற்றமக்களும்பண்டையரல்லர்பெண்டிருந்
நெதியிலிம்மனைவாழப்வாட்கையுநினைப்பொழிம்மடநெஞ்சமே
மதியஞ்சேர்சடைக்கங்கையானிடமகிழுமல்லிகைசெண்பகம்
புதியபூமலர்ந்தெல்லிநாறும்புறம்பியந்தொழப்போதுமே. (௨)

புறந்திரைந்துநரம்பெழுந்துநரைத்துநீயுரையாற்றளர்ந்
தறம்புரிந்துநினைப்பதாண்மையரிதுகாணிதறிதியேற்
றிறம்பியாதெழுநெஞ்சமேசிறுகாலைநாமுறுவரணியம்
புறம்பியத்துறைபூதநாதன்புறம்பியந்தொழப்போதுமே. (௩)

குற்றொருவரைக்கூறைகொண்டுகொலைகள்சூழ்ந்தகளவெலாஞ்
செற்றொருவரைச்செய்ததீமைகளிம்மையேவருந்திண்ணமே
மற்றொருவரைப்பற்றிலேன்மறவாதெழும்மடநெஞ்சமே
புற்றரவுடைப்பெற்றமேறிபுறம்பியந்தொழப்போதுமே. (௪)

கள்ளிநீசெய்ததீமையுள்ளனபாவமும்பறையும்படி
தெள்ளிதாவெழுநெஞ்சமேசெங்கண்சேவுடைச்சிவலோகனூர்
துள்ளிவெள்ளிளவாளைபாய்வயற்றோன்றுதாமரைப்பூக்கள்மேற்
புள்ளிநள்ளிகள்பள்ளிகொள்ளும்புறம்பியந்தொழப்போதுமே.

படையெலாம்பகடாரவாளிலும்பவ்வஞ்சூழ்ந்தரசாளிலுங்
கடையெலாம்பிணைத்தேரைவால்கவலாதெழும்மடநெஞ்சமே

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

மடையெலாங்கழுநீர்மலர்ந்துமருங்கெலாங்கரும்பாடத்தேன்
புடையெலாமணநாறுசோலைப்புறம்பியந்தொழப்போதுமே(௬)

முன்னைச்செய்வினையிம்மையில்வந்துமூடுமாதலின்முன்னமே
யென்னைநீதியக்காதெழும்மடநெஞ்சமேயெந்தைதந்தையூர்
அன்னச்சேவலோடூடிப்பேடைகள்கூடிச்சேருமணிபொழிற்
புன்னைக்கன்னிகழிக்கணாறும்புறம்பியந்தொழப்போதுமே. (௭)

மலமெலாமறுமிம்மையேமறுமைக்கும்வல்வினைசார்கிலா
சலமெலாமொழிநெஞ்சமேயெங்கள்சங்கரன்வந்துதங்குமூர்
கலமெலாங்கடன்மண்டுகாவிரிநங்கையாடியகங்கைநீர் [மே.
புலமெலாமண்டிப்பொன்விளைக்கும் புறம்பியந்தொழப்போது

பண்டரியனசெய்ததீமையும்பாவமும்பறையும்படி
கண்டரியனகேட்டியேற்கவலாதெழுமடநெஞ்சமே
தொண்டரியனபாடித்துள்ளிநின்றாடிவானவர்தாந்தொழும்
புண்டரீகமலரும்பொய்கைப்புறம்பியந்தொழப்போதுமே. (௯)

துஞ்சியும்பிறந்துஞ்சிறந்துந்துயக்கறாதமயக்கிவை
யஞ்சியூரன்றிருப்புறம்பியத்தப்பனைத்தமிழ்ச்சீரினால்
நெஞ்சினாலேபுறம்பியந்தொழுதுய்துமென்றுநினைத்தன
வஞ்சியாதுரைசெய்யவல்லவர்வல்லவானுலகாள்வரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## திருப்பைஞ்ஞீலி - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

காருலாவியநஞ்சையுண்டிருள்கண்டவெண்டலையோடுகொண்
டூரெலாந்திரிந்தென்செய்வீர்பலியோரிடத்திலேகொள்ளுநீர்
பாரெலாம்பணிந்தும்மையேபரவிப்பணியும்பைஞ்ஞீலியீர்
ஆரமாவதுநாகமோசொலுமாரணீயவிடங்கரே. (௧)

சிலைத்துநோக்கும்வெள்ளேறுசெந்தழல்வாயபாம்பதுமூசெனும்
புலிக்குநீர்வரும்போதுநுங்கையிற்பாம்புவேண்டாபிரானிரே
மலைத்தசந்தொடுவேங்கைகோங்கமுமன்னுகாரகில்சண்பகம்
அலைக்கும்பைம்புனல்சூழ்பைஞ்ஞீலியிலாரணீயவிடங்கரே. (௨)

தூயவர்கண்ணும்வாயுமேனியுந்துன்னவாடைசுடலையிற்
பேயோடாடலைத்தவிருநீரொருபித்தரோவெம்பிரானிரே
பாயுநீர்க்கிடங்கார்கமலமும்பைந்தண்மாதவிபுன்னையும்
ஆயபைம்பொழில்சூழ்பைஞ்ஞீலியிலாரணீயவிடங்கரே. (௩)

செந்தமிழ்த்திறம்வல்லிரோசெங்கணரவமுன்கையிலாடவே
வந்துநிற்குமிதென்கொலோபலிமாற்றமாட்டோமிடுகிலோம்
பைந்தண்மாமலருந்துசோலைகள்கந்தநாறுபைஞ்ஞீலியீர்
அந்திவானமுமேனியோசொல்லுமாரணீயவிடங்கரே. (ச)

நீறுநுந்திருமேனிநித்திலநீணெடுங்கண்ணிஞளொடுங்
கூறராய்வந்துநிற்றிராற்கொணர்ந்திடுகிலோம்பலிநடமின்னு
பாறுவெண்டலைகையிலேந்திப்பைஞ்ஞீலியேனென்றீரடிகணீர்
ஆறுதாங்கியசடையரோசொல்லுமாரணீயவிடங்கரே. (ரு)

குரவநாறியகுழலினார்வளைகொள்வதேதொழிலாகிநீர்
இரவுமிம்மனையறிதிரோயிங்கேநடந்துபோகவும்வல்லிரே
பரவிநாடொறும்பாடுவார்வினைபற்றறுக்கும்பைஞ்ஞீலியீர்
அரவமாட்டவும்வல்லிரோசொல்லுமாரணீயவிடங்கரே. (சு)

ஏடுலாமலர்க்கொன்றைசூடுதிரென்பெலாமணிந்தென்செய்வீர்
காடுநும்பதியோடுகையதுகாதல்செய்பவர்பெறுவதென்
பாடல்வண்டிசையாலுஞ்சோலைப்பைஞ்ஞீலியேனென்றுநிற்றிரா
ஆடல்பாடலும்வல்லிரோசொல்லுமாரணீயவிடங்கரே. [ல்

மத்தமாமலர்க்கொன்றைவன்னியுங்கங்கையாளொடுதிங்களு
மொய்த்தவெண்டலைகொக்கிறகொடுவெள்ளெருக்கமுன்சடையதா
பத்தர்சித்தர்கள்பாடியாடும்பைஞ்ஞீலியேனென்றுநிற்றிரால் [ம்
அத்தியீருரிபோர்த்திரோசொல்லுமாரணீயவிடங்கரே. (அ)

தக்கைதண்ணுமைதாளம்வீணைதகுணிச்சங்கிணைசல்லரி
கொக்கரைகுடமுழவினோடிசைகூடிப்பாடிநின்றாடுவீர்
பக்கமேகுயில்பாடுஞ்சோலைப்பைஞ்ஞீலியேனென்றுநிற்றிரால்
அக்குமாலையும்பூண்டிரோசொல்லுமாரணீயவிடங்கரே. (கூ)

கையோர்பாம்பரையார்த்தோர்பாம்புகழுத்தோர்பாம்பவைபின்
புதாழ், மெய்யெலாம்பொடிக்கொண்டுபூசுதிர்வேதமோதுதிர்கீத
மும், பையவேவிடங்காகநின்றுபைஞ்ஞீலியேனென்றீரடிகணீர்
ஐயமேற்குமிதென்கொலோசொல்லுமாரணீயவிடங்கரே. (கம)

அன்னஞ்சேர்வயல்சூழ்பைஞ்ஞீலியிலாரணீயவிடங்கரை,மின்னு
ம் நுண்ணிடைமங்கைமார்பலர் வேண்டிக்காதல்மொழிந்தசொல்,
மன்னுதொல்புகழ்நாவலூரன்வன் றொண்டன்வாய்மொழிபாடல்
பத், துன்னியின்னிசைபாடுவாருமைகேள்வன்சேவடிசேர்வரே.

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

## திருவாரூர் - பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

குருகுபாயக்கொழுங்கரும்புகணெரிந்தசா
றருகுபாயும்வயலந்தணாரூரரைப்
பருகுமாறும்பணிந்தேத்துமாறுந்நினைந்
துருகுமாறும்மிவையுணர்த்தவல்லீர்களே. (க)

பறக்குமெங்கிள்ளைகாள்பாடுமெம்பூவைகாள்
அறக்கணென்னத்தகுமடிகளாரூரரை
மறக்ககில்லாமையும்வளைகணில்லாமையும்
உறக்கமில்லாமையுமுணர்த்தவல்லீர்களே. (உ)

சூழுமோடிச்சுழன்றுழலும்வெண்ணாரைகாள்
ஆழுமம்பொற்கழலடிகளாரூரர்க்கு
வாழுமாறும்வளைகழலுமாறும்மினக்
கூழுமாறும்மிவையுணர்த்தவல்லீர்களே. (ங)

சக்கிரவாளத்திளம்பேடைகாள்சேவல்காள்
அக்கிரமங்கள்செயுமடிகளாரூரர்க்கு
வக்கிரமில்லாமையும்வளைகணில்லாமையும்
உக்கிரமில்லாமையுமுணர்த்தவல்லீர்களே. (ச)

இலைகள்சோலைத்தலையிருக்கும்வெண்ணாரைகாள்
அலைகள்சூலப்படையடிகளாரூரர்க்குக்
கலைகள்சோர்கின்றதுங்கனவளைகழன்றதும்
முலைகள்பீர்கொண்டதும்மொழியவல்லீர்களே. (ரு)

வண்டுகாள்கொண்டல்காள்வார்மணற்குருகுகாள்
அண்டவாணர்தொழுமடிகளாரூரரைக்
கண்டவாறுங்காமத்தீக்கனன்றெரிந்துமெய்
யுண்டவாறும்மிவையுணர்த்தவல்லீர்களே. (சு)

தேனலங்கொண்டதேன்வண்டுகாள்கொண்டல்காள்
ஆனலங்கொண்டவெம்மடிகளாரூரர்க்குப்
பானலங்கொண்டவெம்பணைமுலைபயந்துபொன்
ஊனலங்கொண்டதும்முணர்த்தவல்லீர்களே. (எ)

சுற்றமுற்றுஞ்சுழன்றுழலும்வெண்ணாரைகாள்
அற்றமுற்றப்பகர்ந்தடிகளாரூரர்க்குப்

பற்றுமற்றின்மையும்பாடுமேற்றின்மையும்
உற்றுமற்றின்மையுமுணர்த்தவல்லீர்களே. (அ)

குரவநாறக்குயில்வண்டினம்பாடநின்
றரவமாடும்பொழிலந்தணாரூரனைப்
பரவிநாடும்மதும்பாடிநாடும்மதும்
உருகிநாடும்மதும்முணர்த்தவல்லீர்களே. (௯)

கூடுமன்னப்பெடைகாள்குயில்வண்டுகாள்
ஆடுமம்பொற்கழலடிகளாரூரனைப்
பாடுமாறும்பணிந்தேத்துமாறுங்கூடி
யூடுமாறும்மிவையுணர்த்தவல்லீர்களே. (௰)

நித்தமாகநினைந்துள்ளமேத்தித்தொழும்
அத்தனம்பொற்கழலடிகளாரூரனைச்
சித்தம்வைத்தபுகழ்ச்சிங்கடியப்பன்மெய்ப்
பத்தனூரன்சொன்னபாடுமின்பத்தரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம் - ௬௭.

## திருவதிகைத் - திருவீரட்டானம்

### பண் - கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்.

தம்மானையறியாதசாதியாருளரோசடைமேற்கொள்பிறையானை விடைமேற்கொள்விகிர்தன், கைம்மாவினுரியானைக்கரிகாட்டிலா டலுடையானைவிடையானைக்கறைகொண்டகண்டத், தெம்மான்ற னடிக்கொண்டென்முடிமேல்வைத்திடுமென்னுமாசையால்வாழ்கி ன்றவறிவிலாநாயே, னெம்மானையெறிகெடிலவடவீரட்டானத்து றைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே. (௧)

முன்னேயெம்பெருமானைமறந்தென்கொல்மறவாதொழிந்தென் கொல்மறவாதசிந்தையால்வாழ்வேன், பொன்னேநன்மணியேவெ ண்முத்தேசெம்பவளக்குன்றமேயீசனென்றுன்னையே புகழ்வேன், அன்னேயென்னத்தாவென்றமரராலமரப்படுவானையதிகைமாநகரு ள்வாழ்பவனை, யென்னேயென்னெறிகெடிலவடவீரடானத்துறை வானையிறைபோதுமிகழ்வன்போலியானே. (௨)

விரும்பினேற்கெனதுள்ளம்விடகிலாவிதியேவிண்ணவர்தம்பெ ருமானேமண்ணவர்நின்றேத்துங், கரும்பேயென்கட்டியென்றுள் ளத்தாலுள்கிக்காதல்சேர்மாதராள்கங்கையாணங்கை, வரும்புனலு

ஞ்சடைக்கணிந்துவளராதபிறையும் வரியரவுமுடன்றுயிலவைத்தா
ருமெந்தை, யிரும்புனல்வந்தெறிகெடிலவடவீரட்டானத்துறை
வானையிறைபோதுமிகழ்வன்போலியானே, (௩)

நாற்றானத்தொருவனை நானாயபரனை நள்ளாற்றுநம்பியைவெள்
ளாற்றுவிதியைக், காற்றானைத்தீயானைக்கடலானைமலையின்றலையானை
க்கடுங்கலுழிக்கங்கைநீர்வெள்ள, ஆற்றானைப்பிறையானையம்மானை
யெம்மான்றம்மானையாவர்க்குமறிவரியசெங்கண், ஏற்றானையெறி
கெடிலவடவீரட்டானத்துறைவானை யிறைபோதுமிகழ்வன்போ
லியானே. (௪)

சேந்தாயமலைமங்கைதிருநிறமும்பரிவுமுடையானையதிகைமா
நகருள்வாழ்பவனைக், கூந்தல்தாழ்புனல்மங்கைகுயிலன்னமொழி
யாள்சடையிடையிற்கயலினங்கள்குதிகொள்ளக்குலாவி, வாய்ந்த
நீர்வரவுந்திமராமரங்கள்வணக்கிமறிகடலையிடங்கொள்வான்மலையா
ரவாரி, யேந்துநீரெறிகெடிலவடவீரட்டானத்துறைவானையிறை
போதுமிகழ்வன்போலியானே. (௫)

மைம்மானமணிநீலகண்டத்தெம்பெருமான்வல் லேனக்கொம்
பணிந்தமாதவனை வானோர்,தம்மானைத்தலைமகனைத்தண்மதியும்பாம்
புந்தடுமாறுஞ்சடையானைத்தாழ்வரைக்கைவென்ற, எம்மானமத
கரியினுரியானைவேதவிதியானை வெண்ணீறுசண்ணித்தமேனி, யெ
ம்மானையெறிகெடிலவடவீரட்டானத்துறை வானையிறைபோதுமி
கழ்வன்போலியானே. (௬)

வெய்தாயவினைக்கடலிற்றடுமாறுமுயிர்க்குமிகவிரங்கியருள்புரிந்
துவீடுபேறாக்கம், பெய்தானைப்பிஞ்ஞகனைமைஞ்ஞவிலுங்கண்ட
த்தெண்டோளெம்பெருமானைப்பெண்பாகமொருபாற், செய்தா
னைச்செக்கர்வானொளியானைத்தீவாயரவாடுசடையானைத்திரிபுரங்க
ள்வேவ, எய்தானையெறிகெடிலவடவீரட்டானத்துறைவானையி
றைபோதுமிகழ்வன்போலியானே. (௭)

பொன்னானமயிலூர்திமுருகவேள்தாதைபொடியாடுதிருமே
னிநெடுமாறன்முடிமேற், றென்னானைக்குடபாலின்வடபாலின்கு
ணபாற்சேராதசிந்தையான்செக்கர்வானந்தி, யன்னானையமரர்கட
ம்பெருமானைக்கருமானினுரியானையதிகைமாநகருள்வாழ்பவனை,
யென்னானையெறிகெடிலவடவீரட்டானத்துறைவானை யிறைபோ
துமிகழ்வன்போலியானே. (௮)

திருந்தாதவாளவுணர்புரமூன்றும்வேவச்சிலைவளைவித்தொரு கணையாற்செற்றுழில்பூண்டசிவனைக்,கருந்தாளமதக்களிற்றினுரியானை ப்பெரியகண்மூன்றுமுடையானைக்கருதாதவரக்கன், பெருந்தோள்கள்நாலைந்து மீரைந்துமுடியுமுடையானைப் பேயுருமூன்றுரமலைமே, லிருந்தானையெறிகெடிலவடவீரட்டானத் துறைவானை யிறைபோதுமிகழ்வன்போலியானே. (கூ)

என்பினையேகலனாகவணிந்தானையெங்களெருதேறும்பெருமானையிசைஞானிசிறுவன், வன்பனையவளர்பொழில்சூழ்வயலணவலூர்க்கோன்வன்றொண்டனாரூரன்மதியாதுசொன்ன,அன்பனையாவர்க்குமறிவரியவத்தர்பெருமானை யதிகைமாநகருள்வாழ்பவனை, யென்பொன்னையெறிகெடிலவடவீரட்டானத்துறைவானை யிறைபோதுமிகழ்வன்போலியானே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

## திருத்தொண்டத்தொகை-பண் கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன் திருநீலகண்டத்துக்குயவனார்க்கடியேன், இல்லையேயென்னாத இயற்பகைக்குமடியேன் இளையான்றன்குடிமாறனடியார்க்குமடியேன், வெல்லுமாமிகவல்லமெய்ப்பொருளுக்கடியேன், விரிபொழில்சூழ்குன்றையார்விறன்மிண்டர்க்கடியே,னல்லிமென்முல்லையந்தார்அமர்நீதிக்கடியேன் அரூரன்அரூரிலம்மானுக்காளே. (க)

இலைமலிந்தவேல்நம்பியெறிபத்தர்க்கடியேன் ஏனாதிநாதன்றனடியார்க்குமடியேன், கலைமலிந்தசீர்நம்பிகண்ணப்பர்க்கடியேன் கடவூரிற்கலயன்றனடியார்க்குமடியேன், மலைமலிந்ததோள்வள்ளல்மானக்கஞ்சாற னெஞ்சாதவாள்தாயனடியார்க்குமடியேன், அலைமலிந்தபுனல்மங்கையானயர்க்கடியேன் அரூரன்அரூரிலம்மானுக்காளே. (உ)

° மும்மையாலுலகாண்டமூர்த்திக்குமடியேன்முருகனுக்கும்உருத்திரபசுபதிக்குமடியேன், செம்மையேதிருநாளைப்போவார்க்குமடியேன் திருக்குறிப்புத்தொண்டர்தமடியார்க்குமடியேன்,மெய்ம்மையேதிருமேனிவழிபடாநிற்க வெகுண்டெழுந்ததாதைதாள்

---

°விபூதி ருத்திராக்ஷம் சடைமுடி யிவைகளுடன் அரசுசெய்தமையால் மும்மையாலுலகாண்ட மூர்த்தியென்றது.

## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

மழுவினாலெறிந்த, அம்மையானடித்தண்டிப் பெருமானுக்கடியேன் ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே. (௩)

திருநின்றசெம்மையேசெம்மையாக்கொண்ட திருநாவுக்கரையன்றனடியார்க்குமடியேன், பெருநம்பிகுலச்சிறைதன்னடியார்க்குமடியேன் பெருமிழலைக்குறும்பர்க்கும் பேயார்க்குமடியே, னொருநம்பியப்பூதியடியார்க்குமடியே னொலிபுனல்சூழ்சாத்தமங்கைநீலநக்கர்க்கடியே, னருநம்பிநமிநந்தியடியார்க்குமடியேன் ஆரூரன்ஆரூரில்ம்மானுக்காளே. (௪)

வம்பறுவரிவண்டுமணநாறமலரு மதுமலர்நற்கொன்றையானடியலாற்பேணா, எம்பிரான்சம்பந்தனடியார்க்குமடியேன் ஏயர்கோன்கலிக்காம னடியார்க்குமடியே, னம்பிரான்திருமூல னடியார்க்குமடியே*னாட்டமிகுதண்டிக்குமூர்க்கர்க்குமடியேன்§அம்பரான்சோமாசிமாறனுக்குமடியேன் ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே. (௫)

வார்கொண்டவனமுலையாளுமைபங்கன்கழலே மறவாதுகல்லெறிந்தசாக்கியர்க்குமடியேன், சீர்கொண்டபுகழ்வள்ளல்சிறப்புலிக்குமடியேன் செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டர்க்கடியேன்,கார்கொண்டகொடைக்*கழறிற்றறிவார்க்குமடியேன் கடற்காழிக்கணநாதனடியார்க்குமடியே, னார்கொண்டவேற்கூத்தன் களந்தைக்கோனடியேன் ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே. (௬)

பொய்யடிமையில்லாதபுலவர்க்குமடியேன் பொழிற்கருவூர்த்துஞ்சியபுகழ்ச்சோழர்க்கடியேன், மெய்யடியனரசிங்கமுனையரையர்க்கடியேன் விரிதிரைசூழ்கடனாகை யதியத்தர்க்கடியேன், கைதடிந்தவரிசிலையான்கலிக்கம்பன் கலியன்கழற் *சத்திவரிஞ்சையர்கோனடியார்க்குமடியேன், ஐயடிகள்காடவர்கோ னடியார்க்குமடியேன் ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே. (௭)

---

* பிறவியந்தகராயிருந்து திருவாரூர்க்கமலாலயதீர்த்தத்தில் மூழ்கியெழுந்திருக்கும்போது சுவாமியினுடைய திருவருளால் நாட்டம்விளங்கப்பெற்றவரென்பதுதோன்ற நாட்டமிகுதண்டிக்கும் என்றருளிச்செய்தது.

§ அம்பரான் சோமாசி என்பது - திருஅம்பர்என்னுந் தலத்தில் [வாழ்பவர்.

* கழறிற்றறிவாராவார் - சேரமானாயனார்.

* சத்திவரிஞ்சையர்கோன்என்பதை வரிஞ்சையூர்ச் சத்தியாரென மாற்றுக.

கறைக்கண்டன்கழலடியேகாப்புக்கொண்டிருந்த கணம்புல்லநம்பிக்குங்காரிக்குமடியே,னிறைக்கொண்டசிந்தையானெல்வேலிவென்ற நின்றசீர்நெடுமாறனடியார்க்குமடியேன், துறைக்கொண்டசெம்பவளமிருளகற்றுஞ்சோதித் தொன்மயிலைவாயிலானடியார்க்குமடியே, னறைக்கொண்டவேல்நம்பிமுனையடுவார்க்கடியேன் ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே. (அ)

கடல்சூழ்ந்தவுலகெலாங்காக்கின்றபெருமான் காடவர்கோன்கழற்சிங்கனடியார்க்குமடியேன், மடல்சூழ்ந்ததார்நம்பியிடங்கழிக்குந்தஞ்சை மன்னவனாஞ்செருத்துணைதனடியார்க்குமடியேன், புடைசூழ்ந்தபுலியதள்மேலரவாடவாடிபொன்னடிக்கேமனம்வைத்தபுகழ்த்துணைக்குமடியேன், அடல்சூழ்ந்தவேல்நம்பிகோட்புலிக்குமடியேன் ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே. (கூ)

பத்தராய்ப்பணிவார்களெல்லார்க்குமடியேன் பரமனையே பாடுவாரடியார்க்குமடியேன், சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்க்குமடியேன் திருவாரூர்ப்பிறந்தார்களெல்லார்க்குமடியேன், *முப்போதுந்திருமேனிதீண்டுவார்க்கடியேன் முழுநீறுபூசியமுனிவர்க்குமடியேன், அப்பாலுமடிச்சார்ந்தாரடியார்க்குமடியேன் ஆரூரன்ஆரூரிலம்மானுக்காளே. (கo)

மன்னியசீர்மறைநாவனின்றவூர்ப்பூசல் வரிவளையாள்மானிக்குந்நேசனுக்குமடியேன், தென்னவனாயுலகாண்டசெங்கணார்க்கடியேன் திருநீலகண்டத்துப்பாணனார்க்கடியே, னன்னவனாமரணடியேயடைந்திட்டசடைய னிசைஞானிகாதலன் திருநாவலூர்க்கோ, னன்னவனாமாரூரனடிமைகேட்டுகப்பா ராரூரிலம்மானுக்கன்பரானவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

* இவர்கள் ஆதிசைவப்பிராமணர்கள்.

இது சுந்தரமூர்த்திசுவாமிகள்திருவாரூர்ப்பரவைநாச்சியார்திருமாளிகையிலிருந்து வீதிவிடங்கப்பெருமானைத்தரிசிக்கும்பொருட்டு ஆலயத்துக்குளெழுந்தருளும்போதுதேவாசிரியமண்டபத்தில்வீற்றிருக்குஞ் சிவனடியார்களையுள்ளத்தால்வணங்கியிவர்களுக்கு நானடியேனாகும்படி பரமசிவம் எந்நாள்கிருபைசெய்யுமென்று செல்லுகையில் பரமசிவம்எதிரில் தரிசனங்கொடுத்தருளித்தில்லைவாழந்தணர்தம்அடியார்க்கும்அடியேனென்று முதலடியெடுத்துக் கொடுக்கப்பாடித் துதிசெய்த பதிகம்.

# நம்பியாரூரரென்னும்

## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

## திருக்கானாட்டுமுள்ளூர் - பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

வல்வாயமதிமிளிரும்வளர்சடையினானைமறையவனைவாய்மொழியைவானவர்தங்கோனைப், புள்வாயைக்கீண்டுலகம்விழுங்கியுமிழ்ந்தானைப் பொன்னிறத்தின்முப்புரிநூலான்முகத்தினானை, முள்வாயமடல்தழுவிமுடத்தாழையீன்று மொட்டலர்ந்துவிரைநாறுமுருகுவிரிபொழில்சூழ், கள்வாயகருங்குவளைகண்வளருங்கழனிக்கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (க)

ஒருமேகமுகிலாகியொத்துலகந்தானாயூர்வனவுநிற்பனவுமூழிகளுந்தானாய்ப், பொருமேவுகடலாகிப்பூதங்களைந்தாய்ப்புனைந்தவனைப்புண்ணியனைப்புரிசடையினானைத், திருமேவுசெல்வத்தார்தீமூன்றும்வளர்த்ததிருத்தக்கவந்தணர்களோதுநகரோங்குங், கருமேதிசெந்தாமரைமேயுங்கழனிக் கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (உ)

இரும்புயர்ந்தமூவிலையசூலத்தினானையிறையவனைமறையவனையெண்குணத்தினானைச், சுரும்புயர்ந்தகொன்றையொடுதூமதியஞ்சூடுஞ்சடையானைவிடையானைச்சோதியெனுஞ்சுடரை, யரும்புயர்ந்தவரவிந்தத்தனிமலர்களேறி யன்னங்கள்விளையாடுமகன்றுறையினருகே, கரும்புயர்ந்துபெருஞ்செந்நெல்நெருங்கிவிளைகழனிக்கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (௩)

பூளைபுனைகொன்றையொடுபுரிசடையினானைப் புனலாகியனலாகிப்பூதங்களைந்தாய், நாளையின்றுநெருநலா யாகாசமாகி நாயிறாய்மதியமாய்நின்றவெம்பரனைப், பாளைபடுபைங்கமுகின்சூழலிளந்தெங்கின் படுமதஞ்செய்கொழுந்தேறல்வாய்மடுத்துப்பருகிக், காளைவண்டுபாடமயிலாலும்வளர்சோலைக் கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (௪)

செருக்குவாய்ப்பைங்கண்வெள்ளரவரையினானைத் தேவர்கள்சூளாமணியைச்செங்கண்விடையானை, முருக்குவாய்மலரொக்குந்திருமேனியானைமுன்னிலையாய்முழுதுலகமாயபெருமானை, யிருக்குவாயந்தணர்கள் எழுபிறப்புளெங்கும் வேள்வியிருந்திருநிதியம்வழங்குநகரோங்குங், கருக்குவாய்ப்பெண்ணையொடு தெங்குமலிசோலைக் கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (௫)

* விடையரவக்கொடியேந்தும் விண்ணவர்தங்கோனை வெள்ளத்துமாலவனும்வேதமுதலானும்,அடியிணையுந்திருமுடியுங்காணவரிதாயசங்கரனைத்தத்துவனைத்தையல்மடவார்க, ளுடையவிழக்குழலவிழக்கோதைகுடைந்தாடக் குங்குமங்களுந்திவருகொள்ளிடத்தின்கரைமேற், கடைகள்விடுவார்குவளைக்களைவாருங்கழனிக்கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (௬)

அருமணியைமுத்தினையானைஞ்சுமாடு மமரர்கடம்பெருமானையருமறையின்பொருளைத், திருமணியைத்தீங்கரும்பினூறலிருந்தேனைத் தெரிவரியமாமணியைத்திகழ்தருசெம்பொன்னைக், குருமணிகள்கொழித்திழிந்துசுழித்திழியுந்திரைவாய்க் கோல்வளையார்குடைந்தாடுங்கொள்ளிடத்தின்கரைமேற், கருமணிகள்போல்நீலமலர்கின்றகழனிக்கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே.(௭)

இழைதழுவுவெண்ணூலுமேவுதிருமார்பினீசன்ற னெண்டோள்கள்விசியெரியாடக், குழைதழுவுதிருக்காதிற்கோளரவமசைத்துக்கோவணங்கொள்குழகனைக்குளிர்சடையினானைத், தழைதழுவுதண்ணிறத்தசெந்நெலதனயலே தடந்தாளமென்கரும்பின்றூழ்கிடங்கினருகே, கழைதழுவித்தேன்றொடுக்குங்கழனிசூழ்பழனக்கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (௮)

குனிவினியகதிர்மதியஞ்சூடுசடையானைக் குண்டலஞ்சேர்காதவனைவண்டினங்கள்பாடப், பனியுதிருஞ்சடையானைப்பால்வெண்ணீற்றானைப் பலவுருவுந்தன்னுருவேயாயபெருமானைத், துனிவினியதூயமொழித்தொண்டைவாய்நல்லார் தூநீலங்கண்வளருஞ்சூழ்கிடங்கினருகே, கனிவினியகதலிவனந்தழுவுபொழிற்சோலைக் கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (௯)

தேவியம்பொன்மலைக்கோர்மான்தன்பாவையாகத் தனதுருவமொருபாகஞ்சேர்த்துவித்தபெருமான், மேவியவெந்நரகத்திலழுந்தாமைநமக்கு மெய்ஞ்ஞெறியைத்தான்காட்டும்வேதமுதலானைத், தூவியவாய்நாரையொடுகுருகுபாய்ந்தார்ப்பத் துறைக்கெண்டைமிளிர்ந்துகயல்துள்ளிவிளையாடக், காவிவாய்வண்டுபலபண்செய்யுங்கழனிக்கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (௰)

---

* சேஷ்சயனத்தையுடைய விஷ்ணுவாகிய ரிஷபவாகனத்தையும் ரிஷபக்கொடியையு முடையவனென்பதுதோன்ற விடையரவக் கொடியானே யென்றருளிச்செய்தது.

திரையினார்கடல்சூழ்ந்ததென்னிலங்கைக்கோனைச் செற்றவனைச்செஞ்சடைமேல்வெண்மதியினானை, நுரையினார்கரைதழுவுகொள்ளிடத்தின்கரைமேற்கானாட்டு முள்ளூரிற்கண்டுகழல்தொழுது, உரையினார்மதயானைநாவலாரூரனுரிமையாலுரைசெய்தவொண்டமிழ்கள்வல்லார், வரையினார்வகைஞாலமாண்டவர்க்குந்தாம்போய்வானவர்க்குந்தலைவராய்நிற்பரவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கச்சூர் ஆலக்கோயில்-பண்-கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

முதுவாயோரிகதறமுதுகாட்டெரிகொண்டாடல்முயல்வானே
மதுவார்கொன்றைப்புதுவீசூடுமலையான்மகடன்மணவாளா
கதுவாய்த்தலையிற்பலிநீகொள்ளக்கண்டாலடியார்கவலாரோ
யதுவேயாமாறிதுவோகச்சூராலக்கோயிலம்மானே. (க)

கச்சேரரவொன்றரையிலசைத்துக்கழலுஞ்சிலம்புங்கலிக்கப்பலிக்கென்,றச்சம்போதாவூரூர்திரியக்கண்டாலடியாருருகாரோ,யிச்சையறியோமெங்கள்பெருமானேழேழ்பிறப்புமெனையாள்வாயச்சமில்லாக்கச்சூர்வடபாலாலக்கோயிலம்மானே. (உ)

சாலக்கோயிலுளநின்கோயிலவையென்றலைமேற்கொண்டாடி
மாலைத்தீர்ந்தேன்வினையுந்துரந்தேன்வானோரறியாநெறியானே
கோலக்கோயில்குறையாக்கோயில்குளிர்பூங்கச்சூர்வடபாலை
யாலக்கோயில்கல்லால்நிழற்கீழறங்களுரைத்தவம்மானே. (ஙு)

விடையுங்கொடியுஞ்சடையுமுடையாய்மின்னேருருவத்தொளியானே, கடையும்புடைசூழ்மணிமண்டபமுங்கன்னிமாடங்கலந்தெங்கும்,புடையும்பொழிலும்புனலுந்தழுவிப்பூமேற்திருமாமகள்புல்கி,யடையுங்கழனிப்பழனக்கச்சூராலக்கோயிலம்மானே(ச)

மேலைவிதியேவினையின்பயனேவிரவார்புரமூன்றெரிசெய்தாய்
காலையெழுந்துதொழுவார்தங்கள்கவலைகளைவாய்கறைக்கண்டா
மாலைமதியேமலைமேல்மருந்தேமறவேனடியேன்வயல்சூழ்ந்த
வாலைக்கழனிப்பழனக்கச்சூராலக்கோயிலம்மானே. (ரு)

பிறவாயிறவாய்பேணாய்மூவாய்பெற்றமேறிப்பேய்சூழ்தல்
துறவாய்மறவாய்சுடுகாடென்றுமிடமாக்கொண்டுநடமாடி
யொறுவாய்த்தலையிற்பலிநீகொள்ளக்கண்டாலடியாருருகாரோ
யறவேயொழியாய்கச்சூர்வடபாலாலக்கோயிலம்மானே. (சு)

பொய்யேயுன்னைப்புகழ்வார்புகழ்ந்தாலதுவும்பொருளாக்கொள்வானே, மெய்யேயெங்கள்பெருமானுன்னைநினைவாரவரைநினைகண்டாய், மையார்தடங்கண்மடந்தைபங்காமதியஞ்சடைவைத்த ஐயாசெய்யாய்வெளியாய்கச்சூராலக்கோயிலம்மானே. (௭)

ஊனைப்பெருக்கியுன்னைநினையாதொழிந்தேன் செடியேனுணர்வில்லேன், கானக்கொன்றைகமழமலருங்கடிநாறுடையாய்கச்சூராய், மானைப்புரையுமடமென்னோக்கிமடவாளஞ்சமறைத்திட்ட ஆனைத்தோலாய்ஞானக்கண்ணாயாலக்கோயிலம்மானே. (அ)

காதல்செய்துகளித்துப்பிதற்றிக்கடிமாமலரிட்டுனையேத்தி யாதல்செய்யுமடியாரிருக்கவையங்கொள்ளவழகிதே யோதக்கண்டேனுன்னைமறவேனுமையாள்கணவாவெனையாள்வா ஆதற்பழனக்கழனிக்கச்சூராலக்கோயிலம்மானே. (௯)

அன்னமன்னுவயல்சூழ்கச்சூராலக்கோயிலம்மானை
யுன்னமுன்னுமனத்தாரூரனாரூரன்பேர்முடிவைத்த [டன்
மன்னுபுலவன்வயல்நாவலர்கோன்செஞ்சொல்நாவன் வன்றொண்
பன்னுதமிழ்நூல்மாலைவல்லாரவரொந்தலைமேற்பயில்வாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலத்தில் பரமசிவம் அக்கிராகாரத்தில் அன்னம்பிக்ஷைவாங்கிவந்தளிக்க அருந்திப்பசிதீர்ந்து துதிசெய்தபதிகம்.

தொண்டைநாடு

சுவாமி-தினம்விருந்திட்டநாதர்- கன்னியுமையம்மை.

ஆ பதிகம் - ௬௧.

---

## திருவெஞ்சமாக்கூடல் - பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

எறிக்குங்கதிர்வேயுதிர்முத்தமொடு மிலவங்கந்தக்கோலமிஞ்சி, செறிக்கும்புனலுட்பெய்துகொண்டு மண்டித்திளைத்தெற்று சிற்றாறதன்கீழ்க்கரைமேல், முறிக்குந்தடமாமுடப்புன்னைஞாழல் குருக்கத்திகள்மேற்குயில்கூவலறா, வெறிக்குங்கலைமாவெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே. (௧)

குளங்கள்பலவுங்குழியுந்நிறையக்குடமாமணிசந்தனமுமகிலுந் துளங்கும்புனலுட்பெய்துகொண்டுமண்டித்திளைத்தெற்று சிற்றாறதன்கீழ்கரைமேல், வளங்கொள்மதில்மாளிகைகோபுரமுமணிமண்டபமுமிவைமஞ்சுதன்னுள், விளங்குமதிதோய்வெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே. (௨)

வரைமானனையார்மயிற்சாயல்நல்லார்வடிவேற்கணல்லார்பலரீவந்திறைஞ்சத், திரையார்புனலுட்பெய்துகொண்டுமண்டித்திளைத்தெற்றுசிற்றாறதன்கீழ்கரைமேல், நிரையார்கமுகுந்நெடுந்தாட்டெங்குங்குறுந்தாட்பலவும்விரவிக்குளிரும், விரையார்பொழில்சூழ்வெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே (௩)

பண்ணேர்மொழியாளையோர்பங்குடையாய்படுகாட்டகத்தென்றுமோர்பற்றொழியாய், தண்ணாரகிலுந்நலசாமரையுமலைத்தெற்றுசிற்றாறதன்கீழ்கரைமேல், மண்ணார்முழவுங்குழலுமியம்பமடவார்நடமாடுமணியரங்கில்,விண்ணார்மதிதோய்வெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே. (௪)

துளைவெண்குழையுஞ்சுருள்வெண்டோடுந்தூங்குங்காதிற்றுளங்கும்படியாய், களையேகமழும்மலர்க்கொன்றையினாய்கலந்தார்க்கருள்செய்திடுங்கற்பகமே,பிளைவெண்பிறையாய்பிறங்குஞ்சடையாய்பிறவாதவனேபெறுதற்கரியாய், வெளைமால்விடையாய்வெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே. (௫)

தொழுவார்க்கெளியாய்துயர்தீரநின்றாய்சுரும்பார்மலர்க்கொன்றைதுன்றுஞ்சடையா, யுழுவார்க்கரியவிடையேறியொன்னார்புரந்தீபெழவோடுவித்தா, யழகார்முழவாரொலிபாடலோடாடலறாமுதுகாடரங்காநடமாடவல்லாய், விழவார்மறுகில்வெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே. (௬)

கடமாகளியானையுரித்தவனேகரிகாடிடமாவனல்வீசிநின்றுநடமாடவல்லாய்நரையேறுகந்தாய் நல்லாய்நறுங்கொன்றைநயந்தவனே, படமாயிரமாம்பருத்துத்திப்பைங்கண்பகுவாயெயிற்றொடழலேயுமிழும், விடவாரரவாவெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே. (௭)

காடும்மலையும்நாடுமிடறிக்கதிர்மாமணிசந்தனமும்மகிலுஞ், சேடனுறையும்மிடந்தான்விரும்பித்திளைத்தெற்றுசிற்றாறதன்கீழ்கரைமேற், பாடல்முழவுங்குழலுமியம்பப்பணைத்தோளியர்பாடலோடாடலறா, வேடர்விரும்பும்வெஞ்சமாக்கூடல் விகிர்தாவடியேனையும்வேண்டுதியே. (௮)

கொங்கார்மலர்க்கொன்றையந்தாரவனேகொடுகொட்டியோர்வீணையுடையவனே, பொங்காடரவும்புனலுஞ்சடைமேற்பொதியும்புனிதாபுனஞ்சூழ்ந்தழகார், துங்கார்புனலுட்பெய்துகொண்டுமண்டித்திளைத்தெற்றுசிற்றாறதன்கீழ்கரைமேல்,வெங்கார்வயல்சூழ்வெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே (௯)

வஞ்சிநுண்ணிடையார்மயிற்சாயல்நல்லார் வடிவேற்கணல்லார்பலர்வந்திறைஞ்சும், வெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும் வேண்டுதியேயென்றுதான்விரும்பி, வஞ்சியாதளிக்கும்வயல்நாவலர்கோன்வனப்பகையப்பன்வன்றொண்டன்சொன்ன,செஞ்சொற்றமிழ்மாலைகள்பத்தும்வல்லார் சிவலோகத்திருப்பது திண்ணமன்றே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

## திருமுதுகுன்றம் - பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

நஞ்சியிடையென்றுநாளையென்றும்மைநச்சுவார்
துஞ்சியிட்டாற்பின்னைச்செய்வதென்னடிகேள்சொலீர்
பஞ்சியிடப்புட்டில்கீறுமோபணியீரருள்
முஞ்சியிடைச்சங்கமார்க்குஞ்சீர்முதுகுன்றரே. (க)

ஏரிக்கனக்கமலமலரன்னசேவடி
யூரித்தனையுந்திரிந்தக்காலவைநோங்கொலோ
வாரிக்கட்சென்றுவளைக்கப்பட்டுவருந்திப்போய்
மூரிக்களிறுமுழக்கருமுதுகுன்றரே. (உ)

தொண்டர்கள்பாடவிண்ணோர்களேத்தவுழிதர்வீர்
பண்டகந்தோறும்பலிக்குச்செல்வதுபான்மையே
கண்டகர்வாளிகள்வில்லிகள்புறங்காக்குஞ்சீர்
மொண்டகைவேள்விமுழக்கருமுதுகுன்றரே. (ங)

இளைப்பறியீரிம்மையேத்துவார்க்கம்மைசெய்வதென்
விளைப்பறியாதவெங்காலனையுயிர்வீட்டினீர்
அளைப்பிரியாவரவல்குலாளொடுகங்கைசேர்
முளைப்பிறைச்சென்னிச்சடைமுடிமுதுகுன்றரே. (ச)

ஆடியசைந்தடியாருநீருமகந்தொறும்
பாடிப்படைத்தபொருளெலாமுமையாளுக்கோ
மாடமதிலணிகோபுரமணிமண்டப
மூடிமுகில்தவழ்சோலைசூழ்முதுகுன்றரே. (ரு)

இழைவளர்நுண்ணிடைமங்கையோடிடுகாட்டிடைக்
குழைவளர்காதுகள்மோதநின்றுகுனிப்பதோ
மழைவளருந்நெடுங்கோட்டிடைமதயானைகள்
முழைவளராளிமுழக்கருமுதுகுன்றரே. (சு)

சென்றிலிடைச்செடிநாய்குரைக்கச்சேடிச்சிகள்
மன்றிலிடைப்பலிதேரப்போவதுவாழ்க்கையே
குன்றிலிடைக்களிறாளிகொள்ளக்குறத்திகள்
முன்றிலிடைப்பிடிகன்றிடும்முதுகுன்றரே. (எ)

அந்திதிரிந்தடியாருநீருமகந்தொறுஞ்
சந்திகடோறும்பலிக்குச்செல்வதுதக்கதே
மந்திகடுவனுக்குண்பழநாடிமலைப்புற
முந்தியடிதொழநின்றசீர்முதுகுன்றரே. (அ)

செட்டிநின்காதலியூர்கடோறுமறஞ்செய
வட்டுமின்சில்பலிக்கென்றகங்கடைநிற்பதே
பட்டிவெள்ளேறுகந்தேறுவீர்பரிசென்கொலோ
முட்டியடிதொழநின்றசீர்முதுகுன்றரே. (௯)

எத்திசையுந்திரிந்தேற்றக்காற்பிறரொன்சொலார்
பத்தியினாலிடுவாரிடைப்பலிகொள்மினோ
எத்திசையுந்திரையேறமோதிக்கரைகள்மேல்
முத்திமுத்தாறுவலஞ்செயும்முதுகுன்றரே. (௧௦)

முத்திமுத்தாறுவலஞ்செயும்முதுகுன்றரைப்
பித்தனொப்பானடித்தொண்டனூரன்பிதற்றிவை
தத்துவஞானிகளாயினார்தடுமாற்றிலார்
எத்தவத்தோர்களுமேத்துவார்க்கிடரில்லையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## முடிப்பதுகங்கை - பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

முடிப்பதுகங்கையுந்திங்களுஞ்செற்றதுமூவெயில்
நொடிப்பதுமாத்திரைநீறெழக்கணைநூறினார்
கடிப்பதுமேறுமென்றஞ்சுவன்றிருக்கைகளாற்
பிடிப்பதுபாம்பன்றியில்லையோவெம்பிரானுக்கே. (௧)

தூறன்றியாடரங்கில்லையோசுடலைப்பொடி
நீறன்றிச்சாந்தமற்றில்லையோவிமவான்மகள்
கூறன்றிக்கூறுவதில்லையோகொல்லைச்சில்லைவெள்
ஏறன்றியேறுவதில்லையோவெம்பிரானுக்கே. (௨)

தட்டெனுந்தட்டெனுந்தொண்டர்காள்தடுமாற்றத்தை
யொட்டெனுமொட்டெனுமாநிலத்துயிர்கோறலைச்
சிட்டன்றிரிபுரஞ்சுட்டதேவர்கள்தேவனை
வெட்டெனப்பேசன்மின்றொண்டர்காளெம்பிரானையே. (௩)

நரிதலைகவ்வநின்றோரிகூப்பிடநல்லிரு
ளெரிதலைப்பேய்புடைசூழவாரிருட்காட்டிடைச்
சிரிதலைமாலைசடைக்கணிந்தவெஞ்செல்வனைப்
பிரிதலைப்பேசன்மின்றொண்டர்காளெம்பிரானையே. (௪)

வேயனதோளிமலைமகளைவிரும்பிய
மாயமில்மாமலைநாடனாகியமாண்பனை
யாயனசொல்லிநின்றார்களல்லலறுக்கிலும்
பேயனேபித்தனேயென்பராலெம்பிரானையே. (௫)

இறைவனென்றெம்பெருமானைவானவரேத்தப்போய்த்
துறையொன்றித்தூமலரிட்டடியிணைபோற்றுவார்
மறையன்றிப்பாடுவதில்லையோமல்குவானிளம்
பிறையன்றிச்சூடுவதில்லையோவெம்பிரானுக்கே. (௬)

தாருந்தண்கொன்றையுங்கூவிளந்தனிமத்தமும்
ஆருமளவறியாதவாதியுமந்தமும்
ஊருமொன்றில்லையுலகெலாமுகப்பார்தொழப்
பேருமோராயிரமென்பராலெம்பிரானுக்கே. (௭)

அரியொடுபூமிசையானுமாதியுமறிகிலார்
வரிதருபாம்பொடுவன்னிதிங்களுமத்தமும்
புரிதருபுன்சடைவைத்தவெம்புனிதற்கினி
யெரியன்றியங்கைக்கொன்றில்லையோவெம்பிரானுக்கே. (௮)

கரியமனச்சமண்காடியாடுகழுக்களால்
எரியவசணவுந்தன்மையோவிமவான்மகள்
பெரியமனந்தடுமாறவேண்டிப்பெம்மான்மதக்
கரியினுரியல்லதில்லையோவெம்பிரானுக்கே. (௯)

காசினமால்விடைமாணிக்கத்தெங்கறைக்கண்டத்
தீசனையூரனெட்டோடிரண்டுவிரும்பிய
வாயினசீர்ப்பகைஞானியப்பனடித்தொண்டன்றான்
ஏசினபேசுமின்றொண்டர்காளெம்பிரானையே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# நம்பியாரூரரென்னும்

## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

### திருஆமாத்தூர் - பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

காண்டனன்காண்டனன்காரிகையாள்தன்கருத்தனு
யாண்டனனாண்டனனாமாத்தூரெம்மடிகட்காட்
பூண்டனன்பூண்டனன்பொய்யன்றுசொல்லுவன் கேண்மின்கள்
மீண்டனன்மீண்டனன்வேதவித்தல்லாதவர்கட்கே. (க)

பாடுவன்பாடுவன்பார்ப்பதிதன்னடிபற்றிநான்
தேடுவன்தேடுவன்திண்ணெனப்பற்றிச்செறிதர
ஆடுவனாடுவனாமாத்தூரெம்மடிகளைக்
கூடுவன்கூடுவன்குற்றமதற்றென்குறிப்பொடே. (உ)

காய்ந்தவன்காய்ந்தவன்கண்ணழலாலன்றுகாமனைப்
பாய்ந்தவன்பாய்ந்தவன்பாதத்தினாலன்றுகூற்றத்தை
ஆய்ந்தவனாய்ந்தவனாமாத்தூரெம்மடிகளார்
ஏய்ந்தவனேய்ந்தவனெம்பிராட்டியைப்பாகமே. (௩)

ஓர்ந்தனனோர்ந்தனனுள்ளத்துள்ளேநின்றவொண்பொருள்
சேர்ந்தனன்சேர்ந்தனன்சென்றுதிருவொற்றியூர்புக்குச்
சார்ந்தனன்சார்ந்தனன்சங்கிலிமென்றோள்தடமுலை
யார்ந்தனனார்ந்தனனாமாத்தூரையனருளதே. (௪)

வென்றவன்வென்றவன்வேள்வியில்விண்ணவர்தங்களைச்
சென்றவன்சென்றவன்சில்பலிக்கென்றுதெருவிடை
நின்றவனின்றவனீதிநிறைந்தவர்தங்கள்பால்
அன்றவனன்றவன்செய்யருளாமாத்தூரெம்மையனே. (௫)

காண்டவன்காண்டவன்காண்டற்கரியகடவுளாய்
நீண்டவனீண்டவனாரணனான்முகனேடவே
யாண்டவனாண்டவனாமாத்தூரையுமென்னையுமாட்
பூண்டவன்பூண்டவன்மார்பிற்புரிநூல்புரளவே. (௬)

எண்ணவனெண்ணவனேழுலகத்துயிர்தங்கட்குக்
கண்ணவன்கண்ணவன்காண்டுமென்பாரவர்தங்கட்குப்
பெண்ணவன்பெண்ணவன்மேனியோர்பாகமாம்பிஞ்ஞகன்
அண்ணவனண்ணவனாமாத்தூரெம்மடிகளே. (எ)

பொன்னவன்பொன்னவன்பொன்னைத்தந்தென்னைப்போகவிடா
மின்னவன்மின்னவன்வேதத்தினுட்பொருளாகிய

அன்னவனன்னவனுமாத்தூரையனையார்வத்தால்
என்னவனென்னவனென்மனத்தின்புற்றிருப்பனே. (௯)

தேடுவன்தேடுவன்செம்மலர்ப்பாதங்களுடொறு
நாடுவனுடுவனுபிக்குமேலேயோர்நால்விரல்
மாடுவன்மாடுவன்வன்கைபிடித்துமகிழ்ந்துளே
யாடுவனுடுவனுமாத்தூரெம்மடிகட்கே. (௧௰)

உற்றனனுற்றவர்தம்மையொழிந்துள்ளத்துளபொருள்
பற்றினன்பற்றினன்பங்கயச்சேவடிக்கேசெல்ல
அற்றனனற்றனனுமாத்தூர்மேயானடியார்கட்காட்
பெற்றனன்பெற்றனன்பெயர்த்தும்பெயர்த்தும்பிறவாமைக்கே.

ஐயனையத்தனையாளுடையாமாத்தூரண்ணலை
மெய்யனைமெய்யர்க்குமெய்ப்பொருளானவிமலனை
மையனைமையணிகண்டனைவன்றொண்டனூரன்சொற்
பொய்யொன்றுமின்றிப்புலம்புவார்பொற்கழல்சேர்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்காரோணம்-பண்-கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

பத்தூர்புக்கிரந்துண்டுபலபதிகம்பாடிப்
பாவையரைக்கிறிபேசிப்படிறுடித்திரிவீர்
செத்தார்தமெலும்பணிந்துசேவேறித்திரிவீர்
செல்வத்தைமறைத்துவைத்தீரெனக்கொருநாளிரங்கீர்
முத்தாரமிலங்கிமிளிர்மணிவயிரக்கோவை
யவைபூணத்தந்தருளிமெய்க்கினிதாநாறுங்
கத்தூரிகமழ்சாந்துபணித்தருளவேண்டுங்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௧)

வேம்பினொடுதீங்கரும்புவிரவியெனைத்தீர்த்தீர்
விருத்தினனுமைவேண்டத்துருத்திபுக்கங்கிருந்தீர்
பாம்பினொடுபடர்சடைகளவைகாட்டிவெருட்டிப்
பகட்டநானொட்டுவனோபலகாலுமுழன்றேன்
சேம்பினொடுசெங்கழுநீர்தண்கிடங்கிற்றிகழுந்
திருவாரூர்புக்கிருந்ததீவண்ணர்நீரே
காம்பினொடுநேத்திரங்கள்பணித்தருளவேண்டுங்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௨)

பூண்பதோரிளவாமைபொருவிடையொன்றேறிப்
பொல்லாதவேடங்கொண்டெல்லாருங்காணப்

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

பாண்பேசிப்படுதலையிற்பலிகொள்கைதவிரீர்
பாம்பினொடுபடர்சடைமேல்மதிவைத்தபண்பீர்
வீண்பேசிமடவார்கைவெள்வளைகள்கொண்டால்
வெற்பரையன்மடப்பாவைபொறுக்குமோசொல்லீர்
காண்பினியமணிமாடநிறைந்தநெடுவீதிக்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௩)

விட்டதோர்சடைதாழவீணைவிடங்காக
வீதிவிடையேறுவீர்வீணடிமையுகந்தீர்
துட்டராயினபேய்கள்சூழநடமாடிச்
சுந்தரராய்த்தூமதியஞ்சூடுவதுசுவண்டே
வட்டவார்குழல்மடவார்தம்மைமயல்செய்தல்
மாதவமோமாதிமையோவாட்டமெலாந்தீரக்
கட்டியெமக்கீவதுதானெப்போதுசொல்லீர்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௪)

மிண்டாடித்திரிதந்துவெறுப்பனவேசெய்து
வினைக்கேடுபலபேசிவேண்டியவாதிரிவீர்
தொண்டாடித்திரிவேனைத்தொழும்புதலைக்கேற்றுஞ்
சுந்தரனேகந்தமுதலாடையாபரணம்
பண்டாரத்தேயெனக்குப்பணித்தருளவேண்டும்
பண்டுதான்பிரமாணமொன்றுண்டேனும்மைக்
கண்டார்க்குங்காண்பரிதாய்க்கனலாகிநிமிர்ந்தீர்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௫)

இலவவிதழ்வாயுமையோடெருதேறிப்பூத
மிசைபாடவிடுபிச்சைக்கெச்சுச்சம்போது
பலவகம்புக்குழிதர்வீர்பட்டோடுசாந்தம்
பணித்தருளாதிருக்கின்றபரிசென்னபடிறே
உலவுதிரைக்கடல்நஞ்சையன்றமரர்வேண்ட
உண்டருளிச்செய்ததுமக்கிருக்கொணுதிடவே
கலவமயிலியலவர்கணடமாடுஞ்செல்வக்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௬)

தூசுடையவகலல்குற்றூமொழியாளூடல்
தொலையாதகாலத்தோர்சொற்பாடாய்வந்து
தேசுடையவிலங்கையர்கோன்வரையெடுக்கவடர்த்துத்
திப்பியகீதம்பாடத்தேரொடுவாள்கொடுத்தீர்

நேசமுடையடியவர்கள்வருந்தாமையருந்த
    நிறைமறையோருறைவீழிமிழலைதனினித்தல்
காசருளிச்செய்தீரின்றெனக்கருளவேண்டுங்
    கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௭)

மாற்றமேலொன்றுரையீர்வாளாநீரிருந்தீர்
    வாழ்விப்பனெனவாண்டீர்வழியடியேனுமக்கு
ஆற்றவேற்றிருவுடையீர்நல்கூர்ந்தீரல்லீ
    ரணியாரூர்புகப்பெய்தவருநிதியமதனிற்
றோற்றமிகுமுக்கூற்றிலொருகூறுவேண்டுந்
    தாரீரேலொருபொழுதுமடியெடுக்கலொட்டேன்
காற்றனையகடும்பரிமாவேறுவதுவேண்டுங்
    கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௮)

மண்ணுலகும்விண்ணுலகுமும்மதேயாட்சி
    மலையரையன்பொற்பாவைசிறுவனையுந்தேறேன்
எண்ணிலியுண்பெருவயிறன்கணபதியொன்றறியா
    னெம்பெருமானிதுதகவோவியம்பியருள்செய்யீர்
திண்ணெனவென்னுடல்விருத்திதாரீரேயாகிற்
    றிருமேனிவருந்தவேவளைக்கின்றேனாளைக்
கண்ணறையன்கொடும்பாடனென்றுரைக்கவேண்டா
    கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௯)

மறியேறுகரதலத்தீர்மாதிமையேலுடையீர்
    மாநிதியந்தருவனென்றுவல்லீராயாண்டீர்
கிறிபேசிக்கீழ்வேளூர்புக்கிருந்தீரடிகேள்
    கிறியுமாற்படுவனோதிருவாணையுண்டேற்
பொறிவிரவுநற்புகர்கொள்பொற்சுரிகைமேலோர்
    பொற்பூவும்பட்டிகையும்புரிந்தருளவேண்டுங்
கறிவிரவுநெய்சோறுமுப்போதும்வேண்டுங்
    கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௰)

பண்மயத்தமொழிப்பரவைசங்கிலிக்குமெனக்கும்
    பற்றாயபெருமானேமற்றாரையுடையேன்
உண்மயத்தவுமக்கடியேன்குறைதீர்க்கவேண்டு
    மொளிமுத்தம்பூணாரமொண்பட்டும்பூவுங்
கண்மயத்தகத்தூரிகமழ்சாந்தும்வேண்டுங்
    கடனாகைக்காரோணமேவியிருந்தீரென்
றண்மயத்தாலணிநாவலாரூரன்சொன்ன
    வருந்தமிழ்களிவைவல்லாரமருலகாள்பவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

ஆக பதிகம் - ௪௫.

## நம்பியாரூரரென்னும்

### சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

### ஊர்த்தொகை - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

காட்டூர்க்கடலேகடம்பூர்மலையேகானப்பேரூராய்
கோட்டூர்க்கொழுந்தேயழுந்தூரரசேகொழுநற்கொல்லேறே
பாட்டூர்பலரும்பரவப்படுவாய்பனங்காட்டூரானே
மாட்டூரறவாமறவாதுன்னைப்பாடப்பணியாயே. (௧)

கொங்கிற்குறும்பிற்குரக்குத்தளியாய்குழகாகுற்றாலா
மங்குற்றிரிவாய்வானோர்தலைவாவாய்மூர்மணவாளா
சங்கக்குழையார்செவியாயழகாவவியாவனலேந்திக்
கங்குற்புறங்காட்டாடீயடியார்கவலைகளையாயே. (௨)

நிறைக்காட்டானேநெஞ்சத்தானேநின்றியூரானே
மிறைக்காட்டானேபுனல்சேர்சடையாயனல்சேர்கையானே
மறைக்காட்டானேதிருமாந்துறையாய்மாகோணத்தானே
யிறைக்காட்டாயேயெங்கட்குன்னையெம்மான்றம்மானே. (௩)

ஆரூரத்தாவையாற்றமுதேயளப்பூரம்மானே
காரூர்பொழில்கள்புடைசூழ்புறவிற்கருகாவூரானே
பேரூருறைவாய்பட்டிப்பெருமான்பிறவாநெறியானே
பாரூர்பலரும்பரவப்படுவாய்பாசூரம்மானே. (௪)

மருகலுறைவாய்மாகாளத்தாய்மதியஞ்சடையானே
அருகற்பிணிநின்னடியார்மேலவகலவருள்வாயே
கருகற்குரலாய்வெண்ணிக்கரும்பேகானூர்க்கட்டியே
பருகப்பணியாயடியார்க்குன்னைப்பவளப்படியானே. (௫)

தாங்கூர்பிணிநின்னடியார்மேலவகலவருளாயே
வேங்கூருறைவாய்விளமர்நகராய்விடையார்கொடியானே
நாங்கூருறைவாய்தேங்கூர்நகராய்நல்லூர்நம்பானே
பாங்கூர்பலிதேர்பரனேபரமாபழனப்பதியானே. (௬)

தேனைக்காவல்கொண்டுவிண்டகொன்றைச்செழுந்தாராய்
வானைக்காவல்கொண்டுநின்றாரறியாநெறியானே
யானைக்காவிலரனேபரனேயண்ணாமலையானே
யூனைக்காவல்கைவிட்டுன்னையுகப்பாருணர்வாரே. (௭)

துருத்திச்சுடரேநெய்த்தானத்தாய்சொல்லாய்கல்லாலா
பருத்திநியமத்துறைவாய்வெயிலாய்ப்பலவாய்க்காற்றானாய்
திருத்தித்திருத்திவந்தென்சிந்தையிடங்கொள்கயிலாயா
வருத்தித்துன்னையடைந்தார்வினைகளகலவருளாயே (௮)

புலியூர்ச்சிற்றம்பலத்தாய்புகலூர்ப்போதாமூதூரா
பொலிசேர்புரமூன்றெரியச்செற்றபுரிபுன்சடையானே
வலிசேரரக்கன்றடக்கையைஞ்ஞால்கடர்த்தமதிசூடி
கலிசேர்புறவிற்கடவூராளீகாணவருளாயே. (கூ)

கைம்மாவுரிவையம்மான்காக்கும்பலவூர்கருத்துன்னி
மைம்மாந்தடங்கண்மதுரமன்னமொழியாள்மடச்சிங்கடி
தம்மானூரன்சடையன்சிறுவனடியன்றமிழ்மாலை
செம்மாந்திருந்துதிருவாய்திறப்பார்சிவலோகத்தாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்பாண்டிக்கொடுமுடி - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மற்றுப்பற்றெனக்கின்றிநின்றிருப்பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந்தேனினிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (க)

இட்டனும்மடியேத்துவாரிகழ்ந்திட்டநாள்மறந்திட்டநாள்
கெட்டநாளிவையென்றலால்கருதேன்கிளர்புனற்காவிரி
வட்டவாசிகைகொண்டடிதொழுதேத்துபாண்டிக்கொடுமுடி
நட்டவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (உ)

ஓவுநாளுணர்வழியுநாளுயிர்போகுநாளுயர்பாடைமேற்
காவுநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரிப்
பாவுதண்புனல்வந்திழிபரஞ்சோதிபாண்டிக்கொடுமுடி
நாவலாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (ங)

எல்லையில்புகழெம்பிரானெந்தைதம்பிரானென்பொன்மாமணி
கல்லையுந்திவளம்பொழிந்திழிகாவிரியதன்வாய்க்கரை
நல்லவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
வல்லவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (ச)

அஞ்சினார்க்கரணாதியென்றடியேனுநான்மிகவஞ்சினேன்
அஞ்சலென்றடித்தொண்டனேற்கருணல்கினாய்க்கழிகின்றதென்
பஞ்சின்மெல்லடிப்பாவைமார்குடைந்தாடுபாண்டிக்கொடுமுடி
நஞ்சணிகண்டநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (ரு)

ஏடுவானிளந்திங்கள்சூடினையென்பின்கொல்புலித்தோலின்மேல்
ஆடுபாம்பதரைக்கசைத்தவழகனேயந்தண்காவிரிப்

பாடுதண்புனல்வந்திழியரஞ்சோதிபாண்டிக்கொடுமுடிச்
சேடனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (சு)

விரும்பிநின்மலர்ப்பாதமேநினைந்தேன் வினைகளும்விண்டன; நெருங்கிவண்பொழில்சூழ்ந்தெழில்பெற நின்றகாவிரிக்கோட்டிடைக், குரும்பைமென்முலைக்கோதைமார்குடைந்தாடுபாண்டிக்கொடுமுடி, விரும்பனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (எ)

செம்பொனேர்சடையாய்திரிபுரந்தீயெழச்சிலைகோலினாய்
வம்புலாங்குழலாளைப்பாகமமர்ந்துகாவிரிக்கோட்டிடைக்
கொம்பின்மேற்குயில்கூவமாமயிலாடுபாண்டிக்கொடுமுடி
நம்பனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (அ)

சாரணன்றந்தையெம்பிரானெந்தைதம்பிரானென்பொன்மாமணி
யென்று பேணுயிரகோடிதேவர்பிதற்றிநின்றுபிரிகிலார்
நாரணன்பிரமன்றொழுங்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
காரணாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (கூ)

கோணியபிறைசூடியைக்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
பேணியபெருமானைப்பிஞ்ஞகப்பித்தனைப்பிறப்பில்லியைப்
பாணுலாவரிவண்டறைகொன்றைத்தாரனைப்படம்பாம்பணி
நாணனைத்தொண்டனூரன்சொல்லிவைசொல்லுவார்க்கில்லைத்துன்பமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

## திருமுருகன்பூண்டி - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

கொடுகுவெஞ்சிலைவடுகவேடுவர்விரவலாமைசொல்லித்
திடுகுமொட்டெனக்குத்திக்கூறைகொண்டாறலைக்குமிட
முடுகுநாறியவடுகர்வாழ்முருகன்பூண்டிமாநகர்வாய்
இடுகுநுண்ணிடைமங்கைதன்னொடுமெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீரே.

வில்லைக்காட்டிவெருட்டிவேடுவர்விரவலாமைசொல்லிக்
கல்லினாலெறிந்திட்டுமோதியுங்கூறைகொள்ளுமிட
முல்லைத்தாதுமணங்கமழ்முருகன்பூண்டிமாநகர்வாய்
எல்லைக்காப்பதொன்றில்லையாகினீரெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீரே.

பசுக்களேகொன்றுதின்றுபாவிகள்பாவமொன்றறியார்
* உசிர்க்கொலைபலநேர்ந்துநாடொறுங்கூறைகொள்ளுமிட
முசுக்கள்போற்பலவேடர்வாழ்முருகன்பூண்டிமாநகர்வா
யிசுக்கழியப்பயக்கங்கொண்டுநீரெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீரே

பீறற்கூறையுடுத்தோர்பத்திரங்கட்டிவெட்டனராய்ச்
சூறைப்பங்கியராகிநாடொறுங்கூறைகொள்ளுமிட
மோறைவேடுவர்கூடிவாழ்முருகன்பூண்டிமாநகர்வா
யேறுகாலிற்றதில்லையாய்விடி லெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீரே.

தயங்குதோலையுடுத்தசங்கரசாமவேதமோதி
மயங்கியூரிடுபிச்சைகொண்டுணுமார்க்கமொன்றறியீர்
முயங்குபூண்முலைமங்கையாளொடுமுருகன்பூண்டிமாநகர்வா
யியங்கவுமிடுக்குடையராய்விடிலெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீரே

விட்டிசைப்பனகொக்கரைகொடுகொட்டிதத்தளகங்
கொட்டிப்பாடுமித்துந்துமியொடுகுடமுழாநீர்மகிழ்வீர்
மொட்டலர்ந்துமணங்கமழ்முருகன்பூண்டிமாநகர்வா [னீரே
யிட்டபிச்சைகொண்டுண்பதாகில்நீ ரெத்துக்கிங்கிருந்தீரெம்பிரா

வேதமோதிவெண்ணீறுபூசிவெண்கோவணந்தற்றயலே
யோதமேவியவொற்றியூரையுமுதிநீர்மகிழ்வீர்
மோதிவேடுவர்கூறைகொள்ளுமுருகன்பூண்டிமாநகர்வா [ரே
யேதுகாரணமேதுகாவல்கொண் டெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீ

படவரவுநுண்ணேரிடைப்பணைத்தோள்வரிநெடுங்கண்
மடவரல்லுமைநங்கைதன்னையோர்பாகம்வைத்துகந்தீர்
முடவரல்லீரிடரிலீர்முருகன்பூண்டிமாநகர்வா
யிடவமேறியும்போவதாகில்நீரெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீரே.

சாந்தமாகவெண்ணீறுபூசிவெண்பற்றலைகலனா
வேய்ந்தவெண்பிறைக்கண்ணிதன்னையோர்பாகம்வைத்துகந்தீர்
மோந்தையோடுமுழக்கறாமுருகன்பூண்டிமாநகர்வா [ரே.
யேந்துபூண்முலைமங்கைதன்னொடுமெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீ

முந்திவானவர்தாந்தொழுமுருகன்பூண்டிமாநகர்வாய்ப்
பந்தணைவிரற்பாவைதன்னையோர்பாகம்வைத்தவனைச்
சிந்தையிற்சிவதொண்டனூரனுரைத்தனபத்துங்கொண்
டெந்தம்மடிகளையேத்துவாரிடரொன்றுந்தாமிலரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

* உயிர் - உசிர் என மருவியது.

## நம்பியாரூரனென்னும்
## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

கழறிற்றறிவாரென்னுஞ் சேரமான்பெருமானாயனார்கொடுத்த திரவியங்களை பரிசனங்கள்தலையில் எடுப்பித்துக்கொண்டு திருமுருகன்பூண்டிக்குச்சமீபத்தில் எழுந்தருளும்போது பரமசிவத்தின் கட்டளையினால் பூதங்கள் வேடுவர்களாகிவந்து அந்தப்பரிசனங்களை அடித்துப் பொருள்களைப்பறித்துப்போயின. அப்போதுசுந்தரமூர்த்திசுவாமிகள் இந்தப்பதிகமோதிப் பொருள்களைப் பெற்றுக்கொண்டது.

---

### திருப்புனவாயில் - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தநீநினையென்னொடுசூளறும்வைகலு
மத்தயானையினீருரிபோர்த்தமணாளனூர்
பத்தர்தாம்பலர்பாடிநின்றாடும்பழம்பதி
பொத்திலாந்தைகள்பாட்டறாப்புனவாயிலே. (௧)

கருதுநீமனமென்னொடுசூளறும்வைகலும்
எருதுமேற்கொளுமெம்பெருமாற்கிடமாவது
மருதவானவர்வைகுமிடம்மறவேடுவர்
பொருதுசாத்தொடுபூசலறாப்புனவாயிலே. (௨)

தொக்காயமனமென்னொடுசூளறும்வைகலு
நக்கான்மையாளுடையானவிலும்மிடம்
அக்கோடரவார்த்தபிரானடிக்கன்பராய்ப்
புக்காரவர்போற்றொழியாப்புனவாயிலே. (௩)

வற்கென்றிருத்திகண்டாய்மனமென்னொடுசூளறும்வைகலும்
பொற்குன்றஞ்சேர்ந்ததோர்காக்கைபொன்னாமதுவேபுகல்
கற்குன்றுந்தூறுங்கடுவெளியுங்கடற்கானல்வாய்ப்
புற்கென்றுதோன்றிடுமெம்பெருமான்புனவாயிலே. (௪)

நில்லாய்மனமென்னொடுசூளறும்வைகலும்
நல்லானமையாளுடையானவிலும்மிடம்
வில்லாய்க்கணைவேட்டுவராட்டவெருண்டுபோய்ப்
புல்வாய்க்கணம்புக்கொளிக்கும்புனவாயிலே. (௫)

மறவல்நீமனமென்னொடுசூளறும்வைகலு
மூறவுமூழியுமாயபெம்மாற்கிடமாவது
பிறவுகள்ளியினீள்கவட்டேறித்தன்பேடையைப்
புறவங்கூப்பிடப்பொன்புனஞ்சூழ்புனவாயிலே. (௬)

ஏசற்றுநீநினையென்னொடுசூளறும்வைகலும்
பாசற்றவர்பாடிநின்றாடும்பழம்பதி
தேசத்தடியவர்வந்திருபோதும்வணங்கிடப்
பூசற்றுடிபூசலறுப்புனவாயிலே. (எ)

கொள்ளிவாயினகூரெயிற்றேனங்கிழிக்கவே
தெள்ளிமாமணிதீவிழிக்குமிடஞ்செந்தறை
கள்ளிவற்றிப்புற்றீந்துவெங்கானங்கழிக்கவே
புள்ளிமானினம்புக்கொளிக்கும்புனவாயிலே. (அ)

எற்றேநினையென்னொடுசூளறும்வைகலும்
மற்றதுவேண்டாவல்வினையாயினமாய்ந்தறக்
கற்றூறுகாராக்காட்டிடைமேய்ந்தகார்க்கோழிபோய்ப்
புற்றேறிக்கூகூவெனவழைக்கும்புனவாயிலே. (கூ)

பொடியாடுமேனியன்பொன்புனஞ்சூழ்புனவாயிலை
யடியாரடியன்னாவலனூரனுரைத்தன
மடியாதுகற்றிவையேத்தவல்லார்வினைமாய்ந்துபோய்க்
குடியாகப்பாடிநின்றாடவல்லார்க்கில்லைகுற்றமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாரூர் - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

பத்திமையுமடிமையையுங்கைவிடுவான்பாவியேன் [வேன்
பொத்தினநோயதுவிதனைப்பொருளறிந்தேன் போய்த்தொழு
முத்தினைமாமணிதன்னைவயிரத்தைமூர்க்கனேன்
எத்தனைநாள்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (க)

ஐவணமாம்பகழியுடையடல்மதனன்பொடியாகச்
செவ்வணமாந்திருநயனம்விழிசெய்தசிவமூர்த்தி
மையணவுகண்டத்துவளர்சடையெம்மாரமுதை
யெவ்வணம்நான்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (உ)

சங்கலக்குந்தடங்கடல்வாய்விடஞ்சுடவந்தமரர்தொழ
அங்கலக்கண்டீர்த்தவிடமுண்டுகந்தவம்மானை
யிங்கலக்குமுடற்பிறந்தவறிவிலியேன்செறிவின்றி
யெங்குலக்கப்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௩)

இங்ஙனம்வந்திடர்ப்பிறவிப்பிறந்தயர்வேனயராமே
யங்ஙனம்வந்தெனையாண்டவருமருந்தெனாரமுதை

வெங்கணன்மாமேனியனைமான்மருவுங்கையானை
யெங்ஙனம்நான்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௪)

செப்பரியவயனொடுமால்சிந்தித்துந்தெரிவரிய
அப்பெரியதிருவினையேயறியாதேயருவினையேன்
ஒப்பரியகுணத்தானையிணையிலியையணைவின்றி
யெப்பரிசுபிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௫)

வன்னாகநாண்வரைவிலங்கி * கணையரிபகழி
தன்னாகமுறவாங்கிப்புரமெரித்ததன்மையனை
முன்னாகநினையாதமூர்க்கனேனாக்கைசுமந்
தென்னாகப்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௬)

வன்சயமாயடியான்மேல்வருங்கூற்றினுரங்கிழிய
முன்சயமார்பாதத்தால்முனிந்துகந்தமூர்த்திதனை
மின்செயும்வார்சடையானைவிடையானையடைவின்றி
யென்செயநான்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௭)

முன்னெறிவானவர்கூடித்தொழுதேத்துமுழுமுதலை
யந்நெறியையமரர்தொழும்நாயகனையடியார்கள்
செந்நெறியைத்தேவர்குலக்கொழுந்தைமறந்திங்ஙனநான்
என்னறிவான்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௮)

கற்றுளவான்கனியாயகண்ணுதலைக்கருத்தார
உற்றுளனாமொருவனைமுன்னிருவர்நினைந்தினிதேத்தப்
பெற்றுளனும்பெருமையனைப்பெரிதடியேன்கையகன்றிட்
டெற்றுளனாப்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௯)

எழிசையாயிசைப்பயனாயின்னமுதாயென்னுடைய
தோழனுமாயான்செய்யுந்துரிசுகளுக்குடனாகி
மாழையொண்கண்பரவையைத்தந்தாண்டானைமதியிலா
எழையேன்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௧௦)

வங்கமலிகடனஞ்சைவானவர்கடாமுய்ய
நுங்கியமுதவர்க்கருளிநொய்யேனைப்பொருட்படுத்துச்
சங்கிலியோடெனைப்புணர்த்ததத்துவனைச்சழக்கனேன்
எங்குலக்கப்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௧௧)

---

* கணை என்பது அம்பினிற்பூட்டிய அலகு.

பேரூருமதகரியினுரியானைப்பெரியவர்தஞ்
சீரூருந்திருவாரூர்ச்சிவனடியேதிறம்விரும்பி
யாரூரனடித்தொண்டனடியன்சொலகலிடத்தில்
ஊரூரனிவைவல்லாருலகவர்க்குமேலாரே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

இது திருவொற்றியூரிற் சங்கிலிநாச்சியாருடன் இருக்கும்போது வீதிவிடங்கப்பெருமானுடைய திருவோலக்கதரிசன ஞாபகம் வர ஓதியருளியபதிகம்.

---

## திருவாலங்காடு - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

முத்தாமுத்திதரவல்லமுகிழ்மென்முலையாளுமைபங்கா
சித்தாசித்தித்திறங்காட்டுஞ்சிவனேதேவர்சிங்கமே
பத்தாபத்தர்பலர்போற்றும்பரமாபழையனூர்மேய
அத்தாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (க)

பொய்யேசெய்துபுறம்புறமேதிரிவேன்றன்னைப்போகாமே
மெய்யேவந்திங்கெனையாண்ட மெய்யாமெய்யர்மெய்ப்பொருளே
பையாடரவமரைக்கசைத்தபரமாபழையனூர்மேய
ஐயாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (உ)

தூண்டாவிளக்கினற்சோதிதொழுவார்தங்கள்துயர்தீர்ப்பாய்
பூண்டாயெலும்பைப்புரமூன்றும் பொடியாச்செற்றபுண்ணியனே
பாண்டாழ்வினைகளவைதீர்க்கும்பரமாபழையனூர்மேய
ஆண்டாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (ங)

மறிநேரொண்கண்மடநல்லார்வலையிற்பட்டுமதிமயங்கி
யறிவேயழிந்தேனையாநான்மையார்கண்டமுடையானே
பறியாவினைகளவைதீர்க்கும்பரமாபழையனூர்மேய
அறிவேயாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (ச)

வேலங்காடுதடங்கண்ணார்வலையுட்பட்டுன்னெறிமறந்து
மாலங்காடிமறந்தொழிந்தேன்மணியேமுத்தேமரகதமே
பாலங்காடிநெய்யாடிபடர்புன்சடையாய்பழையனூர்
ஆலங்காடாவுன்னுடையவடியார்க்கடியேனாவேனே. (ரு)

எண்ணார்தங்களெயிலெய்தவெந்தாயெந்தைபெருமானே
கண்ணாயுலகங்காக்கின்றகருத்தாதிருத்தலாகாதாய்
பண்ணாரிசைகளதுகொண்டுபலருமேத்தும்பழையனூர்
அண்ணாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (சு)

வண்டார்குழலியுமைநங்கைபங்காகங்கைமணவாளா
விண்டார்புரங்களெரிசெய்தவிடையாய்வேதநெறியானே
பண்டாழ்வினைகள்பலதீர்க்கும்பரமாபழையனூர்மேய
அண்டாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (௭)

பேழ்வாயரவினணையானும்பெரியமலர்மேலுறைவானுந்
தாழாதுன்றன்சரண்பணியத்தழலாய்நின்றதத்துவனே
பாழாம்வினைகளவைதீர்க்கும்பரமாபழையனூர்தன்னை
யாள்வாயாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (௮)

எம்மானெந்தைமூத்தப்பனேழ்படிகாலெமையாண்ட
பெம்மானீமப்புறங்காட்டிற்பேயோடாடல்புரிவானே
பன்மாமலர்களவைகொண்டுபலருமேத்தும்பழையனூர்
அம்மாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (௯)

பத்தர்சித்தர்பலரேத்தும்பரமன்பழையனூர்மேய
அத்தனாலங்காடன்றனடிமைத்திறமேயன்பாகி
சித்தர்சித்தம்வைத்தபுகழ்ச்சிறுவனூரனொண்டமிழ்கள்
பத்தும்பாடியாடுவார்பரமனடியேபணிவாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம் - ௫௨.

---

## திருக்கடவூர்மயானம் - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மருவார்கொன்றைமதிசூடிமாணிக்கத்தின்மலைபோல
வருவார்விடைமேல்மாதோடுமகிழ்ந்துபூதப்படைசூழத்
திருமால்பிரமனிந்திரற்குந்தேவர்நாகர்தானவர்க்கும்
பெருமான்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௧)

விண்ணோர்தலைவர்வெண்புரிநூல்மார்பர்வேதகீதத்தர்
கண்ணார்நுதலர்நகுதலையர்காலகாலர்கடவூரர்
எண்ணார்புரமூன்றெரிசெய்தவிறைவரிமையோளொருபாகம்
பெண்ணாணவர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௨)

காயும்புலியினதளுடையர்கண்டரெண்டோட்கடவூரர்
தாயுந்தந்தைபல்லுயிர்க்குந்தாமேயாயதலைவனார்
பாயும்விடையொன்றதுவேறிப்பலிதேர்ந்துண்ணும்பரமேட்டி
பேய்கள்வாழுமயானத்துப்பெரியபெருமானடிகளே. (௩)

நறைசேர்மலரைங்கணையானைநயனத்தீயாற்பொடிசெய்த
இறையாராவரெல்லார்க்குமில்லையென்னாதருள்செய்வார்
பறையார்முழவம்பாட்டோடுபயிலுந்தொண்டர்பயில்கடவூர்ப்
பிறையார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே (௪)

கொத்தார்கொன்றைமதிசூடிக்கோள்நாகங்கள்பூணாக
மத்தயானையுரிபோர்த்துமருப்புமாமைத்தாலியார்
பத்திசெய்துபாரிடங்கள்பாடியாடப்பலிகொள்ளும்
பித்தர்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௫)

துணிவார்கீளுங்கோவணமுந்துதைந்துசுடலைப்பொடியணிந்து
பணிமேலிட்டபாசுபதர் * பஞ்சவடிமார்பினர்கடவூர்த்
திணிவார்குழையார்புரமூன்றுந்தீவாய்ப்படுத்தசேவகனார்
பிணிவார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௬)

காரார்கடலினஞ்சுண்டகண்டர்கடவூருறைவாணர்
தேரராக்கன்போய்வீழ்ந்துசிதையவிரலாலூன்றினார்
ஊர்தானாவதுலகேழுமுடையார்க்கொற்றியூராரூர்
பேராயிரவர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௭)

வாடாமுலையாள்தன்னோடுமகிழ்ந்துகானில்வேடுவனாய்க்
கோடார்கேழற்பின்சென்றுகுறுகிவிசயன்றவமழித்து
நாடாவண்ணஞ்செருச்செய்துயாவநாழிநிலையருள்செய்
பீடார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௮)

வேழமுரிப்பர்மழுவாளர்வேள்வியழிப்பர்சிரமறுப்பர்
ஆழியளிப்பரரிதனக்கன்றானைந்துகப்பரறமுரைப்பர்
ஏழைத்தலைவர்கடவூரிலிறைவர்சிறுமான்மறிக்கையர்
பேழைச்சடையர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௯)

மாடமல்குகடவூரில்மறையோரேத்துமயானத்துப்
பீடைதீரவடியாருக்கருளும்பெருமானடிகள்சீர்
நாடிநாவலாரூரன்நம்பிசொன்னநற்றமிழ்கள்
பாடுமடியார்கேட்பார்மேற்பாவமானபற்றறுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

* பஞ்சவடியாவது-மயிர்ப்பூணநூல். இது மாவிரதியரென்னும் உட்சமயத்தாரணிவது மேலும் அவர்களணியுமணி எலும்பினாலாகிய மணிகள் இவற்றை மானக்கஞ்சாறநாயனார் புராணத்து-௨௫-திருவிருத்தத்தானுமுணர்க.

## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

## திருவொற்றியூர் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அழுக்குமெய்கொடுன்றிருவடியடைந்தே னதுவுநான்படப்பா லதொன்றானாற், பிழுக்கைவாரியும்பால்கொள்வரடிகேள் பிழைப் பனாகிலுந்திருவடிப்பிழையேன், வழுக்கிவீழினுந்திருப்பெயரல் லால் மற்றுநானறியேன்மறுமாற்றம், ஒழுக்கவென்கணுக்கொரு மருந்துரையா யொற்றியூரெனுமூருறைவானே. (௧)

கட்டனேன்பிறந்தேனுனக்காளாய்க் காதற்சங்கிலிகாரணமாக, எட்டினாற்றிகழுந்திருமூர்த்தி யென்செய்வானடி யேனெடுத்து ரைக்கேன்; பெட்டனாகிலுந்திருவடிப்பிழையேன் பிழைப்பனாகி லுந்திருவடிக்கடிமை, யொட்டினேனென்னைநீசெய்வதெல்லா மொற்றியூரெனுமூருறைவானே. (௨)

கங்கைதங்கியசடையுடைக்கரும்பே கட்டியேபலர்க்குங்களைக ண்ணே, யங்கைநெல்லியின்பழத்திடையமுதே யத்தாவென்னிட ரார்க்கெடுத்துரைக்கேன், சங்குமிப்பியுஞ்சலஞ்சலமுரல வயிரமு த்தொடுபொன்மணிவரன்றி, யொங்குமாகடலோதம்வந்துலவு மொற்றியூரெனுமூருறைவானே. (௩)

ஈன்றுகொண்டதோர்சுற்றமொன்றன்று வியாவராகிலென்னன்பு டையார்கள், தோன்றநின்றருள்செய்தளித்திட்டாற் சொல்லுவா ரையல்லாதனசொல்லாய், மூன்றுகண்ணுடையாயடியேன்கண் கொள்வதேகணக்குவழக்காகில், ஊன்றுகோலெனக்காவதொன்ற ருளா யொற்றியூரெனுமூருறைவானே. (௪)

வழித்தலைப்படுவான்முயல்கின்றே னுன்னைப்போலென்னைப்பா விக்கமாட்டேன், சுழித்தலைப்பட்டநீரதுபோலச் சுழல்கின்றேன் சுழல்கின்றதென்னுள்ளங், கழித்தலைப்பட்டநாயதுபோலவொரு வன்கோல்பற்றிக்கறகறவிழுக்கை,யொழித்துநீயருளாயினசெய்யா யொற்றியூரெனுமூருறைவானே. (௫)

மானைநோக்கியர்கண்வலைப்பட்டு வருந்தியானுற்றவல்வினைக்க ஞ்சித், தேனையாடியகொன்றையினாயுன் சீலமுங்குணமுஞ்சிந்தி யாதே, நானுமித்தனைவேண்டுவதடியே னுயிரொடுநரகத்தழுந் தாமை, யூனமுள்ளனதீர்த்தருள்செய்யா யொற்றியூரெனுமூரு றைவானே. (௬)

மற்றுத்தேவரைநினைந்துனை மறவேனெஞ்சினாரொடுவாழவுமாட்டேன், பெற்றிருந்துபெறுதொழுகின்ற பேதையேன்பிழைத்திட்டதையறியேன், முற்றுநீயெனைமுனிந்திடவடியேன்கடவதென்னுனைநான்மறவேனேல், உற்றநோயுறுபிணிதவிர்த்தருளா யொற்றியூரெனுமூருறைவானே. (எ)

கூடினாய்மலைமங்கையைநினையாய் கங்கையாயிரமுகமுடையாளைச், சூடினாயென்றுசொல்லியபுக்காற் றொழும்பனேனுக்குஞ் சொல்லலுமாமே, வாடிநீயிருந்தென்செய்திமனனே வருந்தியானுற்றவல்வினைக்கஞ்சி, யூடினாலினியாவதொன்றுண்டே யொற்றியூரெனுமூருறைவானே. (அ)

மகத்திற்புக்கதோர்சனியெனக்கானாய் மைந்தனேமணியேமணவாளா, அகத்திற்பெண்டுகள்நானொன்றுசொன்னாலழையேற்போகுருடாவெனத்தரியேன், முகத்திற்கண்ணிழந்தெங்ஙனம்வாழ்வேன் முக்கணாமுறையோமறையோதீ, யுகைக்குந்தண்கடலோதம்வந்துலவு மொற்றியூரெனுமூருறைவானே. (கூ)

ஓதம்வந்துலவுங்கரைதன்மே லொற்றியூருறைசெல்வனைநாளும், ஞாலந்தான்பரவப்படுகின்றநான்மறையங்கமோதியநாவன், சிலந்தான்பெரிதும்மிசவல்ல சிறுவன்வன்றொண்டனூரனுரைத்த, பாடல்பத்திவைவல்லவர்தாம்போய்ப் பரகதிதிண்ணநண்ணுவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

---

இது உன்னைப் பிரிந்துபோவதில்லையென்று சங்கிலிநாச்சியாருக்குச் சூளுரைசெய்து மணந்துமகிழ்ந்திருக்கையில் திருவாரூர் வீதிவிடங்கப்பெருமானுடைய திருவோலக்கத் தரிசனம்செய்வதற்கின்றி நெடுநாள் பிரிந்திருக்கின்றோமேயென்னும் ஞாபகமுண்டாகப் பரமசிவத்தின் திருவிளையாட்டால் முன்கூறிய சூளுரையை மறந்து திருவொற்றியூரெல்லையைக் கடந்தவளவில் நேத்திரங்களுக்கு அபாவந்தோன்ற வருந்தித் துதிசெய்த பதிகம்.

## திருப்புன்கூர் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அந்தணாளனுன்னடைக்கலம்புகுதவவனைக்காப்பதுகாரணமாக வந்தகாலன்றனாருயிரதனைவவ்வினாய்க்குன்றன்வன்மைகண்டடியேன், எந்தைநீயெனைநமன்றமர்நலியிலிவன்மற்றென்னடியானெனவிலக்குஞ், சிந்தையால்வந்துன்றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (க)

# நம்பியாரூரரென்னும்

## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

* வையகமுற்றுமாமழைமறந்து வயலில்நீரிலைமாநிலந்தருகோம் உய்யக்கொள்கமற்றெங்களையென்ன வொளிகொள்வெண்முகிலாய்ப்பரந்தெங்கும், பெய்யுமாமழைப்பெருவெள்ளந்தவிர்த்துப் பெயர்த்தும்பன்னிருவேலிகொண்டருளுஞ், செய்கைகண்டுநின்றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௨)

ஏதநன்னிலமீரறுவேலியேயர்கோனுற்றவிரும்பிணிதவிர்த்துக் கோதனங்களின்பால்கறந்தாட்டக் கோலவெண்மணற்சிவன்றன் மேற்சென்ற, தாதைதாளறவெறிந்ததண்டிக்குன் சடைமிசைமலரருள்செயக்கண்டு, பூதவாளிநின்பொன்னடியடைந்தேன்பூம்பொழிற்றிருப்புன்கூருளானே. (௩)

நற்றமிழ்வல்லஞானசம்பந்த னாவினுக்கரையனாளைப்போவானுங், கற்றசூதனற்சாக்கியன்சிலந்திகண்ணப்பன்கணம்புல்லனென்றிவர்கள், குற்றஞ்செய்யினுங்குணமெனக்கருதுங் கொள்கைகண்டுநின்குரைகழலடைந்தேன், பொற்றிரள்மணிக்கமலங்கள்மலரும் பொய்கைசூழ்திருப்புன்கூருளானே. (௪)

கோலமால்வரைமத்தெனநாட்டிக் கோளரவுசுற்றிக்கடைந்தெழுந்த, ஆலநஞ்சுகண்டவர்மிகவிரிய வமரர்கட்கருள்புரிவதுகருதி, நீலமார்கடல்விடந்தனையுண்டு கண்டத்தேவைத்தபித்தநீசெய்த, சீலங்கண்டுநின்றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௫)

இயக்கர்கின்னரர்ஞமனொடுவருணரியங்குதீவளிநாயிறுதிங்கள், மயக்கமில்புலிவானரநாகம் வசுக்கள்வானவர் தானவரெல்லாம், அயர்ப்பொன்றின்றிநின்றிருவடியதனை யர்ச்சித்தார்பெறுமாரருள்கண்டு, திகைப்பொன்றின்றிநின்றிருவடியடைந்தேன் செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௬)

போர்த்தநீள்செவியாளரந்தணர்க்குப் பொழில்கொளால்நிழற்கீழறம்புரிந்து, பார்த்தனுக்கன்றுபாசுபதங்கொடுத்தருளினாய் பண்டுபகீரதன்வேண்ட, ஆர்த்துவந்திழியும்புனற்கங்கை நங்கையாளைநின்சடைமிசைக்கரந்த, தீர்த்தனேநின்றன்றிருவடியடைந்தேன் செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௭)

மூவெயில்செற்றஞான்றுய்ந்த மூவரிலிருவர்நின்றிருக்கோயிலின்வாய்தல், காவலாளரென்றேவியபின்னையொருவநீ கரிகாடரங்காக, மானைநோக்கியோர்மாநடமகிழ மணிமுழாமுழக்கவருள்

செய்த, தேவதேவநின் றிருவடியடைந்தேன் செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (அ)

அறிவி னல்மிக்கவறுவகைச்சமய மவ்வவர்க்கங்கேயருள்புரிந்து எறியுமாகடலிலங்கையர்கோனைத் துலங்கமால்வரைக்கீழடர்த்திட்டுக், குறிகொள்பாடலினின்னிசைகேட்டுக் கோலவாளொடுநாளது கொடுத்த, செறிவுகண்டுநின் றிருவடியடைந்தேன் செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (கூ)

கம்பமால்களிற்றின் னுரியானைக்காமற்காய்ந்ததோர்கண் ணுடையானைச், செம்பொனேயொக்குந்திருவுருவானைச்செழும்பொழிற்றிருப்புன்கூருளானை, யும்பராளியையுமையவள்கோனையூரன்வன்றொண்ட னுள்ளத்தா லுகந்,தன்பினாற்சொன்னவருந்தமிழைந்தோடைந்தும்வல்லவரருவினையிலரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருப்புன்கூருக் கெழுந்தருளியபோது அந்தத்தலத்தார்கண்டு தொழுது சுவாமீ யிங்குநெடுநாளாக மழைபொழிதலின்றி வருந்துகிறோம் ஆதலால் கிருபைபாலிக்க வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய மழைபொழிந்தால்சுவாமிக் கியாதுதருவீர்களென்னப் பன்னிரண்டுவேலி நிலந்தருகிறோமென்னக் கிருபைகூர்ந்து இந்தப்பதிகமோதியருளலு மழைஅதிகமாகப்பெய்ய அவர்களுடையவேண்டுதலினல் மழைதணிந்துபெய்யும்படிசெய்து முன்னமவர்கள்சொல்லிய பன்னிரண்டுவேலி நிலமேயன்றி மீட்டும் பன்னிரண்டுவேலி நிலங்கொடுக்கப்பெற்றருளியது.

---

## திருநீடூர் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

ஊர்வதோர்விடையொன்றுடையானையொண்ணுதற்றனிக்கண்ணுதலானைக், காரதார்கறைமாமிடற்றானைக் கருதலார்புரமூன்றெரித்தானை, நீரில்வாளைவரால்குதிகொள்ளு நிறைபுனற்கழனிச்செல்வநீடூர், பாருளார்பரவித்தொழநின்ற பரமனைப்பணியாவிடலாமே. (க)

துன்னுவார்சடைத்தூமதியானைத் துயக்கறுவகைதோன்றுவிப்பானைப்,பன்னுநூல்மறைபாடவல்லானைப்பார்த்தனுக்கருள்செய்தபிரானை,யென்னையின்னருளெய்துவிப்பானையேதிலார்தமக்கேதிலன்றன்னைப், புன்னைமாதவிபோதலர்நீடூர்ப் புனிதனைப்பணியாவிடலாமே. (உ)

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

கொல்லுமூவிலைவேலுடையானைக் கொடியகாலனையுங்குமைத்தா
நல்லவானெறிகாட்டுவிப்பானைநாளுநாமுகக்கின்றபிரானை [னை
யல்லலில்லருளேபுரிவானையாடுநீர்வயல்சூழ்புனல்நீடூர்க்
கொல்லைவெள்ளெருதேறவல்லானைக்கூறிநாம்பணியாவிடலாமே.

தோடுகாதிடுதூநெறியானைத் தோற்றமுந்துறப்பாயவன்றன்னைப்
பாடுமாமறைபாடவல்லானைப் பைம்பொழிற்குயில்கூவிடமாடே
யாடுமாமயிலன்னமோடாடவலைபுனற்கழனித்திருநீடூர்
வேடனாயபிரானவன்றன்னை விரும்பிநாம்பணியாவிடலாமே. (ச)

குற்றமொன்றடியாரிலராகிற்கூடுமாறதனைக்கொடுப்பானைக்
கற்றகல்வியிலும்மினியானைக்காணப்பேணுமவர்க்கெளியானை
முற்றலைவஞ்சுந்துறந்திருப்பானைமூவரின்முதலாயவன்றன்னைச்
சுற்றுநீள்வயல்சூழ்திருநீடூர்த்தோன்றலைப்பணியாவிடலாமே. (ரு)

காடிலாடியகண்ணுதலானைக்காலனைக்கடிந்திட்டபிரானைப்
பாடியாடும்பரிசேபுரிந்தானைப்பற்றினோடுசுற்றம்மொழிப்பானை
த், தேடிமாலயன்காண்பரியானைச்சித்தமுந்தெளிவார்க்கெளியா
னைக்,கோடிதேவர்கள்கும்பிடுநீடூர்க்கூத்தனைப்பணியாவிடலாமே

விட்டிலங்கெரியார்கையினானைவீடிலாதவியன்புகழானைக்
கட்டுவாங்கந்தரித்தபிரானைக்காதிலார்கனகக்குழையானை
விட்டிலங்குபுரிநூலுடையானைவீந்தவர்தலையோடுகையானைக்
கட்டியின்கரும்போங்கியநீடூர்க்கண்டுநாம்பணியாவிடலாமே. எ

மாயமாயமனங்கெடுப்பானைமனத்துளேமதியாயிருப்பானைக்
காயமாயமுமாக்குவிப்பானைக்காற்றுமாய்க்கனலாய்க்கழிப்பானை
யோயுமாறுறு நோய்புணர்ப்பானை யொல்லைவல்வினைகள் கெடு
ப்பானை, வேய்கொள்தோளுமைபாகனைநீடூர்வேந்தனைப்பணியா
விடலாமே. (அ)

கண்டமுங்கறுத்திட்டபிரானைக்காணப்பேணுமவர்க்கெளியானைத்
தொண்டரைப்பெரிதும்முகப்பானைத் துன்பமுந்துறந்தின்பினி
யானைப்,பண்டைவல்வினைகள்கெடுப்பானைப்பாகமாமதியானவன்
றன்னைக்,கெண்டைவாளைகிளர்புனல்நீடூர்க்கேண்மையாற்பணியா
விடலாமே. (கூ)

அல்லலுள்ளனதீர்த்திடுவானையடைந்தவர்க்கமுதாயிடுவானைக்
கொல்லைவல்லரவம்மசைத்தானைக்கோலமார்கரியின்னுரியானை

நல்லவர்க்கணியானவன்றன்னை நாளுங்காதல்செய்கின்றபிரானை யெல்லிமல்லிகையேகமழ்நீடூரேத்திநாம்பணியாவிடலாமே. (௧௦)

பேரோராயிரமும்முடையானைப்பேசினாற்பெரிதும்மினியானை நீரூர்வார்சடைநின்மலன்றன்னைநீடூர்நின்றுகந்திட்டபிரானை யாரூரன்னடிகாண்பதற்கன்பாயாதரித்தழைத்திட்டவிம்மாலை பாரூரும்பரவித்தொழவல்லார்பத்தராய்முத்திதாம்பெறுவாரே.

திருச்சிற்றம்பலம்.

## ஆ௨ பதிகம் - ௫௬.

## திருவாழ்கொளிப்புத்தூர் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

தலைக்கலன்றலைமேற்றரித்தானைத் தன்னையென்னைநினைக்கத்தருவானைக், கொலைக்கையானையுரிபோர்த்துகந்தானைக் கூற்றுதைத்தகுரைசேர்கழலானை, யலைத்தசெங்கண்விடையேறவல்லானையாவடியேனடிநாயேன், மலைத்தசெந்நெல்வயல்வாழ்கொளிபுத்தூர்மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (௧)

படைக்கட்சூலம்பயிலவல்லானைப்பாவிப்பார்மனம்பரவிக்கொண்டானைக், கடைக்கட்பிச்சைக்கிச்சைகாதலித்தானைக் காமனாகந்தனைக்கட்டழித்தானைச், சடைக்கட்கங்கையைத்தாழ்வைத்தானைத் தண்ணீர்மண்ணிக்கரையானைத்தக்கானை, மடைக்கணீலமலர்வாழ்கொளிபுத்தூர்மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (௨)

வெந்தநீறுமெய்பூசவல்லானைவேதமால்விடையேறவல்லானை, யந்தமாதியறிதற்கரியானையாறலைத்தசடையானையம்மானைச், சிந்தையென்றடுமாற்றறுப்பானைத்தேவதேவனென்சொல்முனியாதே, வந்தெனுள்ளம்புகும்வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (௩)

தடங்கையான்மலர்தூய்த்தொழுவாரைத் தன்னடிக்கேசெல்லுமாறுவல்லானைப், படங்கொள்நாகமரையார்த்துகந்தானைப் பல்லில்வெள்ளைத்தலையூணுடையானை, நடுங்கவானையுரிபோர்த்துகந்தானை நஞ்சமுண்டுகண்டங்கறுத்தானை, மடந்தைபாகனைவாழ்கொளிபுத்தூர்மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (௪)

வளைக்கைமுன்கைமலைமங்கைமணாளன் மாரனாருடல்நீறெழச்செற்றுத், துளைத்தவங்கத்தொடுதூமலர்க்கொன்றைதோலுநூலுந்துதைந்தவரைமார்பன், திளைக்குந்தெவ்வர்திரிபுரமூன்றுமவுணர்பெண்டிருமக்களும்வேவ, வளைத்தவில்லியைவாழ்கொளிபுத்தூர்மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (௫)

திருவினாயகனாகியமாலுக்கருள்கள் செய்திடுந்தேவர்பிரானைப் புருவினானையொன்றுவறிவொண்ணாமூர்த்தியை விசயற்கருள்செய்வான், செருவிலேந்தியோர்கேழற்பின்சென்றுசெங்கண்வேடனாயென்னொடும்வந்து; மருவினான்றனைவாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (சு)

எந்தையையெந்தைதந்தைபிரானையேதமாயவிடர்தீர்க்கவல்லானை முந்தியாகியமூவரின்மிக்கமூர்த்தியைமுதல்காண்பரியானைச் சந்தின்மிக்ககரியின்மருப்போடுகாரகிற்கவரிம்மயிர்மண்ணி வுந்துவந்திழிவாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தைமறந்தென்னினைக்
[கேனே. (எ)

தேனையாடியகொன்றையினானைத்தேவர்கைதொழுந்தேவர்பிரானை, யூனமாயினதீர்க்கவல்லானையொற்றையேற்றனைநெற்றிக்கண்ணனைக்,* கானவானையின்கொம்பினைப்பீழ்ந்தகள்ளப்பிள்ளைக்குங்காண்பரிதாய, வான்நாடனைவாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (அ)

காளையாகிவரையெடுத்தான்றன்கைகளிற்றவன்மொய்தலையெல்லா, மூளைபோதவொருவிரல்வைத்தமூர்த்தியைமுதல்காண்பரியானைப், பாளைதெங்குபழம்வீழமண்டிச்செங்கண்மேதிகள்சேடெறிந்தெங்கும், வாளைபாய்வயல்வாழ்கொளிபுத்தூர்மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (கூ)

திருந்தநான்மறைபாடவல்லானைத்தேவர்க்குந்தெரிதற்கரியானைப், பொருந்தமால்விடையேறவல்லானைப் பூதிப்பைப்புலித்தோலுடையானை, யிருந்துண்தேரருநின்றுண்சமணு மேகநின்றவனாருயிர்க்கெல்லாம்; மருந்தனான்றனைவாழ்கொளிபுத்தூர்மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (க0)

மெய்யனைமெய்யில்நின்றுணர்வானைமெய்யிலாதவர்தங்களுக்கெல்லாம், பொய்யனைப்புரமூன்றெரித்தானைப் புனிதனைப்புலித்தோலுடையானைச், செய்யனைவெளியதிருநீற்றிற்றிகழுமேனியன்மானமறியேந்தும், மைகொள்கண்டனைவாழ்கொளிபுத்தூர்மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (கக)

---

* குவலயாபீடமென்னும் யானையின் கொம்பினைப்பிடுங்கி யந்த யானையை யடித்துக்கொன்ற கிருஷ்ணனாகியதிருமாலுக்கு மெனப்பொருள்கொள்க.

வளங்கிளர்பொழில்வாழ்கொளிபுத்தூர்மாணிக்கத்தைமறந்தெ ன்னினைக்கேனென், றுளங்குளிர்தமிழூரன்வன்றொண்டன்சடைய ன்காதலன்வனப்பகையப்பன், நலங்கிளர்வயல்நாவலர்வேந்தனங் கைசிங்கடிதந்தையபந்த, பலங்கிளர்தமிழ்பாடவல்லார்மேற்பறை யுமாஞ்செய்தபாவங்கள்தானே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கழுமலம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

சாதலும்பிறத்தலுந்தவிர்த்தெனைவகுத்துத் தன்னருள்தந்த வெந்தலைவனைமலையின், மாதினைமதித்தங்கோர்பால்கொண்டம ணியை வருபுனல்சடையிடைவைத்தவெம்மானை, யேதிலென்மன த்துக்கோரிரும்புண்டநீரா யெண்வகையொருவனையெங்கள்பி ரானைக், காதில்வெண்குழையனைக்கடல்கொளமிதந்த கழுமலவள நகர்க்கண்டுகொண்டேனே. (க)

மற்றொருதுணையினிமறுமைக்குங்காணேன் வருந்தலுற்றேன் மறவாவரம்பெற்றேன், சுற்றியசுற்றமுந்துணையென்றுகருதேன் துணையென்றுநான்தொழப்பட்டவொண்சுடரை, முத்தியுஞ்ஞான மும்வானவரறியாமுறைமுறைபலபலநெறிகளுங்காட்டிக்,கற்பனை கற்பித்தகடவுளையடியேன் கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே

திருத்தினைநகருறைசேந்தனப்பனென் செய்வினையறுத்திடுஞ் செம்பொனையம்பொ, னொருத்தனையல்லதிங்காரையுமுணரே னு ணர்வுபெற்றேனுய்யுங்காரணந்தன்னால், விருத்தனைப்பாலனைக்கன விடைவிரவி விழித்தெங்குங்காணமாட்டாதுவிட்டிருந்தேன், கரு த்தனைநிருத்தஞ்செய்காலனைவேலைக் கழுமலவளநகர்க்கண்டுகொ ண்டேனே. (ங)

மழைக்கரும்புமலர்க்கொன்றையினானை வளைக்கலுற்றேன் மறவாமனம்பெற்றேன், பிழைத்தொருகாலினிப்போய்ப்பிறவா மைப் பெருமைபெற்றேன்பெற்றதார்பெறுகிற்பார், குழைக்கரு ங்கண்டனைக்கண்டுகொள்வானேபாடுகின்றேன்சென்றுகூடவும்வல் லேன், கழைக்கரும்புகதலிபலசோலைக் கழுமலவளநகர்க்கண்டு கொண்டேனே. (ச)

# நம்பியாரூரரென்னும்
## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

குண்டலங்குழைதிகழ்காதனேயென்றுங் கொடுமழுவாட்படைக்குழகனேயென்றும், வண்டலம்பும்மலர்க்கொன்றையனென்றும்வாய்வெருவித்தொழுதேன்விதியாலே,பண்டைநம்பலமனமுங்களைந்தொன்றாய்ப்பசுபதிபதிவினவிப்பலநாளுங்,கண்டலங்கழிக்கரையோதம்வந்துலவுங்கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே

வரும்பெரும்வல்வினையென்றிருந்தென்னணி வருந்தலுற்றேன்மறவாமனம்பெற்றேன், விரும்பியென்மனத்திடைமெய்குளிர்ப்பெய்தி வேண்டிநின்றேதொழுதேன்விதியாலே, யரும்பினையலரினையமுதினைத்தேனையையனையறவனென்பிறவிவேரறுக்குங், கரும்பினைப்பெருஞ்செந்நெல்நெருங்கியகழனிக்கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே. (ரு)

அயலவர்பரவவுமடியவர்தொழவுமன்பர்கள்சாயலுளடையலுற்றிருந்தேன், முயல்பவர்பின்சென்றுமுயல்வலையானைபடுமெனமொழிந்தவர்வழிமுழுதெண்ணிப், புயலினைத்திருவினைப்பொன்னினதொளியைமின்னினதுருவையென்னிடைப்பொருளைக், கயலினஞ்சேலொடுவயல்விளையாடுங் கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே. (எ)

நினைதருபாவங்கணாசங்களாகநினைந்துமுன்றொழுதெழப்பட்டவொண்சுடரை, மலைதருமலைமகள்கணவனைவானோர்மாமணிமாணிக்கத்தைம்மறைப்பொருளைப், புனைதருபுகழினையெங்களதொளியையிருவருமொருவனென்றுணர்வரியவனைக்,கனைதருகருங்கடலோதம்வந்துலவுங்கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே. (அ)

மறையிடைத்துணிந்தவர்மனையிடையிருப்பவஞ்சனைசெய்தவர்பொய்கையுமாயத்,துறையுறக்குளித்துளதாகவைத்துய்த்தவுண்மையெனுந்தகவின்மையையோரோன்,பிறையுடைச்சடையனையெங்கள்பிரானைப்பேரருளாளனைக்காரிருள்போன்ற, கறையணிமிடறுடையடிகளையடியேன் கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே.

செழுமலர்க்கொன்றையுங்கூவிளமலரும்விரவியசடைமுடியடிகளைநினைந்திட், டழுமலர்க்கண்ணிணையடியவர்க்கல்லாலறிவரிதவன்றிருவடியிணையிரண்டுங், கழுமலவளநகர்க்கண்டுகொண்டூரன்சடையன்றன்காதலன்பாடியபத்துந், தொழுமலரொடுத்தகையடியவர்தம்மைத்துன்பமுமிடும்பையுஞ்சூழகிலாவே. (க0)

திருச்சிற்றம்பலம்.

## திருவாரூர்- பண்- தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பொன்னுமெய்ப்பொருளுந்தருவானைப்போகமுந்திருவும்புணர்ப்பானைப், பின்னையென்பிழையைப்பொறுப்பானைப்பிழையெலாந்தவிரப்பணிப்பானை, யின்னதன்மையனென்றறிவொண்ணாவெம்மானையெளிவந்தபிரானை, யன்னம்வைகும்வயற்பழனத்தணியாரூரானைமறக்கலுமாமே. (௧)

கட்டமும்பிணியுங்களைவானைக் காலற்சீறியகாலுடையானை, விட்டவேட்கைவெந்நோய்களைவானை விரவினால்விடுத்தற்கரியானைப், பட்டவார்த்தைபடநின்றவார்த்தைவாராமேதவிரப்பணிப்பானை, யட்டமூர்த்தியைமட்டவிழ்சோலை யாரூரானைமறக்கலுமாமே. (௨)

கார்க்கின்றமழையாய்ப்பொழிவானைக் கலைக்கெலாம்பொருளாயுடன்கூடிப், பார்க்கின்றவுயிர்க்குப்பரிந்தானைப்பகலுங்கங்குலுமாகிநின்றானை, யோர்க்கின்றசெவியைச்சுவைதன்னையுணருநாவினைக்காண்கின்றகண்ணை, யார்க்கின்றகடலைமலைதன்னையாரூரானைமறக்கலுமாமே. (௩)

செத்தபோதினின்முன்னின்றுநம்மைச்சிலர்கள்கூடிச்சிரிப்பதன்முன்னம்,வைத்தசிந்தையுண்டேமனமுண்டேமதியுண்டேவிதியின்பயனுண்டே, முத்தனெங்கள்பிரானென்றுவானோர்தொழநின்றதிமிலேறுடையானை, யத்தனெந்தைபிரானெம்பிரானையாரூரானைமறக்கலுமாமே. (௪)

செறிவுண்டேன்மனத்தாற்றெளிவுண்டேற்றேற்றத்தால்வருஞ்சிக்கனவுண்டேல், மறிவுண்டேல்மறுமைப்பிறப்புண்டேல் வாணண்மேற்செல்லும்வஞ்சனையுண்டேற், பொறிவண்டாழ்செயும்பொன்மலர்க்கொன்றை பொன்போலுஞ்சடைமேற்புனைந்தானை, யறிவுண்டேயுடலத்துயிருண்டேயாரூரானைமறக்கலுமாமே. (௫)

*பொள்ளலிவ்வுடலைப்பொருளென்றுபொருளுஞ்சுற்றமும்போகமுமாகி, மெள்ளநின்றவர்செய்வனவெல்லாம்வாராமேதவிர்க்கும்விதியானை, வள்ளலெந்தமக்கேதுணையென்றுநாளுளுமமரர்தொழுதேத்தும், அள்ளலங்கழனிப்பழனத்தணி யாரூரானைமறக்கலுமாமே. (௬)

---

* பொள்ளலிவ்வுடலை-என்பதற்கு-நவத்துவாரமுள்ள உடலெனப்பொருள்கொள்க.

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

கரியானையுரிகொண்டகையானைக்கண்ணின்மேலொருகண்ணுடையானை, வரியானைவருத்தங்களைவானைமறையானைக்குறைமாமதிசூடற், குரியானையுலகத்துயிர்க்கெல்லாமொளியானையுகந்துள்கிநண்ணாதார்க், கரியானையடியேற்கெளியானை யாரூரானைமறக்கலுமாமே. (எ)

வாளாநின்றுதொழுமடியார்கள் வானுளப்பெறும்வார்த்தையைக்கேட்டு, நாணாளும்மலரிட்டுவணங்கார் நம்மையாள்கின்றதன்மையையோரார், கேளாநான்கிடந்தேயுழைக்கின்றேன் கிளைக்கெலாந்துணையாமெனக்கருதி, யாளாவான்பலர்முன்பிழைக்கின்றேனாரூரானைமறக்கலுமாமே. (அ)

விடக்கையேபெருக்கிப்பலநாளும்வேட்கையாற்பட்டவேதனைதன்னைக், கடக்கிலேனெறிகாணவுமாட்டேன்கண்குழிந்திரப்பார்கையிலொன்று, மிடக்கிலேன்பரவைத்திரைக்கங்கைச்சடையானையுமையாளையோர்பாகத், தடக்கினானையந்தாமரைப்பொய்கையாரூரானைமறக்கலுமாமே. (௯)

ஓட்டியாட்கொண்டுபோயொளித்திட்டவுச்சிப்போதனைநச்சரவார்த்த, பட்டியைப்பகலையிருள்தன்னைப்பாவிப்பார்மனத்தூறுமத்தேனைக், கட்டியைக்கரும்பின்றெளிதன்னைக்காதலாற்கடற்சூர்தடிந்திட்ட, செட்டியப்பனைப்பட்டனைச்செல்வவாரூரானைமறக்கலுமாமே. (௧௦)

ஒருறொன்றுலகங்களுக்கெல்லாமுளைக்கலாம்பொருளாயுடன்கூடிக், காருருங்கமழ்கொன்றைநன்மாலைமுடியன்காரிகைக்காரணமாக, ஆரூரைம்மறத்தற்கரியானையம்மான்றன்றிருப்பேர்கொண்டதொண்ட, னாரூரன்னடிநாயுரைவல்லாரமரலோகத்திருப்பவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவிடைமருது-பண்- தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

கழுதைகுங்குமந்தான்சுமந்தெய்த்தாற்கைப்பர்பாழ்புகமற்றதுபோலப், பழுதில்நாளுழன்றுள்தடுமாறிப்படுசுழித்தலைப்பட்டனனெந்தா, யழுது நீயிருந்தென்செய்திமனனே யங்கணாவரனே யெனமாட்டா, இழுதையேனுக்கொருய்வகையருளாயிடைமருதுறையெந்தைபிரானே. (௧)

நரைப்புமூப்பொடுபிணிவருமென்னே நன்றியில்வினையே துணிந்தெய்த்தேன், அரைத்தமஞ்சளதாவதையறிந்தேனஞ்சினேன மனரவர்தம்மை, யுரைப்பனுனசேவடிசேரவுணரும்வாழ்க்கை யையொன்றறியாத, இரைப்பனேனுக்கொருய்வகையருளாயிடை மருதுறையெந்தைபிரானே. (௨)

புன்னுனைப்பனிவெங்கதிர்கண்டாற் போலும்வாழ்க்கைபொ ருளிலநாளும், என்னெனக்கினியிற்றைக்குநாளையென்றிருந்திட ருற்றனனெந்தாய், முன்னமேயுனசேவடிசேராமூர்க்கனுகிக்கழி ந்தனகாலம், இன்னமென்றனக்குய்வகையருளாயிடைமருதுறை யெந்தைபிரானே. (௩)

முந்திச்செய்வினையிம்மைக்கணலியமூர்க்கனுகிக்கழிந்தனகா லஞ், சிந்தித்தேமனம்வைக்கவுமாட்டேன் சிறிச்சிறிதேயிரப்பா ர்கட்கொன்றீயேன், அந்திவெண்பிறைசூடுமெம்மானேயாரூர்மே வியவமரர்கடலைவா, எந்தைநீயெனக்குய்வகையருளாயிடைமரு துறையெந்தைபிரானே. (௪)

அழிப்பரைவர்புரவுடையார்களைவரும்புரவாசறவாண்டு, கழித்துக்காற்பெய்துபோயினபின்னைக்கடைமுறையுனக்கேபொ றையானேன், விழித்துக்கண்டனன்மெய்ப்பொருடன்னை வேண் டேன்மானிடவாழ்க்கையிதாகில், இழித்தேனென்றனக்குய்வகைய ருளாயிடைமருதுறையெந்தைபிரானே. (௫)

குற்றந்தன்னொடுகுணம்பலபெருக்கிக்கோலநுண்ணிடையா ரொடுமயங்கிக், கற்றிலேன்கலைகள்பலஞானங்கடியவாயினகொடு மைகள்செய்தேன், புற்றலாவதோர்பற்றுமற்றில்லேன்பாவியேன் பலபாவங்கள்செய்தேன், எற்றுளேனெனக்குய்வகையருளாயிடை மருதுறையெந்தைபிரானே. (௬)

கொடுக்ககிற்றிலேனொண்பொருடன்னைக் குற்றஞ்செற்றமி வைமுதலாக, விடுக்ககிற்றிலேன்வேட்கையுஞ்சினமும்வேண்டிலம் புலனைவசமல்ல, நடுக்கமுற்றதோர்மூப்புவந்தெய்தநமன்றமர் நரகத்திடலஞ்சி, யிடுக்கணுற்றனனுய்வகையருளாயிடைமருதுறை யெந்தைபிரானே. (௭)

ஐவ்வகையரையரவராகி யூட்சிகொண்டொருகாலவர்நீங்கார்
அவ்வகையவர்வேண்டுவதானுலவரவர்வழியொழுகிநான்வந்து
செய்வ்வகையறியேன்சிவலோகாதீவணுசிவனேயெரியாடீ [னே
யெவ்வகையெனக்குய்வகையருளாயிடைமருதுறையெந்தைபிரா

ஏழைமானிடவின்பினைநோக்கி யிளையவர்வலைப்பட்டிருந்தின்னம் வாழைதான்பழுக்குநமக்கென்றுவஞ்சவல்வினையுள்வலைப்பட்டுக் கூழைமாந்தர்தஞ்செல்கதிப்பக்கம் போகமும்பொருளொன்றறி யாத, ஏழையேனுக்கோருய்வகையருளா யிடைமருதுறையெந் தைபிரானே. (கூ)

அரைக்குஞ்சந்தனத்தோடகிலுந்தியைவனஞ்சுமந்தார்த்திரு பாலு, மிரைக்குங்காவிரித்தென்கரைதன்மே லிடைமருதுறையெ ந்தைபிரானை, யுரைக்குமூரனொளிதிகழ்மாலையுள்ளத்தாலுகந்தேத் துவல்லார்கள், நரைப்புமூப்பொடுநடலையுமின்றி நாதன்சேவடி நண்ணுவர்தாமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவேகம்பம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

ஆலந்தானுகந்தமுதுசெய்தானையாதியையமரர்தொழுதேத்துஞ் சீலந்தான்பெரிதும்முடையானைச்சிந்திப்பாரவர்சிந்தையுளானை யேலவார்குழலாளுமைநங்கையென்றுமேத்திவழிபடப்பெற்ற காலகாலனைக்கம்பனெம்மானைக் காணக்கண்ணடியேன்பெற்றவா [றே. (க)

உற்றவர்க்குதவும்பெருமானை யூர்வதொன்றுடையானும்பர் ம்கானைப், பற்றினார்க்கென்றும்பற்றவன்றன்னைப்பாவிப்பார்மன மேரவிக்கொண்டானை, யற்றமில்புகழாளுமைநங்கை யாதரித்து வழிபடப்பெற்ற, கற்றைவார்சடைக்கம்பனெம்மானைக் காணக்க ண்ணடியேன்பெற்றவாறே. (உ)

திரியுமுப்புரந்தீப்பிழம்பாகச் செங்கண்மால்விடைமேற் றிகழ்வானைக், கரியினீருரிபோர்த்துகந்தானைக் காமனைக்கனலாவி ழித்தானை, வரிகொள்வெள்வளையாளுமைநங்கைமருவியேத்திவழி படப்பெற்ற, *பெரியகம்பனையெங்கள்பிரானைக்காணக்கண்ணடி யேன்பெற்றவாறே. (ந)

குண்டலந்திகழ்காதுடையானைக் கூற்றுதைத்தகொடுந்தொ ழிலானை, வண்டலம்புமலர்க்கொன்றையினானை வாளராமதிசேர் சடையானைக், கெண்டையந்தடங்கண்ணுமைநங்கைகெழுமியேத் திவழிபடப்பெற்ற, கண்டநஞ்சுடைக்கம்பனெம்மானைக் காணக் கண்ணடியேன்பெற்றவாறே. (ச)

---

* காமாக்ஷியம்மையால் பூசிக்கப்பட்ட-ஏகாம்பரநாதரே பெரியகம்பர்.

வெல்லும்வெண்மழுவொன்றுடையானை வேலைநஞ்சுண்டவித் தகன்றன்னை, யல்லல்தீர்த்தருள்செய்யவல்லானை யருமறையவை யங்கம்வல்லானை, யெல்லையில்புகழாளுமைநங்கையென்றுமேத்தி வழிபடப்பெற்ற, * நல்லகம்பனையெங்கள்பிரானைக்காணக்கண்ண டியேன்பெற்றவாறே. (ரு)

திங்கள்தங்கியசடையுடையானைத் தேவதேவனைச்செழுங்கடல் வளருஞ், சங்கவெண்குழைக்காதுடையானைச் சாமவேதம்பெரிது கப்பானை, மங்கைநங்கைமலைமகள்கண்டு மருவியேத்திவழிபடப் பெற்ற, கங்கையாளனைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன் பெற்றவாறே. (சா)

விண்ணவர்தொழுதேத்தநின்றானை வேதந்தான்விரித்தோதவல் லானை, நண்ணினார்க்கென்றுநல்லவன்றன்னை நாளுநாமுகக்கின்ற பிரானை, யெண்ணில்தொல்புகழாளுமைநங்கை யென்றுமேத்தி வழிபடப்பெற்ற, கண்ணுமூன்றுடைக்கம்பனெம்மானைக் காணக் கண்ணடியேன்பெற்றவாறே. (எ)

சிந்தித்தென்றுநினைந்தெழுவார்கள் சிந்தையிற்றிகழுஞ்சிவன் றன்னைப், பந்தித்தவினைப்பற்றறுப்பானைப் பாமலோடானைஞ்சுமா ட்டுகந்தானை, யந்தமில்புகழாளுமைநங்கை யாதரித்துவழிபடப் பெற்ற, கந்தவார்சடைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன் பெற்றவாறே. (அ)

வரங்கள்பெற்றுழல்வாளரக்கர்தம் வாலியபுரமூன்றெரித்தா னை, நிரம்பியதக்கன்றன்பெருவேள்விநிரந்தரஞ்செய்தநிற்கண்டக னைப், பரந்ததொல்புகழாளுமைநங்கைபரவியேத்திவழிபடப்பெ ற்ற, கரங்களெட்டுடைக்கம்பனெம்மானைக் காணக்கண்ணடியேன் பெற்றவாறே. (கூ)

எள்கலின்றியிமையவர்கோனையீசனைவழிபாடுசெய்வாள்போ லுள்ளத்துள்கியுகந்துமைநங்கை வழிபடச்சென்றுநின்றவாகண்டு வெள்ளங்காட்டிவெருட்டிட *வஞ்சிவெருவியோடித்தழுவவெளி

---

* உருத்திரராற்பூசிக்கப்பட்ட சிவலிங்கப்பெருமானுக்கு நல் கம்பனென்றுபெயர்.

காஞ்சிபுராணம்- திருவேகம்பப்படலத்தில் அஅ-வதுசெய்யுள்
உருத்திரனலத்தகுமொருமைபூண்டியர்
கருத்தொடும்வழிபடுநல்லகம்பனை

உமைநங்கையென்றுமேத்தி வழிபடப்பெற்ற நல்லகம்பனை யென்பது - ஏகாம்பரநாதனுக்கும் - நல்கம்பனுக்கும்-பேத மின்மைகாட்டுகின்றது.

* வஞ்சிவெருவி- அந்தஉமையயந்ததெனப்பொருள்கொள்க.

ப்பட்ட, *கள்ளக்கம்பனையெங்கள்பிரானைக்காணக்கண்ணடியேன் பெற்றவாறே. (௧௦)

பெற்றமேறுகந்தேறவல்லானைப்பெரியவெம்பெருமானென் றெப்போதுங், கற்றவர்பரவப்படுவானைக் காணக்கண்ணடியேன் பெற்றதென்று, கொற்றவன்கம்பன்கூத்தனெம்மானைக்குளிர்பொழிற்றிருநாவலாரூர, னற்றமிழிவையீரைந்தும்வல்லார்நன்னெறியுலகெய்துவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## ஆ பதிகம் - ௬௨.

---

## திருக்கோலக்கா - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

புற்றில்வாளரவார்த்தபிரானைப் பூதநாதனைப்பாதமேதொழுவார், பற்றுவான்றுணையெனக்கெளிவந்த பாவநாசனைமேவரியானை, முற்றலார்திரிபுரமொருமூன்றும் பொன்றவென்றிமால்வரையரியம்பாக், கொற்றவில்லங்கையேந்தியகோனைக் கோலக்காவினிற்கண்டுகொண்டேனே. (௧)

அங்கமாறும்மறையொருநான்கு மாயநம்பனைவேய்புரைதோளி, தங்குமாதிருவுருவுடையானைத்*தழல்மதிசடைமேற்புனைந்தானை, வெங்களுனையினீருரியானைவிண்ணுளாரொடுமண்ணுளார்பரசுங், கொங்குலாம்பொழிற்குரவெறிகமழுங் கோலக்காவினிற்கண்டுகொண்டேனே. (௨)

பாட்டகத்திசையாகிநின்றானைப்பத்தர்சித்தம்பரிவினியானை *நாட்டகத்தேவர்செய்கையுளானை நட்டமாடியைநம்பெருமானைக்காட்டகத்துறுபுலியுரியானைக் கண்ணோர்மூன்றுடையண்ணலையடியேன், கோட்டகப்புனலார்செழுங்கழனிக்கோலக்காவினிற்கண்டுகொண்டேனே. (௩)

---

விஷ்ணுவினாற்பூசிக்கப்பட்டசிவலிங்கப்பெருமானுக்குக் கள்ளகம்பனென்றுபெயர்.

மருள்புரிகருத்தினன்மாயனேத்தலுங்
கருதுமப்பெயரியகள்ளக்கம்பனை - ௮௭-வதுபாடல்.

ஈண்டுக்கூறப்பட்ட - நல்லக்கம்பன்- கள்ளக்கம்பனென்னும் இரண்டுமூர்த்திகளுமேயன்றி - பிரமனாற்பூசிக்கப்பட்ட வெள்ளக்கம்பன்-என்னும்ஒரு சிவலிங்கப்பெருமானுமுண்டு.

வாலியசிந்தையான்மலர்ப்பொகுட்டணை
மேலவன்வழிபடுவெள்ளக்கம்பனை - ௮௬ - வதுசெய்யுள்

* நாட்டகத்தேவனொன்பதனை - நாட்டுத்தேவர்கள்நாடரும்பொருளேயென்னுந்திருவாசகத்தானுமுணர்க.

ஆத்தமென்றெனையாளுகந்தானையமரர்நாதனைக்குமரனைப் பயந்த, வார்த்தயங்கியமுலைமடமானை வைத்துவான்மிசைக்கங்கை யைக்கரந்த, தீர்த்தனைச்சிவனைச்செழுந்தேனைத் தில்லையம்பலத்து ண்ணிறைந்தாடுங், கூத்தனைக்குருமாமணிதன்னைக்கோலக்காவினிற் கண்டுகொண்டேனே. (௪)

அன்றுவந்தெனையகலிடத்தவர்முனாளதாகவென்றுவணங்காட்டி நின்றுவெண்ணெய்நல்லூர்மிசையொளித்தநித்திலத்திரட்டொத்தி னைமுத்திக்,கொன்றினான்றனையும்பர்பிரானையுயரும்வல்லரணங்கெ டச்சீறுங், குன்றவில்லியைமெல்லியலுடனேகோலக்காவினிற்கண் டுகொண்டேனே. (௫)

காற்றுத்தீப்புனலாகிநின்றானைக் கடவுளைக்கொடுமால்விடை யானை, நீற்றுத்தியுருவாய்நிமிர்ந்தானைநிரம்புபல்கலையின்பொரு ளாலே, போற்றித்தன்கழல்தொழுமவனுயிரைப்போக்குவானுயி ர்நீக்கிடத்தாளாற், கூற்றைத்தீங்குசெய்குரைகழலானைக்கோலக் காவினிற்கண்டுகொண்டேனே. (௬)

அன்றயன்சிரமரிந்ததிற்பலிகொண்டமாருக்கருள்வெளிப்ப டுத்தானைத்,துன்றுபைங்கழலிற்சிலம்பார்த்தசோதியைச்சுடர்போ லொளியானை, மின்றயங்கியவிடைமடமங்கைமேவுமீசனைவாசமா முடிமேற், கொன்றையஞ்சடைக்குழகனையழகார்கோலக்காவினி ற்கண்டுகொண்டேனே. (௭)

நாளுமின்னிசையாற்றமிழ்பரப்புஞானசம்பந்தனுக்குலகவ ர்முன், தாளமீந்தவன்பாடலுக்கிரங்குந்தன்மையாளனையென்ம னக்கருத்தை,யாளும்பூதங்கள்பாடநின்றாடுமங்கணன்றனையெண்க ணமிறைஞ்சுங், கோளிலிப்பெருங்கோயிலுள்ளானைக்கோலக்கா வினிற்கண்டுகொண்டேனே. (௮)

அரக்கனாற்றலழித்தவன்பாட்டுக்கன்றிரங்கியவென்றியினானைப் பரக்கும்பாரளித்துண்டுகந்தவர்கள் பரவியும்பணிதற்கரியானைச், சிரக்கண்வாய்செவிமூக்குயர்காயமாகித்தீவினைதீர்த்தவெம்மானைக் குரக்கினங்குதிகொண்டுகள்வயல்சூழ் கோலக்காவினிற்கண்டுகொ ண்டேனே. (௯)

கோடரம்பயில்சடையுடைக்கரும்பைக் கோலக்காவுளெம் மானைமெய்ம்மானைப், பாடரங்குடியடியவர்விரும்பப்பயிலுநா வலாரூரன்வன்றொண்ட, னாடரங்கிமுன்னறியுமந்நெறியால்நவின் றபத்திவைவிளம்பியமாந்தர், காடரங்கெனநடநவின்றான்பாற்கதி யுமெய்துவர்பதியவர்க்கதுவே. (௧௦)



திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

## நம்பியென்றதிருப்பதிகம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

மெய்யைமுற்றப்பொடிப்பூசியோர்நம்பிவேதநான்கும்விரித்தோதியோர்நம்பி, கையிலோர்வெண்மழுவேந்தியோர்நம்பிகண்ணுமூன்றுடையாரொருநம்பி, செய்யநம்பிசிறுசெஞ்சடைநம்பி திரிபுரந்தீயெழச்செற்றதோர்வில்லா, லெய்தநம்பியென்னையாளுடைநம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (க)

திங்கணம்பிமுடிமேலடியார்பாற்சிறந்தநம்பிபிறந்தவுயிர்க்கெல்லா, மங்கணம்பியருண்மால்விசும்பாளு மமரர்நம்பிகுமரன்முதற்றேவர், தங்கணம்பிதவத்துக்கொருநம்பி தாதையென்றுனசரண்பணிந்தேத்து, மெங்கணம்பியென்னையாளுடைநம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (உ)

வருந்தவன்றுமதயானையுரித்தவழக்குநம்பிமுழக்குங்கடனஞ்சமருந்துநம்பியமரர்க்கமுதீந்த வருளெனம்பிபொருளால்வருநட்டம், புரிந்தநம்பிபுரிநூலுடைநம்பிபொழுதும்விண்ணும்முழுதும்பலவாகி, யிருந்தநம்பியென்னையாளுடைநம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (ங)

ஊறுநம்பியமுதாவுயிர்க்கெல்லாமுரியநம்பிதெரியம்மறையங்கங், கூறுநம்பிமுனிவர்க்கருங்கூற்றைக்குமைத்தநம்பிகுமையாப்புலனைந்துஞ், சீறுநம்பிதிருவெள்ளடைநம்பிசெங்கண்வெள்ளைச்செழுங்கோட்டெருதென்று, மேறுநம்பியென்னையாளுடைநம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (ச)

குற்றநம்பிகுறுகாரெயின்மூன்றைக் குலைத்தநம்பிசிலையாவரைகையிற், பற்றுநம்பிபரமானந்தவெள்ளம் பணிக்குநம்பியெனப்பாடுதலல்லால், மற்றுநம்பியுனக்கென்செயவல்லேன் மதியிலென்படுவெந்துயரெல்லா, மெற்றுநம்பியென்னையாளுடைநம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (ரு)

அரித்தநம்பியடிகைதொழுவார்நோயாண்டநம்பிமுன்னேயீண்டுலகங்க, டெரித்தநம்பியொருசேவுடைநம்பி சில்பலிக்கென்றகந்தோறுமெய்வேடந், தரித்தநம்பிசமயங்களினம்பிதக்கன்றன்வேள்விபுக்கன்றிமையோரை, யிரித்தநம்பியென்னையாளுடைநம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (சு)

பின்னைநம்பும்புயத்தானெடுமாலும் பிரமனும்மென்றிவர்நாடியுங்காணா, உன்னைநம்பியொருவர்க்கெய்தலாமே யுலகுநம்பியுரைசெய்யுமதல்லால், முன்னைநம்பிபின்னும்வார்சடைநம்பிமுழுதிவையித்தனையுந்தொகுத்தாண்ட, தென்னைநம்பியெம்பிரானாயநம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (௭)

சொல்லைநம்பிபொருளாய்நின்றநம்பி தோற்றமீறுமுதலாகியநம்பி, வல்லைநம்பியடியார்க்கருள்செய்ய வருந்திநம்பியுனக்காட்செயகில்லா, ரல்லனம்பிபடுகின்றதென்னடி யணங்கொருபாகம்வைத்தெண்கணம்போற்ற, இல்லைநம்பியிடுபிச்சைகொணம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (௮)

காண்டுநம்பிகழற்சேவடியென்றுங் கலந்துனைக்காதலித்தாட்செய்கிற்பாரை, யாண்டுநம்பியவர்முன்கதிசேரவருளுநம்பிகுருமாப்பிறைபாம்பைத், தீண்டுநம்பிசென்னியிற்கன்னிதங்கத்திருத்துநம்பிபொய்ச்சமண்பொருளாகி, யீண்டுநம்பியிமையோர்தொழுநம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (௯)

கரத்திநம்பிகசியாதவர்தம்மைக் கசிந்தவர்க்கிம்மையோடம்மையிலின்பம், பெருக்குநம்பிபெருக்கக்கருத்தா. * (௧௦)

திருச்சிற்றம்பலம்.

* மற்றதுசிதலமாயது.

---

## திருத்தினைநகர்- பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

நீறுதாங்கியதிருநுதலானை நெற்றிக்கண்ணனைநிரைவளைமடந்தை, கூறுதாங்கியகொள்கையினானைக் குற்றமில்லியைக்கற்றையஞ்சடைமே, லாறுதாங்கியவழகனையமரர்க்கரியசோதியைவரிவராலுகளுஞ், சேறுதாங்கியதிருத்தினைநகருட் சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே. (௧)

பிணிகொளாக்கைபிறப்பிறப்பென்னுமிதனைநீக்கியீசன்றிருவடியிணைக்காட், டுணியவேண்டிடிற்சொல்லுவன்கேணீயஞ்சனெஞ்சமேவஞ்சர்வாழ்மதின்மூன், றணிகொள்வெஞ்சிலையாலுகச்சிறமையன்வையகம்பரவிநின்றேத்துந், திணியும்வார்பொழிற்றிருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே. (௨)

வடிகொள்கண்ணிணைமடந்தையர்தம்பான் மயலதுற்றுவஞ்சனைக்கிடமாகி, முடியுமாகருதேலெருதேறுமூர்த்தியைமுதலாயபிரானை, யடிகளென்றடியார்தொழுதேத்துமப்பனொப்பிலாமுலையுமைகோனைச், செடிகொள்கான்மலிதிருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே. (௩)

பாவமேபுரிந்தகலிடந்தன்னிற் பலபகர்ந்தலமந்துயிர்வாழ்க்கைக், காவலென்றுழந்தயர்ந்துவீழாதேயண்ணறன்றிறமறிவினுற்கருதி, மாவினீருரியுடைபுனைந்தானைமணியைமைந்தனைவானவர்க்கமுதைத், தேவதேவனைத்திருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே. (௪)

ஒன்றலாவுயிர்வாழ்க்கையைநினைந்திட்டுடறளர்ந்தருமாநிதியியற்றி, யென்றும்வாழலாமெமக்கெனப்பேசுமிதுவும்பொய்யெனவேநினையுளமே, குன்றலாவியபுயமுடையானைக்கூத்தனைக்குலாவிக்குவலயத்தோர், சென்றெலாம்பயிறிருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே. (௫)

வேந்தராயுலகாண்டறம்புரிந்து வீற்றிருந்தவிவ்வுடலிதுதன்னைத், தேய்ந்திறந்துவெந்துயருழந்திடுமிப்பொக்கவாழ்வினைவிட்டிடுநெஞ்சே, பாந்தளங்கையிலாட்டுகந்தானைப்பரமனைக்கடற்சூர்தடிந்திட்ட, சேந்தர்தாதையைத்திருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே. (௬)

தன்னிலாசறுசித்தமுமின்றித்தவமுயன்றவமாயினபேசிப், பின்னலார்சடைகட்டியென்பணிந்தாற் பெரிதுநீந்துவதரிதுநிற்க, முன்னெலாமுழுமுதலென்றுவானோர் மூர்த்தியாகியமுதலவன்றன்னைச், செந்நெலார்வயற்றிருத்தினைநகருட் சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே. (௭)

பரிந்தசுற்றமுமற்றுவன்றுணையும் பலருங்கண்டழுதெழவுயிருடலைப், பிரிந்துபோமதுநிச்சயமறிந்தாற்பேதைவாழ்வெனும்பிணக்கினைத்தவிர்ந்து, கருந்தடங்கண்ணிபங்கனையுயிராக்காலகாலனைக்கடவுளைவிரும்பிச், செருந்திபொன்மலர்திருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே. (௮)

நமையெலாம்பலரிகழ்ந்துரைப்பதன்மு னன்மையொன்றிலாத்தேரர்புன்சமணாஞ், சமயமாகியதவத்தினாரவத்தத்தன்மைவிட்டொழிநன்மையைவேண்டி, லுமையோர்கூறனையேறுகந்தானை யும்பாரிடையெம்பெருமானைச், சிமையமார்பொழிற்றிருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே. (௯)

நீடுபேர்க்கையிற்பிறவியைப்பழித்து நீங்கலாமென்றுமனத்தினைத்தெருட்டிச், சேடுலாம்பொழிற்றிருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைத்திருவடியிணைதா, ளூடெலாம்புகழ்நாவலூராளிநம்பிவன்றொண்டனூரனுரைத்த, பாடலாந்தமிழ்பத்திவைவல்லார்முத்தியாவதுபரகதிப்பயனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருநின்றியூர் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

திருவும்வண்மையுந்திண்டிறலரசுஞ் சிலந்தியார்செய்தசெய்பணிகண்டு, மருவுகோச்செங்கணான்றனக்களித்தவார்த்தைகேட்டுநுன்மலரடியடைந்தேன், பெருகுபொன்னிவந்துந்துபன்மணியைப்பிள்ளைப்பல்கணம்பண்ணையுணண்ணித், தெருவுந்தெற்றியுமுற்றமும்பற்றித்திரட்டுந்தென்றிருநின்றியூரானே. (௧)

அணிகொளாடையம் பூணணிமாலை யமுதுசெய்*தமுதம்பெறுதண்டி, யிணைகொளேழெழுநூறிரும்பனுவலீன்றவன்றிருநாவினுக்கரையன்,கணைகொள்கண்ணப்பனென்றிவர்பெற்றகாதலின்னருளாதரித்தடைந்தேன், றிணைகொள்செந்தமிழ்பைங்கிளிதெரியுஞ்செல்வத்தென்றிருநின்றியூரானே. (௨)

மொய்த்தசீர்முந்நூற்றறுபதுவேலிமூன்றுநூறுவேதியரொடுநுனக்கு, வொத்தபொன்மணிக்கலசங்களேந்தி யோங்குநின்றியூரென்றுனக்களிப்பப், பத்திசெய்தவப்பரசிராமற்குப்பாதங்காட்டியநீதிகண்டடைந்தேன், சித்தர்வானவர்தானவர்வணங்குஞ்செல்வத்தென்றிருநின்றியூரானே. (௩)

இரவிநீள்சுடரெழுவதன்முன்னமெழுந்துதன்முலைக்கலசங்களேந்திச்,சுரபிபால்சொரிந்தாட்டிநின்பாதந்தொடர்ந்தவார்த்தைதிடம்படக்கேட்டுப், பரவியுள்கிவன்பாசத்தையறுத்துப்பரமவந்துநுன்பாதத்தையடைந்தே, னிரவிநித்திலமத்தகுசெம்பொனளிக்குந்தென்றிருநின்றியூரானே. (௪)

வந்தோரிந்திரன்வழிபடமகிழ்ந்துவானநாடுநீயாள்கெனவருளிச், சந்திமூன்றிலுந்தாபரநிறுத்திச் சகளிசெய்திறைஞ்சகத்தியர்தமக்குச், சிந்துமாமணியணிதிருப்பொதியிற் சேர்வுநல்கியசெல்வங்கண்டடைந்தேன்,செந்தண்மாமலர்த்திருமகண்மருவுஞ் செல்வத்தென்றிருநின்றியூரானே. (௫)

---

* அமுதம்பெறுதண்டி-மோக்ஷம்பெற்றதண்டி.

காதுபொத்தரைக்கின்னரருழுவை கடிக்கும்பன்னகம்பிடிப் பருஞ்சியங்,கோதின்மாதவர்குழுவுடன்கேட்பக்கோலவாளிழற்கீழறம்பகர,வேதஞ்செய்தவரெய்தியவின்பமியானுங்கேட்டுநின்னிணையடியடைந்தே, னீதிவேதியர்நிறைபுகழுலகினிலவுதென்றிருநின்றியூரானே. (௬)

கோடுநான்குடைக்குஞ்சரங்குலுங்கநலங்கொள்பாதநின்றேத்தியபொழுதே, பீடுவிண்மிசைப்பெருமையும்பெற்றபெற்றிகேட்டுநின்பொற்கழலடைந்தேன், பேடைமஞ்ஞையும்பிணைகளின்கன்றும்பிள்ளைக்கிள்ளையுமெனப்பிறைநுதலார்,நீடுமாடங்கண்மாளிகைதோறுநிலாவுதென்றிருநின்றியூரானே. (எ) (அ) (௯) (௧௦)
திருச்சிற்றம்பலம்.

---

## திருவாவடுதுறை- பண்- தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

மறையவனொருமாணிவந்தடைய வாரமாயவனருயிர்நிறுத்தக், கறைகொள்வேலுடைக்காலனைக்காலாற்கடந்தகாரணங்கண்டுகண்டடியேன், இறைவனெம்பெருமானென்றெப்போதுமேத்தியேத்திநின்றஞ்சலிசெய்து, னறைகொள்சேவடிக்கன்பொடுமடைந்தேனாவடுதுறையாதியெம்மானே. (௧)

தெருண்டவாயிடைநூல்கொண்டுசிலந்திசித்திரப்பந்தர்சிக்கெனவியற்றச், சுருண்டசெஞ்சடையாயதுதன்னைச் சோழனாக்கியதொடர்ச்சிகண்டடியேன், புரண்டுவீழ்ந்துநின்பொன்மலர்ப்பாதம்போற்றிபோற்றியென்றன்பொடுபுலம்பி, யருண்டென்மேல்வினைக்கஞ்சிவந்தடைந்தேனாவடுதுறையாதியெம்மானே. (௨)

திகழுமாலவனாயிரமலராலேத்துவானொருநீண்மலர்குறையப் புகழினாலவன்கண்ணிடந்திடலும் புரிந்துசக்கரங்கொடுத்தல்கண்டடியேன்,திகழுநின்றிருப்பாதங்கள்பரவித்தேவதேவநின்றிறம்பலபிதற்றி, யகழும்வல்வினைக்கஞ்சிவந்தடைந்தேனாவடுதுறையாதியெம்மானே. (௩)

வீரத்தாலொருவேடுவனாகிவிசைந்தோர்கேழலைத்துரந்துசென்றணைந்து, போரத்தான்விசயன்றனக்கன்பாய்ப் புரிந்துவாள்படைகொடுத்தல்கண்டடியேன்,வாரத்தாலுனநாமங்கள்பரவிவழிபட்டுன்றிறமேநினைந்துருகி,பார்வத்தோடுவந்தடியிணையடைந்தேனாவடுதுறையாதியெம்மானே. (௪)

ஒக்கமுப்புரமோங்கெரிதூவ வுன்னைமுன்னியமூவர்நின்சரணம், புக்குமற்றவர்பொன்னுலகாளப்புகழினாலருளீந்தமையறிந்து,

மிக்கநின்கழலேதொழுதரற்றிவேதியாவாதிமூர்த்தி நின்னரையில், அக்கணிந்தவெம்மானுனையடைந்தே னுவடுதுறையாதியெம்மானே. (௫) (௬) (௭) (௮) (௯) (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவலிவலம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

ஊனங்கைத்துயிர்ப்பாயுலகெல்லாமோங்காரத்துருவாகிநின்றானை, வானங்கைத்தவர்க்குமளப்பரியவள்ளலையடியார் கடம்முள்ளத், தேனங்கைத்தமுதாகியுள்ளூறுந் தேசனைத்திளைத்தற்கினியானை, மானங்கைத்தலத்தேந்தவல்லானை வலிவலந்தனில்வந்துகண்டேனே. (௧)

பல்லடியார்பணிக்குப்பரிவானைப்பாடியாடும் பத்தர்க்கன்புடையானைச், செல்லடியேநெருக்கித்திறம்பாதுசேர்ந்தவர்க்கேசித்திமுத்திசெய்வானை, நல்லடியார்மனத்தெய்ப்பினில்வைப்பைநானுறுகுறையறிந்தருள்புரிவானை, வல்லடியார்மனத்திச்சையுளானைவலிவலந்தனில்வந்துகண்டேனே. (௨)

ஆழியனயகன்றேயுயர்ந்தானை யாதியந்தம்பணிவார்க்கணியானைக், கூழையராகிப்பொய்யேகுடியோம்பிக்குழைந்துமெய்யடியார்குழுப்பெய்யும், வாழியர்க்கேவழுவாநெறிகாட்டிமறுபிறப்பென்னைமாசறுத்தானை, மாழையொண்கண்ணுமையைமகிழ்ந்தானை வலிவலந்தனில்வந்துகண்டேனே. (௩)

நாத்தானுந்திறமேதிறம்பாது நண்ணித்தமுதம்பொதிந்தூறும், ஆத்தானையடியேன்றனக்கென்று மளவிறந்தபலதேவர்கள்போற்றும், சோத்தானைச்சுடர்மூன்றிலுமொன்றித்துருவிமால்பிரமன்னறியாத, மாத்தானைமாத்தெனக்குவைத்தானைவலிவலந்தனில்வந்துகண்டேனே. (௪)

நல்லிசைஞானசம்பந்தனுநாவினுக்கரசரும்பாடிய நற்றமிழ்மாலை, சொல்லியவேசொல்லியேத்துகப்பானைத்தொண்டனேனறியாமையறிந்து, கல்லியன்மனத்தைக்கசிவித்துக்கழலடிகாட்டியென்களைகளையறுக்கும், வல்லியல்வானவர்வணங்கநின்றானைவலிவலந்தனில்வந்துகண்டேனே. (௫)

பாடுமாபாடிப்பணியுமாறறியேன் பனுவுமாபனவிப்பரவுமாறறியேன், தேடுமாதேடித்திருத்துமாறறியேன் செல்லுமாசெல்லச்செலுத்துமாறறியேன், கூடுமாறெங்கனமோவென்றுகூறக்குறித்துக்காட்டிக்கொணர்ந்தெனையாண்டு, வாடிநீவாளாவருந்தலென்பானைவலிவலத்தனில்வந்துகண்டேனே. (௬)

பந்தித்தவல்வினைப்பற்றறப்பிறவிபடுகெடற்பாரப்புத்தவிர்ப்பானைச், சந்தித்ததிறலார்பணிபூட்டித்தவத்தையீட்டியதம்மடியார்க்குச்,சிந்தித்தற்கெளிதாய்த்திருப்பாதஞ்சிவலோகந்திறந்தேத்தவல்லானை,வந்திப்பார்தம்மனத்தினுள்ளானைவலிவலந்தனில்வந்துகண்டேனே. (எ)

எவ்வவர்தேவரிருடிகண்மன்னரெண்ணிறந்தார்கண்மற்றெங்குநின்றேத்த, அவ்வவர்வேண்டியதேயருள்செய்துவடைந்தவர்க்கேயிடமாகிநின்றானை, யிவ்வவர்கருணையெங்கற்பகக்கடலையெம்பெருமானருளாயென்றபின்னை, வவ்வியென்னாவிமனங்கலந்தானைவலிவலந்தனில்வந்துகண்டேனே. (அ)

திரியுமுப்புரஞ்செற்றதுங்குற்றத்திறலரக்கனைச்செறுத்ததுமற்றைப், பெரியநஞ்சமுதுண்டதுமுற்றும்பின்னையாய்முன்னமேமுளைத்தானை, யரியநான்மறையந்தணரோவாதடிபணிந்தறிதற்கரியானை, வளையின்பாவைமணாளனெம்மானைவலிவலந்தனில்வந்துகண்டேனே. (கூ)

ஏன்றவந்தணன்றலையினையறுத்துநிறைக்கமாலுதிரத்தினையேற்றுத், தோன்றுதோண்மிசைக்களேபரந்தன்னைச்சுமந்தமாவிரதத்தகங்காளன், சான்றுகாட்டுதற்கரியவனெளியவன்றன்னைத்தன்னிலாமனத்தார்க்கு,மான்றுசென்றணையாதவன்றன்னை வலிவலந்தனில்வந்துகண்டேனே. (க0)

கலிவலங்கெடவாரழலோம்புங்கற்றநான்மறைமுற்றனலோம்பும்,வலிவலந்தனில்வந்துகண்டடியேன்மன்னுநாவலாரூரன்வன்றொண்டன், ஞெலிகொளின்னிசைச்செந்தமிழ்பத்து முள்ளத்தாலுகந்தேத்தவல்லார்போய்,மெலிவில்வானுலகத்தவரேத்தவிரும்பிவிண்ணுலகெய்துவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம் - கூஅ.

---

## திருநள்ளாறு - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

செம்பொன்மேனிவெண்ணீறணிவானைக்கரியகண்டனைமாலயன்காணாச், சம்புவைத்தழலங்கையினானைச்சாமவேதனைத்தன்னொப்பிலானைக், கும்பமாகரியின்னுரியானைக்கோவின்மேல்வருங்கோவினைநங்கள்,நம்பனைநள்ளாறனையமுதைநாயினேன்மறந்தென்னினைக்கேனே. (க)

விரைசெய்மாமலர்க்கொன்றையினானைவேதகீதனைமிகச்சிறந்துருகிப், பரசுவார்வினைப்பற்றறுப்பானைப்பாலொடானஞ்சுமாடவல்லானைக்,குரைகடல்வரையேழுலகுடையகோனைஞானக்கொழுந்தினைக்கொல்லை, நரைவிடையுடைநள்ளாறனையமுதை நாயினேன்மறந்தென்னினைக்கேனே. (௨)

பூவில்வாசத்தைப் பொன்னினைமணியைப் புவியைக் காற்றினைப் புனலனல்வெளியைச், சேவின்மேல்வருஞ் செல்வனைச் சிவனைத் தேவதேவனைத்தித்திக்குந்தேனைக், காவியங்கண்ணி பங்கனைக் கங்கைச்சடையனைக்காமரத்திசைபாட, நாவிலூறுநள்ளாறனையமுதைநாயினேன்மறந்தென்னினைக்கேனே. (௩)

தஞ்சமென்றுதன்றாளதுவடைந்த பாலன்மேல்வந்தகாலனையுருள, நெஞ்சிலோருதைகொண்டபிரானை நினைப்பவர்மனநீங்ககில்லானை, விஞ்சைவானவர்தானவர்கூடிக்கடைந்தவேலையுண்மிக்கெழுந்தெரிய, நஞ்சமுண்டநள்ளாறனையமுதை நாயினேன்மறந்தென்னினைக்கேனே. (௪)

மங்கைபங்கனைமாசிலாமணியைவானநாடனையேனமோடன்ன,மெங்குநாடியுங்காண்பரியானையேழையேற்கெளிவந்தபிரானையங்கநான்மறையாணிறைகின்றவந்தணாளரடியதுபோற்று, நங்கள்கோனைநள்ளாறனையமுதை நாயினேன்மறந்தென்னினைக்கேனே.

கற்பகத்தினைக்கனகமால்வரையைக் காமகோபனைக்கண்ணுதலானைச், சொற்பதப்பொருளிருளறுத்தருளுந் தூயசோதியைவெண்ணெய்நல்லூரி, லற்புதப்பழவாவணங்காட்டி யடியனாவென்னையாளதுகொண்ட, நற்பதத்தைநள்ளாறனையமுதைநாயினேன்மறந்தென்னினைக்கேனே. (௬)

மறவனையன்றுபன்றிப்பின்சென்ற மாயனைநால்வர்க்காலின்கீழுரைத்த, அறவனையமரர்க்கரியானையமரர்சேனைக்குநாயகனை, குறவர்மங்கைதன்கேள்வனைப்பெற்ற கோனைநான்செய்தகுற்றங்கள்பொறுக்கு, நறைவிரியுநள்ளாறனையமுதைநாயினேன்மறந்தென்னினைக்கேனே. (௭)

மாதினுக்குடம்பிடங்கொடுத்தானை மணியினைப்பணிவார்வினைகெடுக்கும், வேதனைவேதவேள்வியர்வணங்கும்விமலனையடியேற்கெளிவந்த, தூதனைத்தன்னைத்தோழமையருளித்தொண்டனேன்செய்த துரிசுகள்பொறுக்கு, நாதனைநள்ளாறனையமுதைநாயினேன்மறந்தென்னினைக்கேனே. (௮)

## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

இலங்கைவேந்தனெழிறிகழ்கயிலை யெடுப்பவாங்கிமவான்மக
ளஞ்சத், துலங்குநீண்முடியொருபதுந்தோள்களிருபதுந்நெரித்தி
ன்னிசைகேட்டு, வலங்கைவாளொடுநாமமுங்கொடுத்த வள்ளலைப்
பிள்ளைமாமதிச்சடைமே, னலங்கொள்சோதிநள்ளாறனையமுதை
நாயினேன்மறந்தென்னினைக்கேனே. (௯)

செறிந்தசோலைகள்சூழ்ந்தநள்ளாற்றெஞ் சிவனைநாவலூர்ச்சி
ங்கடிதந்தை, மறந்துநான்மற்றுநினைப்பதேதென்று வனப்பகை
யப்பனூரன்வன்றொண்டன், சிறந்தமாலைகொடைஞ்சிறுடைஞ்
சுஞ் சிந்தையுள்ளுருகிச்செப்பவல்லார்க், கிறந்துபோக்கில்லைவர
வில்லையாகியின்பவெள்ளத்துளிருப்பர்களினிதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவட்முல்லைவாயில் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

திருவுமெய்ப்பொருளுஞ்செல்வமுமெனக்குன் சீருடைக்கழல்க
ளென்றெண்ணி, யொருவரைமதியாதுறுமைகள்செய்துமுடியுமு
றைப்பனுய்த்திரிவேன், முருகமர்சோலைசூழ்திருமுல்லைவாயிலாய்
வாயினாலுன்னைப்,பரவிடுமடியேன்படுதுயர்களையாய்பாசுபதாபர
[ஞ்சுடரே.(௧)

கூடியவிலயஞ்சதிபிழையாமைக் கொடியிடையுமையவள்காண
வாடியவழகாவருமறைப்பொருளே யங்கணாவெங்குற்றாயென்று
தேடியவானோர்சேர்திருமுல்லை வாயிலாய்திருப்புகழ்விருப்பாற்
பாடியவடியேன்படுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. (௨)

விண்பணிந்தேத்தும்வேதியர்மாதர் வெருவிடவேழமொன்றுரித்
தாய்,செண்பகச்சோலைசூழ்திருமுல்லைவாயிலாய்தேவர்தம்மரசே
தண்பொழிலொற்றிமாநகருடையாய்சங்கிலிக்காவென்கண்கொண்
ட, பண்பநின்னடியேன்படுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே.

பொன்னலங்கழனிப்புதுவிரைமருவிப் பொறிவரிவண்டிசைபாட
அந்நலங்கமலத்தவிசின்மேலுறங்குமலவன்வந்துலவிடவள்ளற்
செந்நலங்கழனிசூழ்திருமுல்லைவாயிலாய்திருப்புகழ்விருப்பாற்
பன்னலந்தமிழாற்பாடுவேற்கருளாய்பாசுபதாபரஞ்சுடரே. (௪)

சந்தனவேருங்காரகிற்குறடுந்தண்மயிற்பீலியுங்கரியின் [த்தி
றந்தமுந்தாளக்குலைகளும்பவளக் கொடிகளுஞ்சுமந்துகொண்டு

வத்திழிபாலிவடகரைமுல்லைவாயிலாய்மாசிலாமணியே
பத்தனைகெடுத்தென்படுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. (௫)

மற்றுநான்பெற்றதார்பெறவல்லார்வள்ளலேகள்ளமேபேசிக்குற்றமேசெயினுங்குணமெனக்கொள்ளுங் கொள்கையான்மிகைபல செய்தேன், செற்றுமீதோடுந்திரிபுரமெரித்த திருமுல்லைவாயிலாயடியேன், பற்றிலேனுற்றபடுதுயர்களையாய் பாசுபதாபரஞ்சுடரே. (௬)

மணிகெழுசெவ்வாய்வெண்ணகைக்கரியவார்குழன்மாமயிற்சாயலணிகெழுகொங்கையங்கயற்கண்ணாரருநடமாடலறாத
திணிபொழிறழுவுதிருமுல்லைவாயிற் செல்வனேயெல்லியும்பகலும்
பணியதுசெய்வேன்படுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. (௭)

நம்பனேயன்றுவெண்ணெய்நல்லூரினாயினேன்றன்னையாட்கொண்ட, சம்புவேயும்பரார்தொழுதேத்துந்தடங்கடனஞ்சுண்டகண்ட, செம்பொன்மாளிகைசூழ்திருமுல்லைவாயிற் றேடியான்றிரிதர்வேன்கண்ட, பைம்பொனேயடியேன்படுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. (௮)

மட்டுலாமலர்கொண்டடியிணைவணங்கு மாணிதன்மேன்மதியாதே, கட்டுவான்வந்தகாலனைமாளக்காலினாலாருயிர்செகுத்த, சிட்டனேசெல்வத்திருமுல்லைவாயிற்செல்வனேசெழுமறைபகர்ந்த, பட்டனேயடியேன்படுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. (௯)

சொல்லரும்புகழான்றொண்டைமான்களிற்றைச் சூழ்கொடிமுல்லையாற்கட்டிட், டெல்லையிலின்பமவன்பெறவெளிப்பட்டருளியவிறைவனேயென்று, நல்லவர்பரவுந்திருமுல்லைவாயினாதனைநாவிடையேறி, பல்கலைப்பொருளேபடுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. (௰)

விரைதருமலர்மேலயனொடுமாலும்வெருவிடநீண்டவெம்மானைத் திரைதருபுனல்சூழ்திருமுல்லைவாயிற்செல்வனைநாவலாரூரனுரைதருமாலையோரைஞ்சினோடைஞ்சு முள்குளிர்ந்தேத்தவல்லார்கள், வரைதிரையேழ்ப்புநடலையுமின்றி நண்ணுவர்விண்ணவர்க்கரசே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - மாசிலாமணியீசுவரர்.

தேவியார்பெயர் - கொடியிடையம்மை.

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

## திருவாவடுதுறை-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

கங்கைவார்சடையாய்கணநாதா காலகாலனேகாமனுக்கனலே,
பொங்குமாகடல்விடமிடற்றனேபூதநாதனேபுண்ணியாபுனிதா,
செங்கண்மால்விடையாய்தெளிதேனே தீர்த்தனேதிருவாவடுது
றையு, ளங்கணாவெனையஞ்சலென்றருளா யாரெனக்குறவமரர்க
ளேறே. (௧)
மண்ணின்மேன்மயங்கிக்கிடப்பேனைவலியவந்தெனையாண்டுகொ
ண்டானே,கண்ணிலேனுடம்பில்லடுநோயாற்கருத்தழிந்துனக்கே
பொறையானேன்,தெண்ணிலாவெறிக்குஞ்சடையானேதேவனே
திருவாவடுதுறையு, ளண்ணலேயெனையஞ்சலென்றருளா யாரெ
னக்குறவமரர்களேறே. (௨)

ஒப்பிலாமுலையாளொருபாகாவுத்தமாமத்தமார்தருசடையாய்
முப்புரங்களைத்தீவளைத்தங்கேமூவருக்கருள்செய்யவல்லானே
செப்பவாணிழற்கீழிருந்தருளுஞ்செல்வனேதிருவாவடுதுறையு
ளப்பனேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே.

கொதியினால்வருகாளிதன்கோபங் குறையவாடியகூத்துடையா
னே,மதியிலேனுடம்பில்லடுநோயான்மயங்கினேன்மணியேமண
வாளா, விதியினாலிமையோர்தொழுதேத்தும்விகிர்தனேதிருவாவ
டுதுறையு,ளதிபனேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்
களேறே. (௪)
வந்தவாளரக்கன்வலிதொலைத்து வாழுநாள்கொடுத்தாய்வழிமு
தலே, வெந்தவெண்பொடிபூசவல்லானே வேடனாய்விசயற்கருள்
புரிந்த, விந்துசேகரனேயிமையோர்சீசனேதிருவாவடுதுறையு,
ளந்தணாவெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே(௫)

குறைவிலாநிறைவேகுணக்குன்றேகூத்தனேகுழைக்காதுடையா
னே,உறவிலேனுனையன்றிமற்றடியேனொருபிழைபொறுத்தாலிழி
வுண்டோ, சிறைவண்டார்பொழில்சூழ்திருவாரூர்ச்செம்பொனே
திருவாவடுதுறையு, ளறவனேயெனையஞ்சலென்றருளாயாரெனக்
குறவமரர்களேறே. (௬)

வெய்யமாகரியீருரியானேவேங்கையாடையினாய்விதிமுதலே,
மெய்யனேயடலாழியன்றரிதான் வேண்டநீகொடுத்தருள்புரிவிகி
ர்தா, செய்யமேனியனேதிகழொளியேசெங்கணாதிருவாவடுதுறை
யு,ளையனேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே.

கோதிலாவமுதேயருள்பெருகு கோலமேயிமையோர்தொழு கோவே, பாதிமாதொருகூறுடையானேபசுபதீபரமாபரமேட்டீ, தீதிலாமலையேதிருவருள்சேர்சேவகாதிருவாவடுதுறையு, ளாதியேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (அ)

வானநாடனேவழித்துணைமருந்தேமாசிலாமணியேமறைப்பொருளே, யேனமாவெயிறாமையுமென்புமீடுதாங்கியமார்புடையானே, தேனெய்பாலுயிராட்டுகந்தானேதேவனேதிருவாவடுதுறையு, ளானையேயெனையஞ்சலென்றருளா யாரெனக்குறவமரர்களேறே.

வெண்டலைப்பிறைகொன்றையுமரவும் வேரிமத்தமும்விரவிமுண்டித்த, விண்டைமாமலர்ச்செஞ்சடையானையீசனைத்திருவாவடுதுறையு, ளண்டவாணனைச்சிங்கடியப்பனணுக்கவன்றொண்டனூர்வத்தாளுரைத்த, தண்டமிழ்மலர்பத்தும்வல்லார்கள்சாதலும்பிறப்பும்மறுப்பாரே. (ய)

திருச்சிற்றம்பலம்.

---

## திருமறைக்காடு-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

யாழைப்பழித்தன்னமொழிமங்கையொருபங்கன்
பேழைச்சடைமுடிமேற்பிறைவைத்தானிடம்பேணிற்
றாழைப்பொழிலூடேசென்றுபூழைத்தலைநுழைந்து
வாழைக்கனிகூழைக்குரங்குண்ணுமறைக்காடே. (க)

சிகரத்திடையிளவெண்பிறைவைத்தானிடந்தெரியின்
முகரத்திடைமுத்தின்னொளிபவளத்திரளோதத்
தகரத்திடைதாழைத்திரணுழற்றிரணீழன்
மகரத்தொடுசுறவங்கொணர்ந்தெற்றும்மறைக்காடே. (உ)

அங்கங்களுமறைநான்குடன்விரித்தானிடமறிந்தோந்
தெங்கங்களுநெடும்பெண்ணையும்பழம்வீழ்மணற்படைப்பைச்
சங்கங்களுமிலங்கிப்பியும்வலம்புரிகளுமிடறி
வங்கங்களுமுயர்கூம்பொடுவணங்கும்மறைக்காடே. (௩)

நரைவிரவியமயிர்தன்னொடுபஞ்சவடிமார்ப
னுரைவிரவியவுத்தமனிடமுணரல்லுறுமனமே
குரைவிரவியகுலைசேகரக்கொண்டற்றலைவிண்ட
வரைபுரைவனதிரைபொருதிழிந்தெற்றும்மறைக்காடே. (௪)

சங்கைப்படநினையாதெழுநெஞ்சேதொழுதேத்தக்
கங்கைச்சடைமுடியுடையவர்க்கிடமாவதுபரவை
யங்கைக்கடலருமாமணியுந்திக்கரைக்கேற்ற
வங்கத்தொடுசுறவங்கொணர்ந்தெற்றும்மறைக்காடே. (௫)

அடல்விடையினன்மழுவாளினனலராலணிகொன்றைப்
படருஞ்சடைமுடியுடையவர்க்கிடமாவதுபரவைக்
கடலிடையிடைகழியருகினிற்கடிநாறுதண்கைதை
மடலிடையிடைவெண்குருகெழுமணிநீர்மறைக்காடே. (௬)

முளைவளரிளமதியுடையவர்முன்செய்தவல்வினைகள்
களைகளைந்தெனையாளல்லுறுகண்டன்னிடஞ்செந்நெல்
வளைவிளைவயற்கயல்பாய்தருகுணவார்மணற்கடல்வாய்
வளைவளையொடுசலஞ்சலங்கொணர்ந்தெற்றும்மறைக்காடே. (௭)

நலம்பெரியனசுரும்பார்ந்தனநங்கோனிடமறிந்தோங்
கலம்பெரியனசாருங்கடற்கரைபொருதிழிகங்கைச்
சலம்புரிசடைமுடியுடையவர்க்கிடமாவதுபரவை
வலம்புரியொடுசலஞ்சலங்கொணர்ந்தெற்றும்மறைக்காடே. (௮)

குண்டாடியுஞ்சமணாடியுங்குற்றுடுக்கையர்தாமுங்
கண்டார்கண்டகாரணம்மவைகருதாதுகைதொழுமி
னெண்டோளினன்முக்கண்ணினனேழிசையினனறுகால்
வண்டாடுதண்பொழில்சூழ்ந்தெழுமணிநீர்மறைக்காடே. (௯)

பாரூர்பலபுடைசூழ்வளவயனாவலர்வேந்தன்
வாரூர்வனமுலையாளுமைபங்கன்மறைக்காட்டை
யாரூரனதமிழ்மாலைகள்பாடும்மடித்தொண்டர்
நீரூர்தருநிலனோடுயர்புகழாகுவர்தாமே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவலம்புரம்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

எனக்கினித்தினைத்தனைப்புகலிடமறிந்தேன்
பனைக்கனிப்பழம்படும்பரவையின்கரைமே
லெனக்கினியவன்றமர்க்கினியவனெழுமையு
மனக்கினியவன்றனதிடம்வலம்புரமே. (௧)

புரமவையெரிதரவளைந்தவில்லினனவன்
மரவுரிபுலியதளணாமிசைமருவின
னரவுரியிரந்தவனிரந்துணவிரும்பிநின்
றிரவெரியாடிதனிடம்வலம்புரமே. (௨)

நீறணிமேனியனெருப்புமிழரவினன்
கூறணிகொடுமழுவேந்தியோர்கையின
னாறணியவிர்சடையழல்வளர்மழலைவெள்
ளேறணியடிகடமிடம்வலம்புரமே. (௩)

கொங்கணைசுரும்புணநெருங்கியகுளிரிளந்
தெங்கொடுபனைபழம்படுமிடந்தேவர்க
டங்கிடுமிடந்தடங்கடற்றிரைபுடைதர
வெங்களதடிகணலிடம்வலம்புரமே. (௪)

கொடுமழுவிரகினன்கொலைமலிசிலையின
னெடுமதில்சிறுமையினிரவவல்லவனிடம்
படுமணிமுத்தமும்பவளமுமிகச்சுமந்
திடுமணலடைகரையிடம்வலம்புரமே. (௫)

கருங்கடக்களிற்றுரிக்கடவுளதிடங்கயல்
நெருங்கியநெடும்பெணையடும்பொடுவிரவிய
மருங்கொடுவலம்புரிசலஞ்சலமணம்புணர்ந்
திருங்கடலணைகரையிடம்வலம்புரமே. (௬)

நரிபுரிகாடரங்காநடமாடுவர்
வரிபுரிபாடநின்றாடுமெம்மானிடம்
புரிசுரிவரிகுழலரிவையோர்பான்மகிழ்ந்
தெரியெரியாடிதனிடம்வலம்புரமே. (௭)

பாறணிமுடைதலைகலனெனமருவிய
நீறணிதிமிர்சடைமுடியினனிலவிய
மாறணிவருதிரைவயலணிபொழிலது
வேறுடையடிகடமிடம்வலம்புரமே. (௮)

சடசடவிடுபெண்பழம்படுமிடவகை
படவடகத்தொடுபலிகலந்துலவிய
கடைகடைபலிதிரிகபாலிதனிடமது
விடிகளாமணலடையிடம்வலம்புரமே. (௯)

குண்டிகைப்படப்பினில்விடக்கினையொழித்தவர்
கண்டவர்கண்டடிவீழ்ந்தவர்களைகழ

றண்டுடைத்தண்டிதனின்முடையரவுட
னெண்டிசைக்கொருசுடரிடம்வலம்புரமே (௧௦)

வருங்கலமும்பலபேணுதல்கருங்கட
லிருங்குலப்பிறப்பர்தமிடம்வலம்புரத்தினை
யருங்குலத்தருந்தமிழூரன்வன்றொண்டன்சொற்
பெருங்குலத்தவரொடுபிதற்றுதல்பெருமையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம்- ௭௨.

---

## திருவாரூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கரையுங்கடலுமலையுங்காலையுமாலையுமெல்லா
முரையில்விரவிவருவானொருவனுருத்திரலோகன்
வரையின்மடமகள்கேள்வன்வானவர்தானவர்க்கெல்லா
மரையனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (௧)

தனியனென்றெள்கியறியேன்றம்மைப்பெரிதுமுகப்பன்
முனிபவர்தம்மைமுனிவன்முகம்பலபேசிமொழியேன்
கனிகள்பலவுடைச்சோலைக்காய்க்குலையீன்றகமுகி
னினியனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (௨)

சொல்லிற்குலாவன்றிச் சொல்லேன்றொடர்ந்தவர்க்குந் துணையல்
கல்லில்வலியமனத்தேன்கற்றபெரும்புலவாண [லேன்
ரல்லற்பெரிதுமறுப்பானருமறையாறங்கமோது
மெல்லையிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (௩)

நெறியுமறிவுஞ்செறிவுநீதியுநான்மிகப்பொல்லேன்
மிறையுந்தறியுமுகப்பன்வேண்டிற்றுச்செய்துதிரிவன்
பிறையுமரவும்புனலும்பிறங்கியசெஞ்சடைவைத்த
விறைவனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (௪)

நீதியிலொன்றும்வழுவேனிர்க்கண்டகஞ்செய்துவாழ்வேன்
வேதியர்தம்மைவெருளேன்வெருண்டவர்க்குந்துணையாகேன்
சோதியிற்சோதியெம்மானைச்சுண்ணவெண்ணீறணிந்திட்ட
வாதியிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (௫)

அருத்தம்பெரிதுமுகப்பனலவலையேனலந்தார்க
ளொருத்தர்க்குதவியேனல்லேனுற்றவர்க்குந்துணையல்லேன்
பொருத்தமேலொன்றுமிலாதேன்புற்றெடுத்திட்டிடங்கொண்ட
வருத்தனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (௬)

சந்தம்பலவறுக்கில்லேன்சார்ந்தவர்தம்மடிச்சாரேன்
முந்திப்பொருவிடையேறிமூவுலகுந்திரிவானே
கந்தங்கமழ்கொன்றைமாலைக்கண்ணியன்விண்ணவரேத்து
மெந்தையிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (௭)

நெண்டிக்கொண்டேயுங்கிலாப்பனிச்சயமேயிதுதிண்ண
மிண்டர்க்குமிண்டலாற்பேசேன்மெய்ப்பொருளன்றியுணரேன்
பண்டங்கிலங்கையர்கோனைப்பருவரைக்கீழடர்த்திட்ட
வண்டனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (௮)

நமர்பிறரென்பதறியேனான்கண்டதேகண்டுவாழ்வேன்
றமரம்பெரிதுமுகப்பன்றக்கவாறொன்றுமிலாதேன்
குமரன்றிருமால்பிரமன்கூடியதேவர்வணங்கு
மமரனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (௯)

ஆசைபலவறுக்கில்லேனாரையும் * அன்றியுரைப்பேன்
பேசிற்சழக்கலாற்பேசேன்பிழைப்புடையேன்மனந்தன்னா
லோசைபெரிதுமுகப்பேனொலிகடனஞ்சமுதுண்ட
வீசனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (௰)

எந்தையிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோவென்று
சிந்தைசெயுந்திறம்வல்லான்றிருமருவுந்திரடோளான்
மந்தம்முழவம்மியம்பும்வளவயனாவலாரூரன்
சந்தமிசையொடும்வல்லார்தாம்புகழெய்துவர்தாமே. (௰௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருத்துருத்தியுந்-திருவேள்விக்குடியும்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னுமாமேகங்கள்பொழிந்திழிந்தருவி வெடிபடக்கரை
யொடுந்திரைகொணர்ந்தெற்று,மன்னுமாங்காவிரியகன்கரையுறை
வாரடியிணைதொழுதெழுமன்பராமடியார், சொன்னவாறறிவார்
துருத்தியார்வேள்விக்குடியுளாரடிகளைச்செடியனேனாயே,னென்
னைநான்மறக்குமாறெம்பெருமானையென்னுடம்படும்பிணியிடர்
கெடுத்தானை. (௧)

---

* அன்றி-பகைத்து.

கூடுமாறுள்ளனகூடியுங்கோத்துங் கொய்புனவேனலோடைவனஞ்சிதறி, மாடுமாகோங்கமேமருதமேபொருதுமலையெனக்குலைகளைமறிக்குமாறுந்தி, யோடுமாகாவிரித்துருத்தியார் வேள்விக்குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்,பாடுமாறறிகிலேனெம்பெருமானைப் பழவினையுள்ளனபற்றறுத்தானை. (௨)

கொல்லுமாலியானையின்கொம்பொடுவம்பார் கொழுங்கனிச்செழுப்பயன்கொண்டுகூட்டெய்திப், புல்கியுந்தாழ்ந்தும்போந்துதவஞ்செய்யும்போகரும்யோகரும்புலரிவாய்மூழ்கச், செல்லுமாகாவிரித்துருத்தியார்வேள்விக்குடியுளாரடிகளைச்செடியனேனாயேன், சொல்லுமாறறிகிலேனெம்பெருமானைத்தொடர்ந்தடுங்கடுப்பிணித்தொடர்வறுத்தானை. (௩)

பொறியுமாசந்தனத்துண்டமோடகிலும் பொழிந்திழிந்தருவிகள்புன்புலங்கவரக், கறியுமாமிளகொடுகதலியுமுந்திக் கடலுறவிளைப்பதே கருதித்தன்கைபோ, யெறியுமாகாவிரித்துருத்தியார்வேள்விக் குடியுளாரடிகளைச்செடியனேனாயே, னறியுமாறறிகிலேனெம்பெருமானையருவினையுள்ளனவாசறுத்தானை. (௪)

பொழிந்திழிமும் மதக்களிற்றினமருப்பும் பொன்மலர்வேங்கையினன்மலருந்தி, யிழிந்திழிந்தருவிகள்கடும்புனலீண்டியெண்டிசையோர்களுமாடவந்திங்கே, சுழிந்திழிகாவிரித் துருத்தியார்வேள்விக்குடியுளாரடிகளைச் செடியனேனாயே, னெழுந்திலேன்பிதற்றுமாறெம்பெருமானையுற்றநோயிற்றையேயுறவொழித்தானை.

புகழுமாசந்தனத்துண்டமோடகிலும் பொன்மணிவரன்றியுநன்மலருந்தி, யகழுமாவருங்கரைவளம்படப்பெருகியாடுவார் பாவந்தீர்த்தஞ்சனமலம்பித், திகழுமாகாவிரித்துருத்தியார்வேள்விக்குடியுளாரடிகளைச்செடியனேனாயே,னிகழுமாறறிகிலேனெம்பெருமானையிழித்தநோயிம்மையேயொழிக்கவல்லானை. (௬)

வரையின்மாங்கனியொடுவாழையின்கனியும்வருடியும்வணக்கியுமராமரம்பொருது,கரையுமாகருங்கடல்காண்பதே கருத்தாய்க்காம்பிலிசுமந்தொளிர்நித்திலங்கைபோய்,விரையுமாகாவிரித்துருத்தியார்வேள்விக்குடியுளாரடிகளைச்செடியனேனாயே,னுரையுமாறறிகிலேனெம்பெருமானையுலகறிபழவினையறவொழித்தானை. (௭)

ஊருமாதேசமே மனமுகந்துள்ளிப் புள்ளினம்பல படிந்தொண்கரையுகளக், காருமாகருங்கடல் காண்பதேகருத்தாய்க்கவ

ரிமாமயிர்சுமந்தொண்பளிங்கிடறித், தேருமாகாவிரித்திருத்தியார்வேள்விக்குடியுளாரடிகளைச்செடியனேனுமே, ருருமாறிகிலே னெம்பெருமானையம்மைநோயிம்மையேயாசறுத்தானே. (அ)

புலங்களைவளம்படப் போக்கறப்பெருகிப் பொன்களேசுமந்தெங்கும்பூசல்செய்தார்ப்ப, விலங்குமாமுத்திரேடினமணியிடறி யிருகரைப்பெருமரம்பீழ்ந்துகொண்டெற்றிக், கலங்குமாகாவிரித்திருத்தியார்வேள்விக்குடியுளாரடிகளைச்செடியனேனுமேயன் விலங்குமாறறிகிலே னெம்பெருமானைமேலைநோயிம்மையே வீடுவித்தானே. (௯)

மங்கையோர்கூறுகந்தேறுகந்தேறிமாறலார்திரிபுரம் நீறெழச்செற்ற,வங்கையான்கழலடியன்றிமற்றறியா னடியவர்க்கடியவன்றொழுவனாரூரன், கங்கையார்காவிரித்திருத்தியார்வேள்விக்குடியுளாரடிகளைச்சேர்த்தியபாட, றங்கையாற்றொழுதுதந் நாவின்மேற்கொள்வார்தவநெறிசென்றமருலகமாள்பவரே. (௰)

திருச்சிற்றம்பலம்

## திருவானைக்கா- பண்- காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மறைகளாயினநான்குமற்றுளபொருள்களுமெல்லாத்
துறையுந்தோத்திரத்திறையுந்தொன்மையுநன்மையுமாய
வறையும்பூம்புனலானைக்காவுடையாதியைநாளு
மிறைவனென்றடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. (க)

வங்கமேவியவேலைநஞ்செழவஞ்சர்கள்கூடித்
தங்கண்மேலடராமையுண்ணெனவுண்டிருள்கண்ட
னங்கமோதியவானைக்காவுடையாதியைநாளு
மெங்களீசனென்பார்களெம்மையுமாளுடையாரே. (உ)

நிலவெண்டிறைகொண்டறைநேரிழைமங்கையோர்திங்கள்
சாலவாளரவங்கடங்கியசெஞ்சடையெந்தை
யாலநீழலுளானைக்காவுடையாதியைநாளும்
ஏலுமாறுவல்லார்களெம்மையுமாளுடையாரே. (ங)

தந்தையாயுலகுக்கோர்தத்துவன்மெய்த்தவத்தோர்க்குப்
பந்தமாயினபெருமான்பரிசுடையவர்திருவடிக
ளந்தண்பூம்புனலானைக்காவுடையாதியைநாளு
மெந்தையென்றடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. (௪)

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

கணைசெந்தீயரவந்நாண்கல்வளையுஞ்சிலையாகத்
துணைசெய்மும்மதின்மூன்றுஞ்சுட்டவனேயுலகுய்ய
வணையம்பூம்புனலானைக்காவுடையாதியைநாளு
மிணைகொள்சேவடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. (ரு)

விண்ணின்மாமதிசூடிவிலையிலிகலனணிவிமலன்
பண்ணினேர்மொழிமங்கைபங்கினன்பசுவுகந்தேறி
யண்ணலாகியவானைக்காவுடையாதியைநாளு
மெண்ணுமாறுவல்லார்களெம்மையுமாளுடையாரே. (சு)

தாரமாகியபொன்னித்தண்டுறையாடிவிழுத்து
நீரினின்றடிபோற்றிநின்மலகொள்ளெனவாங்கே
யாரங்கொண்டவெம்மானைக்காவுடையாதியைநாளு
மீரமுள்ளவர்நாளுமெம்மையுமாளுடையாரே. (எ)

உரவமுள்ளதோருழையின்னுரிபுலியதளுடையானை
விரைகொள்கொன்றையினானைவிரிசடைமேற்பிறையானை
யரவம்வீக்கியவானைக்காவுடையாதியைநாளு
மிரவுமெல்லியும்பகலுமேத்துவாரெம்மையுமாளுடையாரே. (அ)

வலங்கொள்வாரவர்தங்கள்வல்வினைதீர்க்குமருந்து
கலங்கக்காலனைக்காலாற்காமனைக்கண்சிவப்பானை
யலங்கனீர்பொருமானைக்காவுடையாதியைநாளு
மிலங்குசேவடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. (கூ)

ஆழியாற்கருளானைக்காவுடையாதிபொன்னடியி
னீழலேசரணாகநின்றருள்கூரநினைந்து
வாழவல்லவன்றொண்டன்வண்டமிழ்மாலைவல்லார்போ
யேழுமாபிறப்பற்றுவெம்மையுமாளுடையாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாஞ்சியம் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொருவனார்புரிநூலர்புணர்முலையுமையவளோடு
மருவனார்மருவார்பால்வருவதுவுமில்லைநம்மடிக
டிருவனார்பணிந்தேத்துந்திகழ்திருவாஞ்சியத்துறையு
மொருவனாரடியாரையூழ்வினைநலியவொட்டாரே. (௧)

தொறுவிலானிளவேறுதுண்ணெனவிடிகுரல்வெருவிச்
செறுவில்வாளைகளோடச்செங்கயல்பங்கயத்தொதுங்கக்
கறுவிலாமனத்தார்கள்காண்டகுவாஞ்சியத்தடிகண்
மறுவிலாதவெண்ணீறுபூசுதன்மன்னுமொன்றுடைத்தே. (௨)

தூர்த்தர்மூவெயிலெய்துசுடுநுனைப்பகழியதொன்றாற்
பார்த்தனார்திரடோண்மேற்பன்னுனைப்பகழிகள்பாய்ச்சித்
தீர்த்தமாமலர்ப்பொய்கைத்திகழ்திருவாஞ்சியத்தடிகள்
சாத்துமாமணிக்கச்சங்கொருதலைபலதலையுடைத்தே. (௩)

சள்ளைவெள்ளையங்குருகுதானதுவாமெனக்கருதி
வள்ளைவெண்மலரஞ்சிமறுகியோர்வாளையின்வாயிற்
றுள்ளுதெள்ளுநீர்ப்பொய்கைத்துறைமல்குவாஞ்சியத்தடிகள்
வெள்ளைநுண்பொடிபூசும்விகிர்தமொன்றொழிகிலர்தாமே. (௪)

மைகொள்கண்டரெண்டோளர்மலைமகளுடனுறைவாழ்க்கை
கொய்தகூவிளமாலைகுலாவியசடைமுடிக்குழகர்
கைதனெய்தலங்கழனிகமழ்புகழ்வாஞ்சியத்தடிகள்
பைதல்வெண்பிறையோடுபாம்புடன்வைப்பதுபரிசே. (௫)

கரந்தைகூவிளமாலைகடிமலர்க்கொன்றையுஞ்சூடிப்
பரந்தபாரிடஞ்சூழவருவர்நம்பரமர்தம்பரிசாற்
றிருந்துமாடங்கணீடுதிகழ்திருவாஞ்சியத்துறையு
மருந்தனாரடியாரைவல்வினைநலியவொட்டாரே. (௬)

அருவிபாய்தருகழனியலர்தருகுவளையங்கண்ணார்
குருவியாய்கிளிசேர்ப்பக்குருகினமிரிதருகிடங்கிற்
பருவரால்குதிகொள்ளும்பைம்பொழில்வாஞ்சியத்துறையு
மிருவராலறியொண்ணாவிறைவனதறைகழல்சரணே. (௭)

களங்களார்தருகழனியளிதரக்களிதருவண்டு
வளங்களார்களிப்பாடலும்பரிலொலித்திடுங்காட்சி
குளங்களானிழற்கீழ்நற்குயில்பயில்வாஞ்சியத்தடிகள்
விளங்குதாமரைப்பாதநினைப்பவர்வினைநலிவிலரே. (௮)

வாழையின்கனிதானுமதுவிம்முவருக்கையின்சுளையுங்
கூழைவானரந்தம்மிற்கூறிதுசிறிதெனக்குழறித்
தாழைவாழையந்தண்டாற்செருச்செய்துதருக்குவாஞ்சியத்து
ளேழைபாகனையல்லாலிறையெனக்கருதுதலிலமே. (௯)

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

செந்நெலங்கலங்கழனித்திகழ்திருவாஞ்சியத்துறையு
மின்னலங்கலஞ்சடையெம்மிறைவனதறைகழல்பரவும்
பொன்னலங்கலநன்மாடப்பொழிலணிநாவலாரூரன்
பன்னலங்கனன்மாலைபாடுமின்பத்தருளீரே. (கஂ)

திருச்சிற்றம்பலம்.

## திருவையாறு - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பரவும்பரிசொன்றறியேனான்பண்டேயும்மைப்பயிலாதே
னிரவும்பகலுநினைந்தாலுமெய்தநினையமாட்டேனான்
கரவிலருவிகமுகுண்ணத்தெங்கங்குலைக்கீழ்க்கருப்பாலை
யரவந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (க)

எங்கேபோவேனாயிடினுமங்கேவந்தென்மனத்தீராய்ச்
சங்கையொன்றுமின்றியேதலைநாள்கடைநாளொக்கவே
கங்கைசடைமேற்கரந்தானேகலைமான்மறியுங்கனன்மழுவுந்
தங்குந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (உ)

மருவிப்பிரியமாட்டேனான்வழிநின்றொழிந்தேனொழிகிலேன்
பருவிவிச்சிமலைச்சாரற்பட்டைகொண்டுபகடாடிக்
குருவியோப்பிக்கிளிகடிவார் குழன்மேன்மாலைகொண்டோட்டந்
தரவந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (ங)

பழகநின்றுபணிசெய்வார்பெற்றபயனென்றறிகிலனி
கழாதுமக்காட்பட்டோர்க்குவேகபடமொன்றனைசாத்தி
குழகவாழைக்குலைத்தெங்குகொணர்ந்துகரைமேலெறியவே
யழகார்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (ச)

பிழைத்தபிழையொன்றறியேனான்பிழையைத்தீரப்பணியாயே
மழைக்கணல்லார்குழைந்தாடமலையுநிலனுங்கொள்ளாமைக்
கழைக்கொள்பிரசங்கலந்தெங்குங்கழனிமண்டிக்கையேறி
யழைக்குந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (ரு)

[நகையிமூன்

கார்க்கொள்கொன்றைச் சடைமேலொன்றுடையாய் விடையாய்
மூர்க்கர்புரமூன்றெரிசெய்தாய்முன்னீபின்னீமுதலவனீ
வார்க்கொளருவிபலவாரிமணியுமுத்தும்பொன்னுங்கொண்
டார்க்குந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (சு)

ருலைக்கண்மடவாளொருபாலாய்ப்பற்றியுலகம்பலிதேர்வாய்
சிலைக்கொள்கணையாலெயிலெய்தாய்செங்கண்விடையாய்தீர்த்தனீ
மலைக்கொளருவிபலவாரிமணியுமுத்தும்பொன்னுங்கொண்
டலைக்குந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (எ)

போழுமதியம்புனங்கொன்றைபுனல்சேர்சென்னிப்புண்ணியா
சூழுமரவச்சுடர்ச்சோதியுன்னைத்தொழுவார்துயர்போக
வாழுமவர்களங்கங்கேவைத்தசிந்தையுய்ந்தாட்ட
வாழுந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (அ)

கதிர்க்கொள்பசியையொத்தேநான்கண்டேனும்மைக்காணாதே
னெதிர்த்துநீந்தமாட்டேனெம்மான்றம்மான்றம்மானே
விதிர்த்துமேகமழைபொழியவெள்ளம்பரந்துநுரைசிதறி
யதிர்க்குந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (கூ)

கூசியடியாரிருந்தாலுங்குணமொன்றில்லீர்குறிப்பில்லீர்
தேசவேந்தன்றிருமாலும்மலர்மேலயனுங்காண்கிலாத்
தேசமெங்குந்தெளிந்தாடத்தெண்ணீரருவிகொணர்ந்தெங்கும்
வாசந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (௧0)

கூடியடியாரிருந்தாலுங்குணமொன்றில்லீர்குறிப்பில்லீ
ரூடியிருந்துவுணர்கிலேனும்மைத்தொண்டனூரனேன்
தேடியெங்குங்காண்கிலேன்றிருவாரூரேசிந்திப்ப
வோடுந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கேதாரம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

வாழ்வாவதுமாயம்மிதுமண்ணாவதுதிண்ணம்
பாழ்போவதுபிறவிக்கடல்பசிநோய்செய்தபறிதான்
றாழாதறஞ்செய்ம்மின்றடங்கண்ணான்மலரோனுங்
கீழ்மேலுறநின்றான்றிருக்கேதாரமெனீரே. (௧)

பறியேசுமந்துழல்வீர்பறிநரிகீறுவதறியீர்
குறிகூவியகுற்றங்கொளுநாளாலறம்புளவே
யறிவானிலுமறிவானலநறுநீரொடுசோறு
கிறிபேசிநின்றிடுவார்தொழுகேதாரமெனீரே. (௨)

கொம்பைப்பிடித்தொருக்காலர்களிருக்கான்மலர்தூவி
நம்பநமையாள்வானென்றுநடுநாளையும்பகலுங்

## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

கம்பக்களிற்றினமாய்நின்றுசுனைநீர்களைத்தூவிச்
செம்பொற்பொடிச்சிந்துந்திருக்கேதாரமெனீரே. (௩)

உழக்கேயுண்டுபடைத்தீட்டிவைத்திழப்பார்களுஞ்சிலர்கள்
வழக்கேயெனிற்பிழைக்கேமென்பர்மதிமாந்தியமாந்தர்
சழக்கேபறிநிறைப்பாரொடுதவமாவதுசெய்மின்
கிழக்கேசலமிடுவார்தொழுகேதாரமெனீரே. (௪)

வாளோடியதடங்கண்ணியர்வலையிலழுந்தாதே
நாளோடியநமனார்தமர்நணுகாமுனநணுகி
யாளாயுய்ம்மினடிகட்கிடமதுவேயெனிலிதுவே
கீளோடரவசைத்தானிடங்கேதாரமெனீரே. (௫)

தளிசாலைகள்தவமாவதுதம்மைப்பெறிலன்றே
குளியீருளங்குருக்கேத்திரங்கோதாவிரிகுமரி
தெளியீருளஞ்சீபற்பதந்தெற்குவடக்காகக்
கிளிவாழையொண்கனிகீறியுண்கேதாரமெனீரே. (௬)

பண்ணின்றமிழிசைபாடலின்பழவேய்முழவதிரக்
கண்ணின்னொளிகனகச்சுனைவயிரம்மவைசொரிய
மண்ணின்றனமதவேழங்கண்மணிவாரிக்கொண்டெறியக்
கிண்ணென்றிசைமுரலுந்திருக்கேதாரமெனீரே. (௭)

முளைக்கைப்பிடிமுகமன்சொலிமுதுவேய்களையிறுத்துத்
துளைக்கைக்களிற்றினமாய்நின்றுசுனைநீர்களைத்தூவி
வளைக்கைப்பொழிமழைகூர்தரமயின்மான்பிணைநிலத்தைக்
கிளைக்கும்மணிசிந்துந்திருக்கேதாரமெனீரோ. (௮)

பொதியேசுமந்துழல்வீர்பொதியவமாவதுமறியீர்
மதிமாந்தியவழியேசென்றுகுழிவீழ்வதுவினையாற்
கதிசூழ்கடலிலங்கைக்கிறைமலங்கவ்வரையடர்த்துக்
கெதிபேறுசெய்திருந்தானிடங்கேதாரமெனீரே. (௯)

நாவின்மிசையரையன்னொடுதமிழ்ஞானசம்பந்தன்
யாவர்சிவனடியார்களுக்கடியானடித்தொண்டன்
தேவன்றிருக்கேதாரத்தையூரன்னுரைசெய்த
பாவின்றமிழ்வல்லார்பரலோகத்திருப்பாரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## சீபர்ப்பதம் - பண் - நட்டபாஷை.

திருச்சிற்றம்பலம்.

மானுமரையினமுமயிலினமுங்கலந்தெங்குந்
தாமேமிகமேய்ந்துதடஞ்சுனைநீர்களைப்பருகிப்
பூமாமரமுரிஞ்சிப்பொழிலூடேசென்றுபுக்குத்
தேமாம்பொழினீழற்றுயில்சீபர்ப்பதமலையே. (௧)

மலைச்சாரலும்பொழிற்சாரலும்புறமேவருமினங்கண்
மலைப்பாற்கொணர்ந்திடித்தூட்டிடமலங்கித்தனகளிற்றை
யழைத்தோடியும்பிளிறீயவையலமந்துவந்தெய்த்துத்
திகைத்தோடித்தன்பிடிதேடிடுஞ்சீபர்ப்பதமலையே. (௨)

மன்னிப்புனங்காவன்மடமொழியாள்புனங்காக்கக்
கன்னிக்கிளிவந்துகவைக்கோலிக்கதிர்கொய்ய
வென்னைக்கிளிமதியாதென்றுவெடுத்துக்கவணொலிப்பத்
தென்னற்கிளிதிரிந்தேறியசீபர்ப்பதமலையே. (௩)

மையார்தடங்கண்ணண்மடமொழியாள்புனங்காக்கச்
செவ்வேதிரிந்தாயோவெனப்போகாவிடவிளிந்து
கைபாவியகவணான்மணியெறியவிரிந்தோடிச்
செவ்வாயினகிளிபாடிடுஞ்சீபர்ப்பதமலையே. (௪)

ஆனைக்குலமிரிந்தோடித்தன்பிடிசூழலிற்றிரியத்
தானப்பிடிசெவிதாழ்த்திடவதற்குமிகவிரங்கி
மானக்குறவடல்வேடர்களிலையாற்கலைகோலித்
தேனைப்பிழிந்தினிதூட்டிடுஞ்சீபர்ப்பதமலையே. (௫)

மாற்றுக்களிறடைந்தாயென்றுமதவேழங்கையெடுத்து
மூற்றிக்கனலுமிழ்ந்துமதம்பொழிந்துமுகஞ்சுழியத்
தூற்றித்தரிக்கில்லேனென்றுசொல்லியயலறியத்
தேற்றிச்சென்றுபிடிசூழறுஞ்சீபர்ப்பதமலையே. (௬)

அப்போதுவந்துண்டீர்களுக்கழையாதுமுன்னிருந்தே
னெப்போதும்வந்துண்டாலெமையெமர்கள்சுழியாரோ
விப்போதுமக்கிதுவேதொழிலென்றோடியக்கிளியைச்
செப்பேந்திளமுலையாளெறிசீபர்ப்பதமலையே. (௭)

திரியும்புரநீறாக்கியசெல்வன்றனகழலை
யரியதிருமாலோடயன்றானுமவரறியார்
கரியின்னினமோடும்பிடிதேனுண்டவைகளித்துத்
திரிதந்தவைதிகழ்வாற்பொலிசீபர்ப்பதமலையே. (௮)

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

ஏனத்திரள்கிளைக்கவெரிபோலம்மணிசிதர்த்தி
யேனல்லவைமலைச்சாரலிற்றிரியுங்கரடியும்
மானும்மரையினமும்மயின்மற்றும்பலவெல்லாந்
தேனுண்பொழில்சோலைம்மிகுசீபர்ப்பதமலையே. (௯)

நல்லாரவர்பலர்வாழ்தருவயனாவலவூரன்
செல்லலுறவரியசிவன்சீபர்ப்பதமலையை
யல்லலவைதீரச்சொன்னதமிழ்மாலைகள்வல்லா
ரொல்லைச்செலவுயர்வானகமாண்டங்கிருப்பாரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## திருக்கேதீச்சரம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

நத்தார்படைஞானன்பசுவேறிந்நனைகவிழ்வாய்
மத்தம்மதயானையுரிபோர்த்தமணவாளன்
பத்தாகியதொண்டர்தொழுபாலாவியின்கரைமேற்
செத்தாரெலும்பணிவான்றிருக்கேதீச்சரத்தானே. (௧)

சுடுவார்பொடிநீறுநல்லதுண்டப்பிறைகீளுங்
கடமார்களியானையுரியணிந்தகறைக்கண்டன்
படவேரிடைமடவாளொடுபாலாவியின்கரைமேற்
றிடமாவுறைகின்றான்றிருக்கேதீச்சரத்தானே. (௨)

அங்கம்மொழியன்னாரவரமரர்தொழுதேத்த
வங்கம்மலிகின்றகடன்மாதோட்டநன்னகரிற்
பங்கஞ்செய்தபிறைசூடினன்பாலாவியின்கரைமேற்
செங்கண்ணரவசைத்தான்றிருக்கேதீச்சரத்தானே. (௩)

கரியகறைக்கண்டனல்லகண்மேலொருகண்ணான்
வரியசிறைவண்டியாழ்செயுமாதோட்டநன்னகருட்
பரியதிரையெறியாவருபாலாவியின்கரைமேற்
றெரியுமறைவல்லார்திருக்கேதீச்சரத்தானே. (௪)

அங்கத்துறுநோய்களடியார்மேலொழித்தருளி
வங்கமலிகின்றகடன்மாதோட்டநன்னகரிற்
பங்கஞ்செய்தமடவாளொடுபாலாவியின்கரைமேற்
றெங்கம்பொழில்சூழ்ந்ததிருக்கேதீச்சரத்தானே. (௫)

வெய்யவினையாயதடியார்மேலொழித்தருளி
வையமலிகின்றகடன்மாதோட்டநன்னகரிற்
பையேரிடைமடவாளொடுபாலாவியின்கரைமேற்
செய்யசடைமுடியார்திருக்கேதீச்சரத்தானே. (௬)

ஊனத்துறுநோய்களடியார்மேலொழித்தருளி
வானத்துறுமலியுங்கடல்மாதோட்டநன்னகரிற்
பானத்துறுமொழியாளொடுபாலாவியின்கரைமே
லேனத்தெயிறணிந்தார்திருக்கேதீச்சரத்தானே. (௭)

அட்டன்னழகாகவரைதன்மேலரவார்த்து
மட்டுண்டுவண்டாடும்பொழின்மாதோட்டநன்னகரிற்
பட்டவரிநுதலாளொடுபாலாவியின்கரைமேற்
சிட்டனமையாள்வான்றிருக்கேதீச்சரத்தானே. (௮)

மூவரெனவிருவரெனமுக்கண்ணுடைமூர்த்தி
மாவின்கனிதூங்கும்பொழின்மாதோட்டநன்னகரிற்
பாவம்வினையறுப்பார்பயில்பாலாவியின்கரைமேற்
றேவனெனையாள்வான்றிருக்கேதீச்சரத்தானே. (௯)

கறையார்கடல்சூழ்ந்தகழிமாதோட்டநன்னகருட்
சிறையார்பொழில்வண்டியாழ்செயுங்கேதீச்சரத்தானை
மறையார்புகழூரன்னடித்தொண்டனுரைசெய்த
குறையாத்தமிழ்பத்துஞ்சொலக்கூடாகொடுவினையே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கழுக்குன்றம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

கொன்றுசெய்தகொடுமையாற்பலசொல்லவே
நின்றபாவவினைகடாம்பலநீங்கவே
சென்றுசென்றுதொழுமின்றேவர்பிரானிடங்
கன்றினோடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே. (௧)

இறங்கிச்சென்றுதொழுமினின்னிசைபாடவே
பிறங்குகொன்றைச்சடையனெங்கள்பிரானிடம்
நிறங்கள்செய்தமணிகணித்திலங்கொண்டிழி
கறங்குவெள்ளையருவித்தண்கழுக்குன்றமே. (௨)

நீளநின்றுதொழுமினித்தலுநீதியா
லாளுநம்மவினைகளல்கியழிந்திடத்

தோளுமெட்டுமுடையமாமணிச்சோதியான்
காளகண்டனுறையுந்தண்கழுக்குன்றமே. (௩)

வெளிறுதீரத்தொழுமின்வெண்பொடியாடியை
முளிறிலங்குமழுவாளன்முந்தியுறைவிடம்
பிளிறுதீரப்பெருங்கைப்பெய்ம்மதமூன்றுடைக்
களிறினொடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே. (௪)

புலைகடீரத்தொழுமின்புன்சடைப்புண்ணிய
னிலைகொள்சூலப்படையனெந்தைபிரானிட
முலைகளுண்டுதழுவிக்குட்டியொடுமுசுக்
கலைகள்பாயும்புறவிற்றண்கழுக்குன்றமே. (௫)

மடமுடையவடியார்தம்மனத்தேயுற
விடமுடையமிடறன்விண்ணவர்மேலவன்
படமுடையவரவன்றான்பயிலும்மிடங்
கடமுடையபுறவிற்றண்கழுக்குன்றமே. (௬)

ஊனமில்லாவடியார்தம்மனத்தேயுற
ஞானமூர்த்திநட்டமாடிநவிலும்மிடந்
தேனும்வண்டுமதுவுண்டின்னிசைபாடியே
கானமஞ்ஞையுறையுந்தண்கழுக்குன்றமே. (௭)

அந்தமில்லாவடியார்தம்மனத்தேயுற
வந்துநாளும்வணங்கிமாலொடுநான்முகன்
சிந்தைசெய்தமலர்கணித்தலுஞ்சேரவே
சந்தநாறும்புறவிற்றண்கழுக்குன்றமே. (௮)

பிழைகடீரத்தொழுமின்பின்சடைப்பிஞ்ஞகன்
குழைகொள்காதன்குழகன்றானுறையும்மிட
மழைகள்சாலக்கலித்துநீடுயர்வேயவை
குழைகொண்முத்தஞ்சொரியுந்தண்கழுக்குன்றமே. (௯)

பல்லில்வெள்ளைத்தலையன்றான்பயிலும்மிடங்
கல்லில்வெள்ளையருவித்தண்கழுக்குன்றினை
மல்லின்மல்குதிரடோளூரன்வனப்பினாற்
சொல்லஃசொல்லித்தொழுவாரைத்தொழுமின்களே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## திருச்சுழியல் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊனாயுயிர்புகலாயகலிடமாய்முகில்பொழியும்
வானாய்வருமதியாய்விதிவருவானிடம்பொழிலின்
றேனாதரித்திசைவண்டினமிழற்றுந்திருச்சுழிய
னானாவிதநினைவார்தமைநலியார்நமன்றமரோ. (௧)

தண்டேர்மழுப்படையான்மழவிடையானெழுகடனஞ்
சுண்டேபுரமெரியச்சிலைவளைத்தானிமையவர்க்காத்
திண்டேர்மிசைநின்றானவனுறையுந்திருச்சுழியற்
றொண்டேசெயவல்லாரவர்நல்லார்துயரிலரோ. (௨)

கவ்வைக்கடல்கதறிக்கொணர்முத்தங்கரைக்கேற்றக்
கொவ்வைத்துவர்வாயார்குடைந்தாடுந்திருச்சுழியற்
றெய்வத்தினைவழிபாடுசெய்தெழுவாரடிதொழுவா
ரவ்வத்திசைக்கரசாகுவரலராள்பிரியாளே. (௩)

மலையான்மகண்மடமாதிடமாகத்தவண்மற்றுக்
கொலையானையினுரிபோர்த்தவெம்பெருமான்றிருச்சுழிய
லலையார்சடையுடையானடிதொழுவார்பழுதுள்ளி
நிலையார்திகழ்புகழானெடுவானத்துயர்வாரோ. (௪)

உற்றானமக்குயரும்மதிச்சடையான்புலனைந்தும்
செற்றார்திருமேனிப்பெருமானூர்திருச்சுழியல்
பெற்றானினிதுறையத்திறம்பாமைத்திருநாமங்
கற்றாரவர்கதியுட்செல்வரோத்தும்மதுகடனே. (௫)

மலந்தாங்கியபாசப்பிறப்பறுப்பீர்துறைக்கங்கைச்
சலந்தாங்கியமுடியானமர்ந்திடமாந்திருச்சுழிய
னிலந்தாங்கியமலராற்கொழும்புகையானினைந்தேத்துந்
தலந்தாங்கியபுகழான்மிகுதவமாஞ்சதிரமே. (௬)

சைவத்தசெவ்வுருவன்றிருநீற்றன்னுருமேற்றன்
கைவைத்தொருசிலையாலரண்மூன்றுமெரிசெய்தான்
றெய்வத்தவர்தொழுதேத்தியகுழகன்றிருச்சுழியன்
மெய்வைத்தடிநினைவார்வினைதீர்தல்லெளிதன்றே. (௭)

பூவேந்தியபீடத்தவன்றானுமடலரியுங்
கோவேந்தியவினையத்தொடுகுறுகப்புகலறியார்
சேவேந்தியகொடியானவனுறையுந்திருச்சுழியன்
மாவேந்தியகரத்தானெமசிரத்தான்றனதடியே. (௮)

கொண்டாடுதல்புரியாவருதக்கன்பெருவேள்விச்
செண்டாடுதல்புரிந்தான்றிருச்சுழியற்பெருமானைக்
குண்டாடியசமணாதர்கள்குடைச்சாக்கியரறியா
மிண்டாடியவதுசெய்ததுவானால்வருவிதியே. (௯)

நீரூர்தருநிமலன்றிருமலையார்க்கயலருகே
தேரூர்தருமரக்கன்சிரநெரித்தான்றிருச்சுழியல்
பேரூரரெனவுறைவானடிபெயர்நாவலர்கோமா
னாரூரனதமிழ்மாலைபத்தறிவார்துயரிலரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## திருவாரூர் - பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

அந்தியுநண்பகலுமஞ்சுபதஞ்சொல்லி
முந்தியெழும்பழையவல்வினைமூடாமுன்
சிந்தைபராமரியாத்தென்றிருவாரூர்புக்
கெந்தைபிரானாரையென்றுகொலெய்துவதே. (௧)

நின்றவினைக்கொடுமைநீங்கவிருபொழுதுந்
துன்றுமலரிட்டுச்சூழும்வலஞ்செய்து
தென்றன்மணங்கமழுந்தென்றிருவாரூர்புக்
கென்றன்மனங்குளிரவென்றுகொலெய்துவதே. (௨)

முன்னைமுதற்பிறவிமூதறியாமையினாற்
பின்னைநினைந்தனவும்பேதுறவும்மொழியச்
செந்நெல்வயற்கழனித்தென்றிருவாரூர்புக்
கென்னுயிர்க்கின்னமுதையென்றுகொலெய்துவதே. (௩)

நல்லநினைப்பொழியநாள்களிலாருயிரைக்
கொல்லநினைப்பனவுங்குற்றமுமற்றொழியச்
செல்வவயற்கழனித்தென்றிருவாரூர்புக்
கெல்லைமிதித்தடியேனென்றுகொலெய்துவதே. (௪)

கடுவரிமாக்கடலுட்காய்ந்தவன்றாதையைமுன்
சுடுபொடிமெய்க்கணிந்தசோதியைவன்றலைவா
யடுபுலியாடையனையாதியையாரூர்புக்
கிடுபலிகொள்ளியைநானென்றுகொலெய்துவதே. (௫)

சூழொளிநீர்நிலந்தீத்தாழ்வளியாகாசம்
வானுயர்வெங்கதிரோன்வண்டமிழ்வல்லவர்க
ளேழிசையேழ்நரம்பினோசையையாரூர்புக்
கேழுலகாளியைநானென்றுகொலெய்துவதே. (௬)

கொம்பனநுண்ணிடையாள்கூறனைநீறணிந்த
வம்பனையெவ்வுயிர்க்கும்வைப்பினையொப்பமராச்
செம்பொனைநன்மணியைத்தென்றிருவாரூர்புக்
கென்பொனையென்மணியையென்றுகொலெய்துவதே. (௭)

ஆறணிநீண்முடிமேலாடரவஞ்சூடிப்
பாறணிவெண்டலையிற்பிச்சைகொணச்சரவன்
சேறணிதண்கழனித்தென்றிருவாரூர்புக்
கேறணியெம்மிறையையென்றுகொலெய்துவதே. (௮)

மண்ணினையுண்டுமிழ்ந்தமாயனுமாமலர்மே
லண்ணலுநண்ணரியவாதியைமாதினொடுந்
திண்ணியமாமதில்சூழ்தென்றிருவாரூர்புக்
கெண்ணியகண்குளிரவென்றுகொலெய்துவதே. (௯)

மின்னெடுஞ்செஞ்சடையான்மேவியவாரூரை
நன்னெடுங்காதன்மையாலுவலர்கோனூரன்
பன்னெடுஞ்சொன்மலர்கொண்டிட்டனபத்தும்வல்லார்
பொன்னுடைவிண்ணுலகநண்ணுவர்புண்ணியரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம் - அ௪.

## திருக்கானப்பேர் - பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

தொண்டரடித்தொழலுஞ்சோதியிளம்பிறையுஞ் சூதன்மென் முலையாள்பாகமுமாகிவரும், புண்டரிகப்பரிசாமேனியும்வானவர்கள்பூசலிடக்கடனஞ்சுண்டகருத்தமருங், கொண்டலெனத்திகழுங் கண்டமுமெண்டோளுங் கோலநறுஞ்சடைமேல்வண்ணமுங்கண் குளிரக், கண்டுதொழப்பெறுவதென்றுகொ லோவடியேன் கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௧)

கூதலிடுஞ்சடையுங்கோளரவும்விரவுங்கொக்கிறகுங்குளிர்மா மத்தமுமொத்துனதா, ளோதலுணர்ந்தடியாருன்பெருமைக்குநினைந்துள்ளுருகாவிரசுமோசையைப்பாடலுநீ, யாதலுணர்ந்தவ

ரோடன்புபெருத்தடியே னங்கையின்மாமலர்கொண்டென்கண் தல்லல்கெடக், காதலுறத்தொழுவதென்றுகொலோவடியேன் கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௨)

நானுடைமாடெனவேநன்மைதரும்பரனை நற்பதமென்றுணர்வார்சொற்பதமார்சிவனைத்,தேனுடையின்னமுதைமற்றதனிற்றெளிவைத்தேவர்கணாயகனைப்பூவுயர்சென்னியனை, வானிடைமாமதியைமாசறுசோதியனைமாருதமும்மனலும்மண்டலமும்மாயக் கானிடைமாநடனென்றெய்துவதென்றுகொலோ கார்வயல்சூழ் கானப்பேருறைகாளையையே. (௩)

செற்றவர்முப்புரமன்றட்டசிலைத்தொழிலார்சேவகமுந்நினைவார்பாவகமுந்நெறியுங், குற்றமில்தன்னடியார்கூறுமிசைப்பரிசுங்கோசிகமும்மரையிற்கோவணமும்மதளு, மற்றிகழ்திண்புயமுமார்பிடைநீறுதுதைமாமலைமங்கையுமைசேர்சுவடும்புகழக், கற்றனவும்பரவிக்கைதொழலென்றுகொலோ கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௪)

கொல்லைவிடைக்கழகுங்கோலநறுஞ்சடையிற்கொத்தலரும்மிதழித்தொத்துமதனருகே, முல்லைபடைத்தநகைமெல்லியலாளொருபான்மோகமிகுத்திலகுங்கூறுசெயெப்பரிசுந், தில்லைநகர்ப்பொதுவுற்றாடியசீர்நடமுந் திண்மழுவுங்கைமிசைகூரெரியும்மடியார், கல்லவடப்பரிசுங்காணுவதென்றுகொலோ கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௫)

பண்ணுதலைப்பயனாற்பாடலுநீடுதலும் பங்கயமாதனையார்பத்தியுமுத்தியளித், தெண்ணுதலைப்பெருமானென்றெழுவாரவர்தமேசறவுமிறையாமெந்தையையும்விரவி, நண்ணுதலைப்படுமாறெங்ஙனமென்றயலே நைகிறவென்னைமதித் துய்யும்வண்ணமருளுங், கண்ணுதலைக்கனியைக்காண்பதுமென்றுகொலோ கார்வயல்சூழ் கானப்பேருறைகாளையையே. (௬)

மாவையுரித்ததள்கொண்டங்கமணிந்தவனை வஞ்சமனத்திறையுநெஞ்சணுகாதவனை, மூவருருத்தனதாமூலமுதற்கருவைமூசிடு மால்விடையின்பாகனையாகமுறப், பாவகமின்றிமெய்யேபற்றுமவர்க்கமுதைப்பானறுநெய்தயிரைந்தாடுபரம்பரனைக்,காவலெனக்கிறையென்றெய்துவதென்றுகொலோ கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௭)

தொண்டர்தமக்கெளியசோதியைவேதியனைத் தூயமறைப் பொருளாநீதியைவார்கடனஞ், சுண்டதனுக்கிறவாதென்றுமிருந் தவனையூழிபடைத்தவனோடொள்ளரியும்முணரா, வண்டனையண் டர்தமக்காகமநூன்மொழியு மாதியைமேதகுசீரோதியைவானவர் தங், கண்டனையன்பொடுசென்றெய்துவதென்றுகொலோ கார்வ யல்சூழ்கானப்பேருறைகாளையையே. (அ)

நாதனைநாதமிகுத்தோசையதானவனை ஞானவிளக்கொளியா மூனுயிரைப்பயிரா,மாதனைமேதகுதன்பத்தர்மனத்திறையும்பற் றுவிடாதவனைக்குற்றமில்கொள்கையனைத், தூதனையென்றனையா டோழனைநாயகனைத்தாழ்மகரக்குழையுந்தோடுமணிந்ததிருக்,காத னைநாயடியேனெய்துவதென்றுகொ லோகார்வயல்சூழ்கானப்பே ருறைகாளையையே. (௯)

கன்னலையின்னமுதைக்கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையை யொண்சீருறைதண்டமிழா, லுன்னிமனத்தயராவுள்ளுருகிப்பரவு மொண்பொழினாவலர்கோனாகியவாரூரன், பன்னுமிசைக்கிளவிப த்திவைபாடவல்லார்பத்தர்குணத்தினராயெத்திசையும்புகழ, மன் னியிருப்பவர்கள்வானினிழிந்திடினு மண்டலநாயகராய்வாழ்வது நிச்சயமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கூடலையாற்றூர் - பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

வடிவுடைமழுவேந்திமதகரியுரிபோர்த்துப்
பொடியணிதிருமேனிப்புரிகுழலுமையோடுங்
கொடியணிநெடுமாடக்கூடலையாற்றூரி
லடிகளிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (௧)

வையகமுழுதுண்டமாலொடுநான்முகனும்
பையிளவரவல்குற்பாவையொடும்முடனே
கொய்யணிமலர்ச்சோலைக்கூடலையாற்றூரி
லையனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (௨)

ஊர்தொறும்வெண்டலைகொண்டுண்பலியிடுமென்று
வார்தருமென்முலையாண்மங்கையொடும்முடனே
கூர்நுனைமழுவேந்திக்கூடலையாற்றூரி
லார்வனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (௩)

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

சந்தணவும்புன லுந்தாங்கியதாழ்சடையன்
பந்தணவும்விரலாள்பாவையொடும்முடனே
கொந்தணவும்பொழில்சூழ்கூடலையாற்றூரி
லந்தணன்வழிபோந்தவதிசயமறியேனே. (௪)

வேதியர்விண்ணவருமண்ணவருந்தொழநற்
சோதியதுருவாகிச்சுரிகுழலுமையோடுங்
கோதியவண்டறையுங்கூடலையாற்றூரி
லாதியிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (௫)

வித்தகவீணையொடும்வெண்புரிநூல்பூண்டு
முத்தனவெண்முறுவன்மங்கையொடும்முடனே
கொத்தலரும்பொழில்சூழ்கூடலையாற்றூரி
லத்தனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (௬)

மழைநுழைமதியமொடுவாளரவுஞ்சடைமே
லிழைநுழைதுகிலல்குலேந்திழையாளோடுங்
குழையணிதிகழ்சோலைக்கூடலையாற்றூரி
லழகனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (௭)

மறைமுதல்வானவருமாலயனிந்திரனும்
பிறைநுதன்மங்கையொடும்பேய்க்கணமுஞ்சூழக்
குறள்படையதனோடுங்கூடலையாற்றூரி
லறவனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (௮)

வேலையினஞ்சுண்டுவிடையதுதானேறிப்
பாலனமென்மொழியாள்பாவையொடும்முடனே
கோலமதுருவாகிக்கூடலையாற்றூரி
லாலனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (௯)

கூடலையாற்றூரிற்கொடியிடையவளோடு
மாடலுகந்தானையதிசயமிதுவென்று
நாடியவின்றமிழால்நாவலவூரன்சொற்
பாடல்கள்பத்தும்வல்லார்தம்வினைபற்றறுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது திருப்புறம்பயமென்னுந் தலத்தினின்று மெழுந்தருளித் திருக்கூடலையாற்றூருக்குச் சமீபமாகச்செல்லுகின்றவர் அந்தத்தலத்துக்குள்செல்லாமல் விருத்தாசலத்தைநோக்கிச் செல்லுங் கருத்தினராக அந்தமார்க்கத்தில் பரமசிவம் ஒருபிராமணராய்நிற்கக்கண்டு ஐயரோ விருத்தாசலத்துக்கு மார்க்கமெதுவென்ன, இந்

தக் கூடலையாற்றூர்மார்க்கமாகச் செல்லுகின்றதென்று சொல்லி வழிகாட்டிப் பின்செல்ல சுந்தரமூர்த்திசுவாமிகள் முன்சென்று கூடலையாற்றூருக்குச் சமீபமாகச்சார்ந்தபோது பின்வந்தபிராமணர் மறையக்கண்டு அதிசயங்கொண்டு ஓதியபதிகம்.

---

## திருவன்பார்த்தான்பனங்காட்டூர் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

விடையின்மேல்வருவானை வேதத்தின்பொருளானை
யடையிலன்புடையானை யாவர்க்குமறியொண்ணா
மடையில்வாளைகள்பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்ச்
சடையிற்கங்கைதரித்தானைச் சாராதார்சார்வென்னே. (௧)

அறையும்பைங்கழலார்ப்ப வரவாடவனலேந்திப்
பிறையுங்கங்கையுஞ்சூடிப் பெயர்ந்தாடும்பெருமானார்
பறையுஞ்சங்கொலியோவாப் படிறன்றன் பனங்காட்டூ
ருறையுமெங்கள்பிரானை யுணராதாருணர்வென்னே. (௨)

தண்ணார்மாமதிசூடித் தழல்போலுந்திருமேனிக்
கெண்ணார்நாண்மலர்கொண்டங் கிசைந்தேத்துமடியார்கள்
பண்ணார்பாடலறாத படிறன்றன் பனங்காட்டூர்ப்
பெண்ணாணாயபிரானைப் பேசாதார்பேச்சென்னே. (௩)

நெற்றிக்கண்ணுடையானை நீறேறுந்திருமேனிக்
குற்றமில்குணத்தானைக் கோணாதார்மனத்தானைப்
பற்றிப்பாம்பரையார்த்த படிறன்றன் பனங்காட்டூர்ப்
பெற்றொன்றேறும்பிரானைப் பேசாதார்பேச்சென்னே. (௪)

உரமென்னும்பொருளானை யுருகிலுள்ளுறைவானைச்
சிரமென்னுங்கலனானைச் செங்கண்மால்விடையானை
வரமுனமருள்செய்வான் வன்பார்த்தான் பனங்காட்டூர்ப்
பரமெங்கள்பிரானைப் பரவாதார்பரவென்னே. (௫)

எயிலார்பொக்கமெரித்த வெண்டோண்முக்கணிறைவன்
வெயிலாய்க்காற்றெனவீசி மின்னாய்த்தீயெனநின்றான்
மயிலார்சோலைகள்சூழ்ந்த வன்பார்த்தான் பனங்காட்டூர்
பயில்வானுக்கடிமைக்கட் பயிலாதார்பயில்வென்னே. (௬)

மெய்யன்வெண்பொடிபூசும் விகிர்தன்வேதமுதல்வன்
கையின்மான்மழுவேந்திக் காலன்காலமறுத்தான்
பைகொள்பாம்பரையார்த்த படிறன்றன் பனங்காட்டூ
ரையனெங்கள்பிரானை யறியாதாரறிவென்னே. (௭)

வஞ்சமற்றமனத்தாரைமறவாதபிறப்பிலியைப்
பஞ்சிற்சீறடியாளைப்பாகம்வைத்துகந்தானை
மஞ்சுற்றமணிமாடவன்பார்த்தான்பனங்காட்டூர்
நெஞ்சத்தெங்கள்பிரானைநினையாதார்நினைவென்னே. (அ)

மழையானுந்திகழ்கின்றமலரோனென்றிருவர்தா
மழையாநின்றவருள்கவுயர்வானத்துயர்வானைப்
பழையானைப்பனங்காட்டூர்பதியாகத்திகழ்கின்ற
குழைகாதற்கடிமைக்கட்குழையாதார்குழைவென்னே. (கூ)

பாரூரும்பனங்காட்டூர்ப்பவளத்தின்படியானைச்
சீரூருந்திருவாரூர்ச்சிவன்பேர்சென்னியில்வைத்த
வாரூரன்னடித்தொண்டனடியன்சொல்லடிநாய்சொல்
லூரூரனுரைசெய்வாருயர்வானத்துயர்வாரே. (கய)

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்பனையூர் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மாடமாளிகைகோபுரத்தொடுமண்டபம்வளரும்வளர்பொழிற்
பாடல்வண்டறையும்பழனத்திருப்பனையூர்த் [டநின்
தோடுபெய்தொருகாதினிற்குழைதூங்கத்தொண்டர்களுள்ளிப்பா
ரூடுமாறுவல்லாரவரேயழகியரே. (க)

நாறுசெங்கழுநீர்மலர்நல்லமல்லிகைசெண்பகத்தொடு
சேறுசெய்கழனிப்பழனத்திருப்பனையூர்
நீறுபூசிநெய்யாடிதன்னைநினைப்பவர்தம்மனத்தனாகிநின்
றூறுசூடவல்லாரவரேயழகியரே. (உ)

செங்கண்மேதிகள்சேடெறிந்துதடம்படிதலிற்சேலினத்தொடு
பைங்கண்வாளைகள்பாய்பழனத்திருப்பனையூர்த்
திங்கள்சூடியசெல்வனாரடியார்தம்மேல்வினைதீரப்பாவிடி
லங்கிருந்துறைவாரவரேயழகியரே (ங)

வாளைபாயமலங்கிளங்கயல்வரிவராலுகளுங்கழனிப்
பாளையொண்கமுகம்புடைசூழ்திருப்பனையூர்த்
தோளுமாகமுந்தோன்றநட்டமிட்டாடுவாரடித்தொண்டர்தங்களை
யாளுமாறுவல்லாரவரேயழகியரே. (ச)

கொங்கையார்பலருங்குடைந்தாடக்குவளைமலர்தரப்
பங்கயமலரும்பழனத்திருப்பனையூர்

மங்கைபாகமுமாலோர்பாகமுந்தாமுடையவர்மான்மழுவினொ
டங்கைத்தீயுகப்பாரவரோயழகியரே. (௫)

காவிரிபுடைசூழ்சோணாட்டவர்தாம்பரவிய
பாவிரிபுலவர்பயிலுந்திருப்பனையூர்
மாவிரிமடநோக்கியஞ்சமதகரியுரிபோர்த்துகந்த
வாவிலேந்துகப்பாரவரோயழகியரே. (௬)

மரங்கள்மேன்மயிலாலமண்டபமாடமாளிகைகோபுரத்தின்மேற்
றிரங்கல்வன்முகவன்புகப்பாய்திருப்பனையூர்த் [றின்
துரங்கன்வாய்பிளந்தானுந்தூமலர்த்தோன்றலுமறியாமற்றோன்
றரங்கிலாடவல்லாரவரோயழகியரே. (௭)

மண்ணெலாமுழவம்மதிர்தரமாடமாளிகைகோபுரத்தின்மேற்
பண்ணியாழ்முரலும்பழனத்திருப்பனையூர்
வெண்ணிலாச்சடைமேவியவிண்ணவரொடுமண்ணவர்தொழ
வண்ணலாகிநின்றாரவரோயழகியரே. (௮)

குரக்கினங்குதிகொள்ளத்தேனுகக்குண்டுதண்வயற்கெண்டைபாய்
பரக்குந்தண்கழனிப்பழனத்திருப்பனையூ [தரப்
ரிரக்கமில்லவனைந்தொடைந்தலைதோளிருபதுதாணெரிதர
வரக்கனையடர்த்தாரவரேயழகியரே. (௯)

வஞ்சிநுண்ணிடைமங்கைபங்கினர்மாதவர்வளரும்வளர்பொழிற்
பஞ்சின்மெல்லடியார்பயிலுந்திருப்பனையூர்
வஞ்சியும்வளர்நாவலூரன்வனப்பகையவளப்பன்வன்றொண்டன்
செஞ்சொற்கேட்டுகப்பாரவரோயழகியரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவீழிமிழலை - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பினார்க்கருள்செய்யுமந்தணர்நான்மறைக்கிடமாயவேள்வியுட்
செம்பொனேர்மடவாரணிபெற்றதிருமிழலை
யும்பரார்தொழுதேத்தமாமலையாளொடும்முடனேயுறைவிட
மம்பொன்வீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. (௧)

விடங்கொண்மாமிடற்றீர்வெள்ளைச்சுருளொன்றிட்டுவிட்டகாதினீ
திடங்கொள்சிந்தையினார்கலிகாக்குந்திருமிழலை [ரொன்று
மடங்கல்பூண்டவிமானமுமண்மிசைவந்திழிச்சியவானநாட்டையு
மடங்கல்வீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. (௨)

## நம்பியாரூரரென்னும்
### சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

ஊனையுற்றுயிராயினீரொளிமூன்றுமாய்த்தெளிநீரோடானைஞ்சின்
றேனையாட்டுகந்தீர்செழுமாடத்திருமிழலை
மானைமேவியகையினீர்மழுவேந்தினீர்மங்கைபாகத்தீர்விண்ணி
லானவீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. (௩)

பந்தம்வீடிவைபண்ணினீர்படிநீர்மதிப்புதிர்க்கண்ணியீரொன்று
சிந்தைசெய்திருக்குஞ்செங்கையாளர்திருமிழலை
வந்துநாடகம்வானநாடியராடமாலயனேத்தநாடொறு
மந்தண்வீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. (௪)

புரிசைமூன்றையும் பொன்றக்குன்றவிலேந்திவேதப் புரவித்தேர்
திரிசெய்நான்மறையோர்சிறந்தேத்துந்திருமிழலைப் [மிசைத்
பரிசினாலடிபோற்றுபத்தர்கள்பாடியாடப்பரிந்துநல்கினீ
ரரியவீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. (௫)

எறிந்ததண்டியிடந்தகண்ணப்பனேத்துபத்தர்கட்கேற்றநல்கினீர்
செறிந்தபூம்பொழிற்றேன்றுளிவீசுந்திருமிழலை
நிறைந்தவந்தணர்நித்தநாடொறுநேசத்தாலுமைப்பூசிக்குமிட
மறிந்துவீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. (௬)

பணிந்தபார்த்தன்பகீரதன்பலபத்தர்சித்தர்க்குப்பண்டுநல்கினீர்
திணிந்தமாடந்தொறுஞ்செல்வமல்குதிருமிழலைத்
தணிந்தவந்தணர்சந்திநாடொறுமந்திவானிடுபூச்சிறப்பவை
யணிந்துவீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. (௭)

பரந்தபாரிடமூரிடைப்பலிபற்றிப்பார்த்துணுஞ்சுற்றமாயினீர்
தெரிந்தநான்மறையோர்க்கிடமாயதிருமிழலை
யிருந்துநீர்தமிழோடிசைகேட்குமிச்சையாற்காசுநித்தனல்கினீ
ரருந்தண்வீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. (௮)

தூயநீரமுதாயவாறதுசொல்லுகென்றுமைக்கேட்கச்சொல்லினீர்
தீயரக்குலையாளர்செழுமாடத்திருமிழலை [ய்ப்பொரு
மேயநீர்பலியேற்றதென்னென்றுவிண்ணப்பஞ்செய்பவர்க்குமெ
ளாயவீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. (௯)

வேதவேதியர்வேதநீதியரோதுவார்விரிநீர்மிழலையு
ளாதிவீழிகொண்டீரடியேற்குமருளுகென்று [ழ்
நாதகீதம்வண்டோதுவார்பொழினாவலூரன்வன்றொண்டனற்றமி
பாதமோதவல்லார்பரனோடுங்கூடுவரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## திருவெண்பாக்கம் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

பிழையுளனபொறுத்திடுவரென்றடியேன்பிழைத்தக்காற்
பழியதனைப்பாராதேபடலமென்கண்மறைப்பித்தாய்
குழைவிரவுவடிகாதாகோயிலுளாயேயென்ன
வுழையுடையானுள்ளிருந்துளோம்போகீரென்றானே. (௧)

இடையறியேன்றலையறியேனெம்பெருமான்சரணமென்பே
னடையுடையனம்மடியானென்றவற்றைப்பாராதே
விடையுடையான்விடநாகன்வெண்ணீற்றன்புலியின்றோ
லுடையுடையானெனையுடையானுளோம்போகீரென்றானே. (௨)

செய்வினையொன்றறியாதேன்றிருவடியேசரணென்று
பொய்யடியேன்பிழைத்திடினும்பொறுத்திடநீவேண்டாவோ
பையரவாவிங்கிருந்தாயோவென்னப்பரிந்தென்னை
யுய்யவருள்செய்யவல்லானுளோம்போகீரென்றானே. (௩)

கம்பமருங்கரியுரியன்கறைமிடற்றன்காபாலி
செம்பவளத்திருவுருவன்சேயிழையோடுடனாகி
நம்பியிங்கேயிருந்தீரோயென்றுநான்கேட்டலுமே
யும்பர்தனித்துணையெனக்குளோம்போகீரென்றானே. (௪)

பொன்னிலங்குநறுங்கொன்றைபுரிசடைமேற்பொலிந்திலங்க
மின்னிலங்குநுண்ணிடையாள்பாகமாவெருதேறித்
துன்னியிருபாலடியார்தொழுதேத்தவடியேனு
முன்னதமாய்க்கேட்டலுமேயுளோம்போகீரென்றானே. (௫)

கண்ணுதலார்காமனையுங்காய்ந்ததிறற்கங்கைமலர்
தெண்ணிலவுசெஞ்சடைமேற்றீமலர்ந்தகொன்றையினன்
கண்மணியைமறைப்பித்தாயிங்கிருந்தாயோவென்ன
ஒண்ணுதலிபெருமானாருளோம்போகீரென்றானே. (௬)

பார்நிலவுமறையோரும்பத்தர்களும்பணிசெய்யத்
தார்நிலவுநறுங்கொன்றைச்சடையனார்தாங்கரிய
கார்நிலவுமணிமிடற்றீரிங்கிருந்தீரோயென்ன
ஆரவமனாக்கசைத்தானுளோம்போகீரென்றானே. (௭)

வாரிடங்கொள்வனமுலையாடன்னோடுமயானத்துப்
பாரிடங்கள்பலசூழப்பயின்றாடும்பரமேட்டி
காரிடங்கொள்கண்டத்தன்கருதுமிடந்திருவொற்றி
யூரிடங்கொண்டிருந்தபிரானுளோம்போகீரென்றானே. (௮)

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

பொன்னவிலுங்கொன்றையினாய்போய்மகிழ்க்கீழிருவென்று
சொன்னவெனைக்காணாமேசூளுறவுமகிழ்க்கீழே
யென்னவல்லபெருமானேயிங்கிருந்தாயோவென்ன
வொன்னலரைக்கண்டாற்போலுளோம்போகீரென்றானே. (௯)

மான்றிகழுஞ்சங்கிலியைத்தந்துவருபயன்களெல்லாந்
தோன்றவருள்செய்தளித்தாயென்றுரைக்கவுலகமெல்லா
மீன்றவனேவெண்கோயிலிங்கிருந்தாயோவென்ன
வூன்றுவதோர்கோலருளியுளோம்போகீரென்றானே. (௰)

ஏராரும்பொழினிலவுவெண்பாக்கமிடங்கொண்ட
காராருமிடற்றானைக்காதலித்திட்டன்பினொடுஞ்
சீராருந்திருவாரூர்ச்சிவன்பேர்சென்னியில்வைத்த
வாரூரன்றமிழ்வல்லார்க்கடையாவல்வினைதானே. (௰௧)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வெண்பாக்கத்தீசுவரர்.
தேவியார்பெயர் - கனிவாய்மொழியம்மை.

இது திருஒற்றியூரில் சங்கிலிநாச்சியாருக்குக் கூறிய சபதத்தைமறந்து திருவாரூருக்குச் செல்லுங்கருத்தினால் திருவொற்றியூரெல்லையைக்கடந்தளவில் பார்வைமறைய அவ்வண்ணமேயெழுந்தருளி வெண்பாக்கத்திற் சென்று ஆலயத்துக்குளடைந்து தரிசித்துக் கோயிலி லிருக்கின்றீரோவென்ன, பரமசிவம் ஊன்றுகோலொன்றருளிச்செய்து நாம் கோயிலுள்ளிருக்கின்றோம் நீர்போமென்று அருளிச்செய்தபோது ஓதியபதிகம்.

ஆ பதிகம் - ௯௰.

கோயில் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மடித்தாடுமடிமைக்கணன்றியேமனனேநீவாழுநாளுந் [வான்
தடுத்தாட்டித்தருமனார்தமர்செக்கிலிடும்போது தடுத்தாட்கொள்
கடுத்தாடுங்கரதலத்திற்றமருகமுமெரியகலுங்கரியபாம்பும் [றே
பிடித்தாடிபுலியூர்ச் சிற்றம்பலத்தெம்பெருமானைப் பெற்றாமன்

போதுகாமத்திற்சென்றாற்போலன்றியேபிரியாதுள்கிச்
சேர்ந்தவன்பராய்ச்சென்றுமுன்னடிவீழ்ந்திருவினாரை
யோராதுதருமனார்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வான்
பேராளர்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே.

நரியார்தங்கள்ளத்தாற்பக்கான பரிசொழிந்துநாளுமுள்கிப்
பிரியாதவன்பராய்ச்சென்றுமுன்னடிவீழுஞ்சிந்தையாரைத்
தரியாதுதருமனார்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வான்
பெரியோர்கள்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாம
[ன்றே. (௩)

கருமையார்தருமனார்தமர்நம்மைக் கட்டியகட்டறுப்பிப்பானை, யருமையாந்தன்னுலகந்தருவானைமண்ணுலகங் காவல்பூண்டவுரிமையாற்பல்லவர்க்குத்திறைகொடாமன்னவரைமறுக்கஞ்செய்யும், பெருமையாற்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப் பெற்றாமன்றே. (௪)

கருமானினுரியாடைச்செஞ்சடைமேல்வெண்மதியக்கண்ணியானை, யுருமன்ன கூற்றத்தையுருண்டோடவுதைத்துகந் துலவாவின்பந், தருவானைத்தருமனார்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வான், பெருமானார்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே. (௫)

உய்த்தாடித்திரியாதேயுள்ளமேயொழிகண்டாயூன்கணோட்ட
மெத்தாலுங்குறைவில்லையென்பர்காணெஞ்சமே நம்மைநாளும்
பைத்தாடுமரவினன்படர்சடையன்பரஞ்சோதிபாவந்தீர்க்கும்
பித்தாடிபுலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே

முட்டாதமுச்சந்திமூவாயிரவர்க்குமூர்த்தியென்னப்
பட்டானைப்பத்தராய்ப்பாவிப்பார்பாவமும்வினையும்போக
விட்டானைமலையெடுத்தவிராவணனைத்தலைபத்து நெரியக்காலாற்
றொட்டானைப்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப் பெற்றாமன்றே. (௭)

கற்றானுங்குழையுமாறன்றியேகருதுமாகருதகிற்றார்க்
கெற்றாலுங்குறைவில்லையென்பர்காணுள்ளமேநம்மைநாளுஞ்
செற்றாட்டித்தருமனார்தமர்செக்கிலிடும்போது தடுத்தாட்கொள்வான், பெற்றேறிப்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே. (௮)

நாடுடையநாதன்பானன்றென்றுசெய்மன மேநம்மைநாளுந் தாடுடையதருமனார் தமர்செக்கிலிடும்போது தடுத்தாட்கொள்வான்,மோடுடையசமணர்க்குமுடையுடையசாக்கியர்க்கு மூடம் வைத்த,பீடுடையபுலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே. (௯)

## ௱௩௮ நம்பியாரூரரென்னும்

### சுதரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

பாரூருமரவல்குலுமைநங்கையவள்பங்கன்பைங்கணேற்ற
னூரூரன்றருமனார்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வா
னாரூரன்றம்பிரானாரூரன்மீகோங்கிலணிகாஞ்சிவாய்ப்
பேரூரர்பெருமானைப்புலியூர்ச்சிற்றம்பலத்தேபெற்றாமன்றே.

திருச்சிற்றம்பலம்.

---

### திருஒற்றியூர் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பாட்டும்பாடிப்பரவித்திரிவா
ரீட்டும்வினைகடீர்ப்பார்கோயில்
காட்டுங்கலமுந்திமிலுங்கரைக்கே
யோட்டுந்திரைவாயொற்றியூரே. (௧)

பந்துங்கிளியும்பயிலும்பாவை
சிந்தைகவர்வார்செந்தீவண்ண
ரெந்தம்மடிகளிறைவர்க்கிடம்போ
லுந்துந்திரைவாயொற்றியூரே. (௨)

பவளக்கனிவாய்ப்பாவைபங்கன்
கவளக்களிற்றினுரிவைபோர்த்தான்
றவழுமதிசேர்சடையாற்கிடம்போ
லுகளுந்திரைவாயொற்றியூரே. (௩)

என்னதெழிலுநிறையுங்கவர்வான்
புன்னைமலரும்புறவிற்றிகழுந்
தன்னைமுன்னநினைக்கத்தருவா
னுன்னப்படுவானொற்றியூரே. (௪)

பணங்கொளரவம்பற்றிப்பரமன்
கணங்கள்சூழக்கபாலமேந்தி
வணங்குமிடைமென்மடவாரிட்ட
வுணங்கல்கவர்வானொற்றியூரே. (௫)

படையார்மழுவன்பால்வெண்ணீற்றன்
விடையார்கொடியன்வேதநாவ
னடைவார்வினைகளறுப்பானென்னை
யுடையானுறையுமொற்றியூரே. (௬)

சென்றபுரங்கடீயில்வேவ
வென்றவிகிர்தன்வினையைவீட்ட
நன்றுநல்லநாதனாயே
ரொன்றையுடையானொற்றியூரே. (௭)

கலவமயில்போல்வளைக்கைநல்லார்
பலரும்பரவும்பவளப்படியா
னுலகினுள்ளார்வினைகடீர்ப்பா
னுலவுந்திரைவாயொற்றியூரே. (௮)

பற்றிவரையையெடுத்தவரக்க
னிற்றுமுரியவிரலாலடர்த்தா
ரெற்றும்வினைகடீர்ப்பாரோத
மொற்றுந்திரைவாயொற்றியூரே. (௯)

ஒற்றியூருமரவும்பிறையும்
பற்றியூரும்பவளச்சடையர்
ஒற்றியூர்மேலூரனுரைத்த
கற்றுப்பாடக்கழியும்வினையே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்புக்கொளியூர் அவிநாசி பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

எத்தான்மறக்கேனெழுமைக்குமெம்பெருமானையே
யுற்றாயென்றுன்னையேயுள்குகின்றேனுணர்ந்துள்ளத்தாற்
புற்றாடரவாபுக்கொளியூரவிநாசியே
பற்றாகவாழ்வேன்பசுபதியேபரமேட்டியே. (௧)

வழிபோவார்தம்மோடும்வந்துடன்கூடியமாமணிநீ
யொழிவதழகோசொல்லாயருளோங்குசடையானே
பொழிலாருஞ்சோலைப்புக்கொளியூரிற்குளத்திடை
யிழியாக்குளித்தமாணியென்னைக்கிறிசெய்ததே. (௨)

எங்கேனும்போகினுமெம்பெருமானைநினைந்தக்காற்
கொங்கேபுகினுங்கூறைகொண்டாறலைப்பாரிலைப்
பொங்காடரவாபுக்கொளியூரவிநாசியே
யெங்கோனேயுனைவேண்டிக்கொள்வேன்பிறவாமையே. (௩)

உரைப்பாருரையுகந்துள்கவல்லார்தங்களுச்சியா
யரைக்காடரவாவாதியுமந்தமுமாயினாய்

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்தது

புரைக்காடுசோலைப்புக்கொளியூரவிநாசியே
கரைக்கான்முதலையைப்பிள்ளைதரச்சொல்லுகாலனையே. (௪)

அரங்காவதெல்லாமாயிடுகாடதுவன்றியுஞ்
சிரங்கோலைவாங்கிவரிசிலைநாணியிற்சந்தித்துப்
புரங்கெடவெய்தாய்புக்கொளியூரவிநாசியே
குரங்காடுசோலைக்கோயில்கொண்டகுழகனே. (௫)

நாத்தானுனைப்பாடலின்றிநவிலாதென்னாச்
சோத்தென்றுதேவர்தொழநின்றசுந்தரச்சோதியாய்
பூத்தாழ்சடையாய்புக்கொளியூரவிநாசியே
கூத்தாவுனக்குநானாட்பட்டகுற்றமுங்குற்றமே. (௬)

மந்திகடுவனுக்குணப்பழநாடிமலைப்புறஞ்
சந்திகடோறுஞ்சலபுட்பமிட்டுவழிபடப்
புந்தியுறைவாய்புக்கொளியூரவிநாசியே
நந்தியுனைவேண்டிக்கொள்வேனரகம்புகாமையே. (௭)

பேணாதொழிந்தேனுன்னையலாற்பிறதேவரைக்
காணாதொழிந்தேன்காட்டுதியேலின்னங்காண்பனான்
பூணாரவாபுக்கொளியூரவிநாசியே
காணாதகண்கள்காட்டவல்லகறைக்கண்டனே. (௮)

நள்ளாறுதெள்ளாறரத்துறைவாயெங்கணம்பனே
வெள்ளாடைவேண்டாய்வேங்கையின்றோலைவிரும்பினாய்
புள்ளேறுசோலைப்புக்கொளியூரிற்குளத்திடை
யுள்ளாடப்புக்கமாணியெனைக்கிறிசெய்ததே. (௯)

நீரேறவேறுநிமிர்புன்சடைநின்மலமூர்த்தியைப்
போரேறதேறியைப்புக்கொளியூரவிநாசியைக்
காரேறுகண்டனைத்தொண்டனாரூரன்கருதிய
சீரேறுபாடல்கள்செப்பவல்லார்க்கில்லைதுன்பமே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

சுவாமிபெயர் - அவிநாசியப்பர்.

தேவியார் பெருங்கருணைநாட்டத்தம்மை.

---

இது - முதலையுண்டபிள்ளையையழைப்பித்தபதிகம்.

## திருநறையூர்ச்சித்தீச்சரம் - பண்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

நீரும்மலருந்நிலவுஞ்சடைமே
லூரும்மரவம்முடையானிடமாம்
வாரும்மருவிமணிபொன்கொழித்துச்
சேரும்நறையூர்ச்சித்தீச்சரமே. (க)

அளைப்பையரவேரிடையாளஞ்சத்
துளைக்கைக்கரித்தோலுரித்தானிடமாம்
வளைக்கைம்மடவார்மடுவிற்றடநீர்
திளைக்குந்நறையூர்ச்சித்தீச்சரமே. (உ)

இகழுந்தகையோரெயின்மூன்றெரித்த
பகழியொடுவில்லுடையோன்பதிதான்
முகிழ்மென்முலையார்முகமேகமலந்
திகழுந்நறையூர்ச்சித்தீச்சரமே. (ங)

மறக்கொளரக்கன்வரைதோள்வரையா
லிறக்கொள்விரற்கோனிருக்குமிடமா
நறக்கொள்கமலந்நனிபள்ளியெழத்
திறக்குந்நறையூர்ச்சித்தீச்சரமே. (ச)

முழுநீறணிமேனியன்மொய்குழலா
ரொழுநீர்மைகொள்வானமருமிடமாங்
கழுநீர்கமழக்கயல்சேலுகளுஞ்
செழுநீர்நறையூர்ச்சித்தீச்சரமே. (ரு)

ஊனுருடைவெண்டலையுண்பலிகொண்
டானூரடலேறமர்வானிடமாம்
வானூர்மதியம்பதிவண்பொழில்வாய்த்
தேனூர்நறையூர்ச்சித்தீச்சரமே. (சு)

காரூர்கடலில்விடமுண்டருள்செய்
நீரூர்சடையன்னிலவும்மிடமாம்
வாரூர்முலையார்மருவும்மறுகிற்
றேரூர்நறையூர்ச்சித்தீச்சரமே. (எ)

கரியினுரியுங்கலைமான்மறியு
மெரியும்மழுவும்முடையானிடமாம்
புரியுமறையோர்நிறைசொற்பொருள்க
டெரியுந்நறையூர்ச்சித்தீச்சரமே. (அ)

பேணாமுனிவன்பெருவேள்வியெலா
மாணாமைசெய்தான்மருவுமிடமாம்
பாணார்குழலும்முழவும்விழவிற்
சேணார்நறையூர்ச்சித்தீச்சரமே. (௯)

குறியில்வழுவாக்கொடுங்கூற்றுதைத்த
வெறியுமழுவாட்படையானிடமா
நெறியில்வழுவாநியமத்தவர்கள்
செறியுந்நறையூர்ச்சித்தீச்சரமே. (௧௦)

போரார்புரமெய்தபுனிதன்னமருஞ்
சீரார்நறையூர்ச்சித்தீச்சரத்தை
யாரூரன்சொல்லிவைவல்லவர்க
ளேராரிமையோருலகெய்துவரே. (௰௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருச்சோற்றுத்துறை - பண் - கவுசிகம்.

திருச்சிற்றம்பலம்.

அழனீரொழுகியனையசடையு
முழையீருரியுமுடையானிடமாங்
கழைநீர்முத்துங்கனகக்குவையுஞ்
சுழனீர்ப்பொன்னிச்சோற்றுத்துறையே. (௧)

பண்டைவினைகள்பறியநின்ற
அண்டமுதல்வனமலனிடமா
மிண்டைகொண்டன்பிடையறுத
தொண்டர்பரவுஞ்சோற்றுத்துறையே. (௨)

கோலவரவுங்கொக்கினிறகு
மாலைமதியும்வைத்தானிடமா
மாலுமயிலுமாடலளியுஞ்
சோலைதருநீர்ச்சோற்றுத்துறையே. (௩)

பளிக்குத்தாரைபவளவெற்பிற்
குளிக்கும்போல்நூற்கோமாற்கிடமா
மளிக்குமாத்தியல்லான்மதுவந்
துளிக்குஞ்சோலைச்சோற்றுத்துறையே. (௪)

உதையுங்கூற்றுக்கொல்காவிதிக்கு
வதையுஞ்செய்தமைந்தனிடமாந்
திதையுந்தாதுந்தேனுஞ்ஞிமிறுந்
துதையும்பொன்னிச்சோற்றுத்துறையே. (௫)

ஓதக்கடனஞ்சினையுண்டிட்ட
பேதைப்பெருமான்பேணும்பதியாஞ்
சீதப்புனலுண்டெரியைக்காலுஞ்
சூதப்பொழில்சூழ்சோற்றுத்துறையே. (௬)

இறந்தாரென்புமெருக்குஞ்சூடிப்
புறங்காட்டாடும்புனிதன்கோயில்
சிறந்தார்சுற்றந்திருவென்றின்ன
துறந்தார்சேருஞ்சோற்றுத்துறையே. (௭)

காமன்பொடியாக்கண்ணொன்றிமைத்த
ஓமக்கடலாருகந்தவிடமாந்
தேமென்குழலார்சேக்கைபுகைத்த
தூமம்விசும்பார்சோற்றுத்துறையே. (௮)

இலையாலன்பாலேத்துமவர்க்கு
நிலையாவாழ்வைநீத்தாரிடமாந்
தலையாற்றொழுந்தவத்தோர்க்கென்றுந்
தொலையாச்செல்வச்சோற்றுத்துறையே. (௯)

சுற்றார்தருநீர்ச்சோற்றுத்துறையுண்
முற்றாமதிசேர்முதல்வன்பாதத்
தற்றாரடியாரடிநாயூரன்
சொற்றானிவைகற்றார்துன்பிலரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

௬௨ பதிகம் - ௯௫.

---

## திருவாரூர் - பண் - செந்துருத்தி.

திருச்சிற்றம்பலம்.

மீளாவடிமையுமக்கேயாளாய்ப்பிறரைவேண்டாதே
மூளாத்தீப்போலுள்ளேகனன்றுமுகத்தான்மிகவாடி
யாளாயிருக்குமடியார்தங்களல்லல்சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர்திருவாரூரீர்வாழ்ந்துபோதீரே. (௧)

விற்றுக்கொள்வீரொற்றியல்லேன்விரும்பியாட்பட்டேன்
குற்றமொன்றுஞ்செய்ததில்லைக்*கொத்தையாக்கினீ
ரெற்றுக்கடிகேளென்கண்கொண்டீர்நீரேபழிபட்டீர்
மற்றைக்கண்டான்றாராதொழிந்தால்வாழ்ந்துபோதீரே. (௨)

அன்றின்முட்டாதடையுஞ்சோலையாரூரகத்தீரே
கன்றுமுட்டியுண்ணச்சுரந்தகாலியவைபோல
வென்றுமுட்டாப்பாடுமடியார்தங்கண்காணாது
குன்றின்முட்டிக்குழியில்விழுந்தால்வாழ்ந்துபோதீரே. (௩)

துருத்தியுறைவீர்பழனம்பதியாய்ச்சோற்றுத்துறையாள்வீ
ரிருக்கைதிருவாரூரேயுடையீர்மனமேயெனவேண்டா
வருத்தியுடையவடியார்தங்களல்லல்சொன்னக்கால்
வருத்திவைத்துமறுமைப்பணித்தால்வாழ்ந்துபோதீரே. (௪)

செந்தண்பவளந்திகழுஞ்சோலையிதுவோதிருவாரூ
ரெந்தமடிகேளிதுவேயாமாறுமக்காட்பட்டோர்க்குச்
சந்தம்பலவும்பாடுமடியார்தங்கண்காணாது
வந்தெம்பெருமான்முறையோவென்றால்வாழ்ந்துபோதீரே. (௫)

தினைத்தாளன்னசெங்காலன்னஞ்சேருந்திருவாரூர்ப்
புனைத்தார்கொன்றைப்பொன்போன்மாலைப்புரிபுன்சடையீரே
தனத்தாலின்றித்தாந்தாமெலிந்துதங்கண்காணாது
மனத்தால்வாடியடியாரிருந்தால்வாழ்ந்துபோதீரே. (௬)

ஆயம்பேடையடையுஞ்சோலையாரூரகத்தீரே
யேயெம்பெருமானிதுவேயாமாறுமக்காட்பட்டோர்க்கு
மாயங்காட்டிப்பிறவிகாட்டிமறவாமனங்காட்டிக்
காயங்காட்டிக்கண்ணீர்கொண்டால்வாழ்ந்துபோதீரே. (௭)

கழியாய்க்கடலாய்க்கலனாய்நிலனாய்க்கலந்தசொல்லாகி
யிழியாக்குலத்திற்பிறந்தோமும்மையிகழாதேத்துவோம்
பழிதானாவதறியீரடிகேள்பாடும்பத்தரோம்
வழிதான்காணாதலமந்திருந்தால்வாழ்ந்துபோதீரே. (௮)

பேயோடேனும்பிரிவொன்றின்னாதென்பர்பிறரெல்லாங்
காய்தான்வேண்டிற்கனிதானன்றோகருதிக்கொண்டக்கா

---

* விச்சை - வித்தையென்பதுபோல,
கொச்சை-கொத்தையெனநின்றது.

நாய்தான்போலநடுவேதிரிந்துமுமக்காட்பட்டோர்க்கு
வாய்தான்றிறவீர்திருவாரூரீர்வாழ்ந்துபோதீரே. (௯)

செருந்திச்செம்பொன்மலருஞ்சோலையிதுவோதிருவாரூர்
பொருந்தித்திருமூலத்தானம்மேயிடமாக்கொண்டீரே
யிருந்துநின்றுங்கிடந்துமுமையிகழாதேத்துவோம்
வருந்திவந்துமுமக்கொன்றுரைத்தால்வாழ்ந்துபோதீரே. (௰)

காரூர்கண்டத்தெண்டோண்முக்கண்கலைகள்பலவாகி
யாரூர்த்திருமூலத்தானத்தேயடிப்பேராரூரன்
பாரூரறியவென்கண்கொண்டீர்நீரேபழிப்பட்டீர்
வாரூர்முலையாள்பாகங்கொண்டீர்வாழ்ந்துபோதீரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

காஞ்சீபுரத்தில் ஆலந்தானெனும் பதிகமோதி,யொருகண்பெற்று
இந்தத்தலத்தி லிந்தப்பதிகமோதி,மற்றொருகண்ணும்பெற்றது.

---

## திருவாரூர்ப்பரவையுண்மண்டளி- பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தூவாயாதொண்டுசெய்வார்படுதுக்கங்கள்
காவாயேகண்டுகொண்டாரைவர்காக்கினு
நாவாயாலுன்னையேநல்லனசொல்லுவெற்
காவாவென்பரவையுண்மண்டளியம்மானே. (௧)

பொன்னானேபுலவர்க்குநின்புகழ்போற்றலாந்
தன்னானேதன்னைப்புகழ்ந்திடுந்தற்சோதி
மின்னானேசெக்கர்வானத்திளநாயி
றன்னானேபரவையுண்மண்டளியம்மானே. (௨)

நாமாறாதுன்னையேநல்லனசொல்லுவார்
போமாறென்புண்ணியாபுண்ணியமானானே
பேய்மாறாப்பிணமிடுகாடுகந்தாடுவாய்க்
காமாறென்பரவையுண்மண்டளியம்மானே. (௩)

நோக்குவேனுன்னையேநல்லனநோக்காமைக்
காக்கின்றாய்கண்டுகொண்டாராவர்காக்கினும்
வாக்கென்னுமாலைகொண்டுன்னையென்மனத்
தார்க்கின்றேன்பரவையுண்மண்டளியம்மானே. (௪)

பஞ்சேருமெல்லடியாளையோர்பாகமாய்
நஞ்சேருநன்மணிகண்டமுடையானே

நெஞ்சேநின்னையேயுள்கிநினைவாரை
யஞ்சேலென்பரவையுண்மண்டளியம்மானே. (௫)

அம்மானேயாகமசீலர்க்கருணல்கும்
பெம்மானேபேரருளாளன்பிடவூரன்
றம்மானேதண்டமிழ்நூற்புலவாணர்க்கோ
ரம்மானேபரவையுண்மண்டளியம்மானே. (௬)

விண்டானேமேலையார்மேலையார்மேலாய
வெண்டானேயெழுத்தொடுசொற்பொருளெல்லாமுன்
கண்டானேகண்டனைகொண்டிட்டுக்காட்டாயே
யண்டானேபரவையுண்மண்டளியம்மானே. (௭)

காற்றானேகார்முகில்போல்வதோர்கண்டத்தெங்
கூற்றானேகோல்வளையாளையோர்பாகமாய்
நீற்றானேநீள்சடைமேனிறையுள்ளதோ
ராற்றானேபரவையுண்மண்டளியம்மானே. (௮)

செடியேனுஞ்செய்வினைநல்லனசெய்யாத
கடியேன்கண்டதேகண்டதேகாமுறுங்
கொடியேன்கூறுமாறுன்பணிகூறாத
வடியேன்பரவையுண்மண்டளியம்மானே. (௯)

கரந்தையும்வன்னியுமத்தமுங்கூவிளமும்
பரந்தசீர்ப்பரவையுண்மண்டளியம்மானை
நிரம்பியவூரனுரைத்தனபத்திவை
விரும்புவார்மேலையார்மேலையார்மேலாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

---

## திருநனிபள்ளி - பண்- பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆதியன்றாதிரையனயன்மாலறிதற்கரிய
சோதியன்சொற்பொருளாய்ச்சுருங்காமறைநான்கினையு
மோதியனும்பர்தங்கோனுலகத்தினுளெவ்வுயிர்க்கு
நாதியனம்பெருமானண்ணுமூர்நனிபள்ளியதே. (௧)

உறவிலியூனமிலியுணரார்புரமூன்றெரியச்
செறுவிலிதன்னினைவார்வினையாயினதேய்ந்தழிய
வறவிலரும்மருளான்மருளார்பொழில்வண்டறையு
நறவிரிகொன்றையினானண்ணுமூர்நனிபள்ளியதே. (௨)

வானுடையான்பெரியான்மனத்தாலுநினைப்பரியா
னானிடையைந்தமர்ந்தானனலாகியோர்தீயுருக்கொண்
டேனுடையிவ்வுடலமொடுங்கிப்புகுந்தான்பரந்தா
னூனுடைமாடெம்பிரானவனூர்நனிபள்ளியதே. (௩)

ஓடுடையன்கலனாவுடைகோவணவனுமையோர்
பாடுடையன்பலிதேர்ந்துணும்பண்புடையன்பயிலக்
காடுடையன்னிடமாமலையேழுங்கருங்கடல்சூழ்
நாடுடைநம்பெருமானவனூர்நனிபள்ளியதே. (௪)

பண்ணற்கரியதொருபடையாழிதனைப்படைத்து
கண்ணற்கருள்புரிந்தான்கருதாதவர்வேள்வியவி
யுண்ணற்கிமையவரையுருண்டோடவுதைத்துகந்து
நண்ணற்கரியபிரானவனூர்நனிபள்ளியதே. (௫)

மல்கியசெஞ்சடைமேன்மதியும்மரவும்முடனே
புல்கியவாரணனெம்புனிதன்புரிநூல்விரகின்
மெல்கியவிற்றொழிலான்விருப்பன்பெரும்பார்த்தனுக்கு
நல்கியநம்பெருமானவனூர்நனிபள்ளியதே. (௬)

அங்கமோராறவையும்அருமாமறைவேள்விகளு
மெங்குமிருந்தந்தணரெரிமூன்றவையோம்புமிடம்
பங்கயமாமுகத்தாளுமைபங்கனுறைகோயில்
செங்கயல்பாயும்வயற்றிருநனிபள்ளியதே. (௭)

திங்கட்குறுந்தெரியற்றிகழ்கண்ணியனுண்ணியனாய்
நங்கட்பிணிகளைவானருமாமருந்தேழ்பிறப்பு
மங்கத்திருவிரலாலடர்த்தான்வல்லரக்கனையு
நங்கட்கருளும்பிரானவனூர்நனிபள்ளியதே. (௮)

ஏனமருப்பினொடுமெழிலாமையும்பூண்டுகந்து
வானமதிலரணமலையேசிலையாவளைத்தா
னூனமில்காழிதன்னுளுயர்ஞானசம்பந்தர்க்கன்று
ஞானமருள்புரிந்தானவனூர்நனிபள்ளியதே. (௯)

காலமுநாள்கழியுந்நனிபள்ளிமனத்தினுள்கிக்
கோலமதாயவனைக்குளிர்நாவலவூரன்சொன்ன
மாலைமதித்துரைப்பார்மண்மறந்துவானோருலகிற்
சாலநல்லினமெய்தித்தவலோகத்திருப்பவரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

சோழநாடு. சுவாமிபெயர்-நற்றுணையப்பர்.

தேவியார்-பர்வதராசபுத்திரி.

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

## திருநன்னிலத்துப்பெருங்கோயில் பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தண்ணியல்வெம்மையினான்றலையிற்கடைதோறும்பலி
பண்ணியன்மென்மொழியாரிடங்கொண்டுழல்பண்டரங்கன்
புண்ணியநான்மறையோர்முறையாலடிபோற்றிசைப்ப
நண்ணியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (௧)

வலங்கிளர்மாதவஞ்செய்மலைமங்கையோர்பங்கினனாய்ச்
சலங்கிளர்கங்கைதங்கச்சடையொன்றிடையேதரித்தான்
புலங்கிளர்பைம்பொழிறண்பனிவெண்மதியைத்தடவ
நலங்கிளர்நன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (௨)

கச்சியனின்கருப்பூர்விருப்பன்கருதிக்கசிவா
ருச்சியன்பிச்சையுண்ணியுலகங்களெல்லாமுடையா
னொச்சியம்பச்சிலையானுறைதீர்புனலாற்றொழுவார்
நச்சியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (௩)

பாடியநான்மறையான்படுபல்பிணக்காடரங்கா
வாடியமாநடத்தானடிபோற்றியென்றன்பினராய்ச்
சூடியசெங்கையினார்பலதோத்திரம்வாய்த்தசொல்லி
நாடியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (௪)

பிலந்தருவாயினொடுபெரிதும்வலிமிக்குடைய
சலந்தரனுடலிருபிளவாக்கியசக்கரமுன்
னிலந்தருமாமகள்கோனெடுமாற்கருள்செய்தபிரா
னலந்திருநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (௫)

வெண்பொடிமேனியினான்கருநீலமணிமிடற்றான்
பெண்படிசெஞ்சடையான்பிரமன்சிரம்பீடழித்தான்
பண்புடைநான்மறையோர்பயின்றேத்திப்பலகால்வணங்கு
நண்புடைநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (௬)

தொடைமலிகொன்றைதுன்றுஞ்சடையன்சுடர்வெண்மழுவாட்
படைமலிகையன்மெய்யிற்பகட்டீருரிப்போர்வையினான்
மடைமலிவண்கமலம்மலர்மேன்மடவன்னமன்னி
நடைமலிநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (௭)

குளிர்தருதிங்கள்கங்கைகுரவோடரக்கூவிளமு
மிளிர்தருபுன்சடைமேலுடையான்விடையான்விரைசேர்
தளிர்தருகோங்குவேங்கைதடமாதவிசண்பகமு
நளிர்தருநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (அ)

கமர்பயில்வெஞ்சுரத்துக்கடுங்கேழற்பின்கானவனு
யமர்பயில்வெய்தியருச்சுனற்கருள்செய்தபிரான்
றமர்பயிறண்விழவிற்றகுசைவர்தவத்தின்மிக்க
நமர்பயினன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (கூ)

கருவரைபோலரக்கன்கயிலைம்மலைகீழ்க்கதற
ஒருவிரலாலடர்த்தின்னருள்செய்தவுமாபதிதான்
திரைபொருபொன்னிநன்னீர்த்துறைவன்றிகழ்செம்பியர்கோ
னரபதிநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (௰)

கோடுயர்வெங்களிற்றுத்திகழ்கோச்செங்கணான்செய்கோயி
லாடியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனைச்
சேடியல்சிங்கிதந்தைசடையன்றிருவாரூரன்
பாடியபத்தும்வல்லார்புகுவார்பரலோகத்துளே. (௰க)

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாகேச்சரம் - பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பிறையணிவாணுதலாளுமையாளவள்பேழ்கணிக்க
நிறையணிநெஞ்சனுங்கநீலமால்விடமுண்டதென்னே
குறையணிகுல்லைமுல்லையளைந்துகுளிர்மாதவிமேற்
சிறையணிவண்டுகள்சேர்திருநாகேச்சரத்தானே. (க)

அருந்தவமாமுனிவர்க்கருளாகியோராலதன்கீ
ழிருந்தறமேபுரிதற்கியல்வாகியதென்னைகொலாங்
குருந்தயலேகுரவம்மரவின்னெயிறேற்றரும்பச்
செருந்திசெம்பொன்மலருந்திருநாகேச்சரத்தானே. (உ)

பாலனதாருயிர்மேற்பரியாதுபகைத்தெழுந்த
காலனைவீடுவித்துக்கருத்தாகியதென்னைகொலாங்
கோலமலர்குவளைக்கழுநீர்வயல்சூழ்கிடங்கிற்
சேலொடுவாளைகள்பாய்திருநாகேச்சரத்தானே. (ங)

குன்றமலைக்குமரிகொடியேரிடையாள்வெருவ
வென்றிமதகரியின்னுரிபோர்த்ததுமென்னைகொலோ

ஞான்றிவிளங்கமுகின்முதுபாளைமதுவளைந்து
தென்றல்புகுந்துலவுந்திருநாகேச்சரத்தானே. (௪)

அரைவிரிகோவணத்தோடரவார்த்தொருநான்மறைநூ
லுரைபெருகவுரைத்தன்றுகந்தருள்செய்ததென்னே
வரைதருமாமணியும்வரைச்சந்தகிலோடுமுந்தித்
திரைபொருதண்பழனத்திருநாகேச்சரத்தானே. (௫)

தங்கியமாதவத்தின்றழல்வேள்வியினின்றெழுந்த
சிங்கமுநீள்புலியுஞ்செழுமால்கரியோடலறப்
பொங்கியபோர்புரிந்துபிளந்தீருரிபோர்த்ததென்னே
செங்கயல்பாய்கழனித்திருநாகேச்சரத்தானே. (௬)

நின்றவிம்மாதவத்தையொழிப்பான்சென்றணைந்துமிக்க
பொங்கியபூங்கணைவேள்பொடியாகவிழித்ததென்னே
பங்கயமாமலர்மேன்மதுவிண்டுவண்டேன்மலரச்
செங்கயல்பாய்வயல்சூழ்திருநாகேச்சரத்தானே. (௭)

வரியரநாணதாகமாமேருவில்லதாக
வரியணமுப்புரங்கள்ளவையாரழலூட்டலென்னே
விரிதருமல்லிகையும்மலர்ச்சண்பகமும்மளைந்து
திரிதருவண்டுபண்செய்திருநாகேச்சரத்தானே. (௮)

அங்கியல்யோகந்தன்னையழிப்பான்சென்றணைந்துமிக்க
பொங்கியபூங்கணைவேள்பொடியாகவிழித்தலென்னே
பங்கயமாமலர்மேன்மதுவுண்டுபண்வண்டறையச்
செங்கயனின்றுகளுந்திருநாகேச்சரத்தானே. (௯)

குண்டரைக்கூறையின்றித்திரியுஞ்சமண்சாக்கியப்பேய்
மிண்டரைக்கண்டதன்மைவிரவாகியதென்னைகொலோ
தொண்டிரைத்துவணங்கித்தொழில்பூண்டடியார்பரவுந்
தெண்டிரைத்தண்வயல்சூழ்திருநாகேச்சரத்தானே. (௧௰)

கொங்கணைவண்டலர்த்தக்குயிலும்மயிலும்பயிலுந்
தெங்கணைபூம்பொழில்சூழ்திருநாகேச்சரத்தானை
வங்கமலிகடல்சூழ்வயனாவலவூரன்சொன்ன
பங்கமில்பாடல்வல்லாரவர்தம்வினைபற்றறுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சோழநாடு. சுவாமிபெயர்-செண்பகாரணியேசுவரர்.
தேவியார் - குன்றமுலையம்மை.

## திருநொடித்தான்மலை - பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தானெனைமுன்படைத்தானதறிந்துதன்பொன்னடிக்கே
நானெனபாடலந்தோநாயினேனைப்பொருட்படுத்து
வானெனைவந்தெதிர்கொள்ளமத்தயானையருள்புரிந்து
ஊனுயிர்வேறுசெய்தானொடித்தான்மலையுத்தமனே. (௧)

ஆனையுரித்தபகையடியேனொடுமீளக்கொல்லோ
ஊனையுயிர்வெருட்டியொள்ளியானைநினைந்திருந்தேன்
வானைமதித்தமரர்வலஞ்செய்தெனையேறவைக்க
வானையருள்புரிந்தானொடித்தான்மலையுத்தமனே. (௨)

மந்திரமொன்றறியேன்மனைவாழ்க்கைமகிழ்ந்தடியேன்
சுந்தரவேடங்களாற்றுரிசேசெயுந்தொண்டனெனை
யந்தரமால்விசும்பிலழகானையருள்புரிந்த
துந்தரமோநெஞ்சமேநொடித்தான்மலையுத்தமனே. (௩)

வாழ்வையுகந்தநெஞ்சமடவார்தங்கள்வல்வினைப்பட்
டாழமுகந்தவென்னையதுமாற்றியமரரெல்லாஞ்
சூழவருள்புரிந்துதொண்டனேன்பரமல்லதொரு
வேழமருள்புரிந்தானொடித்தான்மலையுத்தமனே. (௪)

மண்ணுலகிற்பிறந்துநும்மைவாழ்த்தும்வழியடியார்
பொன்னுலகம்பெறுதறொண்டனேனின்றுகண்டொழிந்தேன்
விண்ணுலகத்தவர்கள்விரும்பவெள்ளையானையின்மே
லென்னுடல்காட்டுவித்தானொடித்தான்மலையுத்தமனே. (௫)

அஞ்சினையொன்றிநின்றுஅலர்கொண்டடிசேர்வறியா
வஞ்சனைஎன்மனமேவைகிவானநன்னாடர்முன்னே
துஞ்சுதன்மாற்றுவித்துத்தொண்டனேன்பரமல்லதொரு
வெஞ்சினவானைதந்தானொடித்தான்மலையுத்தமனே (௬)

நிலைகெடவிண்ணதிரநிலமெங்குமதிர்த்தசைய
மலையிடையானையேறிவழியேவருவேனெதிரே
யலைகடலாலரையனலர்கொண்டுமுன்வந்திறைஞ்சம்
உலையணையாதவண்ணநொடித்தான்மலையுத்தமனே. (௭)

அரவொலியாகமங்களறிவாரறிதோத்திரங்கள்
விரவியவேதவொலிவிண்ணெலாம்வந்தெதிர்ந்திசைப்ப
வரமலிவாணன்வந்துவழிதந்தெனக்கேறுவதோர்
சிரமலியானைதந்தானொடித்தான்மலையுத்தமனே. (௮)

இந்திரன்மால்பிரமன்னெழிலார்மிகுதேவரெல்லாம்
வந்தெதிர்கொள்ளவென்னைமத்தயானையருள்புரிந்து
மந்திரமாமுனிவரிவனாரெனவெம்பெருமா
னந்தமரூரனென்றானொடித்தான்மலையுத்தமனே. (௧)

ஊழிதோறூழிமுற்றுமுயர்பொன்னொடித்தான்மலையைச்
சூழிசையின்கரும்பின்சுவைநாவலவூரன்சொன்ன
வேழிசையின்றமிழாலிசைந்தேத்தியபத்தினையு
மாழிகடலரையாவஞ்சையப்பர்க்கறிவிப்பதே. (௨)

திருச்சிற்றம்பலம்.

நொடித்தான்மலையென்பது - கயிலைமலை.

ஆ பதிகம் - ௱௧.

---

வெள்ளிப்பாடலாகிய காரோணப்பதிகம் - சிலபுத்தகத்தி லில்லாமையா லிதிற்பதிக்காமல் விடப்பட்டது.

---

## நம்பியாரூரரென்னும்
## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த
## தேவாரத் திருமுறை
## முற்றிற்று.